[illegible]

[illegible]

[illegible] -1911

IZED

Q7
N11
119690

பிஸ்மில்லாஹ்.

இஃது

ஹஜரத், மௌலவி, ஹாஜி,

## ஷைகு மீரான் முஹியத்தீன்

"லிவாவுல் இஸ்லாம்" பத்திராதிபரவர்களால்

இயற்றிய

# முஹம்மதியா மகத்துவம்.

——[*]——

இதனை

நாகூர்வாசியும், சிங்கப்பூரில் பிரபல வர்த்தகருமாகிய

கா. ம். க. முஹம்மது அலி மரைக்காயர் அவர்களுடைய

பொருளுதவி முயற்சியினால்,

சென்னை "முஹம்மதியா பிரஸி"ல் அச்சிடப்பட்டது.

| | |
|---|---|
| முஹம்மதியா மகத்துவம் விலை | 1—0—0 |
| முழு உலக நியாயாதிபதி | 0—2—0 |
| மஹா பெரிய மகத்துவமுள்ளவர் | 0—1—0 |

ஆக ஷை மூன்று புஸ்தகங்களும் சேர்த்து ரூபா 1. அணா 3.

தேவையானவர்கள்:—முகம்மதியா பிரஸ், லிவாவுல் இஸ்லாம் ஆபீஸ் மதராசில் பெற்றுக்கொள்ளலாம்.

1911-ளு ஜூலை

REGISTERED COPY RIGHT.

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் 1983 வருடம்
செப்பனிட்டு முடித்த
மாதம் 1983 வருடம்
14.12.83
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்

## இப்புஸ்தகம் கோர்வை செய்யப்பட்டதற்குக் காரணம்.

தகப்பன் தன் குமாரனை நோக்கி இன்னானை அழைத்துக் கொண்டுவா என்று சொன்னால், அதற்குக் குமாரன் அவனை ஏன் அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று கேட்கிறான். அதற்குத் தகப்பன் மகனுக்குப் பொருந்தும்படியான சமாதானம் சொல்லாவிட்டால் தகப்பனைப் பைத்தியக்காரனென்று மகன் சொல்லுங் காலம் இதுவாயிருக்கிறதென்பது எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே. இதுபோலவே மார்க்க விதியிலக்குகளிலும் சிலர் தலையிட்டு அதைச் செய்வானேன், இதைச் செய்வானேன், இப்படிச் செய்தாலென்ன, அப்படிச் செய்தாலென்ன இம்மார்க்கத்திலென்னவுண்டு, அம்மார்க்கத்திலென்னவுண்டு என்று பலவாறாய் மனம்போனபோக்காய்ப் பிதற்றுகிறதாயிருப்பதால் அவர்கள் மனதுக்குப் பொருந்தும்படியாயும், அவர்கள் அநுபவத்தில் நடந்து வருபவைகளாயுமுள்ள ஆயிரக் கணக்கான அத்தாக்ஷிகளை வகை வகையாக எடுத்து ருபித்து முஸ்லிம்களுடைய விசுவாசம் பின்னும் அதிக உறுதிபடும்பொருட்டும், அந்நிய மதஸ்தினருடைய மனம் இந்த இஸ்லாம் மார்க்கத்தில் திரும்பும் பொருட்டும், இப்புஸ்தகத்தைக் கோர்வைசெய்து இதற்கு "முஹம்மதியா மகத்துவம்" என்று பேரிடப்பட்டிருக்கின்றது. மேலும் கிறிஸ்துவ நண்பர்கள் முஸ்லிம்களையும் முஹம்மது நபியவர்களையும் பலவாறாய் நிந்தித்து இழ்ச் சொல்லுகிற புஸ்தகங்களை பிரசுரித்தும், பிரசங்கம் செய்தும் வருகிறதினால் அவர்கள் செய்கையை குறித்து எழுதும்படி நேரிட்டது. அப்புஸ்தகங்களாவன:—

(1) சுவிசேஷத்தின் உண்மை (2) யேசுவோ முஹம்மதுவோ யார் நம்பத்தக்கவர், (3) பாவமில்லாத நபி, (4) யேசுக்கிறிஸ்து, (5) யேசுக்கிறிஸ்துவின் பாடுகளும், உயிர்த்தெழுதலும், (6) யேசுக் கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள், (7) முஹம்மது (8) சத்திய இஸ்லாம், (9) ஈசாக்கும் இஸ்மவேலும், (10) குரான், (11) தேவனுடைய நாமங்கள், (12) நமாஸ் (13) அசாபியும் அதன் நபியும் முதலியவைகளே.

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 31 | 28 | 1ம் மோசே 1ல் 17அம் | |
| 32 | 3,4,5 | ஏசாயா 7ல் 5அம், அபகூக்கு 1ல் 15,16அம், லேவியர் 1ல், 7, 8அம் ... ... | |
| 38 | 23 | ஹாஜிரா ... ... ... | சாறாள் |
| 51 | 30 | 5ம் மோசே 27 அதி: 28 | 5ம் மோசே 27 அதி 26 |
| 54 | 14 | அாஹூல்லா ஹி ... ... | அாஹூல்லா ஹி |
| 58 | 9 | மத்தேயு 4ம் அதி: 20 ... | மத்தேயு 4ம் அதி 23 |
| ,, | 10 | மத்தேயு 4ம் அதி: 35 ... | மத்தேயு 24ம் அதி 14 |
| ,, | 11 | 15ம் வசனத்திலும் ... | 14ம் வசனத்திலும் |
| 59 | 19 | ராஜாங்கம் ... ... ... | ராஜாக்கள் |
| ,, | 32 | 5ம் மோசே 22ம் அதிகாரம் | 5ம் மோசே 32ம் அதிகாரம் |
| 60 | 1 | 1ம் மோசே 1ம் அதி 17ம் | |
| ,, | 14 | 37ம் வசனத்தில் ... ... | 21ம் வசனத்தில் |
| 61 | 1 | இராஜாங்கம்... ... ... | இராஜாக்கள் |
| ,, | 1·2 | எரேமியா 33ம் அதி 29,30 | |
| ,, | 11 | சாலோமோன் வாக்கியம் | நீதிமொழி |
| ,, | 19 | பேதுரு பிலிப்பியருக்கு எழுதின நிருபம் 2ம் அதி 9, 10. ... ... ... | கலாத்தியர் 3ம் அதி 13ம் வசனத்தாலும் |
| 80 | 29 | யோவான் ... ... ... | யோவான் வெளி |
| 81 | 3 | 27ம் அதி 28ம் வசனம் ... | 27ம் அதி: 26ம் வசனம் |
| 133 | 26 | 28ம் வசனத்திலும் ... | 26ம் வசனத்திலும் |
| 169 | 21 | பாரேகலீத் ... ... ... | தேற்றரவாளன் |

பிஸ்மில்லாஹி.

# 1-வது அதிகாரம்.

## ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் அருளிய வாக்கு தேவவாக்கு என்பதின் மகத்துவம்.

ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் அருளிய வாக்கு தேவவாக்கு என்பதற்குரிய அத்தாக்ஷிகள் ஏராளமாயிருக்கின்றன. அவைகளிலிருந்து பன்னிரண்டு அத்தாக்ஷிகளடங்கிய ஓர் ஹிக்காயத்தை மாத்திரம் எடுத்து பின் வருமாறு எழுதுகிறேன்.

பஸரா என்கிற பட்டணத்தில் ஒரு ஷைகு என்பவர் இஸ்லாமார்க்கத்தைப்பற்றி வெகு புகழ்ச்சியாகப் பிரசங்கம் செய்து கொண்டு, இஸ்லாமே மெய்யானமார்க்கம், அதில் சேர்ந்தவர்களே மோக்ஷ மடைவார்கள் என்று வாதித்து, அதற்குத் தகுந்த அத்தாக்ஷிகளுடனும், உதாரணங்களுடனும் பலவாறாய் எடுத்து ரூபித்துவந்தார்.

இவர் பிரசங்கமும், ரூபிக்கிற அத்தாக்ஷிகளும் வெகு வாய்ப் புகழப்பட்டு, அங்குள்ள பல பாகங்களிலும் பரவிவே, அநேக யஹூதி, நஸாரா, மஜூஸி பார்ஸி முதலியவர்கள் ஏராளமாய் இஸ்லாம் மார்க்கத்தைக் கைக்கொண்டு முஸ்லிமாகத் துணிந்தார்கள்.

இதைக்கண்ட அங்குள்ள யஹூதி, நஸாரா பாதிரிகளும், மஜூஸி பார்ஸி குருமார்களும் ஏராளமாகத் திரண்டு ஒன்று கூடி யோசித்து, மேற்படி பிரசங்கி ஷைகு என்பவரிடம் சில கேள்விகள்கேட்டு, சம்பாஷணைபுரிந்து, அவரின்வாயை அடைக்கவேண்டுமென உத்தேசித்து, அவரிடம் வந்து பின்வருமாறு கேள்விகளைக் கேட்க, அவரும் அதற்குத் தகுந்த மறுமொழி சொன்னார்.

பாதிரி, குரு—வினா:—முஹம்மது நபி அவர்களால் வெளியான வாக்கியங்கள் யாவும் ஆண்டவனுடைய கட்டளையால் வெளிப்படுத்தப் பட்டவையென்று "குர்ஆன் ஷரீபில்" சொல்லப்பட்டிருக்கின்றதா?

கைசுகு என்பவரின் விடை:—ஆம்; ஹஜரத் நபி முஹம்மது றசூலுல்லா அவர்கள் சுயமாய் யாதொன்றும் சொல்லவில்லை; அவர்களுக்கு ஆண்டவனால் அறிக்கை செய்யப்பட்டவைகளையே அவர்கள் அருளியிருக்கிறார்கள் எனத் திரு "குர்ஆன் ஷரீப்" 27-வது ஜுஸ்வு 5-வது றுக்கூவில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னும், இவ்வாறே மோசே அவர்களை நோக்கி ஆண்டவன், "நாம் உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை அவர்களுக்கு அவர்களின் சகோதரர் நடுவிலிருந்து எழும்பப்பண்ணி நம்முடைய வார்த்தைகளை அவர் வாயிலேயே அருளுவோம். நாம் அவருக்குக் கற்பித்ததையெல்லாம் அவர்களோடு அவர் சொல்லுவார். அவர் நமது நாமத்தினாலே சொல்லும் நமது வார்த்தைகளைக் கேளாதவர்களை நாம் விசாரிப்போம்," என்று சொல்லி இருக்கிறதாக 5-ம் மோசே, 18 அதி. 18,19-ம் வசனங்களிலும், இதைப்போலவே இயேசு அவர்களும் தமது சிஷர்களைநோக்கி, "சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி இனி வரப்போகிற காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார்" என்று சொல்லியிருக்கிறதாக யோவான் சுவிசேஷத்தின் 16 அதி: 13ம் வசனத்திலும் கண்டிருக்கின்றது.

பா, கு—வினா:—குர்ஆன் ஷரீபு முதலிய முஹம்மது நபியவர்களின் வாக்கு ஆண்டவனால் அருளப்பட்ட தேவவாக்கு என்று எப்படிச் சொல்லக்கூடும்? தேவவாக்கு என்பதற்கு அதில் என்ன அத்தாக்ஷியிருக்கின்றது?

கைசுகு என்பவரின் விடை:—ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் வாயினால் வெளியாகிய திரு "குர்ஆன்ஷரீபு" முதலியவை, ஆண்டவனால் அருளப்பட்ட தேவவாக்கு என்பதற்கு எண்ணிலடங்காத அத்தாக்ஷிகள் இருக்கின்றன. அவைகளை எடுத்துச் சொல்வதற்கு இச்சமயம் போதாது. ஆயினும், புத்திமான்களது ஆராய்ச்சிக்கு ஒத்திருக்கின்றவையும், இப்போது நமது அனுபவத்தில் நடந்துவரு



பவையுமாகிய சில அத்தாக்ஷியான விஷயங்களை மாத்திரம் எடுத்துச் சொல்லுகிறேன். அதை நீங்கள் கருத்தோடு கேட்டு ஆலோசித்துப் பாருங்கள்.

## முதலாவது அத்தாக்ஷி.

ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் அந்தியகாலத்திற்கு ஒருவருஷத்திற்கு முன் திருமக்கா ஷரீபானது அவர்கள் கைவசப்பட்டு, அதிலுள்ள சகலமனுஜாதியார்களும் இஸ்லாமாகி விட்டார்கள். எல்லாரும் ஒன்றுபோலவே இஸ்லாத்தைதழுவி முஸ்லிமான சந்தோஷத்துடன் ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் சமுகஞ் சென்று, "ஆ! யாறசூலுல்லா! பரிசுத்தப் பட்டணமாகிய இத் திருமக்காஷரீபிலுள்ள நாங்கள் எல்லோரும் ஒன்றுபோல இஸ்லாமாகி விட்டோமே, இனி இந்தப் பரிசுத்தப் பட்டணத்தில் அசுத்தர்களான முஷ்ரிக்கீன்கள் வந்து குடியேறுவார்களோ?" என்று கேட்டதற்கு, ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள், "இனி இந்தப் பரிசுத்த மக்கா பட்டணத்தில் ஒரு காலமும் முஷ்ரிக்கீன்கள் குடியேறுகிறதேயில்லை" என்று திருவுளம் பற்றினார்கள்.

ஓ! கனவான்களே, இந்த இடத்தில் உங்கள் ஆராய்ச்சியைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். அறபியா என்பது இந்த உலகத்தின் மத்தியிலுள்ள ஒரு பெரிய கண்டம். திருமக்காஷரீபென்பது அக்கண்டத்தின் மத்தியிலுள்ள ஒரு சிறந்த இராஜதானிப்பட்டணம். இத்தகைய சிறந்த மகா பெரிய பட்டணத்தில் முஸ்லிம்களைத் தவிர அன்னிய ஜாதியினர்வந்து இனி ஒரு காலமும் குடியேறுகிறதில்லை என்று ஒருவர் சுமமாக உறுதியாய்ச் சொல்லமுடியுமா? அப்படிச் சொன்னால் அச்சொல் நிலைத்துச் சித்திபெறுமா? அப்படியிருக்க ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களின் திரு அறிக்கைப்பிரகாரம் அன்று முதல் இன்றுவரை மேற்படி வாக்கு நிலைத்துச் சித்தி பெற்று வருகிறதால் அது தேவவாக்கென்றே தெள்ளத்தெளிய தெரிகிறதல்லவா?

## இரண்டாவது அத்தாக்ஷி.

திருமதீனா முனவ்வராவிலுள்ள சர்வமத ஜாதியார்களுடங் கலும் முஸ்லிமானவுடன், ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம் மது றஸுலுல்லா அவர்கள் திருச்சமுகம்வந்து, "ஆ! யாநபியுல்லா! இப்பட்டணத்திலுள்ள நாங்களெல்லோரும் முஸ்லிமாகிஆனந் தபேரின்பக்கடலில் மூழ்கியிருக்கிறோம்; ஷாம் இராஜ்ஜியத்தில் பழைய புராதீன யஹூதி, நஸாராக்கள் முதலிய வேதியர் களும், வேதாந்திகளும், வேதபாரகர்களும் தரித்திருக்கின்ற னர்; அவர்கள் இவ்விஸ்லாம் மார்க்கத்தைக் கைக்கொண்டால், நமது மார்க்க புகழ்ச்சியும் மகிழ்ச்சியும் மென்மேலும் அதிக ரித்துவளர்ந்தோங்கும்" என்றதற்கு, ஹஜரத்து நபிகள்நாயகம் முஹம்மது றஸுலுல்லா அவர்கள் அல்லாஹுத் தஆலாவின் உத்தரவு பிரகாரம் அதற்கிணங்கி, அநுமதி கொடுத்து அங் குள்ளவர்களை இஸ்லா மார்க்கத்தி லாக்குவதற்கு ஸஹாபாக் களை அங்கு அநுப்பி வைத்தார்கள். மேற்படி ஸஹாபாக்கள் தபூக்வரை வெற்றி யடைந்திருக்கும்போது ஹஜரத்தவர்களு டைய அந்தியகாலமாயிருந்தது.

அச்சமயம் ஸஹாபாக்கள் மேற்படி செய்தியைக் குறித்து ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றஸுலுல்லா அவர்கள் திருச்சமுகம் கேட்டதற்கு, "இன்னும் கூடிய சீக்கிரத்தில் ஷாம் இராஜ்ஜியம் அடங்கலும் உங்கள் கைவசப்பட்டு, அங்குள்ள பெரும்பான்மையான வேதியர்களும், வேதக்காரர்களும் இஸ் லாமாகி, அங்கு எக்காலமும் இஸ்லாம்மார்க்கத்தின் ஹுக்கும் களை நடத்தப்பட்டுவரும்" என்று திருவாய்மலர்ந்தருளினார்கள்.

ஓ! சிநேகிதர்களே, இங்கு உங்கள் புத்தியைக் கொஞ்சம் செலுத்தி உணர்ந்து பாருங்கள். இவ்வுலகத்தின் பெரும்பாக மான ஆசியாகண்டத்திற்குத் தலையாகிய மகாசிறந்ததும், வெகு பேர்போனதுமான ஷாம் இராஜ்ஜியம் கூடிய சீக்கிரம் உங்கள் கைவசப்படுமென்றும், அது எக்காலமும் உங்கள், கைவசத்தி லிருந்து, உங்களுடைய சகல ஹுக்குமுகளுக்கும் அது அடங்கி நடந்து வருமென்றும், ஒருவர் தன் சுயமாய் நெஞ்சுத்துணிவாய்ச் சொல்லக் கூடுமோ? அப்படிச் சொன்னபோதிலும் அவ்வாக்கு



பிரகாரம் நிறைவேறி நிலைநிற்குமா? அப்படியிருக்க, ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றஸுலுல்லா அவர்களின் திருவாக் கு பிரகாரமே வறண்டு சிதறுண்ட ஓர் சிற்றாரர்களால் வெகு பிரமாண்ட மானதும்; அதிக ஜனத்திரளுள்ளதுமான ஓர் பெரியகாண்டம் அந்நாளிலேயே ஜெயிக்கப்பட்டு, அவர்கள் ஹுக்குமத்துகளுக்கு அடங்கி அன்றுமுதல் இன்றுவரை அவ் வாக்கு பிரகாரம் நடந்து, நிலைத்து சித்திபெற்று வருகிறதால் இது மனுவாக்கல்ல; தேவவாக்கென்றே வெகு தெள்ளத் தெ ளிய தெரிகிறதல்லவா?

அன்றியும், இன்னும் சற்றே கவனியுங்கள். அவ்விராஜ்ஜி யம் முஸ்லிம்களின் ஆளுகைக் குட்பட்டதின் நடுவே இவ்விஷ யத்தைப்பற்றி எத்தனையோ யுத்தங்கள் செய்து அவ்விராஜ்ஜி யத்தைத் தங்கள் வசப்படுத்தி ஆளவேண்டுமென்று உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள யஹூதி, நஸாராக்கள் ஒருண்டு திரண் டு பிரயாசைப்பட்டும் ஒன்றும் சித்தி பெறாமல் போய்விட்ட தல்லவா? இச்சண்டைகளில் ஒன்றுக்கு சிலுவையுத்தமென்றும் இது சுமார் 200 வருஷம் நடைபெற்றதென்றும் சொல்லப்பட் டிருக்கின்றது. இத்தகைய பலவாறான அசந்தர்ப்பங்கள் அவ்வி ராஜ்ஜியத்திற்கு நேர்ந்திருந்தும் அத்திருவாக்குப் பிரகாரமே நிலைத்திருக்கிறதால் இது தேவவாக்கென்று யாருஞ் சொல்லி தெரியவேண்டுமோ?

## மூன்றாவது அத்தாக்ஷி.

ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றஸுலுல்லா அவர் கள் அந்தியகாலத்தின்போது, அவர்களது திருச்சமுகம் சஹா பாக்கள் வந்து, "ஆ! யாறஸுலுல்லா! பாவா ஆதம் அலைஹிஸ்ஸ லாம் அவர்கள்முதல் தாங்கள்வரை ஒவ்வொரு காலங்களிலும் ஒவ்வொரு நபிமார்கள் தோன்றி, அவரவர்களின் கவுமுகளுக்கு நல்லறிவு போதித்து, அம்மார்க்கத்தில் அவர்கள் நிலைத்திருக் கும்படி செய்தார்களே, அப்பிரகாரம் தங்கள் உம்மத்துகளை செய்கிறதற்கு யாராவது வெளிப்படுவார்களா?" என்றதற்கு ஹஜரத்து நபிகள்நாயகம் முஹம்மது றஸுலுல்லா அவர்கள் நுபுவ்வத்து என்னைக்கொண்டு முற்றுபெற்றது. இனி அல்லா

ஹக் தஆலா கியாமநாள் வரையிலும் தங்கள் உம்மத்தாகளிலி ருந்து குத்துபிய்யத்துடைய அவுலியாக்களை வெளிப்படுத்து வான். அவர்கள் இவ்வுலகத்தின்கண் பல பாகங்களிலும் ஒவ்வோர் காலங்களில் வெளிப்பட்டு, ஆங்காங்குள்ள எனது உம்மத்துகள் நம் மார்க்கத்தில் நிலைத்திருக்கும்படி செய்வார்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இத்திருவருள் பிரகாரம் குத்துபிய்யத்துடைய அவுலியாக்கள் உலகத்தின் பலபாகங்களிலும் ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்பட்டு, திரிகையைவிட்டு அதின் மூடி விலகிப்போகாமல் அதின் முளையாணி பேணிக் கொள்ளுவதுபோல் மேற்படி அவுலியாக்களின் பைவு பறக்கத்தைக்கொண்டு முஸ்லிம்கள் மார்க்க ஒழுங்குகளிலும், இல்லற ஒழுக்கங்களிலும், அறவற இன்பங்களிலும் மென்மேலும் அதிக விர்த்தியடைந்து வருகின்றதை நீங்கள் பார்த்துக்கொண்டு வருகிறீர்களல்லவா?

உதாரணமாக இவ்இராக்கு தேசத்தின் தலைநகராகிய பக்தாது முதலிய அநேக பட்டணங்களில் மட்டிலடங்காத குதுபுமார்களும், அவுலியாக்களும், வெளிப்பட்டு இருக்கிறார்களென்பதை அவரவர்கள் மக்பராக்களையும் சரித்திரங்களையும் நீங்கள் பார்க்கவில்லையா? இதைப்போலவே ஷாம், ரூம், அறபியா, மகரிபு, மிஸ்று, புகாரா, இந்துஸ்தான், காபல், பர்ஷியா, சைனு, ரூஷியா, ஜாவா முதலிய உலகத்தின் பலபாகங்களிலும் வெளிப்பட்டிருக்கின்ற லக்ஷக் கணக்கான அவுலியாக்களின் சரித்திரங்களையும், மக்பராக்களையும் ஆங்காங்குள்ள முஸ்லிம்களுடைய தன்மைகளையும் உங்கள் கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் இருக்கிறீர்களல்லவா? இதனால் அது மனுவாக்காயிருந்தால் இப்படி நிறைவேறுமா? அப்படிச்சொல்வதுதான் மனந்துணியுமா? ஆகையினால், அவ்வாக்கு தேவவாக்கென்று யாருஞ் சொல்லித் தெரியவேண்டுமோ!

## நான்காவது அத்தாட்சி.

ஹஜ்ரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு நபிபட்டம் வந்த ஆரம்பத்தில் அதாவது, அவர்கள் ஸஹாபாக்கள் இரண்டு மூன்று பேராயிருக்கும்போதே திரு



மக்கா ஷரீபிலுள்ள அபுஜெஹிலைப் போலொத்த கொடிய வம்பர்களாகிய அஞ்ஞானிகள் ஒன்றுதிரண்டு ஹஜ்ரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களைக் கொலை செய்யவேணுமென்றும், அவர்கள் முயற்சிகளை அடியோடு தொலைத்துவிடவேண்டுமென்றும் அல்லும் பகலும் விடாமுயற்சியாய்ப் பிரயத்தனஞ் செய்து வந்தார்கள்.

அப்போது ஹஜ்ரத்து அவர்கள், "விளக்கை மனிதர் வாயால் ஊதி அணைத்துவிடுகிறதுபோல் அல்லாவுடைய விளக்காகிய ஒளியையும் வாயால் ஊதி அணைத்துவிடப் பார்க்கிறார்கள்; ஆனால் மனிதர்களுடைய விளக்கு வாயால் ஊதினால் அணைந்துபோகும். அல்லாஹ் தஆலாவின் விளக்காகிய ஒளியை ஊதஊதப் பெருகி வளர்ந்தோங்கிக்கொண்டேவரும்; கூடிய சீக்கிரத்தில் அதாவது இந்நூற்றாண்டுக்குள் உதயகிரி தொடங்கி அஸ்தகிரிவரையும் உலகத்தின் பலபாகங்களிலும் இந்த இஸ்லாம் என்கிற ஒளியானது பரவி அந்த உலக முடிவுவரையிலும் மென்மேலும் வளர்ந்தோங்கிக் கொண்டேயிருக்கும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இத்திருவருள் பிரகாரம் அதே நூற்றாண்டிலேயே அறபியா, ரூம், ஷாம், மகரிபு, மிஸ்று, இராக்கு, பாரிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்துஸ்தான், சைனு, ரூஷியா, புகாரா, ஜாவா முதலிய உலகத்தின் சகல பெரும்பாகத்திலும் இஸ்லாம் என்கிற ஒளிவு, பற்றிப்பாய்ந்து ஏராளமாகப் பெருகிவிட்டது.

இப்பிரமாண்டமான வார்த்தையை யாராவது தன் சுயமாய்ச் சொல்லக்கூடுமா? அப்படிச்சொன்னால் இவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேறி நிலைநிற்குமா? ஆகையால், அது மனுவாக்கல்ல தேவவாக்கு என்று வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறதல்லவா?

இதற்கு மாறாகச் சில பொறாமைக்காரரான யஹூதி, நசாராக்கள் கத்தியெடுத்து யுத்தஞ் செய்ததினால் இவ்வளவு சீக்கிரத்தில் உலகத்தின் பலபாகத்திலும் இஸ்லாம் மார்க்கம் பரவியதென்று நினைக்கிறார்கள். அது தப்பபிப்பிராயம். பர்ஷியா, இராக்கு, மகரிபு, மிஸ்று, ஆப்கானிஸ்தான், இந்துஸ்தான், புகாரா முதலிய நாடுகளில் எந்த யுத்தத்தினால் இஸ்லாம் பரவியிருக்கி

ன்றது? யுத்தத்தினுல் இஸ்லாம் பரவினதல்லவென்றும், அது ஆண்டவனின் கிருபையினுலேயே பரவியிருக்கிறதென்றும் பூர்வசரித்திரங்களால் வெகு தெளிவாக வெளியாகிறதைப் பார்க்கவில்லையா?

இதுவுமன்றி நாலாம்மோசே 21-ம் அதிகாரம் 6-வது வசனத்திலும், இன்னும் 4-ம் மோசே 31-ம் அதிகாரத்திலும், இன்னும் 4 ம் மோசே 33-ம் அதிகாரம் 51,52,53 வசனங்களிலும், 2-ம் மோசே 34-ம் அதிகாரம் 13-ம் வசனத்திலும், 5-ம் மோசே 12-ம் அதிகாரம், 1, 2, 3-ம் வசனங்களிலும், இதுபோலவே சங்கீதம் அநேக வசனங்களிலும் பார்க்க, மோசே, யூஷா முதலிய தீர்க்கதரிசிகள் பல வருஷங்களாக அஞ்ஞானிகளோடு கத்திவெடுத்து வெகு கொடிய யுத்தஞ்செய்து, அவர்கள் உயிர்களையும், பொருள்களையும் நாசப்படுத்தி, அவர்கள் பெண்டுபிள்ளைகளையும், சொத்துக்களையும் சூறையாடினதாகவும் தெரிய வருகிறதல்லவா? இப்படியெல்லாம் அவர்கள் யுத்தஞ்செய்திருந்தும், அவர்கள் மார்க்கம் ஆயிரக்கணக்கான வருஷங்கள் சென்றிருந்தும் ஏன் அது உலகத்தின் பலபாகங்களிலும், ஏராளமாகப் பரவவில்லை.

ஆகையினுல் இஸ்லாம் மார்க்கம் யுத்தத்தினுல் பரவவில்லையென்றும் அது உண்மையினுலும் தேவவாக்கு சத்தியத்தினுலும் பரவியிருக்கிறதென்றும், வெகு தெள்ளத்தெளியத்தெரிந்துகொள்ளலாமல்லவா.

## ஐந்தாவது அத்தாக்ஷி.

ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் "இந்நூற்றாண்டிலேயே என் உம்மத்திலிருக்கிற நுஅமான் என்கிற அபூஹனீபா என்று ஒருவர் வெளியாகுவார். அவர் என் உம்மத்துக்களுக்கு ஒரு சிறந்த விளக்காகவிருப்பார். பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு நான் அவர்கள் பின்னோக்கியுள்ளவனா யிருக்கிறதினுல், அவர்கள் என்னைக் கொண்டு மலாயிகத்துகளோடு மகத்துவம்பாராட்டினுர்கள். அதுபோலவே நான் ஷெய்கு நுஅமான் என்கிற அபூஹனீபா என் உம்மத்தில்



இருக்கிறதுகொண்டு நான் மகத்துவம் பாராட்டுகிறேன்; அவரைப் பிரியங்கொண்டவன் என்னைப் பிரியங்கொண்டவனைப் போலும், அவரைவெறுத்தவன் என்னை வெறுத்தவன்போலுமாவான்" என்றும் திருவாய்மலர்ந்தருளினுர்கள் என்பதை "சர்ஹு அபிலேது" என்கிற கிதாபின் முக்கத்தமாவில் காணலாம்.

இன்னும், அவர்கள் விஷயத்தைப்பற்றி நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் தங்களது ஸஹாபாவாகிய ஹஜரத்து அனஸுப்னுமாலிக்கி அவர்களிடம், "என் உம்மத்தில் ஒருவர் வருவார்; அவர் பெயர் நுஅமான், அவருக்கு இடுகுறிப்பேர் அபூஹனீபா, அவர் என்னுடைய உம்மத்துகளில் பிரகாசிக்கும் தீபமாயிருப்பார் என்று திருவாய் மலர்ந்தருளியதுமன்றி; ஓ, அனஸிப்னு மாலிக்கே! அந்த அபூஹனீபாவை நீர் கண்டுகொள்வீர்; இதோ! என்னிடத்தில் ஒரு அமானத்தான நான் அருந்திய மிச்ச பேரீச்சம் கனி இருக்கிறது, இதை யவர் பெறுக்கும்படி கொடுத்து, என்னுடைய ஆசீர்வாதத்தையும் அவரிடம் சொல்லும்" என்று திருவுளமாயிருக்கிறார்களென்று மேற்படி அனஸிப்னுமாலிக்கி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

இத்திருவருள் பிரகாரம் மேற்படி நுஅமான் என்கிற அபூஹனீபா றஹ்மத்துல்லா அலைஹி அவர்கள் ஹிஜரத்து 80-ம் வருடத்தில் கூபாவில் பிறந்து வாலிபமாகி அதுவரையிலும் மேற்படி அமானத்தையுடைய அனஸிப்னுமாலிக்கி றலியல் லாஹு அன்ஹு அவர்களும் ஜீவித்திருந்து, மேற்படி அமானத்தையுடையவர்களிடம் ஒப்புவித்து; அவர்கள் அந்த அமானத்தை வாங்கிப் புசித்தவுடன், அவர்கள் கல்பென்னும்பூமியில், இல்மென்னும் ஆறு உண்டாகி, அதனுல் பூராயமென்னும் வாய்க்கால் ஓடி, இபாதத்தென்னும் விருக்ஷங்கள் தழைத்து, ஜாஹிரு மஃரிபா, வறவு என்கிற இலைகள், பூக்கள், கனிகள் உண்டாய் அவற்றை சகல ஜனங்களும் புசித்து வருகிறதால் அவர்களே இவ்வும்மத்துகளுக்குப் பிரகாசமான விளக்காயிருக்கிறார்கள் என்கிற சொல் நிறைவேறிற்று.

மேற்படி ஹஜரத்து இமாமுல் ஆஸம் நுஃமான் என்கிற அபூஹனிபா றஹ்மத்துல்லா அலைஹி அவர்கள் இப்பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்திற்குரிய சட்டத்தையும் கற்றறிந்து, ஹக்கு, பாத்தில், ஹராம், ஹலால், ஏவல், விலகல், பர்ளு, வாஜிபு, சுன்னத்து, முஸ்தஹப்பு, முபாஹ், ஹராம், மக்ரூஹ் முதலிய யாவற்றையும் வகைவகையாய்ப் பிரித்திருக்கிறார்கள்.

அவர்கள் பிரித்திருக்கிறது உலகநடைக்கு சிவில், கிரிமினல், ரெவினியூ முதலிய விதி விலக்குகளைத் தெரிந்தெடுத்து தெளலத்து அப்பாஸியா, தெளலத்து பர்ஷியா, தெளலத்து ஆப்கானிஸ்தான், தெளலத்து இந்துஸ்தான், தெளலத்து உதுமானியா முதலிய அரசாங்கத்தினரால் அன்று முதல் நாளது வரை உலகத்தின் பல அரசாங்கங்களிலும் அமல்கள் நிறைவேறிவருகின்றது. உலகத்துக்குச் சூரியன் பிரகாசிக்கிறதுபோல், தெளலத்து இஸ்லாமியாவுக்கு தெளலத்து அப்பாஸியா வெகு பிரகாசமாயிருந்ததுபோலவே இப்போது தெளலத்து உதுமானியா பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

இம்மகத்துவம் வாய்ந்த தெளலத்து அப்பாஸியாவும் தெளலத்து உதுமானியாவும் அதுபோலவே தெளலத்தே ஹிந்துஸ்தானும் தெளலத்தே ஆப்கானிஸ்தானும் முதலிய தெளலத்தே இஸ்லாமியா அரசாங்கங்களெல்லாம் ஹஜரத் இமாமுல் அஃளம் ஹனபி றஹ்மத்துல்லா அலைஹி மத்ஹபைக்கொண்டே ஹுக்கும் செய்யும்போது ஷை இமாமவர்கள் "இவ்வும்மத்து முஹம்மதியா"வுக்கு ஓர் பிரகாசமான விளக்காயிருக்கிறார்களென்று வெகு தெளிவாய்த் தெரிகிறதல்லவா!

இம்மகத்துவம் வாய்ந்த இமாமவர்கள் வெளியாவார்களென்றும் அவர் என் உம்மத்துகளுக்குத் தான் ஓர் மணி விளக்காயிருப்பார்களென்றும், நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் திருவுளமாயிருக்கிற முன்னறிவிக்கை நிறைவேறியிருக்கிறதென்றும், அது தேவவாக்கென்றும் தெள்ளத்தெளிய தெரிகிறதல்லவா?



## ஆறுவது அத்தாக்ஷி.

ஹஜரத்து நபிகள்நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களே முடிவுகாலத் தீர்க்கதரிசி, உலகமுடிவு பரியந்தம் வேறே தீர்க்கதரிசியாக ஒருவரும் வருகிறதில்லையென்றும் தாங்கள் தீர்க்கதரிசியாய் வந்து, முன்னுள்ள தீர்க்கதரிசிகளின் ஆதீனத்தையும் அதிகாரத்தையும் கைப்பற்றியதுபோல் வேறே யாராவது தீர்க்கதரிசியாய் வெளியாகி, நமது ஆதீனத்தையும் அதிகாரத்தையும் கைப்பற்றப் போகிறதில்லையென்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இத்திருவருள் பிரகாரம் அன்று முதல் இன்றுவரையும் அவ்வாக்குப்படியே நிறைவேறியிருக்கிறது. இன்னுங்கடைசிவரை அவ்வார்த்தை பிசகி நிற்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

ஓ! கனவான்களே உங்களின் புத்தியைச் சற்றே செலுத்திப் பாருங்கள்; ஒருவர் தன் சுயமாய் இப்பாரதூரமான வார்த்தையை மனத்துணிவாய் சொல்லக்கூடுமா? அப்படிச் சொன்னால் அது பிசகுறச் சித்திபெறுமா?

இத்திருவருள் பிரகாரம் சித்திபெற்றிருப்பதால் அது தேவவாக்கென்று வெகு தெள்ளத்தெளிவாய் தெரிகிறதல்லவா?

யஹூதிகள் ஹஜரத் மூஸாநபி யவர்களை முடிவுகால தீர்க்கதரிசியெனச் சொல்லிக்கொள்கிறார்கள். ஹஜரத் தாவூது நபியவர்கள் வெளியாகி, அவர்களின் சகல ஆதீனத்தையும் அதிகாரத்தையும் கைப்பற்றி, தங்கள் நபி பட்டத்தை ஸ்தாபித்ததால் யஹூதிகளின் வார்த்தை பொய்யாய்விட்டது. யூதர்கள் ஹஜரத் தாவூது நபியவர்களை முடிவுகாலத் தீர்க்கதரிசியென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள், ஹஜரத் ஈசாநபியவர்கள் வெளியாயிருப்பதால் யூதர்கள் வார்த்தை பொய்யாய் விட்டது. நஸாராக்களாகிய கிறிஸ்தவர்களும் தங்கள் ஈசாநபி யவர்களை முடிவுகாலத் தீர்க்கதரிசி யென்று சொல்லிக்கொள்கிறார்கள். ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா வெளியாகித் தங்கள் நபி பட்டத்தை ஸ்தாபித்து அவர்களுடைய சகல ஆதீனத்தையும் அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டமையால் கிறிஸ்தவர்களுடைய வார்த்தையும் பொய்யாகி விட்டது. ஏனென்றால் யஹூதிகளும், யூதர்களும், நஸாராக்களும் தங்

கள் வேதங்களில் முடிவுகாலத் தீர்க்கதரிசி முஹம்மதுநபியவர்களென் றெழுதியிருக்க, அதற்கு நேர்மாற்றமாகச் சொல்கின்றமையால் அது முழுதும் பொய்யாய் விட்டது. ஹஜரத் முஹம்மது நபியவர்களே மெய்யான முடிவுகால தீர்க்கதரிசியாயிருப்பதால் அக்காலமுதல் இக்காலவரையும் இதுபோலவே இனி எக்காலம் வரையும் நிலைத்திருக்குமென்பது சத்தியம்.

ஆகையால் அவ்வாக்கானது மனுவாக்கல்ல தேவவாக்கென்று வெகுதெளிவாய்த் தெரிகிறதல்லவா?

## ஏழாவது அத்தாக்ஷி.

ஹஜரத்து நபிகள்நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் அந்திய காலத்திற்குப்பின் அவர்கள் ஸ்தானத்தில் யார் வருகிறதென்று அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, "எனக்குப்பின் அபூபக்கர் சித்திக் அவர்களும், அவர்கள் காலஞ்சென்றபின் உமறிபுனுல் கத்தாபு அவர்களும், அவர்கள் காலஞ்சென்றபின் உதுமானிபினி அப்பான் அவர்களும், அவர்கள் காலஞ்சென்றபின் அலிகர்றமுல்லாவஜ்ஹஹு அவர்களும்" என்று ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் திருவுளமானார்கள். இத்திருவாக்கு பிரகாரம் ஒருவர் காலஞ்சென்றபின் ஒருவராக மேற்படி 4 யார்களும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வந்து, மேற்படி காரியாதிகளை நடத்தியிருக்கிறார்களென்பதை உலக சரித்திரத்தின் மூலமாகவே வெகு தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

ஓ! கனவான்களே, இவ்விடத்தில் உங்கள் கருத்தைச் சற்றே கவனித்து ஆற அமர நிதானித்துப்பாருங்கள்; யாராவது தன் சுயமாய் இப்படிச்சொல்லமுடியுமா? அவ்விதஞ்சொன்னால் சித்திபெறுமா? அது மனுவாக்காயிருந்தால் நபிகள்நாயகம் அவர்களுக்கு முந்தி மேற்படி 4 யார்களுள் யாராவது இறக்கவும் அல்லது இந்த நால்வர்களில் ஒன்றுக்குப்பின் னொன்றாய்த் தொடர்ச்சியாக இறக்காமல் ஒருவர்க்கொருவர் முன்பின்னாக இறக்கவும் கூடும், ஆனதினால் ஒருவருக்குப்பின் னொருவர் இறப்பாரென்றுவது, அல்லது இன்னார் இன்னாருக்கு முன்பின்



னாக இறப்பாரென்றுவது சொல்லுகிறதற்குரிய தத்துவம் மனிதனுக்குக் கிடையாது.

ஹஜரத்து நபிகள்நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் திருவருள் பிரகாரம் ஒருவர் காலஞ்சென்றபின் ஒருவர் ஒருவராய் மேற்படி 4 யார்களும் அவர்கள் ஸ்தானத்தில்வந்து மேற்படி காரியாதிகளை நடத்தியிருக்கிறார்கள்.

இதனால் அவர்கள் வாக்கானது மனுவாக்கல்ல தேவவாக்கென்றும் வெகு தெள்ளத்தெளிய தெரிகிறதல்லவா?

## எட்டாவது அத்தாக்ஷி.

ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் அந்தியகாலத்தின்போது, சஹாபாக்களில் சிலர் அவர்கள் திருச்சமுகம் வந்து, "ஆ! யாறசூலுல்லா, முன்னுள்ள வேதக்காரர்களாகிய யஹூதி, நஸாராக்கள், அவர்கள் தங்கள் வேதங்களில் தங்களுக்கு வேண்டியவைகளைக் கூட்டியும், வேண்டாதவைகளைக் குறைத்தும், தங்கள் நோக்கங்களுக்கிணங்க, உள்ளவைகளைத் திருத்தியும் வேதப்புரட்டல்கள் செய்தும் ஒருவருக்கொருவர் வேறுபட்டு கலகங்கள் புரிந்தும், அதனால் வாதிட்டு, இவர்கள் வேத புஸ்தகங்களை அவர்களும், அவர்கள் வேதபுஸ்தகங்களை இவர்களுமாகத் தீயிலிட்டு எரித்து நாசப்படுத்தி பலவாறாக வேதபங்கங்கள் செய்துவிட்டார்களே, அவ்வாறு நம்முடைய வேதமாகிய திரு "குர்ஆன்" ஷரீபையும் நம்மவர்கள் வேதப்புரட்டல் செய்து, இவர்களும் அவர்களைப்போல வேதபங்கம் செய்வார்களோ?" என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஜரத்து நபிநாயகம் அவர்கள், "அல்லாஹுத்தஆலாவினால் அருளப்பட்ட தேவவாக்கானது அந்தன்மையான பங்கப்படுத்துதலுக்கு ஒருபோதும் உள்படாது. நமது உம்மத்துகளும் அத்தகையான வழிகேட்டில் ஒன்றுபட்டு நாசமடையார்கள்" என்று திருவுளமானார்கள்.

ஓ! கனவான்களே! இங்கு உங்கள் கவனத்தைச் சற்று செலுத்தி உணர்ந்துபாருங்கள். யாராவது இத்தன்மையானவார்த்தையைத் தன் சுயமாய் சொல்லக்கூடுமா? அப்படிச் சொன்னு.

னும் அது நிலைத்து சித்திபெறுமா? அவ்வாறு அது சித்திபெற்றிருப்பதால் இவ்வாக்கு மனுவாக்கல்ல தேவவாக்குதானென்றே சொல்லவேண்டும். அது எப்படியெனக் கேட்பீர்களாகில் உதயகிரி தொடுத்து அஸ்தகிரிவரையுமுள்ள உலகத்தின் பற்பல தேசத்தினரும், மதஸ்தினருமான கோடானகோடி ஜனங்கள் இக்காலம் இஸ்லாம் மார்க்கத்தைக் கைக்கொண்டு நடந்துவருகிறார்கள். அக்காலம் தொடுத்து இக்காலம் வரையும் அக்கோடானகோடி ஜனங்களில் ஒருவராவது திரு "குர்ஆன்" ஷரீபில் யாதொன்றையும் கூட்டவாவது, குறைக்கவாவது, திருத்தவாவது முயலிய வேதபுரட்டல் செய்திருப்பது கிடையாது.

முஸ்லிங்களுக்குள் மதசம்பந்தமான எத்தனையோ கலகங்கள் நிகழ்ந்திருந்தும் இவர்கள் ஒருவருக்கொருவர் பொறாமையினால் குர்ஆனைத் திரிவிட்டு எரித்து வேதபங்கம் படுத்தினதாக இதுவரை கேள்விப்பட்டிருக்கவில்லை. இனி ஒருக்காலமும் அப்படிக் கேள்விப்படப் போகிறதுமில்லை.

அன்றியும், இன்னும் சற்று கவனியுங்கள். இத்திருகுர்ஆன்ஷரீபில் யாதொரு வேறுபாடுகள் நடக்காமலும், ஒருவருக்கொருவர் எதிர்த்துப் பங்கப்படுத்தாமலும் இருப்பதினால் அது ஆண்டவனால் அருளப்பட்ட தெய்வவாக்கென்று வெகு தெளிவாய்த் தெரிவதோடு அதைப்பின்பற்றி நடக்கிற முஸ்லிங்களும் தங்கள் தங்கள் மதக்கலகங்களில் அதைப் புரட்டல்செய்யவும், திரிவிட்டுப் பங்கப்படுத்தவும் செய்யாததினால் அவர்களும் பரிசுத்த உம்மத்துகளாயிருக்கிறார்களென்றும் சூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதல்லவா?

ஆகையினால், ஹஜரத்து முஹம்மது றஸூலுல்லா அவர்களால் வெளியானவைகள் யாவும் ஆண்டவன் அறிக்கை பிரகாரம் அருளியவாக்கேயல்லாது தங்கள் சுயமாகச்சொல்லிய மனுவாக்கல்லவென்று பூரணமாகத் தெரிகிறதல்லவா?

## ஒன்பதாவது அத்தாக்ஷி.

திருமக்காஷரீபு நபிகள்நாயகம் முஹம்மது றஸூலுல்லா அவர்கள் கைவசப்பட்டவுடன் அங்குள்ள சகலமதஸ்தரும் முஸ்லிமா-



ஆய்விட்டார்கள். அப்போது எல்லோரும் அங்குள்ள "காஅபத்துல்லா" வின் ஹரத்துக்குள்சென்று தொழவேண்டுமென்று முஹம்மது றஸூலுல்லா அவர்கள் கட்டளையிட்டார்கள்; உடனே அங்குள்ளவர்கள் சொன்னதாவது, "வெள்ளிக்கிழமை ஜூம்ஆ கொத்பா தொழுகைக்கு இங்குள்ள எல்லோர்களும் அவ்வாலயத்திற்கு வந்து ஆஜரானால், அவ்வாலயத்தின் விஸ்திரணமும் மைதானமும் இடம் போதாது. அன்றியும் வருஷத்துக்கொருதடவை ஹஜ்ஜியாத்திரைக் காலத்தில் உலகத்தில் பல பாகங்களிலுமிருந்து லக்ஷக் கணக்கான ஹாஜ்ஜாஜிகள் வந்து கூடுவார்கள். அவர்களும் ஷை கொத்பா தொழுகை தொழுவார்களே அதற்கு இவ்வாலயம்இடம்போதுமா" என்றுகேட்டார்கள்.

அதற்கு நபிகள் நாயகம் முஹம்மது றஸூலுல்லா அவர்கள் "நீங்கள் சொல்லுகிறது மெய்தான். ஒரு ஸ்திரீயுடைய வயிறானது அவளுடைய ஆகாரத்துக்குப் போதுமானதாயிருக்கிறது. அதில் கர்ப்பந்தரித்தால் அந்தப் பிள்ளைக்கும் இடங்கொடுத்து ஆகாரத்திற்கும் இடம் கொடுக்கிறதல்லவா? அன்றியும் சில ஸ்திரீகளுக்கு ஒரு சமயத்தில் இரண்டு மூன்று குழந்தைகள் தரித்துவிடுகிறது. அக்குழந்தைகளுக்கும் இடங் கொடுத்து ஆகாரத்திற்கும் இடங்கொடுக்கிறதை நீங்கள் பார்க்கவில்லையா; இப்படியெல்லாஞ் செய்கிற ஆண்டவன் இவ்விடத்தில் அச்ஜனங்களுக்கு இடங்கொடுக்கிறது அவனுக்கு ஒரு பெரிய காரியம் அல்ல" என்று திருவுளமானார்கள். இப்பிரகாரமே அன்றுமுதல் இன்றுவரையும் நடந்துவருகிறதுமன்றி இனி எக்காலமும் அப்படி நடந்துவருமென்பதற்கு ஐயமில்லை.

ஓ அருமை வாய்ந்த கனவான்களே!

இவ்விடத்தில் சற்றுக் கவனித்துப் பாருங்கள் ஷை கஃபத்துல்லா என்னும் தேவாலயமானது நான்கு பக்கங்களிலுமுள்ள மலைக்கு நடுவில் இருக்கிற மைதானத்தின் நடுவில் இருக்கின்றது. ஷை மைதானத்தின் சுற்றளவைக் கவனித்தால் சுமார் ஒரு சதுரமைல் இருக்கும். இதில் ஷை ஆலயமும், அதன் மைதானமும் அதைச் சுற்றியிருக்கிற ஹரமும் சேர்த்தால் அதன் சுற்றளவு சுமார் அரைமைல் சதுரமிருக்கும். இத்தகையான ஒரு

கட்டிடத்திற்குள் சாதாரணமான காலத்தில் வெள்ளிக்கிழமை கொத்பா தொழுகைக்கு சுமார் இரண்டு லட்ச ஜனங்களுக்குக் குறைவில்லாமல் தொழுகிறார்கள்.

ஹஜ்ஜி யாத்திரைக் காலத்தில் சுமார் ஆறுலக்ஷம் பேர்கள் வரை தொழுகிறார்கள். ஒருவராவது இடம் காணவில்லை என்று திரும்புவதில்லை. சாதாரணமாய் ஒரு மனிதர் தொழுவதற்கு நாலுமனிதர் நிற்பதற்கு எவ்வளவு இடம் வேண்டுமோ அவ்வளவு இடம்வேண்டும். அப்படியானால் ஆறுலக்ஷம் ஜனம் தொழுவதற்கு எவ்வளவு இடம் வேண்டும். இந்த ஆறு லக்ஷம் பேர்களும் மேற்சொன்ன அரைமைல் சுற்றளவுள்ள ஆலய மைதானத்திற்குள் யாதொரு சங்கடமும் கஷ்டமும் இல்லாமல் சுகமாய் தொழுகிறதாயிருந்தால் இதைவிட மகா பெரிய நிலையான அற்புதமும் சத்தியமும் நிறைந்த வாக்கு வேறு ஏதாவதுவேண்டுமோ?

## பத்தாவது அத்தாக்ஷி.

ஹஜ்ஜி யாத்திரை காலங்களில் லக்ஷக் கணக்கான ஜனங்கள் இந்த மக்கா ஷரீபில் வந்து கூடுகிறார்கள். அவர்களுக்கு போதுமான தற்காரி (கீரை, காய், கனி) வகைகளும் பால், தயிர்களும் இம்மக்கா பூமியில் அகப்படுகிறது வெகு கஷ்டமாயிருக்கும். ஏனென்றால் இதோ வனவாசமானவை. இங்கு யாதொரு தண்ணீர் பாய்ச்சலான வகைகள் யாதொன்றும் உற்பத்தியாகிறதில்லை. அதற்குத் தண்ணீரும் இடையாது. பூமியும் கிடையாது. வெளியூர்களிலிருந்து வரவேண்டுமானால் சுமார் மூன்று நாள் பயணத்திற்கப்புறமுள்ள "தாயிப்" என்கிற ஊரைத்தவிர மற்ற ஊரிலிருந்து வருவதற்கு யாதொன்றும் முடியாது. மேற்படி தாயிப் என்கிற ஊரிலிருந்து வந்தாலும் வருமென நினைத்தாலும் இவ்வளவு ஏராளமான ஜனங்களுக்கு எவ்வளவும் போதாது என்று ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது ரசூலுல்லாவிடம் ஜனங்கள் சொன்னார்கள்.

அதற்கு ஹஜரத் நபிநாயகம் அவர்கள் சொன்னதாவது: நீங்கள் சொல்லுவது யாவும் நிஜந்தான்; கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும், கர்ப்பத்துக்குள்ளிருக்கும் சிசுவுக்கும், யாதொரு



சங்கடமின்றி, ஆகாரம் கொடுக்கிற ஆண்டவன் இங்கு வந்து கூடுகிற ஹஜ்ஜாஜிகளுக்குப் போதுமான தற்காரி சாமான்வகையறுக்களும், பால், தயிர் முதலானவைகளும் கொடுக்கிறது ஒரு பெரிய காரியமல்லா" என்று திருவுளமானார்கள்.

இத்திருவருள் பிரகாரம் அங்கு எத்தனை லக்ஷம் ஜனம் கூடினபோதிலும் அவர்களுக்கு யாதொரு தடையும் சங்கடமுமில்லாமல் அன்றன்று எடுத்த பறித்த கொய்த காய்கனி கீரை வகையறுக்களும், பால் தயிர் வகைகளும் அகப்படுகிறதுமன்றி, ஹஜ்ஜி காலம் எந்தக்காலமாயிருந்தாலும்சரி எந்த விதமான காய்கனி கீரைகளும் அகப்படுகின்றன.

ஓ! செல்வம்வாய்ந்த என் சிநேகிதர்களே; இவ்விடத்தில்கொஞ்சம் யோசியுங்கள். எப்பேர்கொத்த நீர்வள நிலவளங்களுள்ள சிறந்த பட்டணங்களாயிருந்தபோதிலும், அப்பட்டணத்திலுள்ள ஜனங்களின் எண்ணிக்கைக்கு பாதி அல்லது சமமாக ஜனங்கள் வந்துவிட்டால் தற்காரி சாமான்களும் பால் தயிர் வகையறுக்களும் விலைகள் அதிகக்கிராக்கி ஆய்விடுகிறதும் தவிர வெகு-சாமான்களும் அகப்படாமல் போய்விடுகிறதல்லவா? இங்ஙனமிருக்க சுமார் லக்ஷம் ஜனமுள்ளதும் வறண்டு காய்ந்த பூமியும் அதற்கு பக்கஉதவியில்லாத ஊருமான இம்மக்காஷரீபில் லக்ஷகணக்கான ஜனங்கள் ஏக காலத்தில் சுமார் இரண்டு வாரம் வரை தங்குவதற்கு அவர்களுக்கு போதுமான உலகத்திலுள்ள எல்லாவித காய்கனி கீரை வகையறுக்களும் பால் தயிர் வகையறுக்களும் யாதொரு சங்கடமும் இல்லாமல் போதுமான வரையும் அகப்படுவதாயிருந்தால், இதைவிட நிலையான அற்புதமும் சத்தியமான தேவவாக்கும் வேறு ஏதும் உண்டோ?

## பதினோராவது அத்தாக்ஷி.

திருமக்கா ஷரீபில் அபுஜஹில் போலொத்த அஞ்ஞானிகளும் யஹூதி, நஸாராக்கள் முதலியவர்களும், ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது ரசூலுல்லா அவர்கள் சமூகம் பலதடவைகளாய் பல்வாறுகச் சென்று, "ஓ! நபியே, நீர் குர்ஆன் ஷரீபை அல்லாஹுத்தஆலாவால் அருளிய தேவவாக்கு என்று

3

சொல்லுகிறீரே, அது ஆண்டவன் வாக்கு என்பதற்கு என்ன அத்தாக்ஷி" என்று கேட்டார்கள்.

அதற்கு நபிநாயகம் அவர்கள், "ஆண்டவன் வாக்கானது, மனிதர்களால் எழுதப்பட்ட வார்த்தைகளைவிட அதிக சிறந்த வார்த்தைகளாகவும், அதின் அர்த்தம் எல்லோரும் வெகு எளிதில் அறிந்துகொள்ளும் படியாகவும், அதின் கருத்து மனிதர்களுடைய கருத்துகளுக்கெல்லாம் அடங்காததாகவும், சத்தியமே நிறைந்துள்ளதாகவும், அதில் யாதும் தப்பு தவறுதல்களில்லாததாகவும், இதுவரை உலகத்தில் வெளியானவைகளும் இனி வெளியாகப் போகிறவைகளும், அதில் அடங்கியுள்ளதாகவும், தற்கால, பிற்கால, முற்காலமாகிய எக்கால அறிவுகளும் நிறைந்துள்ளதாகவும், ஜனங்களுக்கு இகபர சுகபாக்கியங்களைக் கொடுக்கக்கூடியதாகவும், மெய்ஞ்ஞான பொக்கிஷமாகவும், எத்தகையான கல்நெஞ்சர்களின் மனதையும் உருகச்செய்கிறதாகவும், மனிதர்களுடைய இருதயங்களில் மனப்பாடமாக பதியக் கூடியதாகவும், மனிதர்கள் பாவ நோய்களைத் தீர்க்கிற சஞ்சீவியாகவும், அதை ஓதுகிறவர்களுக்கும், ஓதக் கேட்கிறவர்களுக்கும், பேரானந்தத்தைக் கொடுக்கக்கூடியதாகவும், அதில் ஒரு வார்த்தையை எடுத்துவிட்டு மனிதர்களின் வாக்கைக் கலந்தால் அது பொருந்தாததாகவும், எக்காலங்களிலுள்ள எத்தனை கல்விமான்கள் ஒன்றுகூடி ஒரு விஷயத்தை ஆராய்ந்து இன்னதுக்கு இன்ன விஷயமாய் சொல்லுகிறது பொருத்தமாயிருக்குமென்று தீர்மானித்துக்கொண்டு இது விஷயத்தைப்பற்றி குர்ஆனில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று பார்ப்பார்களானால், அவர்கள் தீர்மானித்ததற்கு மேலாக இருக்கிறதைக் காணுகிறதாகவும், அதிலுள்ள விதி விலக்குகள் எக்காலங்களிலும் எத்தேசங்களிலும், எல்லா ஜனங்களிடத்திலும் யாதொரு சீர்திருத்தல் செய்வதற்கு இடங்கொடுக்காமல் இருக்கிறதாகவும், எக்காலத்திலும் எத்தேசத்தினரும் அவ்விதிவிலக்கை பின்பற்றி நடக்கத்தக்கதாயிருக்குமேயல்லாது மனிதர்களுடைய நீதிவாக்கின் விதிவிலக்கை அதைப்பற்றும்படியாயில்லாததாகவும், இருக்கிறதுமன்றி, அதின் பாஷையின் அலங்கார



மோ யாதொன்றுக்கும் ஒப்பற்றதாகவும், இலக்கண இலக்கியங்களின் விதிவிலக்குகளுக்கு இதுவே அசலாக இருந்து இதனைக்கொண்டே அப்பாஷை நடையை சீர்திருத்தக் கூடியதாகவும், இன்னுமிவைபோன்ற மட்டிலடங்காத விஷயங்களுடையதாகவும் இருக்கின்றது. இத்தன்மைவாய்ந்த ஒரு அத்தியாயத்திற்கு நிகராக நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடியாவது அல்லது நாயனென்று வணங்குகிற தேவாதிகளின் உதவியைக் கொண்டாவது கொண்டுவாருங்கள்" என்று அவரவர்கள் கேள்விக்கு தக்கவாறாகப் பற்பல சமயங்களில் பலவிதமாய் திருவுளம்பற்றினார்கள்.

அதற்கு அவ்வஞ்ஞானி முதலியவர்களால் அன்று முதல் இன்றுவரை குர்ஆன்ஷரீபுக்கு நிகராக யாதொரு அத்தியாயத்தையாவது வசனத்தையாவது கொண்டுவர ஏலாமல்போய்விட்டது. இனி ஒருக்காலமும் கொண்டுவரப் போகிறதுமில்லை.

ஓ! கனவான்களே! இதனைக் கொஞ்சம் கவனித்துப்பாருங்கள். ஒரு மனிதன் இத்தன்மையான வார்த்தையை தன் சுயமாய் நெஞ்சஞ்சாமல் சொல்லுவாரா? அப்படி சொன்னால் அது நிலைத்து சித்திபெறுமா? அவ்வாறு நிலைத்துச் சித்திபெற்றிருக்கின்றமையால் அது தேவவாக்கேயன்றி மனுவாக்கல்லவென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதல்லவா? இதற்குச் சில திருஷ்டாந்தம்சொல்லுகிறேன் கேட்டு ஆலோசித்துப்பாருங்கள்.

அரபி பாஷையானது உலகத்தில் புராதின பாஷையாகவும், உதயகிரிமுதல் அஸ்தகிரிவரையிலும் அது விளங்கக்கூடிய ஒரு பெரிய பாஷையாகவும் இருக்கின்றது. அப்பாஷையில் எத்தனையோ அருமைவாய்ந்த கணக்கிலடங்காத புஸ்தகங்கள் ஆதிகாலமுதல் நாளதுவரையும் வகை வகையாக வரையப்பட்டிருக்கின்றன. அவைகளில் இக்குர்ஆன்ஷரீபுக்கு நிகராக யாதொரு நூல்கள் வெளியாயிருப்பதுமில்லை இனி வெளியாகப்போகிறதுமில்லை, என்பது உலகம் அறிந்த விஷயம்.

உலகத்தில் எத்தனையோ வேத வாக்கியங்களான நூல்கள் இருக்கிறதில் இந்தக் குர்ஆனும் ஒரு நூலென்று நீங்கள்நினைக்க

கக்கூடும். ஆயிரம் முஸ்லிம்களுள்ள எந்த ஊரிலேயாவது அவ்வூர்களிலுள்ள எல்லா மதஸ்தரிடமுமுள்ள வேத நூல்களையும் எரித்துவிட்டு அதைபோல ஒரு நூல் அவர்கள் மனதிலிருந்தே வெளிப்பட வேண்டுமென்று நீங்கள் நாடுவீர்களேயானால் இந்த குர்ஆன் ஷரீபைத்தவிர மற்ற நூல்களை கொண்டுவர முடியாது ஏனென்றால் இந்த குர்ஆன்ஷரீபு முஸ்லீம்களிலநேகர் மனதில் மனப்பாடமாக பதிந்திருக்கிறது. ஆனதினால் முப்பது ஜுஸ்வு என்கிற காண்டங்களும், 114 சூரத்தென்கிற அத்யாயங்களும், 575 றுக்கூவு என்கிற அதிகாரங்களும், 6666 ஆயத்தென்கிற வசனங்களும் அடங்கிய இப்பாரதூரமான நூல் எப்படி எழுதப்பட்டிருக்கின்றதோ அவ்வண்ணமே யாதொரு பிசகுதலில்லாமல் அவர்கள் மனதிலிருந்தே உதித்து எழுதிவிடுகிறார்கள். இத்தகையான மகத்துவம் வாய்ந்த நூல் உலகத்தில் இருக்கிறதா? என்று யோசித்துப் பார்ப்பீர்களேயானால் இந்த குர்ஆன்ஷரீபைத் தவிர வேறு வேத நூல் ஒன்றுமில்லையென்பதையும், நீங்கள் தெளிவாய் அறிந்துகொள்வீர்கள்.

அன்றியும் சற்றே கவனியுங்கள். மந்திரவாதிகள் இந்த குர்ஆனிலுள்ள வசனங்களை மந்திரித்துப் பிசாசுகளைத் துரத்தி அநேக அற்புதங்களைச் செய்கிறார்கள். நக்ஷத்திரங்களையும் தேவாதிகளையும் மற்றும் தமக்கு ஆகவேண்டியவைகளையும் மேற்படி ஆயத்துகளை உருப்போட்டு வசியமாக்கிக் கொள்ளுகிறார்கள். மேற்படி வசனங்களை சக்கிரத்திலமைத்து குளிசம் கட்டி கொடுக்கிறார்கள். தட்டுகளில் எழுதி கரைத்து குடிக்கிறார்கள். வஞ்சனை சூனியம் முதலானவைகளையும் வைத்தியர்களால் தீராத கொடிய நோய்களையும் மேற்படி ஆயத்துகளை மந்திரித்து நிவிர்த்தி செய்துவிடுகிறார்கள்.

ஜோஷியர்களோ மேற்படி ஆயத்துகளைக்கொண்டு பலவாறாய் ஜோஷியம் சொல்லுகிறார்கள். சிலர் மேற்படி ஆயத்துகளை வசியமாக்கி முற்கால தற்கால பிற்கால திக்கதரிசனங்களை உரைத்து ஒவ்வொரு விஷயத்தின் தாரதம்மியங்களை உள்ளது உள்ளபடியே சொல்லுகிறார்கள்.



வைத்தியர்களோ மேற்படி ஆயத்துகளைக் கொண்டு தங்கள் வைத்திய அநுபவத்தைக் கண்டறிந்து, இது ஜனங்களுக்கு ஆத்தும சுகத்தையும் தேக சவுக்கியத்தையும் கொடுக்கக்கூடியதா யிருக்கிறதென்று கருதி தங்கள் தங்கள் அபிமதங்களுக்கு இதை ஒரு ஆதாரட்டியாக எடுத்து ரூபிக்கிறார்கள்.

வான சாஸ்திரிகளோ தங்கள் சாஸ்திரத்திற்கும், தங்கள் கொள்கைக்கு தக்கவாறு இந்த குர்ஆனின் வசனங்களை ஆதாரட்டியாகக் கொண்டு தங்கள் காரியங்களை உறுதிப் படுத்துகிறார்கள்.

பூமி சாஸ்திரிகளும் அவ்வாறே தங்கள் சாஸ்திரத்துக்கு இவ்வாயத்துகளை ஆதாரமாக்கி சாஸ்திரங்கள் எழுதுகிறார்கள்.

தத்துவ சாஸ்திரிகளோ இந்த குர்ஆனின் வசனங்களைக் கொண்டே தங்கள் தத்துவ ஆராய்ச்சிகளை நிலைப்படுத்துகிறார்கள்.

அரசர்களோ தங்கள் அரசாங்கத்துக்கு வேண்டிய சிவில், கிரிமினல், ரெவினியூ முதலிய சட்டங்களை இந்த குர்ஆன் ஷரீபின் வசனங்களைக் கொண்டு எடுத்து தங்கள் இராஜ்ஜியத்தை நீதிபரிபாலனம் புரிந்துவருகிறார்கள்.

அந்நிய மதஸ்தர்களோ குர்ஆன்ஷரீபு வசனங்களைக்கொண்டு நரபலி, மதுவருந்தல், சூதாட்டம் சிசுவதை முதலிய துர்க்கிரியைகளை தள்ளியும், புனர்விவாகம், விதவைவிவாகம் முதலிய அநேக உத்தம கிரியைகளை எடுத்து நடத்திவருகிறார்கள்.

இவ்வாறே வேதியர்களும், வேதாந்திகளும், கல்விமான்களும், நியாயாதிபதிகளும், கைத்தொழில், கலாசாலை நிபுணர்களும் தங்கள் தங்கள், கொள்கை நடப்பு கிரியைகளுக்கு இந்த குர்ஆன் வாக்கியங்களை ஆதாரமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

உலகநீதி, சொற்கநீதி, மனுநீதி முதலிய சர்வ நீதிகளும், இந்த குர்ஆனில் அமைந்திருப்பதினால் நீதிமான்களெல்லாம் மேற்படி வசனங்களையே தங்கள் நீதிகளுக்கு முகவுரையாக கொள்ளுகிறார்கள்.

அதை யாராவது பன்முறையாக ஓதுவதினால் ஓதுகிறவர்களும் கேட்கிறவர்களும் ஆனந்தித்துப் பேரானந்தத்தில் மூழ்கிவிடுகிறார்கள்.

அவ்வசனங்களை ஓதி தங்கள் ஆத்துமாவுக்கும் பிறர் ஆத்துமாவுக்கும் பலன் பெறும்படியாகச் செய்கிறார்கள்.

அவ்வாயத்து வசனங்களோ அறிவு சிறந்த ஓர் பெரிய உபாத்தியாயர் ஒரு சிறு குழந்தைக்கு அதின் மனதில் படும்படி எவ்விதமாக கல்வி ஊட்டுவாரோ அவ்விதமே மனிதர்கள் இகபரபாக்கியங்களை அடைவதற்கு சர்க்கரை பந்தலுள் தேன்மாரி பொழிந்ததுபோல் அமிர்த வாக்குகளாய் கெம்பீரித்துச் சொல்லுகின்றன. யாராவது அவ்வாயத்துகளைக் கருத்தோடு நோக்கினால் அவர்களுடைய இருதயத்தை உருகச்செய்து அவர்களை மோக்ஷத்திலிழுக்கிற காந்தக் கருவியாக இருக்கின்றது.

ஷை குர்ஆன் ஆயத்தின்வசனங்களோ எல்லோரும் சாதாரணமாய் அறிந்துகொள்ளக் கூடிய சிறந்த வசன நடையாய் இருக்கின்றன. அதின் வார்த்தைகளோ நவரத்தினங்களை தெரிந்தெடுத்து கோர்த்ததுபோல வெகு அலங்காரமாய் திரட்டப்பட்டிருக்கின்றன.

வெகு அருமையான கீர்த்திபெற்ற எந்த கிரந்தங்களைப்பார்த்தாலும் இதிலுள்ள ஒரு அலங்கார வார்த்தைக்கு சமமாக அவைகளில் காண்பதரிது. இலட்சக்கணக்கான வியாக்கியான கிரந்தகர்த்தாக்கள் அன்றுமுதல் நாளதுவரையில் எவ்வளவோ வியாக்கியான கிரந்தங்கள் அதற்குக் கோர்வை செய்திருந்தும் அதின் கருத்துகள் முற்றிபெறாமல் இன்னும் வியாக்கியான கிரந்தங்கள் வெளியாகிக்கொண்டே வருகின்றன.

அது அக்காலத்தில் எத்தன்மையாயிருந்ததோ அதுபோலவே நாளதுவரையில் யாதொரு மாற்றமும், கலப்பும், கூடுதலும், குறைதலும் இல்லாமல் பரிசுத்தமாகவே இருக்கின்றது. முழு உலகத்தில் வசிக்கிற மொத்த ஜனத்தொகையில் நாலில் ஒரு பாகத்தினர் தங்கள் உயிர் பெண்டிர், பிள்ளை, தாய், தகப்பன் முதலியவர்களைப் பார்க்கிலும் இந்த குர்ஆன் ஷரீபை மேலாகக் கருதி தங்கள் தீராத நோய்க்கு இது ஒரு அபூர்வமான மருந்தென்று நினைத்துக்கொண்டு வருகிறார்கள். அது விஷயத்தில் தங்கள் உயிரையும், பொருளையும் சிந்தி அந்த நிலைக்கச் செய்திரு-



க்கிறார்கள். இன்னும் அவ்வாறு செய்கிறதற்கு சித்தமாகவுமிருக்கிறார்கள். அதில் சொல்லப்பட்டிருக்கிற முன்னறிவிப்புக்கள் அநேகம் நிறைவேறப்பட்டும் சிலது நிறைவேறிக்கொண்டும் வருகின்றன.

ஓ! கனவான்களே! இத்தகையான அருமைவாய்ந்த நூல் வேறு ஏதுவும் இருக்கிறதாவென்று நீங்கள் கருத்தோடும் ஜெபத்தோடும் கவனிப்பீர்களானால் இதற்கு நிகரான நூல் முழு உலகத்தில் ஒன்றுமில்லையென்று தெள்ளத்தெளிய அறிந்துகொள்வீர்கள்.

ஒரு மனிதர் தன் சுயமாய் சொன்னால் அது இவ்வளவு கீர்த்தியையும், மகத்துவத்தையும் சிறப்பையும் பெற்றதாய் இருக்காதென்றும் ஆண்டவனால் அருளிய வாக்காய் இருப்பதினாலேயே இவ்வண்ணமாயிருக்கிறதென்றும் நீங்கள் சூரிய பிரகாசத்தைப்போல் தெரிந்துகொள்வீர்கள்.

## பன்னிரண்டாவது அத்தாக்ஷி.

ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு இபுறாஹீம், அபுல்காசிம், தையிபு அல்லது தாஹிர் எனச் சில ஆண் குழந்தைகள் இருந்தனர். அக்குழந்தைகளினுடைய அழகையும், ஒழுக்க வணக்கத்தையும், புத்தி சாதுரியத்தையும் கண்டு ஸஹாபாக்கள் யாவர்களும் அக்குழந்தைகளின்மீது, வெகு அன்பாயிருந்து நேசித்து வந்தார்கள். இங்ஙனமிருக்க, "பிராயமான ஆண் குழந்தைகள் ஒருவருக்கும் முஹம்மது நபியவர்கள் பிதாவாகவிருக்கமாட்டார்கள்" என்று ஆயத் இறங்கியபோது, இதைப்பற்றி ஸஹாபாக்கள் நபிநாயகமவர்களிடத்தில் வந்து கேட்டார்கள்.

அதற்கு பிரதியுத்தரமாக நபிநாயகமவர்கள், "நபியுடைய பிள்ளைகளுக்கு நபிப்பட்டம் கொடுக்க நேரிடுமாதலாலும், எனக்குப் பின் வேறு நபியில்லையென்றிருப்பதாலும், பிராயம் எத்துவதற்கு முன் என்னுடைய ஆண் குழந்தைகள் காலமாகிவிடுமென மேற்படி ஆயத்தால் தெரியவருகிறது" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

அதற்கு மேற்படி ஸஹாபாக்கள், "தாங்கள் எங்களுக்கு எவ்விதமாயிருக்கிறீர்களோ அதைப்போலவே தங்கள் சந்ததியிலிருந்து, யாராவது எங்கள் சந்ததியாருக்கு வருவார்களா?" என்று கேட்டார்கள்.

அதற்கு மறுமொழியாக நபிநாயகமவர்கள், "எனது ஏகபுத்திரியாகிய பாத்திமாவின் சந்ததியிலிருந்து, உலகம் முடியுமளவும் ஒவ்வொரு காலங்களிலும் அநேக குதுபு மார்களையும், அவுலியாக்களையும் அல்லாஹுத் தஆலா வெளிப்படுத்துவான்; நான் நபிமார்களில் எவ்வளவு கீர்த்தி பெற்றவனாயிருக்கிறேனோ அதைப்போல் அவர்களும் அவுலியாக்களில் கீர்த்தி பெற்றவர்களாயிருந்து உலகத்தை நடத்துவார்கள்" என்று திருவுளமானார்கள்.

ஓ! தனவான்களே இவ்விடத்தில் சற்றே கவனித்துப்பாருங்கள், அவர்களுடைய முதற் பிராட்டியாரான கதீஜா நாயகி அவர்களின் புத்திரிசிகாமணியாகிய பாத்திமா நாயகி அவர்களின் புத்திரர்களாகிய இமாம்ஹஸன், இமாம்ஹுஸைன் ஆகிய இருவர்களின் சந்ததியில் இமாம் ஜெயினுலா அபிதீன், இமாம் மூசாக்காஸிம், இமாம் ஜஅபர்ஸாத்திக்கு, இமாம் முஹம்மதுபாகிர், இமாம் ஹஸனுல் முதன்னா முதலிய பன்னிரண்டு இமாம் முதலியவர்களும், இவர்களுடைய சந்ததியிலிருந்து மட்டிலடங்காத குத்துபுமார்களும், அவுலியாக்களும் பற்பல தேசங்களில் ஒவ்வொரு காலங்களில் வெளிப்பட்டிருப்பதில் ஹஜரத்து குத்துபு றப்பானி, கவுது ஸமதானி, குத்புல் அக்தாப், கவுதுல் ஆலம், முஹியித்தீன் அப்துல்காதர் ஜெயிலானி அவர்கள் பிதா வழியில் இமாம் ஹஸன் வங்கிஷத்திலும், தாய் வழியில் இமாம் ஹுஸைனுடைய வங்கிஷத்திலும் ஆக மேற்படி இருவர்சந்ததியிலும் உதித்தவர்களாகவும், குத்துபு மார்களுக்கெல்லாம் நாயகமாகவும், விளங்கி வருகிறார்களென்பது உலகமறிந்த விஷயமே.

இவ்வாறே ஆப்பிரிக்காவில் ஹஜரத்து குத்துபுல் அக்பர் அபுல்ஹஸன் ஷாதலி அவர்களும், சுல்தானுல் ஆரிபீன், செய்யிது அஹம்மது கபீர், றிபாயி அவர்களும், இந்தியாவில் ஹஜரத்து*



காஜா முஈனுத்தீன் சிஷ்தி, அவர்களும் இன்னமும் இவர்களைப்போன்ற அநேக குத்துபு மார்களும், ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களுடைய சந்ததியில் வெளியாயிருக்கிறார்களென்பதை, அவர்களுடைய மக்பராக்களையும், சரித்திரங்களையும் பார்க்க, வெகு ஸ்பஷ்டமாய்த்தெரிந்து கொள்ளலாம்.

ஆகவே அவர்களால் சொல்லிய வாக்கு அவர்களின் சுயவாக்கல்லவென்றும், அது தேவவாக்கென்றும் விளங்குகிறதல்லவா?

இன்னும் சற்றே கவனித்துப் பாருங்கள், ஸஹாபாக்கள் சிலர் வந்து "திருமக்கா ஷரீபும், அதிலுள்ள காபத்துல்லா முதலிய பரிசுத்த ஸ்தலங்களும், திருமதீனா முனவ்வராவும், அதிலுள்ள பரிசுத்த ஸ்தலங்களும், அந்நிய மதஸ்தினால் கைப்பற்றி ஆளப்படுமோ" என்று கேட்டார்கள். அதற்கு மறுமொழியாக நபிநாயகமவர்கள், "ஆண்டவனுடைய பரிசுத்த பட்டணங்களும், ஸ்தலங்களும் அவனுடைய பரிசுத்த அடியார்களாகிய, முஸ்லிம்களால் ஆளப்படுமேயல்லாது அந்நியர்களின் ஆளுகைக்குட்படாது" என்று திருவுளமானார்கள். அப்பிரகாரமே அன்று முதல் இன்றுவரையிலும், அது முஸ்லிம்களால் ஆளப்பட்டு வருகிறதால் அது மனுஷவாக்கல்ல, தேவவாக்கே என்று தெரிகிறதல்லவா?

இன்னும் சற்றே கவனித்துக்கேளுங்கள், சில ஸஹாபாக்கள் ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் திருச்சமுகம்வந்து "ஆ, யாறசூலுல்லா முன்னுள்ள யஹூதி, நஸாராக்கள் பலவாறாய் மார்க்கபிரிவினையடைந்து அதில் இன்ன வகுப்பார் தான் சரியான வகுப்பார்களென்று கண்டுகொள்ள எலாமையாயிருக்கின்றது. ஆகையினால் நமது உம்மத்துகளும் அவ்விதமாயிருப்பார்களோ" என்று கேட்டார்கள்.

அதற்கு மறுமொழியாக நபிநாயகம் அவர்கள், "யஹூதிகள் 71 கூட்டமாகவும், நஸாராக்கள் 72 கூட்டமாகவும் பிரிந்திருக்கிறதுபோல் என் உம்மத்துகளும், பிற்காலத்தில் 73 கூட்டமாய்ப் பிரிவார்கள். அவர்கள் ஒரு கூட்டத்தைத்தவிர மற்றவர்களெல்லாம் நாசமடைவார்கள்" என்று திருவுளமானார்கள்.

அதற்கு ஸஹாபாக்கள், அவ்விவாரு கூட்டத்தினர் யார் என்று கேட்க, அதற்குப் பிரதியுத்தரமாக "நானும் என் ஸஹாபாக்களும் நடந்து வருகிறபடி நடப்பவர்களே என் கூட்டத்தினரென்றும், நீங்கள் "ஸவாதுல் ஆஃலம் அல்லது இஜ்மாவுல் உம்மத்" என்கிற சிறந்த பெருங் கூட்டத்தைப் பின்பற்றுங்கள், ஆண்டவனுடைய கரமானது அக்கூட்டத்தின் பேரிலிருக்கின்றது. யாதொருவன் அக்கூட்டத்தைவிட்டு நீங்கி வேறுபட்டு சிதறினால் அவன் இஸ்லாமுடைய கயிற்றைத் தன் கழுத்திலிருந்து அகற்றினவனாகவும், நரகவேதனைக் குட்பட்டவனாகவும், இருப்பானென்றும்; என் உம்மத்துகள் எல்லோரும் வழிகேட்டின்பேரில் ஒன்று கூடமாட்டார்கள்." என்றும் திருவுளமானார்கள்.

இத்திருவுளபிரகாரம் அவர்கள் உம்மத்துகள் பலவாறுய் வேறுபட்டிருப்பதில் ஹனபி, மாலிக்கி, ஷாபியி, ஹம்பலி ஆகிய நான்கு மதுகபு உடையவர்களே "ஸவாதுல் ஆஃலம் அல்லது இஜ்மாவுல் உம்மத்" என்கிற சிறந்த பெருங்கூட்டங்களாயிருக்கிறார்கள். இவர்களே நபியவர்களையும் அவர்களுடைய ஸஹாபாக்களையும் சகலத்திலும் பின்பற்றி, நடந்து வருகிறவர்களாகவும், அக்காலமுதல் இக்காலம்வரையும் முஸ்லீம்களுக்குரிய சகல ஆதினத்தையும் அதிகாரத்தையும் பெற்றவர்களாகவும், முஸ்லீம்களின் முழு ஜனத்தொகையில் ஆயிரத்துக்கு தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது பங்கு அதிகமானவர்களாகவும், வழிகேட்டின்பேரில் ஒன்றுகூடாதவர்களாகவும், சுன்னத்து ஜமாத்தென்கிற ஈடேற்றம்பெற்ற ஒரே கூட்டத்தினராகவும் இருக்கிறார்கள். ஆகவே, ஹஜரத்து நபிநாயகம் அவர்கள் வாக்குபிரகாரமே நிறைவேறி நடந்துவருவதால் அது மனுவாக்கல்ல தேவவாக்கென்றே தெரிகிறதல்லவா?

இன்னும் சற்றே கவனித்துப் பாருங்கள், எனக்கு 30 வருஷத்திற்குப் பின்பு அரபு இராஜ்ஜியம் பனீ உமய்யா ஆளுகையிலிருந்து அப்பாஸியா சந்ததியில் திரும்பிவிடுமென்றும், அரபுகள் துருக்கியர்க்குட்பட்டு நடப்பார்களென்றும் ஹஜரத்து நபிநாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் திருவுளமானார்கள்.



இத்திருவுளப் பிரகாரமே அது நிறைவேற்றப்பட்டும், நிறைவேறிக்கொண்டும் வருகிறதை நீங்கள் பார்க்கிறீர்களல்லவா?

இன்னும் சற்றே கவனித்துப்பாருங்கள், திருகுர்ஆன்ஷரீபிலுள்ள சூறத் நூர், சூறத் நமல், சூறத் றூம், சூறத்துல் பத்ஹு முதலிய அநேகசூறத்துகளில் சொல்லப்பட்டிருக்கிற ஏராளமான முன் அறிவிப்புகள் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டும், சிலது நிறைவேறிக்கொண்டும் வருகிறதை நீங்கள் பார்க்கவில்லையா?

இதுவுமன்றி இன்னும் சற்றே கவனித்துப் பாருங்கள், முடிவுகால அடையாளங்களைப்பற்றி ஹஜரத்து நபிநாயகம் அவர்கள் திருவுளமானதில் அநேக அடையாளங்கள் நிறைவேற்றப்பட்டும், சில அடையாளங்கள் நிறைவேறிக்கொண்டும் வருகிறதல்லவா?

இன்னும் மேற்சொன்னவைகள் போலொத்த எத்தனையோ முன்னறிவிப்பான தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டும், நிறைவேறிக்கொண்டும் வருகின்றன. அவைகளையெல்லாம் எடுத்துச்சொல்ல இச்சமையம் போதாதென்று நினைத்து இம்மட்டில் நிறுத்துகிறேன்

நான் மேலெடுத்து ரூபித்த அத்தாக்ஷிகளால் ஹஜரத்து நபிகள்நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களால் வெளியான வாக்குகள் யாவும் அவர்கள் சுயமாய் சொல்லியவைகளல்ல வென்றும், அல்லாஹுத்தஆலாவால் அருளிய தேவவாக்கென்றும், சூரிய பிரகாசத்தைப்போல் நீங்கள் சந்தேகமறத் தெரிந்துகொள்ளலாம். இவ்வத்தாக்ஷிகள் தங்களுக்குப் போதாதானால் இன்னுமநேக அத்தாக்ஷிகளை எடுத்துப் போதிக்க ஆயத்தமாயிருக்கிறேன் என்று மேற்படி மவுலவி சாஹிபு தன்னுடைய பிரசங்கத்தை முடித்தார்.

உடனே ஷெ பாதிரிகளும் குருமார்களும் மற்ற ஜனங்களும் நபி முஹம்மது றசூலுல்லா அவர்களுடைய வாக்கானது அவர்களின் சுயவாக்கல்லவென்றும் அது தெய்வ அறிக்கை பிரகாரம் அருளிய தேவவாக்கென்றும் வெகு தெளிவாய்த் தெரிகின்றது. அவர்கள் வாக்கு தெய்வவாக்கென்று எப்போது ஏற்

பட்டதோ அவர்கள் மெய்யான தீர்க்கதரிசியென்றும் அவர்கள் மூலியமாய் வெளியாயிருக்கிற யாவும் சத்தியமானவைகளென்றும் சந்தேகமறச் சொல்லலாம்.

நாங்கள் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லாவின் வாக்கு தேவவாக்கா அல்லது மனுவாக்கா என்று கேட்டதெல்லாம் அவர்கள் வாக்கு தேவவாக்கென்று ஏற்பட்டால் அவர்கள் மெய்யான தீர்க்கதரிசியென்றும், அவர்கள் வாக்கு மனுவாக்கென்றேற்பட்டால் அவர்கள் பொய்யான தீர்க்கதரிசி என்றும் கருதி இதைக் கேட்க ஆரம்பித்தோம். மேற்சொன்ன விடைகளை நாங்கள் கவனிக்கும்போது, முஹம்மது றசூலுல்லா அவர்கள் மூலமாய் வெளியான வாக்கு தேவவாக்கென்று வெளியாகின்றமையால் அவர்கள் மெய்யான தீர்க்கதரிசியென்று நாங்களெல்லோரும் உண்மைகொண்டு அவர்களின் மார்க்கத்தில் சேர்ந்து விட்டோமென்று சொல்லி முஸ்லிமானார்கள்.

ஹஜரத்து நபிகள்நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களின் திருவாக்கு தேவவாக்கு என்பதற்கு மேற்சொன்ன இந்த ஓர் ஹிக்காயத்தே போதுமானதாயிருக்கின்றது எனக் கருதி, இவ்வதிகாரத்தை முடிவுசெய்கிறேன்.

## எச்சரிப்பு.

சில புத்திமான்களான ஐரோப்பிய முதலிய கனவான்கள் ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களைப் பற்றி, அபிப்பிராயப் படுகிறதென்னவென்றால்:—

முஹம்மது நபியவர்களால் அநேக துர்க்கிரியைகளெல்லாம் அடியோடு தொலைக்கப்பட்டு, அநேக நற்கிரியைகள் நிலைநாட்டப்பட்டு, அதனால் கோடி கணக்கான ஜனங்கள் மோக்ஷமடையச் செய்யப்பட்டிருக்கின்றமையால், அவர்களை உலக சற்குருக்களில் ஒரு பெரிய குருவாய் இருக்கிறாரென்று உறுதியாய்ச் சொல்லலாம் எனவும், அவர் தம்மை நபியென்றும், தாம் அருளுவது தேவ கட்டளையென்றும், சொல்லிக் கொண்டது அவர் தம்மை மகிமைப் படுத்திக்கொள்ளச் சொன்னதேயல்லாது, வேறில்லை யெனவும் அபிப்பிராயப் படுகிறார்கள் என்பதே.



மேல் விவரிக்கப்பட்டிருக்கிற பன்னிரண்டு, அத்தாக்ஷிகளைப் போலொத்தவைகளைக் கவனித்தால் அவர்களின் அபிப்பிராயம் பிசகென்றும், நபி அவர்கள் சுயமாய் ஒன்றும் சொல்லவில்லை யென்றும், ஆண்டவன் கட்டளைப்படியே அருளியிருக்கிறார்களென்றும், அவர்கள் மெய்யான தீர்க்கதரிசியென்றும் சூரியபிரகாசத்தைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதென்று வெகு நிச்சயமாகச்சொல்லலாம் என்பதை இதைப் பார்வையிடும் கனவான்களெல்லாம் தெரிந்துக் கொள்ளுவார்கள்.

# 2-வது அதிகாரம்.

## ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களே உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார்களென்பதின் மகத்துவம்.

ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களே முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும் விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் இருக்கிறார்களென்று அநேக வேதாகமங்களும், அத்தாக்ஷிகளும், உதாரணங்களும், ஹிக்காயத்துகளும் இருக்கின்றன. அவைகளிலிருந்து ஒரு மௌலவிசாஹிபுக்கும், பாதிரியாருக்கும் நடந்த சம்பாஷணையை மாத்திரம் வரைகிறேன். அதாவது:—

ஒரு பெரிய பாதிரியார் கிறிஸ்துவ மதத்தைப் பிரசங்கம் செய்துகொண்டு வந்தார். அவரிடம் ஒரு முஸ்லிமான மௌலவி பின்வருகிற கேள்விகளைக்கேட்டு அதற்குப் பாதிரி அவர்கள் மறுமொழி சொல்ல நியாயமில்லாமல் முடிவில் முஸ்லிமாய்விட்டார்?

மௌலவி சாகிபு கேள்வி:—ஓ அருமையும் பெருமையும் வாய்ந்த பாதிரியாரே! இவ்வுலகத்தாருக்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும் இருக்கிறதுயார்?

பாதிரியார் விடை:—உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும், இயேசு கிறிஸ்து அவர்களாய் இருக்கிறார்கள்.

மௌலவி சாகிபு கேள்வி:—மூஸாநபி அவர்களின் உம்மத்துகளாகிய யஹூதியர்களும் தாவூத்நபி அவர்களின் உம்மத்துகளாகிய யூதர்களும் தங்கள் தங்கள் நபியை முடிவுகாலத் தீர்க்கதரிசியென்று சொல்லிக் கொள்கிறார்களல்லவா?

பாதிரியார் விடை:—ஆம் அவர்கள் அவ்வாறே சொல்லிக் கொள்கிறார்கள்.

மௌலவி சாகிபு:—அப்படி ஆனால் மூஸா நபிதான் முடிவுகாலத் தீர்க்கதரிசியா, அல்லது தாவூத்நபி அவர்கள் தான் முடிவுகாலத் தீர்க்கதரிசியா, அல்லது உமது சொற்படி இயேசு கிறிஸ்து அவர்கள்தான் முடிவுகாலத்தீர்க்கதரிசியா, நீங்கள் ஒவ்வொரு மதஸ்தரும் சொல்லிக்கொள்வதில் எதுமெய் எதுபொய்.

பாதிரியார் விடை:—பழைய ஏற்பாடென்று அழைக்கப்படுகிற மோஸே தாவீது முதலியவர்களின் வேதாகமத்தில் இயேசுகிறிஸ்து அவர்கள் தீர்க்கதரிசியாய் வருவார்கள் என்று வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் சொல்லுகிறது பொய்யாகவும், நான் சொல்லுகிறது மெய்யாகவுமிருக்கின்றது.

மௌலவி சாகிபு கேள்வி:—புதிய ஏற்பாடென் றழைக்கப்படுகின்ற உமது வேதாகமத்தில் இயேசு அவர்களால் தனக்குப்பின் ஒருவர் வருவார்; அவரே உலகத்தாருக்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும் இருப்பார் என்று சொல்லப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு உமக்கு ஏதாகிலும் ஆக்ஷேபனை உண்டோ.

பாதிரியார் விடை:—எங்கள் தீர்க்கதரிசியாகிய இயேசு அவர்களால் அவ்விதம் சொல்லப்பட்டிருந்தால் அதை ஏற்றுக்கொள்வதற்கு எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை.



மௌலவி சாகிபு:—நல்லது உமது வேதாகமத்திலிருந்து எடுத்து விபரமாய்ச் சொல்லுகிறேன். அதை நீ ஆற அமரக் கேட்டுத் தீர்க்காலோசனை செய்துபாரும்.

யோவானுக்கு வெளி 2-ம் அதிகாரம் 26, 27, 28 வசனங்கள்.

(26) ஜெயம் கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் காத்துக்கொள்ளுகிறவ னெவனோ அவனுக்கு என் பிதாவினிடத்தில் நான் பெற்றதுபோல் ஜனக்கூட்டங்களின்மேல் அதிகாரத்தைக் கொடுப்பேன். (27) அவன் இருப்புக்கோலால் அவர்களை நடத்திக்கொள்வான், அவர்களோ மண் கலயங்களைப்போல் நொறுக்கப்படுவார்கள். (28) அல்லாமலும் விடிவெள்ளி நக்ஷத்திரத்தை அவனுக்குக் கொடுப்பேன் என்று இயேசு அவர்கள் சொல்லியிருக்கிறதாக வந்திருக்கின்றதல்லவா?

இதில் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால்:—ஜெயம்கொண்டு உலகம் முடிவு பரியந்தம் இயேசுவின் கிரியைகளை காத்துக்கொண்டுயார், அவர் ஜனக் கூட்டங்களின்மேல் அதிகாரம் பெற்றிருக்கிறார், இருப்புக்கோலின் ஆளுகையையும், எதிரிகள் மண் கலயங்களைப்போல் நொறுக்கப்பட்டும் இருக்கிறார்களா, அவர் உலகத்துக்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாயும் இருக்கிறாரா என்பதே.

இவற்றில் இயேசுவின் கிரியை என்னவென்று முதலாவது கவனிப்போமாக, வேத பிரமாணங்களை யாவது, தீர்க்கதரிசனங்களையாவது, தள்ளுபடி செய்யவல்ல, அதை நிறைவேற்ற வந்தேன், என்று இயேசு சொல்லியிருக்கிறாரென்று மத்தேயு 5-ம் அதி: 17ம் வசனத்தில் காணலாம்.

வேதபிரமாணமாகிய 5ம் மோஸே, 4 அதி 35லும், ஷை 5ம் மோஸே 32ல் 12, 39லும்; நாளாகமம் இரண்டாம் புஸ்தகம் 6ல் 14லும், ஏஸாயா 40ல் 18லும், ஷை 42ல் 8லும் ஷை 44ல் 6லும் 1-ம் மோஸே 1ல் 17லும் இன்னும் இதுபோன்ற அநேக வசனங்களையும் பார்க்க, பராபரன் ஒருவன், அவனுக்குப் பிறப்பு, இறப்பு, ஊண், உறக்கம், இணை, துணை, ஆதி, அந்தம், மாதாபிதா, பெண்டீர், பிள்ளை முதலிய மனிதத் தன்மைக்குரிய இயல்புகளும், மற்ற சகல படைப்புகளுக்குள்ள ஒப்புவமை

களும் அவனுக்கு இல்லையென்றும் வெகு தெளிவாய் தெரிந்துக் கொள்ளலாம்.

இன்னும் லேவியர் 10ல் 8லும், ஏசாயா 7ல் 5லும், லூக் 1ல் 15, 16லும், தேவாலயங்களில் ரொட்டி, சாராயத்தை இராப்போஜனமாக பரிமாறக் கூடாதென்றும், ஷை லேவியர் 1ல் 7, 8லும் பன்றியைத் தொடவும், தின்னவும்கூடாதென்றும் யாத்திரை 3ல் 5லும், தேவாலயங்களில் பாதரட்சையுடன் பிரவேசிக்கக்கூடாதென்றும், ஷை யாத்திரை 22ல் 25லும், வட்டி வாங்கக் கூடாதென்றும், சொல்லப்பட்டிருக்கிறதைக் காணுகிறோமல்லவா?

மத்தேயு 5ல் 17லும் சொல்லியபடி மேற்கண்ட வசனங்களுக்கிணங்கவே மத்தேயு 4ல் 10லும் உன்னுடைய தேவனாகிய பராபரனைத் தொழுதுகொண்டு அவரொருவருக்கே ஆராதனை செய்வாயாகவென்று இயேசு சொல்லியிருக்கிறாரென்று சொல்லப்பட்டிருப்பதுமன்றி, ஷை மத்தேயு 7ம் அதிகாரத்தில் பராபரனுக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாமல், இயேசு தன்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே யென்று சொன்னவனெவனும், பரலோக இராஜியத்தில் பிரவேசிப்பதில்லை யென்றும் இயேசு சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறதை காணலாம்.

கீழ் குறிப்பிடப்படுகின்ற ஒருவர் மேற்சொன்ன பிரகாரம் பராபரன் ஒருவன் அவன் மனிதத்தன்மையான இயல்புகளையும் மற்றும் சகல படைப்புகளுக்குரிய ஒப்புவமைகளையும் விட்டு தூய்மையானவன் அவனுக்கே எல்லாப்புகழும், வணக்கங்களும் பாத்தியப்பட்டவைகள் என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லி, கள், சாராயம் அருந்தக்கூடாது, பன்றியைத் தொடவும் தின்னவும் கூடாது பாதரட்சையுடன் தேவாலயங்களில் பிரவேசிக்கக்கூடாது, வட்டி வாங்கலாகாது என்றும், இன்னும் இவைபோன்ற அநேக துர்க்கிரியைகளை விலக்கியும், தொழுகை, நோன்பு, ஸக்காத்து முதலிய அநேக நற்கிரியைகளைக்கொண்டு வலியும் இருக்கிறார்.

இச்சொல்லுக்கு செவிகொடாத அஞ்ஞானிகளை எதிர்த்து, சங்கரித்து எதிரிகள் மண் கலயங்களைப்போல் நொறுக்கப்பட்டு



ஜெயங்கொண்டு ஷை கொள்கை கிரியைகளைப் பாதுகாத்து உலகமுடிவு பரியந்தம் ஸ்தாபித்திருக்கிறார்.

இத்தகையானவர் ஜெனக்கூட்டத்தின் பேரில் அதிகாரம் பெற்றவர். அஜ்ஜனக் கூட்டங்களோ இவர்கள் சொல்லுக்குட்பட்டுத் தங்கள் உயிர்களையும், பொருள்களையும் சிந்தினார்கள். இவர் இருப்புக்கோலின் ஆளுகையால் அஞ்ஞானிகளை நடத்தித் தங்கள் வேதத்துக்குள்ளாகும்படி நயத்தாலும், பயத்தாலும், வற்புறுத்தி ஷை கொள்கை கிரியைகளை அனுஷ்டித்து வரும்படி ஸ்தாபித்தார். எந்த ஊரில் அஞ்ஞானிகள் இருப்புக் கோலால் சங்கரிக்கப்பட்டு அவர்கள் மண்கலயங்களைப்போல் நொறுக்கப்பட்டுப் போனார்களோ அந்த ஊர்களில் அதற்கறிகுறியாக ஆங்காங்குள்ள மஜ்ஜிதுகளில் குத்பா உபதேசம் செய்கிறவர் இருப்புக்கோலைத் தன் கையில் பிடித்துக்கொண்டு உபதேசித்துவருகிறார். இவ்வழக்கம் அன்றுமுதல் இன்றுவரை நடந்துகொண்டு வருகிறதை நாம் பார்த்து வருகிறோமல்லவா?

இத்தன்மையான மகிமை வாய்ந்தவர் திங்கட்கிழமைபொழுது உதயமாகிறதற்கு முன்னுள்ள சுக்கிரன் (சுஹ்ரா) என்று அழைக்கப்படுகிற விடிவெள்ளி நக்ஷத்திரத்தில்பிறந்தார். அவர் பிறந்தவுடன் அவர் வீட்டுக்குச் சமீபத்திலுள்ள ஒரு யூத வானசாஸ்திரியாரிடம் இவர்பிறப்பை ஒருவர்போய்ச்சொன்னதற்கு, அச்சாஸ்திரிபாதிரியார் வெளியில் வந்து வானத்தைப் பார்த்தார். அப்போது சுக்கிரனென்கிற விடிவெள்ளி நக்ஷத்திரமும், தீர்க்கதரிசிகள்பிறப்பதற்கு அடையாளமாய் வெளியாகிற நக்ஷத்திரமும் உதயமாயிருக்கக்கண்டு உடனே ஷை சாஸ்திரிபாதிரியார் இப்போது பிறந்திருக்கிறவர் முன்னுள்ள வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரமே முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும், உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் இருக்கிறாரென்று சொன்னார்.

ஒருவனுக்கு வியாழதிசைவந்தால் அவனுக்குப் பன்னிரண்டு வருஷம் வாழ்வென்றும், சுக்கிரதிசை வந்தால் அவன் ஆயுசு முடிவு பரியந்தம் வாழ்க்கை யென்றும் சாஸ்திரிகள் சொல்வதுபோல் ஷை யார் உலகமுடிவு பரியந்தம் ஒரு பெரிய தீர்க்கதரி

சியாக வெளியாகி அவர் சுக்கிர திசையிலிருக்கிறார் என்பதற்கு அறிகுறியாக அவருடைய விசேஷ நாளும், வாராந்திர ஜும்மாகுத்பா பண்டிகையும் வாராந்திர விடுமுறை தினமும், சகல மங்களக் கிரியைகள் புரிவதற்கு ஏற்ற சுபநாளும், சுக்கிரவாரமென் றழைக்கப்படுகின்ற வெள்ளிக்கிழமையாயிருக்கின்றது.

அவர் காலமுதல் நாளது வரையிலும் அவரைப் பின்பற்றிய கோடானகோடி ஜனங்கள் ஷெ சுக்கிரவாரமாகிய வெள்ளிக்கிழமையே அவர்களுடைய விசேஷநாளாகவும் வாராந்திர ஜும்மா குத்பாபண்டிகை நாளாகவும் வாராந்திர விடுமுறை தினமாகவும், சகல மங்களக் கிரியைகள் விசேஷமாய் நடத்தி வருகிறதற்கேற்ற நாளாகவும் ஆக்கிக்கொண்டு வருகிறதை நாம் பார்த்துவருகிறோமல்லவா?

இம்மகத்துவம் வாய்ந்த தன்மைகள் யாரிடத்தில் அமைந்திருக்கிறதென்று பார்ப்போமானால் ஹஜரத்நபி "முஹம்மது றசூலுல்லா" அவர்களில் தான் அமைந்திருக்கிறதென்றே நிச்சயமாகச் சொல்லலாம்.

ஆகையினாலேயே ஷெ ஹஜரத் நபி முஹம்மது றசூலுல்லா அவர்களே முடிவுகால தீர்க்கதரிசியாகவும் உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் இருக்கிறார்களென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிகிறதல்லவா.

ஓ! அருமையான பாதிரியாரே! இன்னும் சற்றே கவனித்துக் கேட்டு தீர்க்காலோசனை செய்துபாரும்.

மத்தேயு 23 அதி: (37) எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி குஞ்சுகளை தன் சிறகுகளின் கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக, நான் எத்தனைதரமோ, உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று. (38). இதோ உங்கள் வீடு உங்களைப் பாழாக்கி விடப்படும் (39) கர்த்தருடைய நாமத்தினாலேவருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்



பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு சொல்லியிருக்கிறதைக் காணுகிறோமல்லவா?

இதினால் இயேசு அவர்கள் தீர்க்க தரிசியாய் வந்ததை பைத்துல்முகத்திஸ் முதலிய ஊர்களிலுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றும், மேற்படி ஊரை இயேசு அவர்கள் நிந்தித்து கர்த்தருடைய நாமத்தினால் ஒருவர் வருவாரென்றும், அவரை நீங்கள் ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று சொல்லுகிற வரையிலும் என்னைக் காணாதிருப்பீர்களென்றும் சொல்லிவிட்டுதான் பரலோகம் போய்விட்டாரென்று தெரிந்துகொள்ளலாம்.

இதில் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் யார்? அப்படி வந்தவரை பைத்துல் முகத்திஸ் முதலிய ஊரிலுள்ளவர்கள் ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று சொல்லியிருக்கிறார்களா; அதின் மூலமாய் இயேசு அவர்களைக் கண்டார்களா? என்பதேயாம்.

மேல்விவரிக்கப்படுகிற ஒருவர் கர்த்தருடையநாமத்தினால் வந்திருக்கின்றார். அதாவது அவருடைய சகல கிரியைகளிலும்சொற்களிலும், சதாகாலமும் "பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்" உபகாரமும் கருணையுமுள்ள கர்த்தாவின்நாமத்தினாலே ஆகக்கடவது என்று சொல்லிக்கொண்டே ஒவ்வொரு வேலையையும் ஆரம்பிப்பார். இச்சொல்லை ஒருபோதும் மறக்கமாட்டார். சிறிய வேலையானாலுஞ்சரி, பெரியவேலையானாலுஞ்சரி, 'பிஸ்மில்லா ஹி' கர்த்தாவின் நாமத்தினாலாகக்கடவது என்றே" ஆரம்பிப்பார் அன்றியும். அவருக்கிறங்கிய வேதத்திலும் "இக்ரவுபிஸ் மிரப்பிக்" என்றே முதலாவதாக இறங்கியது அதாவது உமது நாயனுடைய நாமத்தை யோதும் என்பதே. இவ்வாறே "குர்ஆன் ஷரீப்" உள்ள ஒவ்வொரு சூறத்தின் ஆவக்கத்தில் பிஸ்மில்லாஹியென்றே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதைக் காணலாம்.

இதுபோலவே, உதயகிரி முதல் அஸ்தகிரி வரையிலுள்ள அவரைப் பின்பற்றின கோடானகோடி ஜனங்கள் ஒவ்வொருவரும் பெரியோரானாலுஞ்சரி, சிறியோரானாலுஞ்சரி, படித்தோரானாலுஞ்சரி, மூடரானாலுஞ்சரி, அவர்கள் உண்ணும்போதும், உறங்கும்போதும், எழும்புப்போதும், இருக்கும்போதும், நடக்

கும்போதும் யாதொருவேலையை யாரம்பிக்கும்போதும், "பிஸ்மில்லாஹி" யென்றே எப்போதும் சொல்லிக்கொண்டு வருகிறதை நாம் பார்க்கிறோமல்லவா? இவ்வாறே, அவர்கள் யாதொரு விஷயங்களை எழுதும்போது ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹி யென்று எழுதின பிறகுதான் மற்றதை எழுதுவார்கள். இதை நீர் அறியவேண்டுமானால் எந்த கிதாபையாவது, எந்த புஸ்தகத்தையாவது எடுத்துப்பார்த்தாலும் அதில் ஆரம்பத்தில் "பிஸ்மில்லாஹி" யென்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

இத்தகையாக மகிமைவாய்ந்தவர் பைத்துல் முகத்திஸ் முதலிய ஊர்களிலுள்ள யஹூதி, யூதர், மஜூஸிமுதலிய அஞ்ஞானிகளுக்கு மெய்ஞ்ஞானத்தைப் பயத்தாலும், நயத்தாலும் புகட்டினார்கள். அவர்கள் இச்சொல்லுக்கிணங்கித் தங்களுடைய சகல ஆதீனத்தையும், அதிகாரத்தையும் ஒப்பித்து கீழ்ப்பணிந்து ஸ்தோத்திரித்தார்கள். அதாவது முஹம்மது றசூலுல்லா வென்று சொன்னார்கள். இதின் அர்த்தம் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் ஆண்டவனுடைய தூதரென்பதே என்று துதித்தார்கள்.

இதற்கறிகுறியாக எருஸலம் (பைத்துல் முகத்திஸ்) உடைய சகல ஆதீனமும் அதிகாரமும் அவருடைய கைவசப்பட்டு இருக்கிறதோடு அவர்களை அங்குள்ளோர்கள் ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று புகழ்வதை இன்றைக்கும் நாம் அங்கே கண்ணால் பார்த்தும், காதால்கேட்டுக்கொண்டும் வருகிறோமல்லவா? இத்தன்மையாக ஷை பட்டணத்தார் தங்கள் ஆதீனத்தையும் அதிகாரத்தையும் ஒப்புவித்து தாங்கள் கீழ்ப்பணிந்து நடந்திருக்கிறார்களென்பதை "புதூஹுஷ்ஷாம்" என்கிற கிரந்தத்தால் வெகு தெளிவாய்தெரிந்துக்கொள்ளலாம்.

ஷை ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று சொல்லப் படுகிறவர்களால் ஈஸாநபி அவர்களை ஈசாருஹுல்லா, ஈசாகலிமத்துல்லா வென்று மகிமைப்படுத்தி யிருக்கிறதை யேசு பாவியென்றும், பலஸ்திரீ மகனென்றும் பலவாறாய் நிந்திக்கின்ற யஹூதி, யூதர் முதலிய எருஸலமின்கூட்டத்தார்கள் ஈசாநபியின் மகிமையைமேற்சொன்ன விதமாய் கண்டுகொண்டார்கள் என்றே நிச்சயமாய்ச் சொல்லலாம்.



கர்த்தருடைய நாமத்தினால் வருகிற ஸ்தோத்திரிக்கப் பட்டவர் யாரென்று கவனிப்போமானால் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களாயிருக்கிறார்களென்றே சூரிய பிரகாசத்தைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென சந்தேகமறச் சொல்லலாம்.

இதற்கிணங்கவே மோசே அவர்களை நோக்கி, ஆண்டவன், "நாம் உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை அவர்களுக்கு அவர்களின் சகோதரர் நடுவிலிருந்து எழும்பப் பண்ணி நம்முடைய வார்த்தைகளை அவர் வாயிலேயே அருளுவோம். நாம் அவருக்குக் கற்பித்ததை யெல்லாம் அவர்களோடு அவர் சொல்லுவார். அவர் நமது நாமத்தினாலே சொல்லும் நமது வார்த்தைகளைக் கேளாதவர்களை நாம் விசாரிப்போம்," என்று சொல்லி இருக்கிறதாக 5-ம் மோசே, 18 அதி. 18, 19-ம் வசனங்களில் காணலாம்.

நபியவர்களோ சகல விதத்திலும் மூசாநபி யவர்களுக்கு ஒப்பாயிருக்கிறதுமன்றி, ஆண்டவன் வார்த்தைகளை அவர்கள் நாவில்அருளி அவர்கள் அவனுடைய நாமத்தினாலேயே ஜனங்களுக்கு அவைகளைப் போதித்தார்கள் என்பதை யாருஞ் சொல்லியே தெரியவேண்டுமோ?

ஆகவே, ஷை வசனங்கள் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கே சம்பந்தப்பட்டதென தெளிவாய் தெரிந்து கொள்ளலாம். என்பதற்கு யாதொரு ஐயமுண்டோ ?

ஓ அருமையானவரே! இன்னும் சற்றுக் கவனித்துப்பாரும்.

இயேசு அவர்கள் யூதர்களைநோக்கி வீடு கட்டுகிறவர்கள் ஆகாது என்று தள்ளிவைத்த கல்லே மூலைக்குத் தலையான கல்லாயிருக்கின்றது; அதானது பராபரனாலேயே ஆயிருக்கின்றது அதுவே நம்முடைய கண்ணுக்கு ஆச்சரியமா யிருக்கிறதென்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா! (43) ஆனதினாலேயே பராபரனுடைய இராஜ்ஜியம் உங்களிலிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் (44) அன்றியும், அக்கல்லின்மேல் விழுகிறவன் நொறுக்கப்படுவான்; இக்கல் எவன்மேல் விழுமோ அவனை நொறுங்கடிக்கும் என்று

சொல்லியிருக்கிறதாக மத்தேயு 21ம் அதிகாரம்: 42, 43, 44ம் வசனத்திலும், மாற்கு 12ம் அதிகாரத்திலும், லூக்கா 20ம் அதிகாரத்திலும், சொல்லப்பட்டிருக்கிறது மன்றி ஜெருசலேம் முதலிய பட்டணங்களை அரசாட்சி புரிந்த தாவூத் நபியவர்களும், அவ்வாறே சொல்லியிருக்கிறதாய் சங்கீதம் 118ம் அதி 22, 23, வசனங்களில் கண்டிருக்கிறதைக் காணலாம்.

இதனால் தெரியவருகிறதென்னவென்றால், இஸ்ரவேலர்கள் தங்கள் ஜாதியைவிட்டும் நீக்கிவைத்திருந்த ஒருவர் தங்கள் ஜாதிக்கு முதன்மையாக ஆகியிருக்கிறாரென்பதாகவும், அது ஆண்டவனால் ஆக்கப்பட்டிருக்கிறதென்றும் யூதர்கள் வசித்து வருகிற ஜெருசலேம் முதலிய பாரபரனுடைய பரிசுத்த பட்டணங்கள் அவர்கள் வசமிருந்தும் நீக்கப்பட்டு மேற்படியாருக்குக் கொடுக்கப்படுமென்றும் அவரை யார் எதிர்த்தாரோ அவர்களும் அவர் யாரை எதிர்த்தாரோ அவர்களும் அபஜெயமடைவார்கள் என்றும், சொல்லவேண்டுமென தோன்றுகிறதல்லா?

யூதர்கள் யாரைத் தங்கள் ஜாதியைவிட்டேப் புறம்பாக்கியிருக்கிறார்களென்பதைக் கவனிக்கும்போது இஸ்ரவேலர்களின் மூதாதாவாகிய இபுறாயீம் நபியின் 1 வது ஸ்திரி சாரா அம்மாள் தனது பத்தாவின் இரண்டாவது ஸ்திரியாகிய ஹாஜிரா அம்மாளையும், அவள் குமாரர் இஸ்மாயீல் நபியையும் தன் வீட்டுக்காகாதென்று தள்ளித் தன்ஜாதியைவிட்டும் புறம்பாக்கி வனவாசத்தில் கொண்டு தள்ளிவிட்டனள். அவ்வாறே மேற்படி ஹாஜிரா அம்மாளின் புத்திரராகிய இஸ்ஹாக்நபியும், அவர்புத்திரராகிய, யாக்கூப் நபியும், யாக்கூப் நபியின் மக்களாகிய இஸ்ரவேலர்களும் பரம்பரையாய் ஷை ஹாஜிரா அம்மாளின் மகனாகிய இஸ்மாயீல் நபிபேரிலும், அவர் மக்களின் சந்ததிகள் பேரிலும் பொறாமை கொண்டு இஸ்மாயீல் நபிஅவர்களின் குடும்பத்தை இந்த இஸ்ரவேல் குடும்பத்தார் தங்கள் ஜாதியிலிருந்து புறம்பாக்கி வைத்திருக்கிறார்களென்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயமே.

மேற்படி இஸ்மாயீல் நபியின் ஆண்சந்ததியில் பூரணசந்திரனைப்போல் முதன்மை பெற்றவராய் ஹஜரத்து முஹம்மது



நபியவர்கள் தோன்றி மேற்படி இஸ்ரவேலர் குடும்பத்தாரை நொறுக்கடித்து அவர்களைத் தமக்குக் கீழாக்கி அவர்கள் வசித்திருந்த எருசலேம் முதலிய பாரபரனின் பரிசுத்த பட்டணங்களைக் கைப்பற்றி மேற்படி இபுறாஹீம் நபியுடைய குடும்பத்தில் இவரே சூரிய பிரகாசத்தைப்போல் முதன்மை வாய்ந்தவராய் விளங்கிக் கொண்டிருக்கிறாரென்பதை உலக சரித்திரத்தினாலேயே தெளிவாகத் தெரிந்துகொள்கிறோமல்லவா?

ஆகையினால், மேற்படி மத்தேயு, மாற்கு, லூக்கா முதலியவைகளில் சொல்லப்பட்டவைகள் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கே, சம்பந்தப் பட்டிருக்கிறதென்று சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதல்லவா.

நியாயம் இங்ஙனமிருக்க, அப்போஸ்தலர் நடபடிக்கை 4ம் அதிகாரம் 11 ம் வசனத்தில் லூக்கா என்பவர் தாவூத் நபியால் சொல்லப்பட்ட மேற்படி முன் அறிவிப்பு ஏசு அவர்களுக்குச் சம்பந்தப் பட்டிருக்கிறதாகச் சொல்லியிருக்கிறார். அம்முன் அறிவிப்பு ஏசு அவர்களுக்குச் சம்பந்தப் பட்டிருக்கிறதென்பது நிஜமானால் ஏசு தனக்குச் சம்பந்தப் பட்டிருக்கிறதென்று சொல்லுவாரல்லவா? அப்படி அவர் சொல்லாமல் தாவூத் நபியவர்கள் சொன்னதுபோல் தானும் சொன்னதினால் அவருக்கல்லவென்று தெரிகிறதல்லவா?

அன்றியும் அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் யேசுவுக்கு அணுவளவும் சம்பந்தப்பட்டதாயில்லை. எப்படியென்றால் யேசுவின் குடும்பமும் இஸ்ரவேலர் குடும்பமும் ஒன்றேயல்லாது வேறில்லை. இவர் குடும்பத்தை இஸ்ரவேலர்கள் நீக்கிவைத்திருந்ததுமில்லை இவரால் இஸ்ரவேலர் குடும்பம் நொறுக்கப்பட்டு அவர்கள் வசத்திலிருந்து பாரபரனின் பரிசுத்த பட்டணங்களாகிய ஜெருசலேம் முதலிய ராஜ்ஜியங்கள் ஏசுவால் கைப்பற்றப் பட்டிருப்பதுமில்லை. இத்தன்மையான கண்கண்ட கைமெய்யான விஷயத்தை யேசுவுக்குச் சம்பந்தப் பட்டிருக்கிறதென்று சொல்லுகிற லூக்காவையொத்த அப்போஸ்தலர்களா; முஹம்மது நபியவர்கள் விஷயத்தில் வந்திருக்கிற தீர்க்கதரிசனங்களை உள்ளதே யுள்ளபடி சொல்லுவார்கள்? ஒருபோதும்

அத்தீர்க்கதரிசனங்களை அவர்கள் உள்ளதுஉள்ளபடியே சொல்லுவார்களென்பது நம்புவதற்கு இடமில்லையென்று இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துகொள்வார்களென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

மேற்படி வசனங்களுக் கிணங்கவே, ஆபகூக் 3-ம் அதி; 3-ம் வசனத்தில் பார்க்க, பராபரன் தேமானிலும் பரிசுத்தமுள்ளவர் பாரான் பருவதத்திலிருந்து வருவார். அவர் மகிமை வானங்களை மூடிக்கொண்டது. அவர் புகழ்ச்சியினால் பூமிநிறைந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இவ்வசனத்தைக் கவனிக்கும்போது மூஸா நபிக்கு சீனா பர்வதத்தில் தீர்க்கதரிசனங் கிடைத்தபடியால் அந்தப் பருவதத்தின் பேரும், யேசு அவர்களுக்குச் சேயீர் என்னும் பருவதத்தில் தீர்க்கதரிசனம் கிடைத்தபடியால் அப்பருவதத்தின் பேரும், எவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வாறே, நபிமுஹம்மது றசூலுல்லா அவர்களுக்குத் தீர்க்க தரிசனம் கிடைத்த ஹிரா மலையென்கிற பாரான் பருவதத்தின் பேரும் சொல்லப்பட்டிருக்கிறதென்றே யூகிக்கவேண்டுமெனத் தோன்றுகிறதல்லவா?

பாரான் பருவதத்தை ஹிராமலை யென்று எப்படிச்சொல்லக்கூடும் என்று கேட்பீரானால் 1-ம் மோசே 21-ம் அதி: 21-ம் வசனத்தைப் பார்க்கும்போது இஸ்மவேல் பாரான் பருவதத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தார் என்றும், அம்மலையிலேயே அவருக்கு ஒரு எகிப்திய ஸ்திரியை விவாகம் செய்யப்பட்டு அவர் அங்கேயே வாழ்ந்து கொண்டிருந்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இப்பிரகாரமே மேற்படி பாரான் பருவதமாகிய ஹிராமலையடங்கிய மக்காவில் இஸ்மாயீல் நபியவர்களும், அவர்களின் சந்ததியார்களும் பரம்பரையாய்க் குடியிருந்தார்களென்றும் இச்சந்ததியில் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களைத் தவிர வேறு ஒருவரும் நபியாக வரவில்லையென்றும், இவர்களே மேற்படி பாரான் பருவதமான ஹிராமலையில் நபித்தனம் பெற்றிருக்கிறார்களென்றும், தெரியவருகிறபடியால் இவ்வச-



னம் அவருக்கே சம்பந்தப் பட்டிருக்கிறதென்றும், தெரிந்து கொள்ளலாம்.

இதைப்போலவே மோசே அவர்களாலும், பாரான் பருவதமென்கிற ஹிராமலையிலிருந்து ஹஜரத்து நபி முஹம்மது றசூலுல்லா அவர்கள் வெளியாவார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது எப்படியென்று கேட்பீரானால் சொல்லுகிறேன் கவனித்துக் கேளும். 5-ம் மோசே 33 அதி, (1) தேவனுடைய மனுஷனாகிய மோசே தான் மரணமாவதற்கு முன்னே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்த ஆசீர்வாதமாவது, (2) கர்த்தர் சீனாவிலெழுந்தருளி சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்; பாரான் மலையிலிருந்து பிரகாசித்து பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார். அவர்களுக்காக அக்கினிமயமான பிரமாணம் அவனுடைய வலது புறத்திலிருந்து புறப்பட்டது. (3) மெய்யாகவே அவர் ஜனங்களை நேசிக்கிறார். அவருடைய பரிசுத்தவான்களெல்லோரும் உம்முடைய கையிலிருக்கிறார்கள். அவர்கள் உம்முடைய பாதத்தைத் தழுவி, உம்முடைய வார்த்தைகளினால் போதனை அடைவார்களென்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதிற் குறிப்பிட்ட சினா பருவதத்திலிருந்து மோசேக்கும், சேயீர் பருவதத்திலிருந்து ஏசுவுக்கும், தீர்க்கதரிசனங் கிடைத்திருக்கிறதால், அப்பருவதங்களை மகிமைப்படுத்தி ஆசீர்வதிக்கப்படும், பாரான் பர்வதமென்கிற ஹிரா மலையில் சமாதானக்கர்த்தராகிய, ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் பிரகாசித்து, ஆயிரக் கணக்கான பரிசுத்த ஸஹாபாக்களோடு பிரசன்னமாகி, அஞ்ஞானிகளின் துர்க்கிரியைகளைச் சங்காரிக்கத்தக்கதாக அக்கினிமயமான பிரமாணமாகிய 'குர்ஆன்ஷரீப்' அல்லாஹுத்தஆலாவிடமிருந்து அருளப்பட்டும், இருக்கிறதினால் மேற்படி வசனம் அம்மூன்று தீர்க்கதரிசிகளைப் பற்றியதென்கிற சந்தேகமறத் தெரிந்துகொள்ளலாம்.

ஹிராமலை இருக்கிற மக்காபூமியில் யாதொரு நபியுங் கிடையாதென்று நீர் சொல்வீரானால் ஏசாயா 54-ம் அதி; 1-ம் வசனத்தைப்பாரும், அதில் பிள்ளைபெறாத மலடியே கெம்பீரித்

துப்பாடு; கெர்ப்பவேதனை படாதவளே கெம்பீரமாய் முழங்கிச் சந்தோஷ சத்தமிடு; ஏனெனில், வாழ்க்கப்பட்டவர்களுடைய பிள்ளைகளைப்பார்க்கிலும், அவாந்தரமானவளுடைய பிள்ளைகள் அதிகமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வருவதைப் பார்க்கலாம்.

இதனால் பாரான் பருவதமென்கிற ஹிராமலை யிருக்கிற பூமியில் தீர்க்கதரிசி வெளியாகாததினால் பிள்ளைபெறாத மலடி என்றும், உன்னிடத்தில் ஒரு பெரிய தீர்க்கதரிசி வெளியாகிற படியால் நீ சந்தோஷமாய் இரு, கெம்பீரித்துப் பாடு என்றும் தீர்க்கதரிசி வெளியா யிருக்கிற ஜெருசலேம் முதலிய பட்டணத்தின் பிள்ளைகளை உன் பிள்ளைகள் வந்து கைப்பற்றிக்கொள்வதினால் பிள்ளை பெற்றவளுடைய பிள்ளைகளைப்பார்க்கிலும் உன் பிள்ளைகள் அதிக விசேஷித்தவர்களென்றும் சொல்லும்படியாக நேரிட்டதென்று தெரியவருகிறதல்லவா?

அதுபோலவே ஹஜரத்து முஹம்மது நபி ஸல்லா அவர்கள் நபியாக வெளிப்பட்டு அப்பட்டணங்களை கைப்பற்றியிருப்பதால் ஹிராமலையிருக்கிற மக்காப்பூமியை ஆசீர்வதித்து சொல்லப்பட்டிருக்கிறதென்றே தெரிந்துக்கொள்ளலாம்.

இன்னும் சற்றே கவனித்துப் பாரும்,

இயேசு அவர்கள் யூதர்களை நோக்கிச் சொல்லுகிறதாக மாற்கு 12 அதி 1முதல் 9 வரை சொல்லப்பட்டிருக்கிறதாவது.

(1) பின்பு அவர் உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினதாவது, ஒரு மனுஷன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, இரசத் தொட்டியை உண்டுபண்ணி, கோபுரத்தையும்கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறத்தேசத்துக்குப் போயிருந்தான். (2) தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்துக் கனிகளில் தன் பாகத்தை வாங்கிக்கொண்டு வரும்படி, பருவகாலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை யனுப்பினான். (3) அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள். (4) பின்பு வேறொரு ஊழியக்கார



னை அவர்களிடத்தில் அனுப்பினான், அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி, அனுப்பிவிட்டார்கள். (5) மறுபடியும் வேறொருவனையும் அனுப்பினான், அவனை அவர்கள் கொலைசெய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான்; அவர்களில், சிலரை அடித்து, சிலரைக்கொன்றுபோட்டார்கள். (6) அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான். என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான். (7) தோட்டக்காரரோ; இவன் சுதந்தரவாளி, இவனைக் கொலைசெய்வோம் வாருங்கள், அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகும் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு, (8) அவனைப் பிடித்துக் கொலைசெய்து, திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டுவிட்டார்கள். (9) அப்படியிருக்க, திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் என்ன செய்வான்? அவன் வந்து அந்தத் தோட்டக்காரரைச் சங்கரித்து, திராட்சத் தோட்டத்தை மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுப்பான் அல்லவா? என்றார். இவ்வாறே மத்தேயு 21அதி: 31லிருந்து 44வரையிலும், லூக்கா 20ம் அதிகாரம் 9 லிருந்து 18 வரையிலும் சொல்லப்பட்டிருக்கின்றதைக் காணலாம்.

இதனால் தெரிகிற தென்னவென்றால், பராபரன் மனிதரையுண்டாக்கித், தம்முடைய கட்டளைப்படி நடக்கவேண்டுமென்று, அவர்களோடு உறுதிப்பாடு வாங்கிக்கொண்டு, அவர்களை ஜெருசலேம் முதலிய பராபரனின் பரிசுத்த பட்டணங்களில் குடியிருக்கும்படி செய்து, தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்ப அத்தீர்க்கதரிசிகளோ அவர்களுக்கு ஆண்டவனுடைய சட்டளையைக் கைக்கொண்டு நடக்கும்படி சொன்னதற்கு, அவர்களைப் பலவாறாய் துன்பப்படுத்தி, சிலரை விரட்டியும், சிலரைக் கொலைசெய்தும் போட்டார்களென்றும், முடிவில் பராபரனைப் போல் பராக்கிரமசாலியாய் ஒருவர் வந்து, அவர்களிடமிருந்த ஜெருசலேம் முதலிய பராபரனின் பரிசுத்த பட்டணங்களைப் பிடுங்கிப், பராபரனுக் கன்பான பரிசுத்தர்களிடம் ஒப்புவித்ததாமென்று விளங்குகிறதல்லவா?

இதில் நாம் கவனிக்கவேண்டிய தென்னவென்றால், ஜெருசலேம் முதலிய பராபரனின் பரிசுத்த பட்டணங்களில் வாசஞ்செய்கிற இஸ்ரவேலர்களுக்காக யூஷா, சகரியா, யஹ்யா, இயேசுமுதலிய அநேக தீர்க்கதரிசிகள் வந்து, பராபரனுடைய கட்டளையைப் போதித்ததில், அவர்கள் கைகொள்ளாம லிருந்ததன்றி, அவர்களைப் பலவாறாய் துன்பப்படுத்தியும், கொலைசெய்தும், துரத்தியும் விட்டார்கள்.

கீழ் குறிப்பிடுகிற ஒருவர் பராபரனைப்போல் பராக்கிரமசாலியாய் வந்து, அவர்களைச் சங்கரித்து, தீர்க்கதரிசிகளை மகிமைப்படுத்தி, அவர்கள் பராபரனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும்படி செய்வித்து, அவர்களிடமிருந்த பரிசுத்த பட்டணங்களைப் பிடுங்கித் தம் சீஷர்கள் வசம் ஒப்புவித்தார்.

இவ்விதம் யாரால் நடத்தப்பட்டிருக்கிறதென்று நாம் நீதமாய் பார்ப்போமானால் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களாலேயே நடந்திருக்கிறதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துகொள்ளலாம்.

அவர் பராபரனைப்போல் பராக்கிரமசாலியாக வெளிப்பட்டிருக்கிறார் என்பது எவ்விதமென்றுகேட்பீரானால் ஏசாயா 42 அதி 13-ம் வசனத்தைப்பார்க்க, கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்த சேவகனைப்போல் எரிச்சலை எழும்பப்பண்ணி, தொனித்து, கெர்ச்சித்துத் தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார் என்று வருவதைக் காணலாம்.

அதிற்கண்டபடியே நபியவர்கள் பராபரனைப்போல் பராக்கிரமசாலியாய் புறப்பட்டு அஞ்ஞானிகளை சங்காரித்து ஜெருசலேம் முதலிய பராபரனின் பரிசுத்த பட்டணங்களைக் கைப்பற்றி, மெஞ்ஞானத்தைப் போதித்து, முன்னுள்ள தீர்க்கதரிசிகளையும் மகிமைப்படுத்தியிருக்கிறார்களென்பது உலகம் அறிந்த விஷயமே.

இதற்கிணங்கவே ஏசாயா 52ம் அதி 1ம்வசனத்தைப்பார்க்க, "எழும்பு, எழும்பு சீயோனே; உன் பலனைத் தரித்துக்கொள்; பரிசுத்த பட்டணமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திர



த்தைத் தரித்துக்கொள், ஏனெனில், சுன்னத்தில்லாதவனும், அசுத்தனும் இனி உனக்குள் வருவதில்லை" என்று சொல்லியிருக்கிறதைக் காணலாம்.

ஆகவே இஸ்ரவேலர்கள் அசுத்தர்களாயிருந்ததினாலேயே, சுன்னத்துள்ளவர்களாகவும்; சுத்தமுள்ளவர்களாகவும் இருக்கிற முஸ்லிம்கள் வசம் உன்னை ஒப்புவிக்கப்படுமென்றும், அதினாலேயே நீ சந்தோஷித்துக் களிகூருவாயாக என்றும் மேற்படி தீர்க்கதரிசியால் ஜெருசலேம் முதலிய பட்டணங்களை ஆசிர்வதித்துச் சொல்லப்பட்டிருக்கிறதாக அறிந்துகொள்ளலாம்.

இதற்கிணங்கவே மோசே அவர்களால் முன் அறிவிப்பாகச் சொல்லியிருக்கிறதைச் சொல்லுகிறேன். சற்றே கவனித்துப்பாரும். 1ம் மோசே 49ம் அதிகாரம் (9) யூதா பாலசிங்கம்; நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய், என்மகனே, சிங்கம்போலும், கிழச்சிங்கம் போலும், மடங்கிப்படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார், (10) சமாதானகர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதில்லை. நியாயப் பிரமாணங்கள் அவன் பாதங்களைவிட்டு ஒழிவதுமில்லை, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் என்று கண்டிருக்கிறது.

இதில் கண்டபிரகாரம் சமாதானகர்த்தராகிய முஹம்மது றசூலுல்லா அவர்கள் வந்து யூதாவின் செங்கோலாகிய ஜெருசலேம்முதலிய பட்டணங்களைக் கைப்பற்றியதையும், அவர்களின் நியாயப் பிரமாணங்களைப் பறக்கடித்ததையும், அவர்களிடமே ஜனங்கள் கும்பல்கும்பலாக வந்து சேர்ந்திருந்ததையும் கவனிக்கும்போது இவ்வசனம் அவருக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றே நிசந்தேகமறத் தெரிந்து கொள்ளலாம்.

இதற்கிணங்கவே, ஏசு அவர்களும், அப்பட்டணத்தை நோக்கி, "கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவரை ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று நீ சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்களென்று சொல்லும்படியாயிற்று. ஆகையால் மேற்படி வசனங்கள் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும், அதிற் சொல்லியபடி அவர்களாலேயே நடத்தப்பட்டிருக்கிறதென்றும், சூரியபிரகாசத்தைப்போல் பிரகாசிக்கிறதல்லவா?

ஓ அருமையான பாதிரியாரே! இன்னும் சொல்லுகிறேன் சற்றே கவனித்துக்கேளும்.

யோவான் 14 அதி. (15) நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். (16) நான் பிதாவை வேண்டிக்கொள்வேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூடயிருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார் (17) உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலுமிருக்கிறபடியால் அவரை பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். (25) நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்கு சொன்னேன். (26) என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் என்றும்,

இன்னும் ஷை யோவான் 15 அதி (26) பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்து சாக்ஷி கொடுப்பார் என்றும்,

இன்னும் மேற்படி யோவான் 16 அதி (1) நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன் (2) அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள். மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தேவனுக்கு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும் (4) அந்த காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச்சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன் நான் உங்களுடனேகூட இருந்த படியினாலே ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச்சொல்லவில்லை. (5) இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன் எங்கே போகிறீ-



ரென்று உங்களில் ஒருவனும் என்னைக்கேட்கவில்லை. (6) ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. (7) நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் (8) அவர் வந்து பாவத்தை குறித்தும், நீதியை குறித்தும், நியாய தீர்ப்பைக் குறித்தும், உலகத்தை கண்டித்து உணர்த்துவார் (11) இந்த உலகத்தில் அதிபதி நியாயந்தீர்க்கபபட்டதினாலே நியாய தீர்ப்பை குறித்தும், தண்டித்து உணர்த்துவார், (12) இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள், (13) சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப்பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். என்றும் இயேசு அவர்கள் சீஷர்களை நோக்கச் சொல்லியிருக்கிறார் என்பதை நீர் பார்க்கவில்லையா?

மேற்கண்ட வசனங்களில் கண்டவைகள் யாவும் ஹஜரத் முஹம்மதுர் றசூலுல்லா அவர்களுக்கே சம்மந்தப்பட்டிருக்கின்றன, இவைகளின் வியாக்கியானத்தைச் சொல்ல வேண்டுமானால் இச்சமயம் போதாதென்று நிறுத்துகிறேன். இதின் உண்மையை நீர் அறியவேண்டுமானால் "இலுஹாறுல்ஹக்" என்னும் சிறந்த அரபிக்கிரந்தத்தின் இரண்டாவது வால்யம் 6-வது படலம் 91 முதல் 160 பக்கம் வரையும் ஓரே தொடராய் 69 பக்கங்களாக வரையப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பார்க்க வெகு தெள்ளத்தெளிய தெரிந்துக்கொள்ளலாம்.

ஓ அருமையான என்சிநேகிதரே! இன்னும் சற்றேகவனித்துப் பாரும்.

ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களே முடிவு காலத் தீர்க்கதரிசி யென்பதற்கு அடையாளமாக அவர்கள் பிடரிமீது

"முஹர்ரெநுபுவத்" என்கிற நபிமார்களுக்கெல்லாம் கடைசி நபி யென்றும் முத்திரை பதிக்கப்பட்டிருந்ததே பெரிய அடையாளமாகவும், அற்புதமாகவும், அதிசயமாகவும் இருக்கிறதென்று நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

அதற்கு வேதவாக்கியம் இருக்கிறதா வென்று நீர் கேட்கும்பட்சத்தில் எசாயா-9-ம் அதி (6) "நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோள்மேல் இருக்கும் அவர் நாமம் அதிசயமானவர் ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதான பிரபு என்னப்படும் (7) தாவீதின் சிங்காசனத்தையும் | அவருடைய ராஜ்ஜியத்தையும், அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியிருக்கும் நிலைப்படுத்தும் படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச்செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.


இவ்வசனங்களில் கண்டபடி ஹஜரத் முஹம்மத் ஹலூ இல்லா அவர்களே எல்லாருக்கும் ஆலோசனை கர்த்தராகவும், நித்தியபிதாவாகவும், சமாதான பிரபாகவும், அவர் நாமம் அதிசயமானதாகவும், இருக்கிறதுமன்றி அவர் தோளின் மேல் கர்த்தத்துவம் என்கிற "முஹர்ரெநுபுவத்" தும் பதிக்கப்பட்டிருந்தது. இவர்களே, தாவீதின் சிங்காசனத்தையும், ராஜ்ஜியத்தையும் ஜெயித்து கைப்பற்றி என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும், அவ்ராஜ்ஜியம் நிலைப்படும் படிக்கும் அதின் சமாதானத்திற்கு முடிவு பெறுமலிருக்கும் படிக்கும் செய்திருக்கிறார்களென்பதை இற்றைக்கும் நாம் அத்தாவீதின் ராஜ்யத்தை பார்க்கிறோமல்லவா?

இதனால் அவ்வசனம் அவர்களுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும் கர்த்தத்துவம் என்கிற "முஹர்ரெநுபுவத்" அவர்கள் தோள்மேல் பதிக்கப்பட்டிருந்ததினால் அவர்களே எல்லா நபிமார்களுக்கும் பிந்தின முத்திராங்கமான நபியென்றும், அவர்



கர்த்தத்துவத்திற்கு முடிவில்லை யென்றும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

மேற்படி கர்த்தத்துவ "முஹர்ரெநுபுவத்" என்கிற முத்திரை எவ்விதமாய் அவர்களது தோள்மீது பதிக்கப்பட்டிருந்ததென்று நீர் அறிந்து கொள்கிறதற்காக இதோ அப்படத்தைக் காண்பிக்கிறேன் பாரும் என்று மேல்வரையப்பட்ட படத்தை யெடுத்துக் காண்பித்தார்.



இப்படத்தில் அரபி பாஷையில் வரையப் பட்டுள்ளது என்னவென்று கேட்பீரானால், சொல்லுகிறேன் கேளும். அதிலுள்ள சில அக்ஷரங்களின் கருத்தை ஆண்டவன் ஒருவனே அறிவான். சிலதின் கருத்தோ மனிதர்களுடைய புத்திக்கும், எட்டாதவைகளாயும், சொல்ல முடியாதவைகளாயும் இருக்கின்றன. ஆயினும், சிலதின் அர்த்தம் சொல்லக்கூடியதாயிருக்கின்றது, அதாவது, ஆண்டவன் ஒருவனென்றும் அவனுக்கு மாதா, பிதா, பெண்டீர், பிள்ளை யாதொன்றும் இல்லையென்றும் அவனுக்கு மனிதத் தன்மைக்குரிய இயல்புகளும், மற்றும் சகல படைப்புகளுக்குள்ள ஒப்புவமைகளும் இல்லையென்றும், எல்லா வணக்கங்களும் அவனுக்கே உரியதென்றும், முஹம்மது நபியவர்கள் அவனுடைய திருத்தூதர் என்றும் அவர்களே எல்லா நபிமார்களுக்கும் கடைசி முத்திராங்கமான நபியென்றும் அதற்கு இம்முத்திரையே அடையாள மாக்கப்பட்டிருக்கிறதென்றும் இன்னும் இவைபோன்ற சிலவற்றையும் வரையப்பட்டிருக்கிறதென சொல்லலாம்.

இம்முத்திரை உலகத்தில் என்னவிதமாய் வெளிவந்திருக்கிறதென்று கவனிக்கும்போது ஹஜரத் தங்கள் நாயகம், அவர்களுடைய பிடரியை எப்போதும் மறைத்துக்கொள்கிறவர்களாகவே இருந்தார்கள், அவர்களின் ஸஹாபாக்களில் ஒருவராகிய உக்காஷ் அவர்களுக்கு, அவ்விடம் அவர்கள் மறைத்துக்கொள்வதில் ஒருவித சந்தேகத்தோடன்றி, இதனுள் ஏதோ பெரிய அதிசயமான காரணம் இருக்கின்றது. இக்காரணம் நம்மால் வெளியாகவேணுமென்று ஆசித்துவந்தார், இப்படியிருக்கையில் ஒரு காரணத்தை யொட்டி, அவர் அவர்களின் சமீபத்தில் அடுத்து அவர்கள் அங்கியை நீக்கிவிட்டார். உடனே எல்லாரும் ஆச்சரியப்படத்தக்கதாய் பூரண சந்திரனைப்போல் மேற்படி முத்திரை காணப்பட்டது. இச்செய்தி அங்குள்ள யாவருக்கும் பரவியது. அதை ஒவ்வொருவரும் காணும்பொருட்டு அதற்கு நேரான ஒரு படம் எடுக்கும்படியாயிற்று; இம்முழு விபரத்தை அவர்களுடைய காரண சரித்திரப்படங்களைய "[illegible]" என்கிற கிரந்தத்தில் "[illegible]" என்னும் பாடத்தைப் பார்க்க தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம்.



நான் மேலே எடுத்து ரூபித்த வசனங்களால், ஹஜரத் முஹம்மது றசூலுல்லா அவர்களே முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும், உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் இருக்கிறார்களென்பது வெகு தெளிவாய் தெரிகிறதல்லவா? என்று மௌலவி சாஹிபு தமது சம்பாஷணையை முடித்தார்.

அதற்குப் பாதிரியார் நீர் மேற்சொன்ன வசனங்களில் சிலது முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு சார்பாயிருக்கின்றது. ஆயினும், அதனால் அவர்களை நபியென்று சொல்லமுடியாது என்று சொன்னார்.

உடனே மௌலவிசாஹிபு நீர் யூதர் வேதாகமத்திலிருந்து இயேசுவுக்குச் சம்பந்தப்பட்டதாகச் சொன்ன வசனங்களை ஆராய்ந்த ஒரு யூத வேதசாஸ்திரியாவது இயேசுவை ஒப்புக்கொள்ளாமலிருந்ததுமன்றி, உமது விசுவாசப்படி அந்த வேதவாக்கியங்களை யறிந்தவர்களே இயேசு அவர்களை பலவாறாகத் துன்பப்படுத்தினார்களல்லவா?

இத்தன்மையாய்ந்த ஒரு பழைய ஏற்பாடு வசனங்களை உமது இயேசுவுக்கு சம்பந்தப்பட்டதென்று சொல்லுகிறீர். நான் சொல்லிய மேற்படி வசனங்களை ஆராய்ந்த உங்களுடைய ஆயிரக்கணக்கான பாதிரிகள் மேற்படி வசனங்கள் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு சம்பந்தப்பட்டவைகளென்று எங்கள் நபியவர்கள் சமுகம்வந்து நேரில்கண்டு ஈமான்கொண்டிருக்கிறார்கள்.

இத்தன்மையுள்ள மேற்சொன்ன வசனங்களை எங்கள் நபியவர்களுக் கில்லையென்று மறுதலிக்கிறீர். யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தின் 22 அதி 19ம் வசனத்தைப் பாரும். எவனொருவன் தீர்க்கதரிசன வார்த்தைகளை மறுதலித்தானோ அவன் ஜீவபுஸ்தகத்திலிருந்து பேரெடுக்கப் படுவதோடு பரிசுத்த பட்டணங்களிலும் உள்ள பங்கை அவனின்று நீக்கிவிடப் படுமென்று ஏன சொல்லியிருக்கிறதுமன்றி, கலாத்தியர் [illegible]அதி: 10ம் வசனத்திலும், 5ம் மோசே 27 அதி: 26ம் வசனத்திலும், நியாயப் பிரமாணப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை செய்

யத்தக்கவிதமாய் செய்யாவிட்டால் சபிக்கப்பட்டுப் போவான்; என்று கண்டிருக்கின்றதல்லவா?

இப்பிரகாரம் முஹம்மது றசூலுல்லா அவர்களின் தீர்க்கதரிசனத்தை மறுதலித்தவர்கள் பராபரனின் பரிசுத்த பட்டணமாகிய ஜெருசலேம் (பைத்துல் முகத்திஸ்) முதலிய தாவீதின் இராஜ்ஜியத்தை யிழந்ததுமன்றி அனேகர் சங்கரிக்கப்பட்டும் போனார்கள் அல்லவா? இதன் உண்மையை "புதூஹுஷ்ஷாம்" புஸ்தக மூலமாய் தெரிந்துக் கொள்ளலாம் என்று சொன்னார்.

அதற்கு ஷை பாதிரியார் இதற்கு வேறு யாது நியாயம் சொல்ல இடமில்லாமல் முஹம்மது றசூலுல்லா அவர்களே முடிவுகால தீர்க்கதரிசியாகவும், விடிவெள்ளிநக்ஷத்திரமாகவும் இருக்கிறார்களென்று ஒப்புக்கொண்டு முஸ்லிம் ஆய்விட்டார்.

இந்த இரண்டாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட சம்பாஷணையும், மேலே 1-ம் அதிகாரத்தில் பன்னிரண்டு அத்தாக்ஷிகளோடும் விவரிக்கப்பட்டிருக்கிற சம்பாஷணையும் "ஹிதாயத்துர் றஹ்மானியா, பீ, இஸாலத்தில்லுல்மத்தி நஸ்ரானியா" என்கிற சிறந்த கிரந்தத்திலிருந்து மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றது.

மேற்படி கிரந்தத்தில் அச் சம்பாஷணைக்குரிய ஆட்களின்பேரும், ஊரும், தேதியும் குறிக்கப்பட்டு அச்சம்பாஷணையினால் யாரார்கள் முஸ்லிம் ஆனார்களோ, அவர்களுடைய நாமதேயங்களையும், அவர்களுடைய வரலாறுகளையும் வகை வகையாக எடுத்து வரையப்பட்டிருக்கின்றது. அவைகளை இங்கெடுத்து எழுதினால் அதிக விரிவாகுமென்று அதின் சாராம்சமாகிய சம்பாஷணையை மாத்திரம் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறதென்று அறிந்துகொள்க என்பதே.

## ஓர் ஆனந்த வினா.

முஹம்மது நபியவர்கள் எல்லாருக்கும் கடைசி நபியாயிருக்கும்போது அவரை நபிகள் நாயகம் என்று எப்படிச் சொல்லக்கூடும், நபிகள் நாயகம் என்றால் எல்லாருக்கும் முன் அல்லவா, வந்திருக்கவேண்டும்.



## அதற் கத்தியானந்த விடை.

ஒரு இராஜனாவது, அல்லது ஒரு சேனாதிபதியாவது அல்லது ஒரு குருவாவது அல்லது ஒரு மணவறை மாப்பிள்ளையாவது பகிரங்கமாய் புறப்படும்போது தான் வருகிறதற்கு அறிகுறியாக அவரவர்களுக்குத் தக்கவாறு படை, முரசு, தீவட்டி முதலிய விருதுகளை முன்னால் அனுப்பிக் கடைசியாக அவர்கள் வருவதைப்போல் ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் வருவதற்கறிகுறியாக அவர்களுக்கு முன்னால், ஒவ்வொரு காலங்களிலும், ஒவ்வோர் நபிகள் தோன்றி, அவர்கள் எல்லோரும் இவர்களைப்பற்றித் தீர்க்கதரிசன முரைத்து முன்னறிவிப்பு செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையால், இவர்களே அவர்களுக்கு அதிபதியாக அல்லது அரசனாக அல்லது குருவாக இருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கு பதிலாய் நபிகள்நாயகம் என்று சொல்லப்படுகிறதென்பதை அறிந்துகொள்க. இதன் முழு விவரத்தை "தர்றுபுல் ஆலம்" என்னும் மௌலூதில் பார்த்துகொள்ளலாம்.

## விசேஷக் குறிப்பு.

நக்ஷத்திரங்களுக்கும் நபிமார்களுக்கும் என்ன ஒப்புவமையிருக்கிறதென்று சிலர் கேட்கக்கூடும்.

நக்ஷத்திரங்களோ எண்ணி லடங்காதவைகளா யிருக்கின்றன. ஆயினும், அவைகளில் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி என ஏழு பெரிய கிரகங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் நக்ஷத்திரங்களோ உலகத்திற்குவெளிச்சம்கொடுக்கின்றவைகளாகவும், கப்பல் பிரயாணிகள்போலொத்த வர்களுக்கு வழி காட்டுகின்றவைகளாகவும் இருக்கிறதல்லவா?

அதுபோலவே நபிமார்களும் எண்ணி லடங்காதவர்களாயிருக்கின்றனர். ஆயினும், அவர்களில் ஹஜரத் ஆதம் நபி, ஹஜரத் நூஹு நபி, ஹஜரத் இபுறாஹீம் நபி, ஹஜரத் மூஸா நபி, ஹஜரத் தாவூத் நபி, ஹஜரத் ஈஸா நபி, ஹஜரத் முஹம்மது நபி; என் ஏழு பெரிய றசூல்மார்களாய் ஒன்றுக்குப்பின் ஒன்றாய்

வெளியாகி, உலகத்தில் குபிர் என்கிற இருளை நீக்கி, இஸ்லாம் என்கிற வெளிச்சத்தைக் கொடுத்து துர்ச்செய்கைகளைத் தள்ளி நற்செய்கைகளைப் புரியும்படி ஏவுகிற மார்க்கவழி காட்டிகளாயிருக்கின்றனர்.

இவ்வேழுபேர்களே முதன்மை வகித்த பெரிய றசூலாயிருக்கிறார்களென்பதற் கறிகுறியாக, இவர்களின் பேர் நாமத்தை காண்பித்து ஏழு கலிமாக்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. அதாவது:—

1. லா இலாஹ இல்லல்லாஹு ஆதமு ஸபியுல்லாஹி
2. லா இலாஹ இல்லல்லாஹு நூஹு நஜியுல்லாஹி
3. லா இலாஹ இல்லல்லாஹு இபுறாஹீமு கலீலுல்லாஹி
4. லா இலாஹ இல்லல்லாஹு மூஸா கலீமுல்லாஹி
5. லா இலாஹ இல்லல்லாஹு தாவூது கலீபத்துல்லாஹி
6. லா இலாஹ இல்லல்லாஹு ஈஸா றூஹுல்லாஹி
7. லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மது றசூலுல்லாஹி

என்பதேயாம்.

மேற்கூறிய ஏழு கிரகங்களில் எந்தக் கிரகத்தில் பொழுது உதயமாகுமோ அந்தக் கிரகத்தை அந்த நாளுக்குப் பேரிட்டு வழங்கி வருகிறதுபோல் ஷெடி ஏழு நபிமார்களுக்கு எதெது பொருத்தமோ அதனைக்கொண்டு அவரவர்களின் கலிமாக்களை அவரவர்கள் உம்மத்துகள் மொழியும்படி ஏவப்பட்டிருக்கின்றது

ஆனதினாலேயே நபிமார்களை நக்ஷத்திரங்களுக்கு ஒப்பிட்டு வேதவாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம்.

இரவானது முடிந்துவிடுகிறதென்றும், பகலானது வந்து விடுகிறதென்றும், அறிந்துகொள்ளும்பொருட்டு அதற்கறிகுறியாக இரவின் முடிவில் எல்லா நக்ஷத்திரங்களுக்கும் கடைசியாக்ச் சுக்கிரனென்னும் விடிவெள்ளி நக்ஷத்திரம் தோன்றுகிறது. அவ்வெள்ளியினால் இரவின் அச்சங்கள் தீர்ந்து பகலுடைய அடையாளங்கள் காணப்படுகின்றன.



அதைப்போலவே இரவுக்கொப்பாகிய இவ்வுலகமானது முடிந்து விடுமென்றும், நிலையான பகலுக்கொப்பாகிய அவ்வுலகமானது வந்து விடுமென்றும் அறிந்துகொள்ளும் பொருட்டு அதற்கறிகுறியாக எல்லா நபிமார்களுக்கும் கடைசியாக ஹஜரத் நபிகள்நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் வெளியாயிருக்கிறார்கள்.

அவர் வெளியாயிருப்பதினாலேயே அவ்வுலகம் வருவதற்குள்ள அடையாளங்கள் வெளியாகியும், வெளியாகிக் கொண்டும் வருகின்றன.

ஆகையினாலேயே ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மதுறசூலுல்லா அவர்களை விடிவெள்ளி நக்ஷத்திரத்திற் கொப்பிட்டு, அவர்களை உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாயிருக்கிறார்களென்று சொல்லும்படியாய் நேரிட்டது.

சில வானசாஸ்திரிகள் அந்தசுக்கிரனென்கிற விடிவெள்ளி நக்ஷத்திரத்தின் குணகுணங்களையும், பலாபலன்களையும் விவரித்து, அவ்விவரிப்பு அடங்கலும் ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களில் அமைந்திருக்கின்றனவென்றும், இத்தன்மையான கிரகம் வாய்த்த அதிஷ்டம் முழு உலகத்தில் வெளியான எல்லாமனிதர்களில் ஒருவருக்கும் உண்டாயிருக்கவில்லையென்றும், எல்லாக்கிரகங்களையும் விடச் சுக்கிரனென்கிற விடிவெள்ளி நக்ஷத்திரத்தின் குணம் எவ்வளவு விசேஷமாயிருக்கிறதோ அதைப்போலவே எல்லா மனிதர்களைப் பார்க்கினும் முஹம்மது றசூலுல்லா அவர்களின் குணம் விசேஷமானதாயிருந்ததென்றும், சொல்கிறார்கள்.

இன்னமும் இவர்கள் பிறப்பு திங்கட்கிழமை பொழுது உதையமாகு முன்னுள்ள சுக்கிர நக்ஷத்திரமென்றும், அந்நேரம் மேற்படி விடிவெள்ளி நக்ஷத்திரம் உதயமாயிருந்ததென்றும், ஆனதினாலேயே அவருடைய வாராந்தர பண்டிகை சுக்கிரவாரமாகவும், அப்பண்டிகையின் தொழுகை அன்று பகல் 7-ம் சாஅத்துக்குப்பின் 8 ம் சாஅத்தின் ஆரம்ப சுக்கிர நக்ஷத்திரத்தின் நேரத்தில் முழு உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒன்று கூடி ஓரேமுகமாகத் தொழுது வருகிறார்களென்றும்,

அவர்களுடைய சகல சுபமங்கள கிரியைகளும் அந்த நாளிலும் அந்நக்ஷத்திர நேரத்திலும் விசேஷமாய் நடத்தப்பட்டு வருகின்றதென்றும், அவர் பிறந்த நேரமாகிய விடிவெள்ளி உதிக்கும் நேரத்தில் அவரைப் பின்பற்றின அவுலியாக்கள், ஸாலிஹீன்கள், ஆபிதீன்கள், ஆரிபீன்கள் முதலிய பக்தர்களெல்லாம் அந்நேரத்தைப் பெரிதாகக் கருதி அவர்களுடைய இராக்காலத்து வணக்கங்களை அச்சமயத்தில் முத்திபெறச் செய்திருக்கிறார்களென்றும், சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் அந்நக்ஷத்திரத்துக்குள்ள சகல குணங்களும், மகத்துவமும் இவர்களுள் தான் வெளியாய் நடைபெற்றிருக்கிறதென்றும்; திங்கட்கிழமை பகல் 6-ம் சாஅத்தென்றும் அந்த சுக்கிர நக்ஷத்திரத்தில் அவர்கள் ஆகிரம் புகுந்தார்களென்றும்; இன்னும் பலவாறும் எடுத்து ருசித்து, அந்நக்ஷத்திரத்தையுடையவர் அவர்களேயென்றும், அச்சாஸ்திரிகள் உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால் மேல் விவரிக்கப்பட்ட யேசு முதலிய தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களே உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார்களென்பது பரிஷ்காரமாக விளங்குகின்றதினால், வேறு உதாரணங்களும், அத்தாக்ஷிகளும் சொல்லவேண்டியது அவசியமில்லையென்று இவ்வதிகாரத்தை இதோடு முடிவு செய்கிறேன்.

## எச்சரிப்பு.

அல்லாஹுத்தஆலா ஆதியில் தான் தானாய் இருந்தான். அப்பால் தன்னை அறியப்படுதலை உவந்தான். தானாடியிருந்தபடி நூர்முஹம்மதைப் படைத்தான். அதாவது, முஹம்மது நபியவர்களின் ஒளி இந்த ஒளிக்கு பல சிறந்த நாமங்களுண்டு அவ்வொளியைக் கொண்டே வானம், பூமி, நக்ஷத்திரம், கடல், மலை, சொர்க்கம், நரகம், முதலிய எல்லா வஸ்துக்களையும் படைத்தான். ஆகையினால், அவ்வொளியே எல்லா வஸ்துக்களுக்கும் அசலாகவும், வித்தாகவும், கருவாகவும், காரணமாகவுமிருக்கின்றதைனால்



ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கெதிரில் அவைகள் யாவும் ஒரு துரும்புக்குச் சமானமானவைகளல்லவென்பதே.

இத்தன்மையான கொள்கையையுடைய முஸ்லிம்கள் நபியவர்கள் விடிவெள்ளி நக்ஷத்திரமாயிருக்கிறார்களென்பதை அணுவளவும் மதிக்கமாட்டார்கள். நபியவர்களுக்கு அந்த விடிவெள்ளியை ஒப்பிட்டுச் சொன்னதெல்லாம் அந்நிய மதஸ்தர் அவர்களுடைய மகத்துவத்தை யுணர்ந்து கொள்வதற்காகவே சொல்லப்பட்டிருக்கின்றதென்று அறிந்துகொள்க.

முஸ்லிம்கள் ஜோஸியம் பார்க்கிறதில்லை. அந்ஜோஸியத்தின் பலாபலனை நம்புகிறதுமில்லை. அதைப்பற்றி மார்க்கத்தில் கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், அந்நிய மதஸ்தர்களில் அநேகர் ஜோஸிய கலிதத்தை நம்புகிறவர்களாகவிருக்கிறபடியால் அவர்களுக்குத் திருப்தியாக ஹஜரத் நபியவர்களின் மகத்துவத்தை அவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு, ஜோஸியர்கள் சுக்கிரனென்கிற விடிவெள்ளி நக்ஷத்திரம் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கே சம்பந்தப்பட்டதென்று சொல்லியிருக்கிற ஜோஸியத்தை எழுதும்படி நேரிட்டதென்று அறிந்துகொள்க.

யூதர்களிடமும் கிறிஸ்தவர்களிடமும் இருக்கிற வேதாகமங்களை முஸ்லிம்கள் ஒருபோதும் நம்புகிறதுமில்லை, அதைத் தேடிப்பார்க்கிறதுமில்லை. அவர்கள் தௌராத், ஸபூர், இஞ்ஜீல் என்று சொல்லுகிறதெல்லாம் மூஸா நபிக்கு ஆண்டவனால் அருளிய வேதத்தை தௌராத் என்றும், அதுபோலவே தாவூது நபியவர்களுக்கு ஆண்டவனாலருளிய வேதத்தை ஸபூர் என்றும், அதுபோலவே ஈஸா நபியவர்களுக்கு ஆண்டவனாலருளியதை இஞ்ஜீல் வேதமென்றும் விசுவாசிக்கிறார்கள்.

ஆயினும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் மகத்துவத்தை அறிந்துகொள்ளும் பொருட்டு அவர்களுடைய வேதாகமத்திலிருந்து மேற்சொன்னபடி சிலவசனங்களை அவர்களின் திருப்திக்காக வரைந்து, அவ்

வசனங்கள் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்குச் சம்பந்தப் பட்டதென்று எடுத்து ரூபிக்கப்பட்டிருக்கிறதென்று அறிந்து கொள்க.

யாராகிலும் ஆண்டவனிடத்திலிருந்து மூஸாவுக்கு இறங்கிய தௌறாத்தையும், தாவூத் நபிக்கிறங்கிய ஸபூரையும், ஈஸா நபிக்கிறங்கிய இஞ்சீலையும் காண்பிக்க வேண்டுமென்றும், அப்படிக் காண்பிக்காமல் முஸ்லிம்கள் அதைப்பற்றிச் சொல்வது பொருந்தாதென்றும் சொல்வார்களானால் அதற்கு மறுமொழியாவது, மத்தேயு 4-ம் அதி: 20-ம் வசனத்திலும், ஷை மத்தேயு 4-ம் அதி: 35-ம் வசனத்திலும், மாற்கு 1-ம் அதி: 15-ம் வசனத்திலும், கலாத்தியர் 1-ம் அதி: 7-ம் வசனத்திலும் பார்க்க யேசு சுவிசேஷத்தை வைத்துக்கொண்டு பிரசங்கம் செய்தாரென்றும் இந்தச் சுவிசேஷத்தை நம்புங்களென்று உபதேசித்தாரென்றும், பலவாறாய் சொல்லப்பட்டிருக்கின்றன.

யேசு வைத்து உபதேசித்த சுவிசேஷத்தை அவர்களது சீஷர்களாகிய கிறிஸ்துவர்களால் காண்பிக்க ஏலாதிருக்கும் போது அவர்களுக்கு எவ்வளவோ வருஷங்களுக்குப்பின்னுள்ள முஸ்லிம்கள் அதை காண்பிக்க வேண்டுமென்று சொல்வது ஞாயமானதல்ல என்பதே.

## முழு உலக ஜனங்கள் மோக்ஷமடையத் தக்கதாகிய கிறிஸ்துவ அன்பர்களுக்கு ஓர் நற்போதனை.

ஓ! அன்பர்களே! நான் உங்களுக்கு என் மனப் பூர்த்தியாய்ச் சொல்லும் உபதேசத்தைக் கேட்டு, அதைத் தீர்க்காலோசனை செய்து பாருங்கள். உங்களுடைய ஆத்மாக்களே உங்களுக்குப் போதுமான சாக்ஷிகளாயிருக்கின்றன வென்று மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுடைய அவ்வுலக வாழ்வின் கதியைக் கவனிக்கையில் இருதலைக் கொள்ளியின் நடுவே அகப்பட்ட எறும்பைப்போல் சிக்கிக் கொண்டிருக்கின்றதென்று நிச்சயமாகவே சொல்லலாம்.

அது எப்படியென்று கேட்பீர்களானால், நீங்கள் முன்னுள்ள தீர்க்கதரிசிகளை விசுவாசிப்பதிலும், அவர்களுடைய



கொள்கை கிரியை நடத்தைகளிலும், முற்றும் மாற்றமாயிருக்கிறதால் அவர்களின் கோபாக்கினிக்குள்ளும், ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களை நபி யென்று ஏற்றுக் கொள்ளாததினால், அவர்களின் கோபாக்கினிக்குள்ளும் ஆக இரண்டு கோபாக்கினியின் நடுவே நீங்கள் சிக்கிக்கொண்டிருக்கிறீர்களென்றே சந்தேகமறச் சொல்லலாமல்லவா?

இதற்கு மறுமொழியாக நீங்கள் முன்னுள்ள தீர்க்கதரிசிகளை விசுவாசிப்பதிலும், அவர்களின் கொள்கை கிரியை நடத்தைகளிலும் நாங்கள் எவ்விதமாய் பேதகப்பட்டிருக்கிறோமென்று கேட்பீர்களானால், அவைகளை விபரமாய்ச் சொல்லுகிறேன், அதை நீங்கள் தயவுசெய்து கேட்டு ஆலோசித்துப் பாருங்கள்.

யோவான் 10-ம் அதி: 8-ம் வசன முதலியவைகளைப்பார்க்கையில், யேசு அவர்களுக்கு முன்னிருந்த எல்லாத் தீர்க்கதரிசிகளையும் திருடர்களென்றும், கொலைஞர்களென்றும், கள்ளர்களென்றும், பலவாறாய் நிந்திக்கப்பட்டிருக்கிறதைக் காணலாம்

அன்றியும், எபிரேயர் 11-ம் அதி: 5-ம் வசனத்தில் ஏனொக் வானங்களின மேல் ஏற்றுக்கொள்ளப்பட்டாரென்றும், இரண்டாம் ராஜாங்கம், 2-ம் அதிகாரம், 11-வது வசனத்தில், எலியா வானங்களின் மேல் ஏற்றுக்கொள்ளப்பட்டாரென்றும், கண்டிருக்கும்போது யேசுவைத்தவிர வானத்தில் ஏறினவன் ஒருவனுமில்லையென்று யோவான் 3-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறதை பார்க்கலாம்.

மேற்கண்ட வசனங்கள் முன்னுள்ள தீர்க்க தரிசிகளின் விஷயத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைக் கவனித்தால் நீங்கள் அத்தீர்க்க தரிசிகளை நிந்திக்கிறீர்களென்று யாரும் சொல்லித் தெரியவேண்டுமோ?

இன்னும் அத்தீர்க்கதரிசிகளோ பராபரன் ஒருவனென்றும் அவன் ஒருவனே ஏகத்துவத்தையுடையவனென்றும், அவனை ஒருவனுக் கொப்பிடாமலும் யாரையும் அவனுக்கொப்பிடாமலும், விசுவாசித்து வந்தார்களென்பதை 5-ம் மோசே 4-ம் அதிகாரம் 35-ம் வசனத்திலும், ஷை 5-ம் மோசே 23-ம் அதிகாரம்

12, 39-ம் வசனங்களிலும், 1-ம் மோசே 1-ம் அதிகாரம் 17-ம் வசனத்திலும், நாளாகமம் இரண்டாம் புஸ்தகம் 6ம் அதிகாரம், 14-ம் வசனத்திலும், ஏசாயா 40-ம் அதிகாரம் 18-ம் வசனத்திலும் ஷை ஏசாயா 42-ம் அதிகாரம், 8-ம் வசனத்திலும், இன்னும் ஷை ஏசாயா 44-ம் அதிகாரம் 6-ம் வசனத்திலும் இவை போன்ற பழைய ஏற்பாட்டின் அநேக வசனத்திலும் பார்க்கத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம்.

உங்கள் கொள்கையோ பிதா, குமாரன், பரிசுத்தாவி என்கிற திரித்துவத்திலும், யேகோவை பராபரனுக்கும், பராபரனை யேசுவுக்கும், ஒப்பிட்டதிலுமாயிருக்கின்றது.

இன்னும் ஏசாயா 45-ம் அதிகாரம் 22ம் வசனத்தில் இரக்ஷகர் பராபரனைத் தவிர வேறு ஒருவருமில்லையென்று சொல்லியிருக்க அதற்கு முற்றும் விரோதமாக மத்தேயு 1-ம் அதிகாரம் 27-ம் வசனத்தில் யேசு ஒருவரே ரக்ஷகராயிருக்கிறாரென்று கண்டிருக்கிறதுமன்றி 5-ம் மோசே 32-ம் அதிகாரம் 39-ம் வசனத்தில் நாம் நாமே நம்மோடு வேறு தேவனில்லையென்று சொல்லப்பட்டிருக்க அதற்கு நேர் மாறாக யோவான் 1-ம் திருபம் 5-ம் அதிகாரம் 7-8-வசனங்களில் பிதா-வார்த்தை-பரிசுத்தாவி இம்மூவரும் ஒன்றாயிருக்கிறதென்று கண்டிருக்கிறதல்லவா ?

இன்னும் அவர்களோ பாவமன்னிப்புக்காக ஆண்டவனிடம் அழுது தொழுது மனமுருகி வருந்திக்கேட்கவேண்டுமென்றும், பலபொருள்களைக் காணிக்கையும், ஆடுமாடுகளைத் தத்தமும் செய்யவேண்டுமென்றும், பிதாவின் பாவம் பிள்ளைக்கும், பிள்ளையின் பாவம் பிதாவுக்கும் சாட்டப்படாதென்றும், பிதாவுக்காகப் பிள்ளையையும், பிள்ளைக்காகப் பிதாவையும் கொல்லப்படாதென்றும், அவரவர்கள் பாவத்தினிமித்தம், அவரவர்களே தண்டிக்கப்படவேண்டுமென்றும், ஒருவருக்காக வேறொருவரை தண்டிக்கவும் கொல்லவும் கூடாதென்றும், பலியைப்பார்க்கிலும் பாவமன்னிப்பே பராபரனுக்கு உகந்ததென்றும், இன்னும் இவை போன்ற அநேக நற்கிரியைகளைச் செய்யவேண்டுமென்றும், விசுவசித்து வந்திருக்கிறார்களென்பதை இரண்டாம்



இராஜாங்கம் 14-ம் அதிகாரம் 6-வது வசனத்தாலும், எரேமியா 33-ம் அதிகாரம் 29, 30-ம் வசனங்களாலும், எஸேக்கி 18-ம் அதிகாரம் 19, 20-ம் வசனங்களாலும், சங்கீதம் 145-ம் அதிகாரம் 18, 19-ம் வசனங்களாலும், இன்னும் ஷை சங்கீதம்37-ம் அதிகாரம் 4-வது வசனத்தாலும், 2ம் மோசே 33-ம் அதிகாரம் 7-வது வசனத்தாலும் 3-ம் மோசே 4-ம் அதிகாரம் 20 முதல் 35 வரையுள்ள வசனங்களாலும், 4-ம் மோசே 15-ம் அதிகாரம் 25 முதல் 28 வரையுள்ள வசனங்களாலும், 5-ம் மோசே 9-ம் அதிகாரம் 10முதல் 26வரையுள்ள வசனங்களாலும், ஏசாயா 45-ம்அதிகாரம் 22-ம் வசனத்தாலும், 5-ம் மோசே 5-ம் அதிகாரம் 10-ம் வசனத்தாலும், சாலொமோன் வாக்கியம் 21-ம் அதிகாரம் 3-ம் வசனத்தாலும் இன்னும் இவை போன்ற அநேக வசனங்களாலும் நன்றாய்த்தெரிந்துகொள்ளலாம்.

உங்களுக்கோ யேசுபாவிகளின் பாவத்தைதான் சுமந்து; அவர்கள் பாவத்திற்காகவே தாம் பலியாகி ரத்தத்தைச் சிந்தி ரக்ஷித்தார் என்கிற விசுவாசமே பாவமன்னிப்புக்குப் பெருங்காரணமாயிருக்கிறதென்பதை யோவான் 1-ம் திருபம் 2-ம் அதிகாரம் 2-ம் வசனத்தாலும், எபிரேயர் 9-ம் அதிகாரம் 26-ம் வசனத்தாலும், பேதுரு பிலிப்பியருக்கெழுதிய திருபம் 2-ம் அதி 9, 10-ம் வசனங்களாலும்; இன்னும் இவைபோன்ற அநேக வசனங்களாலும் வெகு தெளிவாய் அறிந்துக்கொள்ளலாம்.

இன்னும் இவைபோன்ற அநேக விஷயங்களில் அவர்கள் கொள்கைக்கும், உங்கள் கொள்கைக்கும் எவ்வளவோ வித்தியாசமும், மாற்றமும் இருக்கின்றது.

அவர்களோ இப்றாஹீம் நபியின் கொள்கை, கிரியை, நடப்புமுதலிய ஆசாரத்தையே, பின்பற்றி நடந்துவந்திருக்கிறதுமன்றி அவைகளை ஸ்திரப்படுத்துவதற்காகவே ஒவ்வொருகாலங்களிலும் ஒன்றுக்குப் பின்னொன்றாக வெளிப்பட்டு, தங்கள் உயிர்களையும், பொருள்களையும் சிந்தி, அவ்வாசாரத்தை உலகத்தில் நிலைநாட்டினார்கள். அக்கொள்கை கிரியைகளை எவன் நடத்திவந்தானோ அவனையே மெய்மார்க்கனென்றும், மோட்சமடைவானென்றும் வெகு தாட்டிகமாய்ச் சொல்லலாம்.

நீங்களோ அப்பிரமாண்டமான ஆசாரத்தை ஒரு துரும்பைப்போல் நினைத்து, அவைகளை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவராமல் அடியோடு தள்ளி ஒதுக்கிவைத்து விட்டு உங்கள் மனம்போலவே ஆசார கிரியைகளை நடத்தி வருகிறீர்களல்லவா?

இதுவுமன்றி 5-ம் மோசே 24-ம் அதிகாரம் 1, 2, வசனங்களில் கண்டிருக்கிறதற்கு மாறாக மத்தேயு 5-ம் அதிகாரம் 32-ம் வசனத்திலும், இன்னும் 3-ம் மோசே 24-ம் அதிகாரம் 19, 20,21,23ல் கண்டிருக்கிறதற்கு நேர்மாறாக மத்தேயு 5ம் அதிகாரம் 38,39 வசனங்களிலும், இன்னும் 5ம் மோசே 20ம் அதிகாரம் 12-ம் வசனத்தில் கண்டிருக்கிறதற்கு விரோதமாக 2-ம் தீமோத்தேயு 2-ம் அதிகாரம் 24-ம் வசனத்திலும் இன்னும் சகரியா 11ம் அதிகாரம் 12,13-ம் வசனத்தில் கண்டிருக்கிறதற்கு மாறாக மத்தேயு 27-ம் அதிகாரம் 9, 10ம் வசனத்திலும் இன்னும் பழைய ஏற்பாட்டு வசனங்களில் கண்டிருக்கிறதற்கு நேர்மாறாக 1-ம் தீமோத்தேயு 3-ம் அதிகாரம் 2, 12-ம் வசனங்களிலும், இவை போன்ற பின்னும் பழைய ஏற்பாட்டு வசனங்களில் கண்டிருக்கிற விஷயங்களுக்கு முற்றும் மாறாகப் புதிய ஏற்பாட்டு வசனங்களிலும் கண்டிருக்கின்றன. இவைகளின் முழு விவரத்தை எடுத்துச் சொல்வதானால் விரியுமென்று நிறுத்துகிறேன்.

ஆகவே, நான் மேற்சொன்னவைகளால் நீங்கள் முன்னுள்ள தீர்க்கதரிசிகளை நிந்தித்து, அவர்களின் கொள்கை, கிரியை, நடப்பு முதலியவைகளுக்கு முற்றும் மாறாய் நடந்து வருவதால் நீங்கள் அவர்களின் கோபாக்கினிக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறீர்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகின்றது.

இவைகளினாலேயே இஸ்ரவேலர்கள் நீங்கள் அறுத்த ஜீவப்பிராணிகளை தின்கிறதுமில்லை; அவர்கள் பெண்மக்களை விவாகம் செய்ய உங்களுக்குத் தருகிறதுமில்லை, உங்கள் வீட்டில் அவர்கள் யாதொன்றைப் புசிக்கிறதுமில்லை என்கிறதே அதற்குறுதியான பகிரங்க சாக்ஷியாயிருக்கின்றது.



இவ்வாறே ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களை நீங்கள் நபியென்று விசுவாசிக்காததினாலேயும், அவர்களைப் பலவிதமாய் நிந்திக்கிறதினாலேயும் அவர்களுடைய கோபாக்கினிக்குள்ளும் நீங்கள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களென்பது உலகறிந்த விஷயமே.

ஆகையால் நான் மேற்சொன்னபடியே உங்களுடைய அவ்வுலக வாழ்க்கையின் கதியோ இருதலை கொள்ளியின் நடுவில் அகப்பட்ட எறும்புபோல் சிக்கிக்கொண்டிருக்கிறதென்று நீங்கள் உங்களுக்குள்ளாகவே நன்றாய்த்தெரிந்து கொள்வீர்களென்று உறுதியாய் நம்புகிறேன்.

இதற்கு மறுமொழியாக நீங்கள் எங்கள் கதி இப்படியானால், முஸ்லிம்களாகிய உங்கள் கதியோ எப்படியென்று கேட்பீர்களானால், நாங்கள் ஆதம் முதல் ஈசா வரையுள்ள எல்லாத் தீர்க்கதரிசிகளும் பரிசுத்தவான்களென்றும், மெய்யான தீர்க்கதரிசிகளென்றும் அந்தந்தக் காலங்களிலுள்ள ஜனங்களுக்கு இவர்கள் சத்தியமார்க்கத்தைப் போதித்து, அவர்களை முத்தியடையச் செய்கிற வழிகாட்டிகளாகவும் இருந்தார்களென்றும், ஆயினும் அவர்களில் ஆதம், நூஹூ, இபுறாஹீம், மூஸா, தாவூத், ஈஸா, முதலியவர்களை அதிக பிரக்யாதி பெற்ற முதன்மை வாய்ந்தவர்களாயும், வேதம் அருளப்பட்டவர்களாயும் இருந்தார்களென்றும், எங்கள் மனப்பூர்த்தியுடன் விசுவசிக்கிறதோடு இவர்களுள் முதன்மையான இபுறாஹீம் நபியவர்களுடைய கொள்கை, கிரியை, நடப்புகளுக்கு எள்ளளவும் பேதமில்லாமல் கைக்கொண்டு நடந்து வருகிறபடியால் நாங்கள் அவர்கள் எல்லோர்களின் ஆசீர்வாதங்களை யடைந்துகொண்டு வருகிறோமென்பதற்கு யாதொரு ஐயமில்லை.

நாங்கள் அவர்களை முழு விசுவாசத்தோடு பின்பற்றி நடந்து வருகிறோமென்பதற்கறிகுறியாக அத்தீர்க்கதரிசிகளின் திருநாமங்களை வெகுமகத்துவமாய் எங்களுக்கு பேர் நாமங்களாகச் சூட்டிக்கொண்டு வருவதோடு அவர்களுடைய ஆசாரத்திலும் பேதமில்லாமல் நடந்துகொண்டு வருகிறோம்.

அது எப்படியென்று கேட்பீர்களானால் ஆதமும், ஹவ்வாவும் இவ்வுலகத்தில் வந்து இரண்டுபேரும் ஒன்றாய்ச் சந்திக்கிறதற்காகப் பல வருஷங்களாய்ச் சுற்றிக் கடைசியாக மக்காவுக்கு 16 மயிலுக்குக் கிழக்கே இருக்கிற அறபாத் என்னும் மலையில் துல்ஹஜ்ஜு மாதம் 9-ந்தேதி இருவரும் ஒன்று கூடினவுடன் அவர்கள் ஆண்டவனிடம் மனமுருகி அழுது மன்றாடி "ஆ! எங்கள் ஆண்டவனே! நாங்கள் இருவரும் எங்கள் ஆத்துமாவுக்கே துரோகஞ் செய்துகொண்டோம். ஆகையினாலேயே, நீ அதை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால் நாங்கள் நஷ்டவாளிகளாகி விடுவோம்" என்று பலவாறாய்க் கேட்டு வருந்தினார்கள்.

அதற்குப் பிரதியுத்தரமாக ஆண்டவன் அவர்களை நோக்கி "ஓ! ஆதமே நீரும் உமது மனைவியும் எனது கட்டளையை மீறினதால் நீங்கள் சொர்க்கத்திலிருந்து நீக்கப்பட்டீர்கள். எவனொருவன் என் கட்டளையை மீறினானோ, அவன் சொர்க்கத்தில் சேர்க்கப்படமாட்டான். எவனொருவன் என் கட்டளைப்பிரகாரம் நடந்தானோ அவனே சொர்க்கத்தில் சேர்க்கப்படுவான்" என்று சொல்லி அவர்கள் குற்றங்களை மன்னித்த ஆண்டவன் ஒருவன், அவனுக்கே எல்லாவணக்கமும் புகழும் உரியது. அவனுக்கு இணை, துணை, மாதா, பிதா, பெண்டீர், பிள்ளை யொன்றுமில்லை. அவன் ஒன்றுக்கும் நிகரில்லை. எதுவும் அவனுக்கு நிகரில்லை. அவனே ஆதியந்தமாயிருக்கிறான் என்கிற கொள்கையும், தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு முதலிய ஏவலும், பொய், புறம், கோள், களவு, வஞ்சனை, சூனியம், கொலை, பொறாமை, மதுபானம், விபசாரம், பன்றி தின்னல், வட்டிவாங்கல் முதலிய விலக்கலும், ஆகிய கிரியையும் அடங்கியதான 10 சுஹுப்புகளை அவர்களுக்குக் கொடுத்து, அதை மார்க்கமாக அனுஷ்டித்து வரும்படி. கட்டளையாக்கினான். இம்மார்க்க கட்டளைக்கே இஸ்லாம் என்றும் இப்பிரகாரம் நடந்தவனுக்கே முஸ்லிமென்றும்பெயர்.

மேலும் ஆண்டவன் அவர்களை நோக்கி "ஓ! ஆதமே நீர் மக்காவில் என் நாமத்தினால் ஒரு ஆலயத்தைக் கட்டு" மென்று உத்தரவு செய்தான். அதற்கு அவர்கள் "நான் எந்த இடத்தில் என்னவிதமாக அவ்வாலயத்தைக் கட்டுவது" என்று கேட்டபோது ஓ! ஆதமே நாலாவது வானத்தில் "பைத்துல்மஅமூர்" என்றும் ஒரு ஆலயம் இருக்கின்றது. எல்லா வானவர்களும் அவ்வாலயத்தில் ஒன்று கூடி என்னை வணங்குகிறார்கள். அதற்குநேராக இம்மக்காவில் ஒரு ஆலயத்தை அவ்வானோர்களால் கட்டப்பட்டு என்னை வணங்கி வந்தார்கள். அவ்வாலயத்தின் அடையாளம் அதோ இருக்கின்றது. அவ்வாலயத்தை நீர் புதுப்பித்துக் கட்டும்" என்று உத்தரவு செய்தான்.



அப்பிரகாரமே அவர்கள் அவ்வாலயத்தைக் கட்டித் தாங்கள் சொர்க்கத்திலிருந்து வந்ததிற்கு அறிகுறியாகக் கொண்டு வந்த கல்லையும் அக்கட்டிடத்திலமைத்து "கஅபத்துல்லா அல்லது பைத்துல்லா" என்று பேரிட்டு, அவ்வாலயத்தில் ஆண்டவனைத் தொழுது கொண்டும் அப்பூமிகளிலேயே சஞ்சரித்துக் கொண்டுமிருந்தார்கள்.

இதற்கறிகுறியாக அவருடைய ஸ்திரீயாகிய ஹவ்வா அம்மாளின் சமாதியானது மக்காவுக்குச் சமீபத்திலுள்ள ஜித்தாவில் இருக்கிறதை இன்றும் காணலாம்.

திரு மக்காவுக்குப் போகிற பிரயாணிகள் ஜித்தா என்கிற துறைமுகத்தி லிறங்கியவுடன் முதலாவதாக அந்த அம்மாளுடைய சமாதிக்குச் சென்று வருகிற வழக்கம் இன்றைக்கும் நடந்துகொண்டு வருகிறதைப் பார்க்கலாம்.

அதற்குப் பின் அவர்களுடைய குமாரராகிய ஹஜரத் ஷீது நபியவர்களும், அவ்வாசாரத்தையே பின்பற்றி வந்திருப்பதோடு அவர்களுக்கு 50 சுஹுபுகளை ஆண்டவன் அருளி அப்பிரகாரம் அவர்களும் நடந்து ஜனங்களுக்கும் அதைப் போதித்து வந்தார்கள்.

பின்பு ஹஜரத் இத்ரீஸ் நபியவர்களுக்கு 30 சுஹுபுகளை ஆண்டவன் அருளி அப்பிரகாரம் அவர்களும், நடந்து ஜனங்களுக்கும் போதித்து வந்தார்கள்.

பின்பு ஹஜரத் நூஹு நபியவர்களும் அவ்வாறே நடந்து ஆண்டவன் அருளியபடி சில விதிவிலக்குகளை ஏற்படுத்தி மார்க்கமாக அதை ஜனங்களுக்குப் போதித்துவந்தார்கள்.

பின்பு ஹஜரத் இபுறாஹீம நபியவர்களும் அவ்வாறே நடந்து, அவர்களுக்கு ஆண்டவன் 10 சுஹுபுகளை அருளி, அப்பிரகாரம் அவர்களும் நடந்து ஜனங்களுக்கும் அதைப் போதித்து வந்தார்கள்.

பின்பு ஹஜரத் மூஸாநபியவர்களுக்கு ஆண்டவன் 10 சுஹுபுகளையும், பின்பு தௌறாத் வேதத்தையும் அருளினான். அப்பிரகாரமே அவர்களும் நடந்து அதை ஜனங்களுக்கும் போதித்து வந்தார்கள்.

பின்பு ஹஜரத் தாவூது நபியவர்களுக்கு ஆண்டவன் ஸபூர் வேதத்தை யருளினான். அப்பிரகாரமே அவர்களும் நடந்து அதை ஜனங்களுக்கும் போதித்து வந்தார்கள்.

பின்பு ஹஜரத் ஈஸா நபியவர்களுக்கு ஆண்டவன் இஞ்ஜீல் வேதத்தை யருளினான். அப்பிரகாரம் அவர்களும் நடந்து அதை ஜனங்களுக்கும் போதித்து வந்தார்கள்.

பின்பு, ஹஜரத் முஹம்மது நபியவர்களுக்கு ஆண்டவன் புறுக்கான் வேதத்தையருளினான். அப்பிரகாரம் அவர்களும் நடந்து ஜனங்களுக்கும் போதித்து வந்தார்கள்.

ஷை நபிமார்களைத்தவிர அவர்களுக்கிடைக்கிடையே வந்த நபிமார்கள் தாங்கள் மேற்சொன்ன எந்த நபிக்குப்பின் தோன்றினார்களோ அந்த நபிகளுடைய மார்க்கத்தையும், வேதத்தையும், தாங்கள் பின்பற்றி நடந்ததோடு ஜனங்களுக்கும் அதைப் போதித்து வந்திருக்கிறார்கள்.

ஹஜரத் ஆதம் நபியவர்கள் காலத்திலிருந்து ஹஜரத் முஹம்மது நபியவர்கள் காலமுட்பட எல்லா நபிமார்களும், அவர்களுடைய கௌமுகளும் ஈமானிலும், தௌஹீதிலும், அக்கீதாவிலும், ஆகிய கொள்கைகளில் எள்ளளவும் பேதகமின்றி ஒற்றுமையாகவும், நடந்து வந்தார்கள். ஆயினும், அமல் என்கிற கிரியையில் பிரதான விஷயங்களில் ஒற்றுமையும், சிற்சில விஷயங்களில் மாத்திரம் வேற்றுமையும் பட்டிருந்தார்கள்.

முந்தினவர்களுடைய வேதமும், ஆசாரமும், பிந்தினவர்களுடைய வேதத்திலமைந்தும், இது போலவே ஒன்றுக்குப்பின்



ஒன்றாகச் சங்கிலி தொடர்ச்சியாய் வந்து கடைசியாகக் குற்ஆன் என்னும் வேதத்தில் அவைகள் யாவும் அமைந்திருக்கின்றன.

பிந்தின புதிய உத்திரவைக்கொண்டு முந்தின பழைய உத்திரவை மாற்றுவதுபோல் ஒன்றுக்குப்பின் ஒன்றாக மாறி, முடிவாக இந்தக் குற்ஆனைக்கொண்டு எல்லா வேதங்களும் மாற்றப்பட்டு * உலகம் முடியுமளவும் இதுவே ஸ்திரமாய் நின்று அதின்படியே அமல்கள் நடந்தேறிக் கொண்டு வருகின்றன.

ஆதம் நபி முதல் முஹம்மது நபிவரை எல்லாரும் ஓரே மார்க்கத்தில் ஒன்றுபோல் ஒற்றுமையாகவே நடந்து வந்திருக்கிறார்களென்பதற்கு அறிகுறியாக இதை இஸ்லாம் மார்க்கமென்றும் அதைப்பின்பற்றி நடக்கிறவர்களை முஸ்லிம்களென்றும் அழைக்கப்பட்டு வருகிறதென்பதே பகிரங்க சாக்ஷியாக இருக்கின்றது.

இத்தன்மை வாய்ந்த முஸ்லிம்கள் முன்னுள்ள தீர்க்கதரிசிகளின் தயவையும், ஆசீர்வதிப்பையும் பெற்றுக்கொண்டு வருகிறார்களென்று சொல்லுவதற்கு யாதொரு ஐயமுண்டோ?

அன்றியும், இன்னும் சற்றே கவனித்துக்கேளுங்கள், ஹஜரத்து இபுறாஹீம்நபியவர்கள். ஆதம், ஹவ்வா இருவரும் ஒன்றுசேர்ந்த அரபாத் மலைக்குச்சென்று 9ந்தேதியில் ஹஜ்ஜு செய்து மீண்டு வருகையில், மக்காவுக்கும் ஷை அரபாத்து மலைக்கும் நடுவிலுள்ள மீனாவில் மறுநாளாகிய 10-ந் தேதியில் தமது அருமை மகனைக் கோர்பான் கொடுக்கப்போனபோது, ஷைத்தான் அவர்களிடம் மடக்கி மடக்கி மூன்று முறை மூன்றிடத்தில்

* பிந்தின புதிய உத்தரவைக்கொண்டு முந்தின பழைய உத்தரவு எப்படி மாறுதலடையுமென்று சிலர் சந்தேகிக்கக்கூடும். அப்படிச் சந்தேகமடைகிறவர்கள் எபிரேயர் 7-ம் அதிகாரம்: 18-வது வசனத்தையும், ஷை 8-ம் அதிகாரம்: 7, 13-ம் வசனங்களையும் பார்வையிட்டால் புதிய ஏற்பாட்டைக் கொண்டு பழைய ஏற்பாட்டை மாற்றப்பட்டிருக்கிறதென்பதை தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

வந்து கலைத்தசமையத்தில் இபுருஹீம் நபியவர்கள் அவனை ஒவ்வொரு முறையும் சாபமிட்டு, "ஓ சாத்தானே நீ என்முன் நில்லாதே போ" என்று சொல்லி மூன்றுமுறையும் அவனைக் கல்லாலடித்து விரட்டிவிட்டு, தன் மகனைக் குர்பான் கொடுக்கத் துணிந்தார்கள்.

அப்போது அவர் பிள்ளை தகப்பனை நோக்கி "என் பிதாவே, நீர் என்னை என் காலையும், என் கையையும் கட்டி, என்முகத்தைக் குப்புறப்போட்டு, கூர்மையான நீண்ட கத்தியினால் என் பிடரியில் தாங்கள் என்னைப் பார்க்காமல் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு மனந்துணிந்து ஒரே அறுப்பில் அறுத்துவிடுங்கள்" என்று சொல்லிற்று. அவ்வாறே அவர்கள் செய்யும்போது, மறுபடியும் அவர் பிள்ளை அவரை நோக்கி, "என் பிதாவே, தாங்கள் என்னை இவ்விதம் செய்வதினால் எனக்கு சம்மதமில்லாமல் செய்வதுபோல் தோற்றப்படும், ஆகையால் தாங்கள் என் காலையும், கையையும் அவிழ்த்துவிடுங்கள்" என்று சொல்லியது.

அப்பிரகாரமே, அவர்கள் கத்தியை உபயோகித்துப் பார்க்க, பிள்ளை நின்றபடியே நின்றும் அதற்குப் பதிலாக ஒரு ஆடு அறுபட்டுக் கிடக்கவும், கண்டதில் அவர்கள் மனதில் நாம் அறுத்ததில் ஏதேனுங் குற்றங்குறை இருக்கிறதோ என்கிற சந்தேகந் தோன்றி மறுபடியும் அறுத்தார்கள். அறுத்துப் பார்க்கையில், பிள்ளை முன்போலவும் அதற்குப்பதிலாக ஒரு மாடும் அறுப்புண்டு கிடக்கக் கண்டு முன்போலவே திகைத்துச் சந்தேகித்து பின்னும் அறுக்க அப்போதும் ஒரு ஒட்டகம் அறுப்புண்டு கிடக்கக்கண்டு திகைத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்நேரத்தில் ஜிபிரீல் என்கிற காபிரியேல் வந்து "ஓ இபுருஹீமே உம்மை ஆண்டவன் முதலில் அக்கினி குண்டத்தில் தள்ளச் செய்வித்தும், இரண்டாவதாக ஏழையாசகனைப் போல் மலக்கு வந்து உம்முடைய ஆஸ்தியாகிய ஆடுக் கூட்டங்கள் அடங்கலையும் கேட்கச் செய்வித்தும், மூன்றாவதாக உம்முடைய மகனை அறுக்கச் செய்வித்தும் ஆக இம்மூன்று விஷயத்திலும் உம்முடைய மனதைச் சோதனத்தில் இம்மூன்றிலும் நீர் முத்திபெற்று விட்டீர் என்றும், உம்முடைய மகனுக்கிருந்த மூன்று விதமான கத்தும் நிவாரணமாய் விட்டதென்றும், இன்று முதல் எக்காலமும் இந்தச் சம்பவத்தின் ஞாபகக் குறியாக உம்முடைய சந்ததியாரும், உம்மைப் பின்பற்றினவர்களும் இதே தேதியில், இப்பிரகாரமே, ஆட்டையாவது, மாட்டையாவது அல்லது ஒட்டகத்தையாவது குர்பான்கொடுத்து வருவார்களென்று ஆசீர்வதித்தார்."



பின்னும் இபுருஹீம்நபியவர்கள் பராபரனைநோக்கி, "என் ஆண்டவனே, இவ்வுலகத்தில் என்றென்றைக்கும் நிலையாக நிற்கும்படி உனக்கு ஞாபகமாக நான் எதைச் செய்யவேண்டு" மென்று கேட்டதற்குப் பிரதியுத்தரமாக "ஓ இபுருஹீமே உமது ஆதி பிதாவாகிய ஆதம் என்பவர் இம்மக்காவில் என் நாமத்தால் ஒரு ஆலயம் கட்டியிருந்தார். அதை நூஹு என்பவரின் ஜலப்பிரளயத்தின்போது வானத்திற்கு உயர்த்திவிடப்பட்டது? ஆனதினால் நீர் அதைப் புதிப்பித்து மறுபடியும் கட்டு" மென்று உத்தரவு செய்தான்.

அவ்வாறே அவர்களும் அவர்கள் குமாரராகிய இஸ்மாயீல் நபியவர்களுமாக அதைக் கட்டி முடித்து அதற்கு முன்னிருந்த பேராகிய "கஅபத்துல்லா அல்லது பைத்துல்லா" என்று பேரிட்டு, ஆண்டவனை நோக்கி; "ஆண்டவனே உன்னுடைய கற்பனைபிரகாரம் நான் இங்கு ஒரு கட்டிடத்தைக் கட்டி, அதற்கு உன்னுடைய வீடு என்று பெயரிட்டிருக்கிறே" னென்று சொன்னவுடன் "ஓ! இபுருஹீமே இதோ அதனருகிலிருக்கிற அபுல் குபைஸ் மலையின் உச்சத்திலேறி, அஜான் என்கிற ஆண்டவனுடைய நாமத்தை பலத்த சத்தமாய்க் கூவு" மென்றான்.

உடனே அவர் மலையினுச்சத்திலேறி ஆண்டவனே மகா பெரியவன், ஆண்டவனே மகா பெரியவன் என்று நாலுமுறையும், "மெய்யாகவே வணக்கத்திற்கு உரியவன் ஆண்டவனைத் தவிர, வேறிருவரில்லை யென்றே என் பூரணவிசுவாசத்துடனே சாட்சிசொல்லுகிறேனென்று இருமுறையும், மெய்யாகவே நான் ஆண்டவனுடைய தூதனாயிருக்கிறேனென்று இருமுறையும், தொழுகைக்கு வாருங்கள் தொழுகைக்கு வாருங்கள் என்றும்

ஜெயம்பெற வாருங்கள் ஜெயம்பெற வாருங்கள் என்றும், ஆண்டவனே மகாபெரியவன் ஆண்டவனே மகா பெரியவனென்றும், எவ்வணக்கத்திற்கு முரியவன் ஆண்டவனைத்தவிர வேறு யாருமில்லையென்று இருமுறையும் கூவினார்கள்.

அதற்குடனே ஆண்டவன் இபுறுஹீமை நோக்கி "நீர் இப்போது கூவிய கூவுதலைக் கேட்கும் பொருட்டு இது முதல் உலக முடிவு வரையிலும் வெளிப்படக் கூடிய ஆத்துமாக்கள் யாவற்றையும் ஆஜர் படுத்தப்பட்டதென்றும் அவைகளுள் சிலது ஒருதரமும், சிலது இருதரமும், சிலது பல தரமுமாகச் சோபனம் கூறினதாகவென்றும், அவை எத்தனை தரம் சோபனம் கூறினவோ அத்தனை தரமும் மேற்படி ஆத்துமாக்களான ஜனங்கள் உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து இந்த மக்கத்துக்கு வந்து ஒன்றுகூடி ஹஜ்ஜுசெய்து இந்த ஆலயத்தில் என்னைத் தொழுவார்களென்றும் அவரவர்கள் செய்கிற வணக்கத்தின் நன்மை அவரவர்களுக்கும் அவரவர்கள் எல்லோரும்செய்கிற மொத்த வணக்கத்தின் நன்மை உனக்கும் உண்டாகுமென்றும், இதற்கறிகுறியாக உலக முடிவு பரியந்தம் இந்த ஹஜ்ஜியாத்திரையும் இவ்வாலய தொழுகையும் ஒன்றாய் இணைக்கப்பட்டு நிறைவேறிவருமென்றும், முடிவுகாலத்தில் அவ்வாலயத்தை சொர்க்கத்துக்கு உயர்த்தப்படுமென்றும், அதில் என்னை வணங்குகிறவர்களை அது சாக்ஷிகொடுக்குமென்றும், இதே உமக்கும், எனக்கும் இவ்வுலகத்திலிருக்கிற நிலையானநித்திய ஞாபகமாயிருக்குமென்றும் ஆசீர்வதித்தான்."

மேற்சொன்ன தேவ ஆலயத்தை இபுறுஹீம் நபியவர்கள் தங்களாலேயே முழுதும் கட்டிமுடித்தார்களென்பதற்கு அறிகுறியாக தன்னால் தூக்க முடியாத ஒரு பெரிய கல்லை அவர் முழுபலத்தோடு தூக்கினபோது அவரது பாதத்தின் அடிச்சுவடானது தனவரிசை சகிதம் கல்லில் பதிந்துவிட்டது. அக்கல் எந்த இடத்திலிருந்ததோ அவ்விடத்திலேயே இன்றைக்கும் இருப்பதைக் காணலாம்.

அக்கல்லின் பதிப்பைப் பார்க்கும்போது சுமார் ஒருஜான் ஆழமும், ஒன்றரை ஜான் அகலமும், ஒரு முழ நீளம் கொண்



டதாயிருக்கின்றது. ஆதம் நபியவர்கள் இவ்வுலகத்திற்கு வந்தபோது ஒருகல்லை அவ்வுலகத்தின் ஞாபகமாகக் கொண்டுவந்தார்கள். அவர்கள் இவ்வாலயத்தைக் கட்டினபோது அக்கல்லையும் வைத்துக் கட்டியிருந்தார்கள். இவ்வாலயத்தை வானத்துக்கு உயர்த்திய போது, அக்கல் அதனருகிலிருந்த அபுல்குபைஸ் மலையில் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. அக்கல்லை இபுறாஹீம் நபியவர்களும் எடுத்து அதின் வடகிழக்கு மூலையில் மூலைக்கல்லாக வைத்துக் கட்டியிருக்கின்றதை இன்றைக்கும் பார்க்கலாம்.

ஆகவே ஆதம், இபுறுஹீம் நபியவர்களின் மேற்சொன்ன ஆசாரங்களும், ஆதீனங்களும், ஸ்தலங்களும் முஸ்லிம்களுக்குரியே இருந்துவருகிற தென்பதற் கறிகுறியாக வருஷத்திற்கொருதரம் முஸ்லிம்கள் திருமக்காவுக்கு சென்று அங்கிருந்து துல்ஹஜ்ஜுமாதம் 9-ம்தேதியில் அறபாத்மலைக்குப்போய் ஆதம் நபியவர்களும், அவர் மனைவியாரும் எவ்விதமாகப் பாவமன்னிப்பைத் தேடினார்களோ அதேவிதமாய் இவர்களும் மனமுருகி அழுது தொழுது வருந்தி பாவமன்னிப்பைத்தேடி மீண்டு அதே இரவிலேயே ஆதமும், ஹவ்வாவும் படுத்திருந்த மேற்படி மலையின் மேற்கு 5 மைல் தூரத்திலிருக்கும் முஜ்தலிபா என்கிற இடத்தில் ராத்தங்கி, மறுநாளாகிய 10-ம் நாள் காலையில் அதற்கு 5 மயிலுக்கு மேற்கேயுள்ள மீனாவுக்கு வந்து இபுறுஹீம் நபியவர்கள் சாத்தான்மேல் கல் எறிந்து அவனைத் துரத்திவிட்டதற் கறிகுறியாக நிறுத்தப்பட்டுள்ள மூன்று ஞாபக சின்னத்தில் கல்லெறிந்த பின்னர், அதற்கடுத்துள்ள இபுறுஹீம் நபியவர்கள் தம்மகனைக் குர்பான் கொடுத்த இடத்திற்குவந்து, ஆடோ, மாடோ, ஒட்டகமோ, அல்லது இம்மூன்றையுமோ குர்பான் கொடுத்து விட்டு, அதற்கு 6 மயிலுக்கு மேற்கேயுள்ள திருமக்காவுக்கு வந்து அங்கு இபுறுஹீம் நபியவர்களால் கட்டப்பட்டிருக்கிற தேவாலயத்தில் சேர்ந்து 7-முறை அதனைச் சுற்றியானதும், இஸ்மாயீல் நபியின் தாயாராகிய ஹாஜிரா அம்மாள், ஸபா, மருவா மலையில் ஓடியதுபோல 7 முறை தொங்கோட்டமாய் ஓடி முடிவில் அந்தம்மாளுக்

கும், இஸ்மாயீல் நபிக்கும் ஆண்டவனால் கொடுக்கப்பட்ட ஸம் ஸம் கிணற்றண்டை வந்து பாவத்தையும் அழுக்கையும் நீக்குகிற அத்தண்ணீரை யருந்தி அங்கும் பாவமன்னிப்பு கேட்டு இளைப்பாற வேண்டுமென்பதே.

இந்தத் திருஸ்தல ஹஜ்ஜி யாத்திரையோ ஆயுளில் ஒருதரம் குறித்த விடத்திற்கு குறித்தகாலத்தில், குறித்த ஒழுங்கின் படி சென்று பாவமன்னிப்பு தேட வேண்டியது. இக்கிரியைகளால் மனிதனுக்கு இவ்வுலக ஆசையை வெறுத்து, அவ்வுலக யாத்திரையினாசை யுண்டாகி அங்குள்ள மகா ஸ்தலங்களைத் தரிசிக்கிறதினால் இவனுக்குப் பலிதமான ஞானங்களும், பெரியோர்களுடைய ஆசிர்வாதங்களும் உண்டாவதோடு ஹாஜி என்கிற ஒருகீர்த்தியான நற்பெருமையுண்டாகி அப்பேராலே அவன் அநேக நற்கிரியைகளைப் புரிந்து துர்க்கிரியைகளைத் தள்ளுவதற்குப் பெருங்காரணமாக விருக்கிறதினால் அவ்யாத்திரைக்குப் போகச் சக்தியுள்ளவர்கள் போகவேண்டுமென மார்க்கத்தில் வற்புறுத்தி விதி ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது.

ஆனால் அங்குச் செல்ல இயலாதவர்கள் 6-ம் தேதி பகல் நோன்பு வைத்து அன்றிரவில் கண்விழித்து ஆண்டவனிடம் அழுது தொழுது பாவமன்னிப்பைத் தேடிவிட்டு மறுநாள் 10-ம் தேதி முற்பகல் நடுவில் பக்ரீத் என்னும் ஹஜ்ஜி பெருநாள் விசேஷம் கொண்டாடி, அத்தொழுகை தொழுது மீண்டவுடன் தன் சக்திக்குத்தக்கவாறு தன்வீட்டில் ஆட்டையோ, மாட்டையோ ஒட்டகத்தையோ கொர்பானி கொடுத்து தானம் செய்து களிகூர்ந்து வருகிறார்களென்பதை காணலாம்.

இவ்வாறே மேற்படி இபுறாஹீம் நபியவர்களுடைய கொள்கை கிரியைகளைப்பின்பற்றி நடந்துவருகிறதினாலேயே ஒவ்வொரு முஸ்லிமும் தான் முஹம்மது நபியுடைய உம்மத்தினும், இபுறாஹீம் நபியுடைய மில்லத்தினும் உள்ளவனென்று கூறிக்கொள்ளவேண்டியது கடமை. அதாவது முஹம்மது நபியைப்பின் பற்றியும், இபுறாஹீம் நபியின் மார்க்கத்தைக் கைப்பற்றியும் நடந்துவருகிறேன் என்பதே.



அன்றியும் ஆதம் நபியவர்கள் பிரதிதினமும் அதிகாலையில் பொழுது உதயமாகிறதற்கு முன் ஆண்டவனை தொழுது வந்தார்கள். இபுறாஹீம் நபியவர்கள் அக்கினி குண்டத்திலிருந்து மீண்ட நேரமாகிய பிற்பகல் ஆரம்பத்தில் அதற்கு நன்றியறிதலாக அந்நேரத்தில் ஆண்டவனைத் தொழுதார்கள். யூனுஸ் நபியென்கிற யோனா மீன் வயிற்றிலிருந்துவந்த நேரமாகிய பிற்பகல் நடுவில் அதற்கு நன்றியறிதலாக ஆண்டவனைத் தொழுதார்கள்.

ஈஸாநபி அவர்கள் யூதர் கையைவிட்டுத் தப்பித்துக்கொண்டதற்கு நன்றியறிதலாகப் பொழுது அஸ்தமித்தவுடன் தொழுதுவந்தார்கள். மூஸாநபி யவர்களும் அவர்களுடைய கூட்டங்களும் நீலநதியில் மீண்டதும் பிரஅவுனும் அவன் கூட்டங்களும் அதில் மாண்டதும் ஆகிய நன்றியறிதலுக்காக முன்னிரவில் தொழுது வந்தார்கள்.

ஆகவே ஆதம் நபி, இபுறாஹீம் நபி, யூனுஸ்நபி, மூஸாநபி, ஈஸா நபி, இவர்கள் ஒவ்வொருவரும் தொழுது வந்த நேரமாகிய பஜ்ரு, லொஹரு, அஸரு, மகரிபு, இஷா, ஆக இவ்வைந்து தொழுகையையும் பிரதிதினமும் முஸ்லிம்களே தொழுது அனுஷ்டித்து வருகிறார்கள்.

இதினாலேயே முன்னோர்களால் முதுரையாக

“ஆதம் நபியவர் சுபகொருத்தும்
அரச இபுறாஹீம் லுகரொருத்தும்
காதர் யூனுசு அஸரொருத்தும்
நல்லநபி யீசா மகரிபிலும்
வேத நபி மூஸா இஷாவொருத்தும்
விளங்குமாக இவ்வைந்தொருத்தும்
ஏதமணுகாத இறையோன் றன்னை
இறைஞ்சினரென்று உலமாக்களே”

என்று சொல்லியிருக்கிற கவியை சிறுபிள்ளைகள் இன்றும் பாடி வருவதைக் காதாரக் கேட்கலாம். இதை சுமார் முந்நூறு வருஷத்திற்கு முன்னுள்ள “வேதபுராணத்”திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அன்றியும் ஆதம் நபி இறந்ததும், அஃறூ நபி ஜலப்பிரளயத்தை விட்டு மீண்டதும், இபுறாஹீம் நபி அக்கினி குண்டத்தை விட்டு மீண்டதும், மூஸா நபியும், அவர்கள் கூட்டங்களும் நீல் நதியைவிட்டு மீண்டும், பிரஹுன் மாண்டதுமான ஆஷுரா நாளென்கிற முஹர்ரம் மீ 10-ந் தேதியே முஸ்லீம்கள் பெரும் விசேஷ நாளாகக்கொண்டாடி அந்நாளில் நோன்பு வைத்தும் வருகிறார்கள்.

பின்னும் அந்நாளில் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களின் பேரராகிய இமாம் ஹுஸைன் அவர்கள் ஷஹீதாயிருப்பதினாலேயே மேலும் அதை சந்தோஷமாகவும் துக்கமாகவும் கொண்டாடி வருகிறதினால் அந்நியர்களால் அதை முஹர்ரம் பண்டிகையென அழைக்கும்படியாயிற்று.

இப்படியே முன்னுள்ள நபிமார்களுக்குச் சந்தோஷமும் துக்கமும் நேர்ந்தநாட்களில் அவையவைகளுக்கு தக்கவாறுள நற்கிரியைகளை முஸ்லிம்களே விசேஷமாய் நடத்திவருகிறார்கள்.

ஆகையால் இம்முஸ்லிம்கள் மேற்படி நபிமார்களுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு வருகிறார்களென்பது யாரும் சொல்லித் தெரியவேண்டுமோ?

இவைகளினாலேயே, இஸ்ரவேலர்கள் முஸ்லிம்கள் அறுத்த உயிர்ப் பிராணிகளைப் புசிக்கவும், அவர்கள் பெண் பிள்ளைகளை விவாகஞ்செய்கிறதற்காக முஸ்லிம்களுக்குக்கொடுக்கவும், அவர்கள் இவர்கள்வீட்டில் யாதொன்றைப் புசிக்கவும் இசைகிறார்களென்பதே அதற்கறிகுறியான சாக்ஷியாயிருக்கின்றது.

ஆகவே, நீங்கள் மேற்சொன்னவர்களுடைய கோபாக்கினியைவிட்டு நீங்கிக்கொள்ளுகிறது எவ்விதமென்று கேட்கும் விஷயத்தில் அதற்கு மறுமொழியாவது:—நீங்கள் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களை நபியென்று ஏற்றுக் கொள்ளும்பக்ஷத்தில் மேற்சொன்ன இரண்டு கோபாக்கினியை விட்டு நீங்கி, மோக்ஷமடைவீர்களென்று மெய்யாகச்சொல்லலாம்.

இதற்கு மறுமொழியாக நாங்கள் அவ்விதம் முஹம்மது றசூலுல்லா அவர்களை நபியென்று ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் யேசுநாதருடைய கோபாக்கினிக் குட்படுவோமென்று



சந்தேகப்பட்டு ஏதாகிலும் நீங்கள் சொல்லும் பக்ஷத்தில் அதற்குமறுமொழி என்னவென்றால்:—யேசுநாதரோ தனக்குப்பின் ஒருவர் வருவாரென்றும், அவரே தம்மைக்குறித்து சாக்ஷியும் கொடுத்து மகிமைப்படுத்துவாரென்றும், நியாயத்தைக்கொண்டும், நீதியைக்கொண்டும், உலகத்தைக்கண்டித்துஉணர்த்துவாரென்றும், பின் வருகிற சகல காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பாரென்றும், அவரே ஜெயங்கொண்டு உலகமுடிவு பரியந்தம் என் கிரியைகளைக் காத்துக்கொள்வாரென்றும், இருப்புக்கோலால் ஜனங்களை நடத்துவாரென்றும், எதிரிகளோ மண் கலயங்களைப்போல நொறுக்கப் படுவார்களென்றும், அவரே உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமா யிருப்பாரென்றும், அவர் கர்த்தருடைய நாமத்தினால் வந்தபிறகு, என்னுடைய மகிமையை ஜெருசலேம் கூட்டத்தார் அறிந்துகொள்ளுவார்களென்றும், அப்பட்டணத்தார் அவரை ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று சொல்லுவார்களென்றும், அவரே ஜாதிக்கெல்லாம் முதன்மையாயிருப்பாரென்றும், ஜெருசலேம் முதலிய பட்டணங்களை அவர்வசம் ஒப்புவிக்கப் படுமென்றும், அவரை எதிர்த்தவனும், அவரால் எதிர்க்கப்பட்டவனும் நொறுக்கப்படுவானென்றும், அவரே பராபரனைப்போல் பராக்கிரமசாலியாய் வந்து பராபரனின் பரிசுத்த பட்டணங்களாகிய, ஜெருசலேம் முதலியவற்றைக் கைப்பற்றி பரிசுத்தவான்களிடம், ஒப்புவிப்பாரென்றும், நான் பரலோகம் போகிறது, உங்களுக்கு நலமாயிருக்கு மென்றும், நான் போகேனேயாகில் அவர் உங்களிடத்திற்கு வருவாரென்றும், இன்னும் இவைபோல் பலவாறுகச்சொல்லியிருக்கிறாரென்பதை யோவான் 14-ம் அதிகாரம் 15, 16, 17, 25, 26-ம், இன்னும்மேற்படி யோவான் 15-ம் அதிகாரம் 26-ம் இன்னும்மேற்படி யோவான் 16-ம் அதிகாரம் 1முதல் 13 வரையிலும், யோவான், வெளி. 2-ம் அதிகாரம், 26, 27, 28-ம், மத்தேயு 23-ம் அதிகாரம் 37, 38, 39-ம், இன்னும் மத்தேயு 21-ம் அதிகாரம், 42, 43, 44-ம், இன்னும் மாற்கு 12-ம், அதிகாரம் 1 முதல் 9 வரையிலும், மத்தேயு 21-ம் அதிகாரம், 31 முதல் 41-வரை

யிலும், லூக்கா 20-ம் அதிகாரம், 9-முதல் 18 வரையிலும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இப்பிரகாரமே ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் வெளியாகி, ஈஸா ஆறூஹுல்லா, ஈஸா கலீமத்துல்லா, என்று அவரை மகிமைப்படுத்தி சாக்ஷி பகர்ந்தவராகவும் ஜெருசலேம் முதலிய பட்டணங்களைக் கைப்பற்றி அதின் சகல ஆதீனத்தையும், அதிகாரத்தையும் அடைந்தவராகவும் இவர்களை அந்நகரத்தார் ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று சொல்லி புகழப் பட்டவராகவும், இவர்களே ஜனக் கூட்டத்தின்மேல் அதிகாரம் பெற்றவராகவும், இருப்புக்கோலின் ஆஞ்ஞை யுடையவராகவும், எதிரிகளை மண்கலயங்களைப்போல் நொறுக்கினவராகவும், உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயதீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்தினவராகவும், இவரே முன்னுள்ள தீர்க்கதரிசிகளின் கொள்கை கிரியைகளை ஜெயங்கொண்டு முடிவுவரை ஸ்தாபித்தவராகவும், மற்றும் உலகத்தில் ஆகவேண்டிய பின் காரியங்களை அறிவித்தவராகவும் இருப்பதுமன்றி முன்னுள்ள நபிமார்களின் ஆதீனத்தையும், அதிகாரத்தையும் தான் அடைந்தவராகவும், தன்னுடைய ஆதீனத்தையும் அதிகாரத்தையும் யாரும் கைப்பற்ற ஏலாதவிதமாய் அமைத்தவராகவும் இன்னும் இவைபோன்ற அநேக விஷயங்களை உடையவராகவும் மேற்சொன்னவைகளையெல்லாம் நிறைவேற்றியவராகவும் இருப்பதினாலேயே முழு உலக மொத்த ஜனத்தொகையில் நாலபங்குக்கதிகமானோர் அவரைப் பின்பற்றி நடந்துவருகிறார்கள்.

இத்தன்மையான மகத்துவம்வாய்ந்த நபியவர்களை நீங்கள் பின்பற்றும் விஷயத்தில் யேசுநாதர் அவர்களுடைய தயவையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்களென்பதற்கு யாதொரு ஐயமில்லையென்றே உறுதியாகச் சொல்லலாம்.

இதற்கு மறுமொழியாக நீங்கள் யேசு அவர்களே தனக்குப் பின்னால் கள்ள கிறிஸ்துகளும், கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பித் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் காட்டுவார்கள்.



அதை நீங்கள் நம்பாதிருங்கள் என்று யேசு அவர்கள் சொல்லியிருக்கிறார்களென்று மத்தேயு 24ம் அதிகாரம் 4முதல் 26வரை சொல்லப்பட்டிருக்கிறதால் நாங்கள் எப்படி முஹம்மது றசூலுல்லாவை நம்புகிறதென்று கேட்பீர்களானால் அதற்கு மறுமொழியாவது:—

யேசுநாதர் மட்டுமா அவ்விதம்சொல்லியிருக்கிறார். மூஸா நபியும், அவ்வாறே தனக்குப்பின் கள்ளதீர்க்கதரிசிகள் வெளிப்படுவார்களென்று சொல்லியிருப்பதை 5-ம் மோசே 13-ம் அதிகாரம் 2, 3, 4, 5, வசனங்களாலும் இன்னும் பழைய ஏற்பாட்டின் அநேக வசனங்களாலும் தெரிந்து கொள்ளலாம். இதுபோலவே ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களும் தனக்குப்பின் கள்ளதீர்க்க தரிசிகள் வருவார்கள் என்றும், அவர்கள் பற்பலவிதமான அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்களென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

கள்ள தீர்க்கதரிசியென்று அறிந்துகொள்வதற்குப் பெரிய அடையாளம் என்னவென்றால் கூடிய சீக்கிரத்தில் அவனும் அவனுடைய முயற்சியும் அவன் கூட்டத்தார்களும் அடியோடு நாசமடைந்து போவார்கள் என்றே எரேமியா 23-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் கண்டிருக்கிறதுமன்றி மெய்யான விஷயம் பெருகி நாளுக்குநாள் வளர்ந்து கொண்டு வருமென்றும் பொய்யான விஷயம் குறுகி நாளடைவில் அழிந்து நாசமாய்ப் போகுமென்றும், குர்ஆன்ஷரீபு 15-ம் ஜுஸ்வு 9-ம் றுக்கூவிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே யேசு அவர்களுக்குப் பின்னால் கள்ள தீர்க்கதரிசிகள் வெளிப்பட்டிருந்ததாக 2-ம் கொரிந்தியர் 11ம்அதிகாரம் 12, 13ம் வசனங்களிலும், பேதுருவின் 2-ம் நிருபம் 2-ம் அதிகாரம் 1-ம் வசனத்திலும் கண்டிருக்கிறதுமன்றி சிலர் கள்ளதீர்க்கதரிசிகளாய்ப் பற்பல காலங்களில் எழும்பி அதிக சீக்கிரத்தில் அவர்களும் அவர்களை நம்பியிருந்தவர்களும் நாசமாய்ப் போனதாக "ரிச்சார்ட்வாட்ஸன்" என்பவரால் செய்யப்பட்ட பைபில் டிக்ஷனரியின் 862வது பக்கத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது.

இதுபோலவே ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுக்குப்பின் முஸ்லிமே கிச்சாபு, அஸ்வத் முதலானவர்கள் கள்ள தீர்க்கதரிசியாய் எழும்பி அவர்களும் அவர்கள் கூட்டத்தார்களும் அடியோடு நாசமாய்ப் போனார்களென்றும், இனி தஜ்ஜால் என்கிற ஒரு கள்ளதீர்க்கதரிசி வருவானென்றும் அவனும் அவனுடைய கூட்டத்தாரும் அப்படியே நாசமடைவார்களென்றும் "மதாரே ஜுன் நபுவா" முதலான கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

ஆகையினால் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் கள்ள தீர்க்கதரிசியா யிருந்தால் அவர்களும் அவர்களுடைய முயற்சியும் அவர்கள் கூட்டங்களும் அடியோடு நாசமாய்ப் போயிருக்குமல்லவா?

அப்படிக்கில்லாமல் அவர்களும்- அவருடைய முயற்சியும், அவருடைய கூட்டங்களும் நாளுக்கு நாள் வளர்ந்தேறிக் கொண்டுவந்து முழு உலக மொத்த ஜனத்தொகையில் நாலில் ஒரு பாகத்துக்கு அதிகமாகி, சகலதீர்க்கதரிசிகளுடைய ஆதீனமும், அதிகாரமும், பரிசுத்த ஸ்தலங்களும் அவரே கைப்பற்றி, பராபரனின் பரிசுத்தபட்டணங்களாகிய ஜெருசலேம் முதலிய பட்டணங்கள் அவருடைய நீதியினாலேயே அரசாட்சித்தப்பட்டு, நிலைபெற்றும், அவருடைய ஆதீனமும் அதிகாரமும் அவரிலேயே என்றென்றைக்கும் நிலையாக நிலைத்திருப்பதால் இவரைக் கள்ளதீர்க்கதரிசியென்று எப்படிச் சொல்லக்கூடும். ஆகையினால் இவர் மெய்யான தீர்க்கதரிசி யென்று நிச்சயமாகவே சொல்லலாம். என்பதற்கு யாதொரு சந்தேகமுண்டோ?

இத்தன்மையான மகிமைவாய்ந்த கண்கண்ட மெய்யான தீர்க்கதரிசியாகிய முஹம்மது றசூலுல்லா அவர்களை நீங்கள் பின்பற்றிக் கொள்ளுவதினால் யேசுநாதருடைய ஆசீர்வாதத்திற்குட்படுவீர்கள் என்றே மெய்யாகச் சொல்லலாம்.

இதற்கு மறுமொழியாக யேசுநாதர் பேரில் வைத்திருக்கிற விசுவாசத்தை விட்டு நாங்கள் முஸ்லிமாகி விட்டால் யேசுநாதருடைய ஆசீர்வாதத்தை எப்படி அடையலா மென்



று உங்களில் சிலர் கேட்கக்கூடும் அதற்குப் பிரதியுத்தரமாவது:—நாங்களோ ஈஸா நபியவர்களை ஆண்டவன் றூஹுல் குதுஸ் என்கிற பரிசுத்த ஆவியினால் அவதாரமாக்கியிருக்கிறானென்றும் அவர்கள் இவ்வுலகத்தில் பிறந்தவுடன் அவருடைய தாயார்மீது ஜனங்களுக்குச் சந்தேகந் தோன்றி அவர்களைச் சூழ்ந்து கொள்ள, அதற்கு இப்பாலகரால் வாய்திறந்து விடையருளப்பட்டதே போதுமான சாக்ஷியாயிருக்கிறதென்றும், தீர்க்க தரிசிகளிலெல்லாம் முதன்மை வாய்ந்த உலுல் அஜ்ம் என்கிற முஹம்மது, இபுறாஹீம், மூஸா, ஈஸா, நூஹு ஆதம் ஆகிய இவ்வாறு பெரிய தீர்க்கதரிசிகளில் அவர் ஒருவராயிருக்கிறாரென்றும், அவர் யூதர் சொல்கிற வடுவை விட்டும் பரிசுத்தமானவரென்றும், அவருக்கு இஞ்சீல் வேதத்தைக் கொடுக்கப்பட்டதென்றும், அவர் அதை ஜனங்களுக்குப் போதித்தாரென்றும், அவர் அநேக அற்புதங்களைச் செய்தாரென்றும், முன்னுள்ள தீர்க்கதரிசிகள் போதித்ததுபோல் இவரும் பராபரன் ஒருவன் அவனுக்கு இணைதுணை ஆதி அந்தம், மாதா பிதா; முதலியதுகிடையாது; ஆண்டவனுக்கு யாரும் இணையில்லை, எதுவும் ஆண்டவனுக்கு நிகரில்லை; நான் ஆண்டவனால் அனுப்பப்பட்ட அவனுடைய அடிமையாகிய தீர்க்கதரிசி; என் மார்க்கத்தை நீங்கள் கைக்கொண்டு பின்பற்றி நடவுங்கள்; நான் முன்னுள்ள மார்க்கங்களையும் தீர்க்கதரிசிகளையும், மெய்யாக்கி வைத்தேன்; எனக்குப்பின் அஹம்மத் என்கிற நாமத்தையுடைய ஒரு தீர்க்கதரிசி வருவாரென்று நான் உங்களுக்கு முன் அறிவிப்பு செய்கிறேன் என்று ஜனங்களுக்குப் பலவாறுய்ப் போதித்து வந்தாரென்றும் அவருக்கு ஹவாரியூன் என்கிற அப்போஸ்தலர்கள் கொடுக்கப் பட்டிருந்தார்களென்றும், அவர்களும் பரிசுத்தவான்களா யிருந்தார்களென்றும், முடிவாக யூதர்களுடைய துன்பத்தை சகிக்கமாட்டாமல் பராபரனை நோக்கி என்னை வானத்துக்கு உயர்த்திக் கொள்ளும் என்று பிரார்த்தித்தாரென்றும் அப்பிரகாரமே அவரை வானலோகத்துக்கு அழைத்துக் கொள்ளப்பட்டதென்றும், இனி அவர்கள் இவ்வுலகத்திற்கு மீண்டுவந்து இந்த இஸ்லாம் மார்க்கத்தையே போதி-

ந்து வருவாரென்றும், கடைசியில் மதினாத்துக்குவந்து மரணமடைந்து எங்கள் நபியுடைய கோரிக்குள் அடக்கப் படுவாரென்றும், அதற்காகவே அக்கோரிக்குள் இடம் வைக்கப்பட்டிருக்கிறதென்றும், விசுவாசித்துக்கொண்டு வருகிறோம்.

பின்னும் அவர்களை நாங்கள் ஈஸா றூஹுல்லா, ஈஸா கலிமத்துல்லா என்று பலவாறுய்த் துதித்து மகிமைப்படுத்தி சாட்சி பகர்ந்து அவர்களுடைய நாமத்தையும் அவர்கள் தாயாரின் நாமத்தையும் வெகு ஆனந்தத்தோடு எங்களுக்குப் பேர் நாமமாகச் சூட்டிக்கொண்டு அவர்களை மகத்துவப்படுத்திக் கொண்டு வருவதுமன்றி யாராவது அவரை நிந்திக்கும் விஷயத்தில் எங்கள் உயிரைப் பெரிதாய் எண்ணுமல் அவருடைய புகழையே பெரிதாக எண்ணத் துணிகிறதினால் அவர்களுடைய ஆசீர்வாதத்தை நாங்கள் பெற்றுக் கொள்ளுகிறதற்கு யாதொரு சந்தேகமில்லை.

ஆகையால், நீங்கள் எங்கள் மார்க்கத்தில் திரும்பும் விஷயத்தில் நீங்களும் அவருடைய ஆசீர்வாதத்தை யடைந்து கொள்வீர்களென்பதற்குத் தடையுண்டோ? கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ?

இத்தன்மையான எங்கள் கொள்கையை நீங்கள் ஒப்புக்கொண்டு ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை யானால் யேசுநாதர் சொல்லியிருக்கிற தீர்க்க தரிசனத்திற்கு நீங்கள் முற்றும் மாறுபாடு செய்த குற்றத்திற் குட்படுவீர்களென்று மெய்யாகவே சொல்லலாம்.

அதெப்படி யென்று கேட்பீர்களானால் அதற்குப் பிரதி யுத்தரமாவது:—எவன் தீர்க்க தரிசன வார்த்தைகளை மறுதலித்தாலோ அவன் ஜீவ புஸ்தகத்திலிருந்து பேர் எடுபடுவதோடு பரிசுத்தப் பட்டணங்களிலுள்ள பங்கை அவனைவிட்டு நீக்கப்படுமென்றும், யேசுநாதர் சொல்லியிருக்கிறதாக யோவான் 22-ம் அதிகாரம்: 19-ம் வசனத்திலும், நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளைச் செய்யத்தக்க விதமாய்ச்செய்யாவிட்டால் சபிக்கப்பட்டுப் போவானென்றும் அவர்



சொல்லியிருக்கிறதாகக் கலாத்தியர் 3-ம் அதிகாரம் 10ம் வசனத்திலும் கண்டிருக்கிறதுமன்றி, இதற்கிணங்கவே 5ம்மோசே 27ம் அதிகாரம்: 28ம் வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதற்குறுதியாகவே முஹம்மது றசூலுல்லா அவர்களின் தீர்க்கதரிசனத்தை மறுதலித்தவர்கள் பராபரன் பரிசுத்த பட்டணங்களாகிய ஜெருசலேம் முதலிய பட்டணங்களையிழந்தும், சங்காரிக்கப்பட்டும், சபிக்கப்பட்டும் போனார்களென்பதே அதற்குறுதியான உலகமறிந்த சாக்ஷியாயிருக்கின்றது.

ஓ! சிநேகிதர்களே நான்மேற்சொன்னபடி நீங்கள் முஹம்மது றசூலுல்லா அவர்களை ஏற்றுக்கொள்வீர்களானால் அவர்களுடைய கோபாக்கினையும், யேசுநாதருடைய கோபாக்கினையும், முன்னுள்ள தீர்க்கதரிசிகளுடைய கோபாக்கினையும் விட்டு நீங்கி, நீங்கள் மோக்ஷமடைகிறதுமன்றி, இவ்வுலகத்தில் நாம் எல்லோரும் சகோதர தத்துவமும், ஜாதி பேதம், மதபேத மன்னியில் ஏக குடும்பத்தைப் போல் ஒன்றுபட்டு கொள்வினை கொடுப்பினை பந்தி போஜன முதலிய சகல காரியங்களிலும் ஒற்றுமைப்பட்டு இவ்வுலகத்தில் வாழ்ந்தும் ஆக இகபர சௌபாக்கியங்களையும் பெற்று வாழ்ந்து கொண்டு வரலாமல்லவா?

இவ்வண்ணமே நாமெல்லோரும் ஒன்றுபட்டு நடந்து வருவோமானால், நம்மிலுள்ள பற்பல வகுப்பினர்க்குள்ள பேதா பேதங்கள் நிவாரணமாவதோடு நமக்கெதிரில் மற்ற அந்நிய மதஸ்தர்களும் ஒரு துரும்புக்குச் சமானமாவதுமன்றி, நாளடைவில் அவர்களும் நம்முடன் ஐக்யப்பட்டு ஒத்து வாழ்வார்களென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

ஆகவே முழு உலக ஜனங்களாகிய நாமெல்லோரும் ஓரே மதஸ்தரான இபுறாஹீம் நபியவர்களின் கொள்கை, கிரியை நடப்பு முதலிய அவர்களது ஆச்சாரத்தைப் பின்பற்றி ஓரே கோத்திரத்தாராய் விளங்கி வருவோமல்லவா?

இத்தகையான நன்மையை நாம் அடைவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டு, எவ்வளவு பொருளைச் செலவு செய்து, எவ்வளவு உயிரைப்பறிகொடுத்து, எவ்வளவு காலம் கஷ்டப்பட்டா

ஆம் ஆகுமா? இதற்குமுன் கோடி கோடியான ஜனங்கள் இது விஷயத்தில் கஷ்டப்பட்டு மாண்டுபோனார்களல்லவா?

அப்பேர்ப்பட்ட மகா அரிதிலும் பெரிதான பாரதூரமாகிய விஷயம் ஒரு சொல் உங்கள் நாவில் வந்து விடுமானால் இத்தகையான பெரியவிஷயம் வெகு எளிதில் நிறைவேறிவிடக் கூடுமென்பதற்கு யாதொரு ஐயமில்லையென்றேசொல்லலாம். அச்சொல்லாவது "முஹம்மது றசூலுல்லா" என்கிற திருவாக்கென்பதே.

இத்தன்மையாகிய மகத்துவமான ஒரு திருவார்த்தை உங்கள் நாவில் வரவில்லையானால் முழு உலக எல்லா ஜனங்களும் ஒற்றுமைப்பட்டு ஓரே மதஸ்தராய் நடக்கத் தவறுகிறதாயிருக்கிற தின்மைகளெல்லாம் உங்களையே சாருமென்று சொல்லத் தகுந்ததாயிருக்கின்றது. ஆண்டவன் அப்படி உங்களை ஆக்காமல் ஷை திருவாக்கென்னும் ஒருவாக்கு உங்கள்வாயில்வந்து அதினுண்டாகும் சகலநன்மைகளையும் நீங்கள் அடைந்துகொள்ளும்பொருட்டு நற்கிருபை புரிந்தருள்வானாக ஆமீன்.

இதற்கு நீங்கள் மறுமொழியாக முஹம்மது றசூலுல்லா என்கிற வார்த்தை எங்கள் நாவில் வந்து விடுமேயானால் முழு உலக மொத்த ஜனங்களும் ஒன்றுபட்டு ஓரேமார்க்கத்தினராகி விடுவார்களென்றும், அதற்கு நாங்களே காரணமாயிருக்கிறதினால் அந்நன்மைகளை, நாங்களே அடைவோமென்றும், அவ்வார்த்தை எங்கள் வாயில் வரவில்லையானால் முழு உலக மொத்த ஜனங்களும் ஓரே மார்க்கத்தினராய் ஆகமாட்டார்களென்றும் அதனால் ஏற்படும் தீமைகளெல்லாம் எங்களையே சாரத்தக்கதாயிருக்குமென்று எவ்விதம் சொல்லக் கூடுமென்று கேட்கும் பக்ஷத்தில் அதற்கு மறுமொழி சொல்லுகிறேன் நீங்கள் ஆற அமரக்கேட்டுத் தீர்க்காலோசனை செய்துபாருங்கள்.

ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் நஸாராக்களை நோக்கித் திருவாய்மலர்ந்தருளினதாவது:— "எனது பாட்டனாராகிய இபுறாஹீம் நபியவர்களுடைய மூத்த புத்திரர் இஸ்மாயீல் நபியின் சந்ததியாராகிய அரபியர்களும் இரண்டாவது புத்திரர் இஸ்ஹாக்கு நபியவர்களின் சந்ததிகளாகிய இஸ்ரவேலர்களும் மனிதருக்குள் இரண்டு நேத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது போலவே இவ்வுலகத்தின் கண் இரண்டு பெரிய நேத்திரங்களாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர். எனாவிருத்தியில் ஷை இரு கூட்டத்தினருக்கிடையில் சகோதரதத்துவம் பலப்படாமல் சிற்சில காரியங்களால் அவர்கள் வேறுபட்டு பேதமடைந்து கொண்டு வருகிறார்கள். இதனுடனே நீங்கள் இபுறாஹீம் நபியுடைய கொள்கை கிரிகைகளுக்கு முற்றும் விரோதமாய் விசுவாசித்தும் நடந்தும் வருகிறதால், பின்னும் அவர்களிரு கூட்டத்தாரின் வேற்றுமை அதிகரிக்கின்றது. ஆகையினாலேயே அல்லாஹுத்தஆலா என்னை அதைநிவாரணம் செய்யும்படி கடைசிநபியாக அனுப்பி என்னுடைய கொள்கை கிரியை, நடப்பு முதலிய யாவற்றும், இபுறாஹீம்நபியையே பின்பற்றி நடக்கும்பொருட்டு ஏவியிருக்கிறான். ஆகையால் நீங்கள் என் வார்த்தைக்கிணங்கி அதைப் பின்பற்றி நடப்பீர்களேயானால் ஷை அரபியர்களும், இஸ்ரவேலர்களும் ஒன்று சேர்வதோடு, நீங்களும் அவர்களுடன் சகோதரத்துவமானவர்களாகவும் எல்லா நபிமார்களுக்கும் நீங்கள் பொருத்தமானவர்களாகவும் பரிசுத்த இஸ்லாமார்க்க முஸ்லிம்களாகவும் இருப்பீர்கள்" என்பதே.



இத்திருப்போதனையை அவர்கள் கேட்டவுடன் அவையாவும் அவர்களுக்கு ஞாயமாய்த் தோன்றினதும் உடனே அவர்கள் கலிமாசொல்லி முஸ்லிம் ஆகிவிட்டனர்.

இவ்விஷயம் அங்குப் பரவவே நாளடைவில் அங்குள்ள சகல நஸாராக்களும், யஹூதியர்களும், ஒன்றுக்குப் பின்னொன்றாய் முஸ்லிம் ஆகிவிட்டார்கள்.

ஆகவே மதீனத்திலுள்ளவர்களும் அதின் சுற்றுப்பக்கத்திலுள்ள அனைவரும் ஓரே கூட்டத்தினராகவும், ஓரே மதஸ்தினராகவும், ஓரே சகோதர தத்துவமாகவும் விளங்கிவந்தனர்.

இந்த நன்மையை முழு உலகத்தார்களுக்கும் சொல்லி அவர்களையும் இந்த இஸ்லாம் மார்க்கத்தில் நுழைக்கவேண்டுமென்று ஒவ்வொருவரும் மனந்துணிந்து இது விஷயத்தில் தங்கள் உயிர்களையும், பொருள்களையும், பெண்டீர் பிள்ளைகளையும்

பெரிதாய் என்றால் இதையே பெரிதாய் நினைத்து ஜெயித்தால் காஸி, செத்தால் ஷஹீது என்று கருதி, தான் தானாகவே துணிந்து முன் வந்து ஹஜரத் நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களிடம் நாங்கள் உலகத்தின் பலபாகங்களிலும் சென்று இந்த ஒற்றுமையான இஸ்லாம் மார்க்கத்தைப் போதிக்க விடைதர வேண்டுமென்று கேட்டார்கள்.

அதற்கு நபியவர்களும் ஆண்டவன் கட்டளை பிரகாரம் இணங்கி, சிலரை ஷாம் இராஜ்ஜியத்திற்கும், சிலரை முழு அரபியாவுக்கும், சிலரை, யமனுக்கும் இப்படியே உலகத்தின் பல பாகங்களுக்கும் அனுப்பிவைத்தார்கள். அவர்களெல்லோரும் ஆங்காங்கு சென்று ஜனங்களுக்கு நயத்தாலும் பயத்தாலும் இவ்வைக்கிய மார்க்கத்தைப்போதித்தார்கள். இப்போதனையால் அநேகர் அதைத்தழுவியும் சிலதுஷ்டர்கள் இவர்களைக் கொலை செய்து இவர்கள் முயற்சிகளை அடியோடு தொலைத்துவிடவேண்டுமென்றும் எத்தனித்தபோது அவர்களைச் சங்காரித்தும் இவ்வைக்கிய இஸ்லாம் மார்க்கத்தைப் பரவப்பண்ண வேண்டுமென்று பின்னும் அதிகமான வீரத்தோடு மார்க்கத்தைப் பரவப்பண்ணி முழு அரபியாவையும் முழு யமனையும் ஷாம் இராச்சியத்தில் தபூக்கு வரையும் வெற்றியடைந்து ஏராளமாய் உலகத்தின் பல பாகங்களிலும்பரவி இஸ்லாம் மார்க்கம் என்றென்றைக்கும் நிலையாக நிற்கும்படி நிலைநாட்டி முற்றி பெற்றபின்னர் ஹஜரத் நபியவர்களோ அவ்வுலகவாழ்வில் சேர்ந்தார்கள்.

அப்பால் 1-ம் கலீபாவாகிய அபூபக்கர் அவர்கள் ஷாம்ராஜ்ஜியத்தில் தமஸ்கு வரையும் வெற்றியடைந்தார்கள். அப்பால் 2-ம் கலீபாவாகிய உமர் அவர்களை ஜெருசலேம் முதலிய பரிசுத்த பட்டணத்தார் அங்கு வருத்தி ஜெருசலேமின் சகல ஆதீனத்தையும் அதிகாரத்தையும் இவர்களிடத்தில் ஒப்படைத்தார்கள். ஆகவே இவர்கள் காலத்திலேயே சிரியாவிலும், ஆப்பிரிக்காவிலும், பாபிலோனியாவிலும், பர்ஷியா, ஆப்கானிஸ்தான் முதலிய முழு உலகத்திலும் இவ்வைக்கிய இஸ்லாம் மார்க்கம் ஏராளமாய்ப் பரவியது.

அவர்களுக்குப்பின்னர் இவர்களுக்குள்ளேயே சில பேதாபேதங்கள் நேரிட்டபடியால், இதை இவர்கள் நிவாரணம் செய்



யத் துணிந்தார்களே யல்லாது அன்னியர்களை மார்க்கத்திலழைக்கத் துணியவில்லை.

ஆயினும் இஸ்லாம் மார்க்கம் ஐக்கியத்தை யுடையதாயிருப்பதினாலேயே அதிக சீக்கிரத்தில் முழு இந்தியாவிலும், முழு சீனாவிலும், முழுருஷியாவிலும், முழு யூரோப்பிலும், முழு ஆப்பிரிக்காவிலும் அக்காலங்களிலேஏராளமாய் ஷை மார்க்கம் பரவினதுமன்றி சிலோன், ஜாவா, மலேயாமுதலானஎல்லா தீவுகளிலும், அதிக தீவிரமாய் பரவி வளர்ந்தோங்கியும், வளர்ந்தோங்கிக்கொண்டும் வருகின்றது.

இதற்கறிகுறியாக ஆப்பிரிக்கா கண்டத்தில் சஞ்சரிக்கிற கோடி கணக்கான மலைப்பிராந்தியர்களுக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் போதித் தழைக்கிறதற்காக கோடி கணக்கான திரவியங்களைச்செலவுசெய்து, ஆயிரக்கணக்கான பாதிரிமார்களை அங்கு அனுப்பி எவ்வளவோ உயிர்களைப்பலிகொடுத்து எவ்வளவோ முயற்சிகள் செய்ததில் கிறிஸ்து மதத்தைத் தழுவினவர்கள் ஆயிரக் கணக்காகவும், இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினவர்கள் பத்து லக்ஷக் கணக்காகவும், ஷை மலைப்பிராந்திகள் திரும்பிக்கொண்டு வருகிறார்களென்பது உலகமறிந்த விஷயமாயிருப்பதோடு லண்டன் மிஷினெரி சபையின் ரிப்போர்ட் மூலமாயும் வெகு தெளிவாய் தெரிந்து கொள்ளலாம்.

அன்றியும் சமீபத்தில் பிரான்ஸில் கூடிய மார்க்க கான்பரென்ஸில் நாம் எவ்வளவோ பொருள்களைச் செலவு செய்தும், எத்தனையோ பேர்களைப் பலிகொடுத்தும், எவ்வளவோ முயற்சிகள் செய்தும் வருகிறதினால் நமது மார்க்கத்தைக் கைப்பற்றுகிறவர்கள் கொஞ்சமாகவும், யாதொரு தூண்டுதலும், முயற்சியும், பொருட்செலவும், உயிர்ச்சேதமும் இல்லாமல் இஸ்லாம் மார்க்கம் பரவுகிறது அதிகமாகவு மிருக்கிறதைக் கவனித்தால் மிகவும் விசனத்தைத் தருகிறதென்று ஒரு பாதிரியார் பிரசங்கம் பண்ணி யிருக்கிறாரென்பதை அந்தக் கான்பரென்ஸின் ரிப்போர்ட்டினாலே அறியலாம்.

மேலும் பாதிரிமார்கள் கிறிஸ்தவ மார்க்கத்தைப் போதிக்கச் சீனாவுக்குச்சென்றபோது, லக்ஷகணக்கான சீனர்கள் முஸ்

லிமாகிக் கொண்டு வந்ததோடு ஷை பாதிரிமார்களைப் பலவாறாய்த் துன்பப்படுத்தியும், அடித்தும், கொலைசெய்தும், துரத்தி விட்டார்களென்பதை இன்றைக்கும் நாம் அங்குப்பிரத்தியட்சமாய்க் காணலாம்.

பின்னும் 1906-ம்வருஷம் ருஷியாவில் மார்க்க சுயார்ஜிதம் கொடுத்தவுடனே முன் வற்புறுத்தி முஸ்லிம்களைக் கிறிஸ்துவர்களாக்கப்பட்டிருந்தவர்களும், மற்றும் பற்பல மதஸ்தர்களும் ஆயிரக் கணக்காகவும், லக்ஷக்கணக்காகவும், பத்துலக்ஷ கணக்காகவும், அவ்வருஷத்துக் குள்ளாகவே திடீரென்று இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து விட்டார்களென்பதின் முழு விபரத்தை ஷை வருஷத்திய மிஸ்றில் தினந்தோறும்வெளியாகிற "அல்லிவா, அல்முஐயத்" என்னும் அரபி பத்திரிகைகளாலும், லாகூரில் பிரசுரமாகிற "வத்தன், மதராஸில் வெளியாகிற "ஷம்ஸுல் அக்பார்" முதலிய உருது பத்திரிகைகளாலும் "முஹம்மடன்" (மதராஸ்) முதலிய இங்கிலீஷ் பத்திரிகைகளாலும் "ஷொலவுல் இஸ்லாம்" (மதராஸ்) முதலிய தமிழ்ப் பத்திரிகைகளாலும் வெகு தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம்.

அன்றியும் 1906ம் வருஷம் ஜூன்மாதம் ஜப்பான் ராஜதானி பட்டணமாகிய டோக்கியோவில் அரசர்முன்னிலையில்கூடிய மார்க்க கான்பரென்ஸில் அரசரும், பிரதமகுருவும், மந்திரியும் இஸ்லாம் மார்க்கமே உலக நடைக்கு ஐக்கியத்தை யுடையதாய் இருக்கிறதென்று தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்தியிருப்பதோடு துருக்கியிலிருந்தும், காபூலிலிருந்தும் சென்றிருந்த உலமாக்களை உற்சாகப்படுத்தி இவ்வைக்கிய இஸ்லாம்மார்க்கத்தை ஜனங்களுக்குப் போதிக்கவேண்டுமென்றும் அப்படிப் போதித்தால் முழு ஜப்பானிலும் 20 வருஷத்திற் குள்ளாக இஸ்லாம் மார்க்க நன்மை பரவிவிடுமென்பது ஷை ராஜையாரின் நோக்கமா யிருக்கிறதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்களென்றும் ஷை உலமாக்கள் அங்கு இஸ்லாம் மார்க்கத்தைப் போதித்து அதனால் அநேகர் இஸ்லாமாகிக்கொண்டு வருகிறார்க ளென்றும் மிஸ்றில் பிரசுரமாகும் தினசரி அரபி பத்திரிகையாகிய "அல்லிவா" 1906-ம் வருஷம் ஜூன் மாதம்



23ந்தேதி பத்திரிகையிலும், மே மாதம் 27ந்தேதி ஷை பத்திரிகையிலும், ஜூலை மாதம் 16ந்தேதிய "அல்மு அய்யத்" பத்திரிகையிலும், ஜூலை மாதம் 30ந்தேதிய ஷை பத்திரிகையிலும், ஆக மே, ஜூன், ஜூலை இம்மூன்றுமாதத்தில் வெளியாகிய ஷை பத்திரிகைகளாலும் மற்றுமுள்ள பத்திரிகைகளாலும் வெகு தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இதற்குச் சாட்சியாகவே ஜப்பானிலுள்ள முஸ்லிம்கள் ஒன்றுகூடி இங்கிலீஷும், அதுக்கும் கலந்து "முஸ்லிம் பிராட்டர்னிட்டி" என்னும் முஸ்லிம் சகோதரத்துவ பத்திரிகையொன்றை ஆரம்பித்துப் பிரசுரித்து வருகிறார்களென்றும், டோக்கியோ ஸர்வகலாசாலையின் அதிகாரிகளால் முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணும்படியாக அனுமதி கொடுத்திருக்கிறார்களென்றும், அதின்பேரில் இந்திய முஸ்லிம் ஒருவராலும், மிஸ்று முஸ்லிம் ஒருவராலும், பிரசங்கம் செய்யப்பட்டு வருகிறதென்றும் 1910ம் வருஷம் ஜூன் மாதம் 1-ந்தேதி வந்த லண்டன் தந்தியால் அறிந்துகொள்ளலாம்.

பின்னும் 1910-ம்வருஷம் மே மாதத்தில் லண்டன் நகரத்தில் மான்செஸ்டர் பிஷப்பவர்கள் பிரசங்கம் புரிந்தபோது, தென் ருஷியா, ஆப்பிரிக்கா, மலேயா, சீனா இங்கெல்லாம் இஸ்லாம் மார்க்கமானது வெகு பரபரப்பாக முன்னேறி வருகிறதென்றும், ஆப்பிரிக்காவானது தனது இருளான கொள்கையிலிருந்து மனுஷீக தன்மையில் நல்ல விருத்தியாகிறதென்றும் ஆப்பிரிக்காவில் இருபது கோடி ஜனங்கள்போல மகாமூடத் தன்மையான காட்டுமிராண்டி தனத்திலிருந்து இப்போது உலகத்தின் பெரிய மார்க்கங்களில் ஒன்றைக் கைப்பற்றினார்களென்றும், அவர்களுடைய விருப்பமெல்லாம் இஸ்லாமிலும், கிறிஸ்துவ மார்க்கத்திலும் இருக்கிறதென்றும், ஆயினும் தற்சமயம் அங்குள்ள மிகுதியான ஜனங்களுடைய கொள்கையெல்லாம் இஸ்லாம் மார்க்கத்திலேயே இருக்கிறதென்று கூறியிருக்கிறார். இதை ஷை மாதத்திய கடைசி வாரத்தின் "மதராஸ் மெயில்" முதலிய பத்திரிகைகள் மூலமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் ஜனங்கள் அறியாமையினாலேயோ, மூடத்திமிருலேயோ, இஸ்லாம் மார்க்கத்தை ஏராளமாய்க் கைக்கொண்டு வருகிறார்களென்று சில நண்பர்கள் நினைக்கக்கூடும்.

இஸ்லாம்மார்க்கமோ கடலில் வந்துவிழும் அசுத்தஜலங்களை அது எப்படித்தன்னைப்போல் சுத்தமாக்கித் தன்னுடன் சேர்த்துக் கொள்ளுகிறதோ அதுபோலத் தன்னிடத்தில் வந்தவனையும், ஒன்றுசேர்த்து சுத்தமாக்கிக் கொள்ளவேண்டுமென்று போதிக்கின்றது. அப்பிரகாரமே முஸ்லிம்களும் தன்னிற் சேர்ந்தவனைத் தன்னைப் போலாக்கி, அவன் காலில் தைக்கிற முள்ளை, அவர்கள் கண்களில் தைக்கிறது போல் பாவித்து, தன்னைவிட அவர்களை மேலாக மதித்து, ஒன்றாய்வைத்துப் பந்திபோஜனம் செய்து, தன்னுடைய பெண்களை அவர்களுக்கு விவாகம் செய்து கொடுத்து பாதுகாத்து வருவதோடு எல்லா நபிமார்களின் ஆசீர்வாதமும், அவர்களின் கொள்கை ஆசாரங்களும், அவர்களின் பரிசுத்த ஸ்தலங்களின் சுதந்தரங்களும் இவர்களிலிருப்பதினாலேயே ஜனங்கள் கும்பல்கும்பலாய் இஸ்லாம் மார்க்கத்தைக் கைப்பற்றி, முஸ்லிம் ஆகிக் கொண்டு வருகிறார்களென்பது உலகமறிந்த விஷயமே.

ஆகையினாலே பொதுவாகக் கவனித்துப் பார்த்தால் முஸ்லிம்களோ முஹம்மது, இபுறாஹீம், மூஸா, ஈஸா, நூஹு, ஆதம், தாவூது ஆகிய இந்தஏழுபெரிய நபிகளையும் இம்முறைப்படியே ஒன்று போல் விசுவாசித்து, எள்ளளவும் அவர்களுடைய ஆசாரத்தில் பேதகமில்லாமல் நடந்து, அவர்களுடைய பரிசுத்த ஸ்தலங்களின் சுதந்திரங்களையடைந்து, ஒருவருக்கொருவர் ஒற்றுமைப்பட்டு நடந்துவருகிறதினால் ஜனங்கள் யாதொரு தூண்டுதலில்லாமல் ஏராளமாய் இஸ்லா மார்க்கத்தைக் கைக்கொண்டு அதிலேயே பாரம்பரையாய் நிலைத்து வருகிறார்களென்றும்; கிறிஸ்தவர்களோ யேசுநாதரை மட்டும் எல்லா நபிமார்களைவிட அதிக விசேஷமாய் மதித்தும், பராபரனை இவருக்கும் இவரை பராபரனுக்கும் ஒப்பிட்டு விசுவாசித்தும், அவருக்கு முன்னிருந்த நபிமார்களின் ஆசாரத்தை யடியோடு தள்ளிவிட்டும், அவர்களுடைய பரிசுத்த ஸ்தலங்களின் சுதந்தரங்களை



இழந்துவிட்டும், இவர்களில் ஒருவருக்கொருவர் வேற்றுமைப்பட்டும் இருப்பதினாலேயே எவ்வளவு முயற்சி செய்து ஜனங்களை அழைத்தபோதிலும், இவர்கள் மார்க்கத்தில் திரும்புகிறவர்கள் சிலராகவும், இவர்களிலும் சிலர்பாரம்பரையாய் அதிலேயே நீடிகாலம் நிலையாமல், மறுபடியும் திரும்பிவிடுகிறதாகவும் இருக்கிறது சகஜமென்றும், அறிவையும் மார்க்க வரம்பையும் கடந்த ஐரோப்பிய நீதி மான்கள் உள்ளது உள்ளபடியே அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். இதன் விபரத்தை "ஷம்சுல் இஸ்லாம்" முதலிய கிரந்தங்களினால் தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் சில பொறாமைக்காரர்கள் கத்தியெடுத்து யுத்தம்செய்ததினால் இஸ்லாம்மார்க்கம்கூடிய சீக்கிரத்தில் பரவியதென்று நினைக்கக்கூடும். மோசே, தாவீது, யூஷாமுதலிய தீர்க்கதரிசிகள் பலவருஷங்களாக அஞ்ஞானிகளோடு கத்தியெடுத்து வெகுகொடிய யுத்தம்செய்து அவர்கள் உயிர்களையும், பொருள்களையும், நாசப்படுத்தி, அவர்கள் பெண்டு பிள்ளைகளையும், சொத்துக்களையும் சூறையாடியிருக்கிறார்களாம் என்பதை 4ம் மோசே 21ம் அதிகாரம் 6-ஆம், ஷை மோசே 31-ம் அதிகாரத்திலும், இன்னும் ஷை மோசே 33-ம்அதிகாரம் 51, 52, 53உம், இரண்டாம் மோசே 34ம் அதிகாரம் 13உம் 5-ம் மோசே 12-ம் அதிகாரம் 1, 2, 3உம், இதுபோலவே சங்கீதம் முதலிய பழைய ஏற்பாட்டின் அநேக வசனங்களிலும் தெரிந்து கொள்ளலாம்.

அவர்களுடையமார்க்கமோ ஆயிரக்கணக்கானவருஷங்கள் சென்றிருந்தும் அது என் உலகத்தில் ஏராளமாய்ப்பெருகாமல் போயிற்று. அதுவே இஸ்லாம் மார்க்கம் யுத்தத்தினால் பரவவில்லையென்றும், உண்மையினாலும், தேவவாக்கு சத்தியத்தினாலும், ஐக்கியத்தினாலும் பரவிக்கொண்டு வருகிறதென்றும் இதைக் கேட்கும் கனவான்கள் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வார்களென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

இத்தன்மையான சத்தி[illegible] பரவவிடாமல் சில கிறிஸ்தவர்களோ, முஹம்மது நபி பாவியாயிருக்கிறாரென்றும், அவர் பல ஸ்திரீகளை விவாகம் செய்து கொண்டிருந்தாரென்றும், அவர் அற்புதங்களைச் செய்யவில்லையென்றும், யேசுநாதரோ பாவமில்

லாத பரிசுத்தராயிருந்தா ரென்றும், உலக இன்பத்தை வெறுத்தவரா யிருந்தாரென்றும், அநேக அற்புதங்களைச் செய்தாரென்றும் பலவாறாய் பைபிளைக்கொண்டும், குறுஆனைக்கொண்டும் தங்கள் மனம்போன போக்காய் இருமதஸ்தரும் ஐக்யப்படாதவண்ணம் பிரசங்கித்தும், புஸ்தகங்களை இயற்றியும் வருகிறார்கள்.

இதற்குமாறாக சில முஸ்லிம்களோ முஹம்மது நபியவர்கள் எல்லாரையும் விடச் சிறந்த பாவமில்லாத பரிசுத்தவாளரென்றும், அவர்கள் செய்திருக்கிற அற்புதத்தைப்போல் உலகந்தோன்றிய நாள்முதலாய் இதுவரை ஒருவரும் அவ்வளவு அற்புதம் செய்யவில்லையென்றும், அவர்கள் இகபரசௌபாக்கியத்திலும் முதன்மை வாய்ந்தவராயிருக்கிறதற் கறிகுறியாகவே இவ்வுலகத்திலும் சகல பாக்கியங்களிலும் யாதொரு குறைவின்றி இருந்தாரென்றும், குறு ஆனைக்கொண்டும், பைபிளைக் கொண்டும் வகை வகையாய் ஒன்றுக்கு பத்தாகவும், நூறாகவும், சொல்வதுமன்றி யேசுநாதரோ பாவியாகவும், பல ஸ்திரீ மகனாகவும், ஆண்தன்மையற்றவராகவும், அற்புதங்களைச்செய்யச் சக்தியற்றவராகவும், இருந்தாரென்று பழைய புதிய ஏற்பாட்டின் வசனங்களைக் கொண்டு வகை வகையாய் எடுத்து ரூபிக்கிறதுமன்றி மேற்சொன்னவைகளெல்லாம் அவரிடத்திலேயே உண்டாயிருந்த தென்பதற்கு அவர் சிலுவையிலறையப்பட்டு மாண்டதே பெரிய அறிகுறியான பகிரங்க சாக்ஷியா யிருக்கிறதென்றும் பைபிள் உதாரணங்களைக் கொண்டே மனம்போன போக்காக வாயால் வதறிப் பிதற்றியும் புஸ்தகங்கள்மூலமாயும் வரைகிறார்கள்.

இத்தகையானவர்களில் சிலர் என்னைச் சந்தித்த போது, நீங்கள் ஐக்கியத்தைப்பாவச்செய்யுங்களென்று சொன்னதற்கு "தன்னைக் கொல்லவந்த பசுவைக்கொல்லு" என்கிற பழமொழிப் பிரகாரம் நல்லவனை யொருவன் பாவியென்றால் பாவியென்று சொன்னவனை பாவியென்று சொல்லுவது பிழையாகுமோ என்று மறுமொழி சொல்லித் தங்கள் கொள்கைகளைச் சாதிக்கப் பார்க்கிறார்கள்.



இதைப் பேர்துவாய் கவனித்தால் கிறிஸ்துவர்களில் சிலரே ஹஜரத் முஹம்மது றசூலுல்லாவை நிந்திக்கிறார்களென்பதும் அதினால் முஸ்லிம்களில் சிலர் அதற்குப் பிரதியுத்தரமாகச் சொல்லத் துணிகிறார்களென்பதும் உலகம் அறிந்த விஷயமே.

ஆகையால், நண்பர்களே நம்மை ஐக்கியத்தைத்தெரிக்கிற மார்க்கத் துவேஷிகளான அத்துரோகிகளைப் போல் ஆக்காமலும் ஒருவரையும் நிந்திக்கும்படி செய்யாமலும், தன்னைப்போல் பிறரை நேசிக்கும்படியாகவும், செய்தருள வேணுமென்று ஆண்டவனிடம் பன்முறையாக வேண்டிக் கொள்கிறேன்.

நான் மேற்சொன்ன பிரகாரமே கிறிஸ்துவர்களான நஸாராக்கள் ஹஜரத் முஹம்மது றசூலுல்லா அவர்களைப் பின்பற்றி இபுறாஹீம் நபியவர்களுடைய கொள்கை, கிரியை, முதலிய ஆசாரத்தைக் கைப்பற்றி நடந்ததினால் இஸ்ரவேலர்களும் ஐரோப்பியர்களும் ஒன்றுபட்டார்களென்றும் அவர்கள் ஒன்றுபட்டதினாலேயே வெகு சீக்கிரத்தில் இஸ்லாம் மார்க்கம் ஏராளமாய்ப் பரவியும் பரவிக்கொண்டும் வருகிற தென்று வெகு தெளிவாய் தெரிய வருகிறதல்லவா?

ஆகையினாலேயே நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தைக் கைக்கொண்டால் அரபிகளென்கிற முஸ்லிம்களும், இஸ்ரவேலர்களென்கிற யஹூதி யூதர்களும் ஒரே மார்க்கத்தினராகவும், சகோதர த்துவ முடையவராகவும், ஆகுவார்களென்றும், இவர்களுக் கெதிரில் அன்னிய மதஸ்தர்கள் ஒரு துரும்புக்குச் சமானமா யிருப்பார்களென்றும் நாளடைவில் அவ்வன்னியர்களும் இவர்களைப் பின்பற்றி முடிவாக எல்லோரும் ஒரே மதஸ்தரான சகோதரத்துவமுள்ளவர்களாக விளங்கி ஆக இவ்வுலகத்தில் எல்லோரும் ஒன்றுகூடி வாழ்வதோடு அவ்வுலகத்திலும் இதுபோலவே வருமென்று சொல்வதற்கு யாதொரு சந்தேக முண்டோ?

ஓ! அன்பர்களே நம்மை ஆண்டவன் மனிதனைச் சிருஷ்டித்தபோதே மகா அறிவு, அறிவு, [illegible], ஞானம், செவி

சப்பாணியோ லாக்காமல் இருக்கிறது அரிது; அதிலும் வைத்
தியம், குணபேதகம், முதலியவை இல்லாமல் இருப்பது அ
ரிது, அதிலும் எழுதப்படிக்கத்தெரிந்த அறிவாளர்களாயிருப்
பது அரிது, அதிலும் நாம ஒரு சத்தியமார்க்கத்தில் நிலைத்
திருப்பது அரிது, அதிலும் அம்மார்க்கத்தை ஆராய்ந்து
உண்மையைக் கண்டறிந்து அப்பிரகாரம் நடக்கிறது அரிது,
அதிலும் தன்னைப்போல் பிறரைநேசித்து அவர்களும் [illegible]
ஐக்கியப் படும்படி போதிப்பது அரிது, அப்போதனையை
உணர்ந்து அதின்படியே ஒற்றுமைப்பட்டு நடப்பது அதிலும்
அரிதே. இத்தகைய அரிதிலும் அரிதான விஷயத்தை யுணர்
ந்து அவ்வண்ணம் நடக்கிறதற்குப் போதுமான சக்தியிருக்கும்
அதைக் கவனித்து நடக்காதவர்கள் ஆடுமாடு முதலிய மிருக
ஜாதிகளைப் பார்க்கிலும் வழிகெட்டவர்களென்று "குர்ஆன்"
9-ம் ஜுஸ்வு, 12-ம் ருக்கூவு, 8-ம் ஆயத்தில் சொல்லப்பட்டிரு
க்கிறதுமன்றி, நியாயம் வெளியானபின் அதை மறுக்கத்துணி
ந்து, ஐக்கியத்தைக் கெடுக்கிற அக்கிரமக்காரர்களான காபிர்
கள் ஊசித் துவாரத்தில் ஒட்டகம் புகுந்தாலும் இவர்கள் ஒருக்
காலமும் சொர்க்கத்தில் புகுமாட்டார்களென்று மெய்யாகவே
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பதாய் ஹஜரத்
முஹம்மது றசூலுல்லா அவர்கள் திருவுளமாயிருக்கிறார்களெ
ன்பதை "[illegible] மிஷ்காத்" முதலிய ஹதீது கிதாபுகளில்
பார்த்துக் கொள்ளலாம்.

முழு உலக ஜனங்கள் ஒன்றுபட்டு ஒரே மார்க்கத்தில்
நிலைத்து, சகோதரத்துவமாய் நடக்கிறதைவிட பராபரனுக்
குச் செய்யவேண்டிய காரியம் என்னவிருக்கின்றது? இதைவிட
பராபரனுக்குப் பிரியமானது வேறு என்னவும் உண்டோ? இத்த
கையான கண்கண்ட நல்மெய்யான நியாயத்தை மறுக்கத்து
ணிந்து, ஐக்கியத்தைக் கெடுக்கிற அக்கிரமிகள் தீர்க்கதரிசனம்
உரைக்கிறவர்களாயிருந்தாலுஞ்சரி, [illegible] துரத்துகிற
வர்களாயிருந்தாலுஞ்சரி, அநேக [illegible]தங்களைச் செய்கிறவர்க
ளாயிருந்தாலுஞ்சரி அவர்களை [illegible]க்கிரமச் செய்கைகாரரென்
றும், பராபரனுக்குச் செய்யவேண்டியதை செய்யவில்லை யென்



றும், அவர்கள் ஒருபோதும் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்
க மாட்டார்களென்றும் நிட்சயமாகவே அறிந்துகொள்ளலாம்.

ஆகையினாலேயே, மத்தேயு 7-ம் அதிகாரம் 21, 22, 23-ம்,
வசனங்களைப் பார்க்க; அந்நாளில் அநேகர் என்னை நோக்கி
ஆ! கர்த்தாவே கர்த்தாவே உமதுநாமத்தினாலே தீர்க்கதரிசனம்
உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்
களைச் செய்தோமல்லவா? உமது நாமத்தினாலேயே அநேக
பிசாசுகளைத் துரத்தினோமல்லவா? என்பார்கள். அதற்குநான்
ஓ! அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்
கள். பராபரனுக்குப் பிரியமானவைகளைச் செய்யாமல் என்னை
நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொன்னவன் எவனும்
பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை யென்று மெய்யாக
வே நான் உங்களுக்கு சொல்லுகிறேன் என யேசு அவர்கள்,
வற்புறுத்தி சொல்லியிருக்கிறதை பொதுவாகக் கவனித்தால்
நியாயத்தை மறுக்கத்துணிந்து ஐக்கியத்தைக் கெடுக்கிற துரோ
கிகளைப் பற்றியே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறதென்று
இதை ஆராய்கிற ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வார்களெ
ன்பதற்[illegible]சந்தேகமில்லை.

ஓ! அன்பா[illegible]ளே ஆண்டவன் இபுருஹீம் நபியவர்களுக்
கும், அவர் குமார[illegible] இஸ்ஹாக்கு நபியவர்களுக்கும், இஸ்மா
யீல்நபி அவர்களுக்கும் அருளியிருக்கிற கட்டளைகளை ஆராய்
ந்து பாருங்கள்.

1-ம் மோசே 12-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் கர்த்தர் ஆபிர
காமை நோக்கி நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன்
தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்கு
காண்பிக்கும் தேசத்துக்குப்போ (2) நான் உன்னைப் பெரிய
ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன்பேரைப் பெருமைப்படுத்
துவேன். நீ ஆசீர்வாதமாயிருப்பாய் (3) உன்னை ஆசீர்வதிக்
கிறவர்களை ஆசீர்வதிப்பேன் உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்
பேன் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்

கப்படும் என்றும், இன்னும் ஷை 1-ம் மோசே 22-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த படியினுல் உன்சந்ததிக்குள் பூமியில் சகலஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுமென்றும் என்பேரிலாணையிட்டேனென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும் வருவதைப் பார்க்கலாம்.

இன்னும் ஷை-1ம் மோசே 17ம் அதிகாரம் 7ம் வசனத்தில் உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனுயிருக்கும்படி எனக்கும், உனக்கும் உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாகவரும் உன்சந்ததிக்கும் நடுவே என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன் (8) நீ பரதேசியாய் தங்கிவருகிற கானான்தேச முழுவதையும் உனக்கும் உனக்குப் பின்வரும் உன்சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து நான் அவர்களுக்குத் தேவனுயிருப்பேனென்றும் இன்னும் ஷை மோசே ஷை-அதிகாரம் 13ம் வசனத்தில் உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டியது அவசியம். இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது (14) நுனித்தோலின் ம[illegible]விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால் அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதனால் ஆண்டவன் ஆபிரகாமுக்கு நீர் உமது தாய் தகப்பன் ஊரை விட்டுவிட்டு ஷை கானான் தேசத்துக்கு வரவேணுமென்றும், நீர் என் கட்டளையைக் கைக்கொண்டு நடக்கிறபடியால் இந்தக் கானான் தேச முழுமையும் உமக்கும் உம்முடைய பின் சந்ததிகளுக்கும் உலக முடிவுவரை நித்திய சுதந்தரமாய்க்கொடுத்து, நானே அவர்களுக்குத் தேவனுயிருப்பேனென்றும், உமது சந்ததிகளை ஆசீர்வதித்து அதிகந் திரளாய்பெருகவும் பலுகவும் பண்ணி, அவைகளை நக்ஷத்திரங்களைப்போல் அதிகமாக்கி, அவர்கள் முழு உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்



களாயிருப்பார்களென்றும், உம்மைச் சபித்தவனை நான் சபிப்பேன் உம்மை ஆசீர்வதித்தவனை நான் ஆசீர்வதிப்பேனென்றும் எவன் உமக்கு நானிட்ட கட்டளையை மீறுனுே? அவன் உம்முடைய ஜாதியிலில்லாமல் அறுப்புண்டு போவானென்றும் கட்டளையிட்டிருக்கிறுனென்று தெரிந்து கொள்ளலாமல்லவா?

ஆண்டவன் ஈசாக்கைக் குறித்து இபுறுஹீம் நபியை நோக்கிச் சொன்னதாவது:—

1-ம் மோசே 17-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் ஆபிரகாமை நோக்கி தேவன் உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய்உனக்கு ஒரு குமாரனைப்பெறுவாள் அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். (21) வருகிற வருஷத்தில் குறித்த காலத்திலே சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதனால் ஆண்டவன் இபுறுஹீம் நபிக்குக் கொடுத்த கட்டளையை [illegible] இளையமகனுகிய ஈசாக்கும் அவரின் பின் சந்ததியாருக்கும் உலக முடிவுவரை நித்திய உடன்படிக்கையாய் ஸ்தாபித்து அதை அவர்கள் கைக்கொண்டு நடக்கும்படியாய் ஏவுவானென்றும் கட்டளையிட்டிருக்கிறதாகத் தெரிகிறதல்லவா?

1ம் மோசே 26ம் அதிகாரம் 2ம்வசனத்தில்கர்த்தர் ஈசாக்குக்கு தரிசனமாகி நீ எகிப்துக்குப் போகாமல் நான் உனக்குச் சொல்லுந் தேசத்திலே குடியிரு. (3) இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு நான் உன்னோடு கூடவிருந்து உன்னை ஆசீர்வதிப்பேன் நான் உனக்கும் உன்சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து உன்தகப்பனுகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன். (4) ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து என்விதிகளையும், என்கற்பனைகளையும், என்நியமங்களையும் என்பிரமாணங்களையும், கைக்கொண்டபடியினுல் (5)நான் உன் சந்ததியை வானத்தின் நக்ஷத்திரங்களைப் போலப் பெருகப்

பண்ணி உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசிர்வதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதனாலேயே ஆபிரகாமுக்கு ஆண்டவனிட்ட விதிகளையும் கற்பனைகளையும் நியமங்களையும் பிரமாணங்களையும் ஈசாக்கு நபியவர்களும் அவர்களின் பின் சந்ததியார்களும் கைக்கொண்டு உலகமுடிவுவரை நடந்து வரவேணுமென்றும் கானான் தேசத்துச் சுதந்தரங்கள் யாவையும் அவர்களுக்கு நித்திய சுதந்தரமாய் கொடுக்கப்படுமென்றும், நக்ஷத்திரங்களைப் போல் பெருகப்பண்ணி பூமியிலுள்ள சகல ஜாதிகளும் அவர்களை ஆசிர்வதிப்பார்களென்றும் கட்டளையிட்டிருக்கிறதாகத் தெரிந்துகொள்ளலாமல்லவா?

ஆண்டவன் இபுறுஹீம் நபியினுடைய மூத்த குமாரராகிய இஸ்மாயீல் நபியை நோக்கி "நான் உமது பிதாவாகிய இபுறுஹீம் நபிக்கு இட்ட கட்டளை யாவையும் நீரும் உமக்குப்பின் வரும் சந்ததிகளும் கைப்பற்றி நடந்து வருவீர்களாக. உமது பிதாவினால் கட்டப்பட்டிருக்கிற இந்தக் கஃபத்துல்லா என்கிற தேவாலயத்தையும் அவர் குடியிருந்த இந்த மக்கா என்னும் வீட்டையும் இந்தத் தோட்டத்தையும் ஸம் ஸம் என்கிற இந்தக் கிணற்றையும் உமக்கு கொருபான் கொடுக்க ஆலயித்த மினா வென்னும் மலையையும், ஆதமும் ஹவ்வாவும் ஒன்றாய்கூடிச் சந்தித்த அறபாத்து மலையையும் மற்றும் இங்குள்ள எல்லாவற்றையும் உமது தகப்பனாருடைய சுதந்தரமென்று கைப்பற்றி நீரும் உமக்குப் பின்வரும் சந்ததிகளும் நித்திய சுதந்தரமாய் அநுபவித்து வருவீர்களாக. உம்முடைய சந்ததியார்களை அதிகத் திரளாகப் பெருகப்பண்ணி ஆசீர்வதிக்கப்பட்ட பெரிய ஜாதியாக்கி வைப்பேன்;

"ஆனால் நான் உமது பிதாவுக்கு இட்டகட்டளையை உமது சந்ததியிற்பலரும் உமது தம்பியாகிய இஸ்ஹாக்குச் சந்ததியிற் பலரும் மீறி நடப்பார்கள்; அந்நாளில் உமது சந்ததியில் ஒடுக்கத்து நபியாக ஒருவர் தோன்றி, உமது பிதாவுடைய கற்பனை



களியாவும் அவருக்கு கொடுக்கப்பட்டு, அவர் அக்கட்டளைக்கு மீறினவர்களை யெல்லாம் சங்கரித்து, உமது சுதந்தரத்தையும் உமது தம்பியினுடைய சுதந்தரத்தையும் கைக்கொண்டு, உலகமுடிவு பரியந்தம் அக்கட்டளைகளை ஸ்தாபிப்பார். அவருடைய சந்ததிகள் நக்ஷத்திரங்களைப் போல் பெருகிப் பிரகாசித்து, முழு உலக மொத்த ஜனங்களால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களாயிருப்பார்கள்" என்று திருவுளம்பற்றினன். இதன் விபரத்தை "கசசுலான் பியா, சிறத்தூர் றசூல்" முதலிய கிதாபுகளில் காணலாம்.

இத்திருவாக்குகளின் பிரகாரமே இஸ்மாயீல் நபியவர்கள் சந்ததியிலிருந்து உதித்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் பூரண மகிமையைப்பெற்றுத் தோன்றி, இபுறுஹீம் நபியவர்களுடைய ஆசாரத்தையே பின்பற்றி நடந்து, அக்கட்டளையைமீறி நடந்தவர்களைச் சங்கரித்து, ஷை-இஸ்மாயீல் இஸ்ஹாக்கு அவர்களின் சகல சுதந்தரங்களையும் அதிகாரங்களையும் கைக்கொண்டு நடந்து வருவதோடு அவர்களின் சந்ததிகளை நக்ஷத்திரங்களைப்போல் பெருகிப் பிரகாசித்துக்கொண்டிருப்பது மன்றி முழு உலகத்தாரும் அவர்களை ஆசீர்வதித்து வருகிறார்களென்பதும் உலகப்பிரசித்தமே.

இதல்லாமலும் ஏசாயா 52-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் "எழும்பு எழும்பு சீயோனே உன் வல்லமையைத் தரித்துக்கொள் பரிசுத்த நகரமாகிய எருசலேமே உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள் ஏனெனில் விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் வருவதில்லை என்றும், மத்தேயு 21-ம் அதிகாரம் 42, 43, 44 வசனங்களிலும், மாற்கு 12-ம் அதிகாரம் 10, 12 வசனங்களிலும், லூக்கா 20-ம் அதிகாரம் 19, 20 வசனங்களிலும் வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளிவைத்த கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது பராபரனாலே ஆயிற்று, அது நம்முடைய கண்ணுக்கு ஆச்சரியமாயிருக்கிறதென்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா? ஆனதினாலே பராபரனுடைய ராஜ்ஜியம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும், அன்றியும்

அக்கல்லின்மேல் விழுகிறவன் நொறுக்கப்படுவான், அக்கல் எவன்மேல் விழுமோ அவனை அது நொறுங்கடிக்கும் என்று யேசு அவர்கள் சொல்லியிருக்கிறதாக சொல்லப்பட்டிருக்கிறதுமன்றி இவ்வாறே அக்கானான் தேசத்தை அரசுபுரிந்த தாவீது அவர்களும் சொல்லியிருக்கிறதாக சங்கீதம் 118ம் அதிகாரம் 22,23ம் வசனங்களிலும் கண்டிருக்கிறதைக் காணலாம்.

மேற்படி ஏசையா வசனத்தில் கண்டபடி இஸ்ரவேலர்கள் ஆபிரகாமின் ஆச்சாரத்தை மீறி அசுத்தர்களாய் இருந்ததினாலேயே அந்த எருசலேமை ஆபிரகாமின் கொள்கை, கிரியைபடி நடக்கிற சுன்னத்துள்ளவர்களும், சுத்தமுள்ளவர்களுமானவர்களிடத்தில் உன்னை ஒப்புவிக்கப்படும், ஆதலால் நீ சந்தோஷமாய் இரு என்று ஆறுதல் சொல்லி, ஏசையா தீர்க்கதரிசி ஆசீர்வதித்திருக்கிறாரென்றும் யூதர்களிடத்திலிருக்கிற ஷை ராஜ்ஜியத்தைப் பிடுங்கி அதைப் பராபரனுக்குப் பிரியமான பரிசுத்தவான்களிடம் ஒப்புவிக்கப்படுமென்று தாவீது அவர்களாலும் யேசு அவர்களாலும் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், நிட்சயமாகவே சொல்லலாம்.

பொதுவாக இவைகளைக் கவனித்தால் ஆபிரகாமுக்கு ஆண்டவன் இட்ட கட்டளைகளை அவர் சந்ததியில் எவன் எடுத்து நடந்துவருவானோ அவன் ஆசீர்வதிக்கப்பட்டு, அவனே அப்பரிசுத்த கானான் தேசசுதந்தரத்தை அடைவானென்றும் அக்கட்டளையை எவன் மீறி நடந்தானோ அவன் சபிக்கப்பட்டு, அதின் சுதந்தரத்தை யிழந்து விடுவானென்றும் இதை ஆராயும் ஒவ்வொரு கல்வான்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்து கொள்ளுவார்கள்.

ஆனதினாலேயே எருசலேம் பட்டணத்தார் ஹிஜரத்து 2-ம் கலீபாவாகிய உமர் அவர்களை வருத்தி ஷை பட்டணத்துச் சகல அதிகாரங்களையும் ஆதீனத்தையும், ஒப்புவித்து, கீழ்ப்பணிந்ததுமின்றி அதற்கு அறிகுறியாக அப்போதே அவ்விடத்தில் அவர்கள் பேர்விளங்கும்படியாக ஒரு மஜீது கட்டி, அதற்கு உமர்மஜீது என்று பேரிடப்பட்டிருக்கிறதை இன்றும் அங்கு பிரத்தியக்ஷமாய்க் காணலாம்.



ஞாயம் இங்ஙனமிருக்க அதை மறுத்து ஐக்கியத்தைக் கெடுக்கிற அக்கிரமக்காரரான துரோகிகள் உங்களுக்கும், எங்களுக்கும் கோபத்தை மூட்டி நூற்றுக் கணக்கான வருஷங்களாய் நீங்கள் சிலுவை முதலியவைகளை அணிந்துக்கொண்டு அவ்விராஜ்ஜியத்தின்பேரில் சண்டைசெய்து உங்களிலும், எங்களிலும் கோடி கோடியான ஜனங்கள் மாண்டு போனார்களல்லவா? இப்பழிகளெல்லாம் அவ்வக்கிரமக்காரர்கள் மீதே சாருமென்று யாருஞ் சொல்லவேண்டுமோ?

ஆனதினாலேயே ஞாயத்தை மறுக்கத் துணிந்து ஐக்கியத்தைக் கெடுக்கிற அக்கிரமக்காரர்கள் ஊசித் துவாரத்தில் ஒட்டகம் நுழைந்தாலும் அவர்கள் ஒருக்காலமும் சொற்கம் புகுதமாட்டார்களென்று ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களாலும், இதற்கிணங்கவே யேசுநாதர் அவர்களாலும் வற்புறுத்தி மேற்சொன்ன பிரகாரஞ் சொல்லப்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் சிலர் ஞாயத்தை மறுக்கத் துணிந்து ஐக்கியத்தைக் கெடுக்கிறது என்னவென்று கேட்கக்கூடும், ஞாயம் என்னவென்றால்:— ஆதம்முதல் முஹம்மது நபிவரையுள்ள எல்லாத் தீர்க்கதரிசிகளையும் விசுவாசித்து, 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 7-வது வசனத்தில் கண்டபடி ஆண்டவன் ஆபிரகாமுக்கும், அவர் சந்ததியார்களுக்கும் உலகமுடிவு வரையும் கைக்கொண்டு நடக்கும்பொருட்டு நித்திய உடம்படிக்கையாகக் கொடுத்த கட்டளைப்பிரகாரமே நடந்து வருகிறதென்பதே. இவ்வாறே ஆண்டவன் அவர்கள் குமாரர் ஈசாக்குக்கும் அவர்கள் சந்ததிகளுக்கும் கட்டளையிட்டிருக்கிறானென்பதை 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 19-ம் வசனத்திலும், ஷை 1-ம் மோசே 26-ம் அதிகாரம் 3, 4, 5-ம் வசனங்களிலும் பார்க்கத் தெரிந்து கொள்ளலாம்.

ஐக்கியமாவது என்னவென்றால்:— இவ்வாசாரத்தையும் மேற்சொன்ன விசுவாசத்தையும் கிறிஸ்துவ அன்பர்கள் பின்பற்றி நடந்து வந்தால் 1-ம் மோசே 22-ம் அதிகாரம் 18-ம் வசனத்திலும்; மேற்படி 1-ம் மோசே 12-ம் அதிகாரம்

3-ம் வசனத்திலும் ஆண்டவன் இபுறாஹீம் நபிக்கு சத்திய மிட்டுச் சொன்ன பிரகாரமும் இதைப்போலவே 1-ம் மோசே 26-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் ஆண்டவன் ஈஸாவுக்கு அருளியபிரகாரமும் உலகத்திலுள்ள எல்லா ஜாதிகளும் ஆசீர்வாதம்பெற்று ஒன்றாய்ச் சேர்வார்களென்பதே.

ஆகையினாலே கிறிஸ்துவ அன்பர்கள் இத்தகையான விசுவாசத்தையும், ஆசாரத்தையும் கைப்பற்றி நடந்து முழு உலகமும் ஒன்றுபட வொட்டாமல் எவன் கெடுக்கிறானோ அவனே நியாயத்தை மறைக்கத் துணிந்து ஐக்யத்தைக் கெடுக்கிற துரோகியென்று இதை ஆராய்கிற ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளுவார்களென்பதற்கு யாதொரு ஐயமில்லை.

ஆனால் இதற்கு மறுமொழியாக சில அன்பர்கள் யேசுநாதரால் ஆபிரகாமின் ஆசாரங்கள் யாவும் ரத்து செய்யப்பட்டதென்று சொல்லக்கூடும். மூஸா, தாவீது முதலிய தீர்க்கதரிசிகள் அந்தந்தக்காலங்களில் வெளியாகி யார் ஆபிரகாமுக்கு ஆண்டவன் இட்ட கட்டளையை மீறி நடந்தார்களோ அவர்களை சபித்து சங்காரித்து மேற்படி கட்டளைகளை ஸ்தாபித்திருக்கிறார்களென்று அவரவர்களுடைய வேதாகமத்தைப்பார்க்கத் தெரியவருகிறதேயல்லாது அதற்கு மாற்றமாகத் தெரியவில்லை.

யூதர்களோ, அப்படி மாற்றமாய் எவன் செய்தானோ அவன் வேததுரோகியென்றும் 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் கண்ட பிரகாரம் அவர்கள் வம்சத்தில் சேராமல் அறுப்புண்டுபோவான் என்றும் விசுவசித்துவருகிறதுமன்றி யேசு பாவியாகவும், பலஸ்திரீ மகனாகவும் இருந்தாரென்றும், ஆபிரகாமின் கட்டளைக்கு மீறி நடந்தாரென்றும், அதினால் மேற்படி வசனத்தில் கண்டபடி அவர் சிலுவையிலறையப்பட்டுச் சங்காரிக்கப்பட்டுபோனாரென்றும் பலவாறாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

ஆக மேற்படி இரு கக்ஷிக்காரரும் ஒன்றுக்கொன்று வேற்றுமைப்பட்டு, பற்பலகலகங்கள் புரிந்து, லக்ஷக்கணக்கான ஜனங்கள் மாண்டுபோனதுமன்றி இவர்களுக்குள்ளிருந்த சிக்கலும்



நீங்காமலும், இஸ்ரவேலர் குடும்பத்துக்குள்ளேயே ஒன்றுக்கொன்று நாளுக்கு நாள் அவ்வேற்றுமை அதிகரித்துக்கொண்டும் வந்தபடியினால் (1-ம் மோசே 16-ல் 12உம் 25-ல் 18-உம் சொல்லியபடி) இஸ்ரவேலர்களுக்கு சகோதரர்களான இஸ்மவேலர்கள் வந்து சமாதானப்படுத்தி, அக்கலகத்தை நிவாரணஞ் செய்யவேண்டியது கடமையாயிருக்கிறதல்லவா?

ஆகையினால் 5ம் மோசே 18ம் அதிகாரம் 18, 19ம் வசனங்களில் உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என்வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பித்ததையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவனை நான் விசாரிப்பேன் என்று மோசேக்கு ஆண்டவன் அருளினவராகவும் 1-ம் மோசே 49-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் சொல்லியபடியே சமாதான கர்த்தராகவும், ஏசாயா 9-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் சொல்லியபடி சமாதான பிரபாகவும், மேற்படி ஏசாயா 42-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் கண்டபடி புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துகிறவராகவும், ஷை 4-ம் வசனத்தில் நியாயத்தைப் பூமியில் நிலைப்படுத்து மட்டும் இளையாமலும், பதறாமலும்ஆகிய தன்மைவாய்ந்தவராகவும், எல்லாவிதத்திலும் மூசா நபிக்கொப்பானவராகவும், அவர்களின் சகோதரரான இஸ்மவேலர் குடும்பத்திலுள்ளவராகவும் ஹஜரது முஹம்மது றசூலுல்லா அவர்கள் வெளிப்பட்டிருக்கிறார்கள்" என்று கம்பீரமாகச் சொல்லலாம்.

நபியவர்களோ ஷை இருகட்டத்தார்களுக்கு ஆதம் நபி முதல் ஈஸா நபிவரை எல்லா நபிமார்களும் கொள்கையிலும், கிரியையில் பிரதான விஷயங்களிலும் ஒற்றுமையாயிருந்தார்களென்றும், இபுறாஹீம் நபிக்கு ஆண்டவன் அருளிய கட்டளைகள் உலகம் முடிவு பரியந்தம் நித்திய உடன்படிக்கையாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும், அக்கட்டளைகளை மாற்றுவதற்கு யாராலும் முடியாதென்றும், ஈஸா நபியவர்களோ பரிசுத்தமான ஒரு பெரிய தீர்க்கதரிசியாக விருந்தார்களென்றும்,

அவர்கள் இபுருஹீம் நபியின் கட்டளைகளையே போதித்து வந்தார்களென்றும், இபுருஹீம் நபியின் கட்டளைகளை மீறி நடந்துவந்த யஹூதி யூதர்களே அவர்களைப் பலவாறாய்த் துன்பப்படுத்தினார்களென்றும், முடிவில் அவர்கள் அத்துன்பத்தை நிர்வகிக்கக் கூடாமல் வானலோகம் போய்விட்டார்களென்றும், ஆகையினாலே ஆண்டவன் என்னை அனுப்பி இபுருஹீம்நபியின் கட்டளைகளை எனக்கு அருளியிருக்கிறானென்றும், அவைகளை உங்களுக்குப் போதிக்கும்படியாக எனக்கு ஏவியிருக்கிறானென்றும், அக்கட்டளை பிரகாரம் நடந்தவனே மோட்சமடைவனென்றும், அதைத் தவறுகிறவன் சபிக்கப்பட்டு, நரகத்திற்குள்ளாகி, அவர்களின் சுதந்தரங்களை இழந்துவிடுவான் என்றும் பலவாறாய் நயத்தாலும், பயத்தாலும் இரு கட்சிக்காரர்களுக்கும் போதித்து வந்தார்கள்.

என் நாமத்தினால் அவர் சொல்லும் என் வார்த்தைகளைக் கேளாதவனை நான் விசாரிப்பேன் என்று 5-ம் மோசே 18-ம் அதிகாரம் 19-ம்வசனத்திலும், அவபக்தியானஜனங்களுக்கு நான், அவரை யனுப்பி எனக்குக் கோபமூட்டின ஜனத்தை கொள்ளையிடவும், சூறையாடவும் அதை வீதிகளில் சேற்றைப்போல் மிதித்துப்போடவும் அவருக்குக் கட்டளை கொடுப்பேன் என்று ஏசாயா 10-ம் அதிகாரம் 6-ம் வசனத்திலும், அவர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்தசேவகனைப்போல் வைராக்கியம் பூண்டு, முழங்கி, கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்வார் என்று ஏசாயா 42-ம் அதிகாரம் 13-ம் வசனத்திலும், இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவார் என்று சங்கீதம் 2-ம் அதிகாரம் 9-ம் வசனத்திலும், அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார் என்று ஏசாயா 42-ம் அதிகாரம் 21-ம் வசனத்திலும் ஆக இவைபோன்ற அநேக வசனத்திலும் கண்டபிரகாரமே ஹஜ்ரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுடைய போதனைகளைக்கேட்டு, அப்பிரகாரம்நடக்காதவர்கள் சாபத்துக்குள்ளாகி, சுதந்தரத்தை இழந்து, சங்கரிக்கப்பட்டுப் போனார்களென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயமே.



உதாரணமாக இவ் விந்தியாவைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கைப்பற்றிய பின்னர் இவ்விந்தியா பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குள் நிலைத்துவரும்பொருட்டும், குடிகள் சமாதானத்தோடு கவர்ன்மெண்டுக்கு அடங்கி நடந்து வரும்பொருட்டும் சிலசட்டதிட்டங்களையேற்படுத்தினார்கள். அப்பிரகாரமே குயின் விக்டோரியா மகா ராணியவர்களால் அரசாட்சி செய்யப்பட்டு வந்தது. அப்பால், எட்வர்ட் மகாராஜா சக்கிரவர்த்தியவர்கள் என் தாயார் நடத்திவந்த சட்டதிட்ட பிரகாரமேநான் நடத்திவருவேன் என்று அவர்கள் வாக்குத் தத்தம் செய்து அப்பிரகாரமே அவர்களும் நடத்திவந்தார்கள். அப்பால் ஜார்ஜ் மகாராஜா சக்கிரவர்த்தியவர்களும் தங்கள் தகப்பனாருடைய சட்டதிட்ட பிரகாரமே நானும் அரசாட்சி செய்து வருவேனென்று வாக்குத் தத்தம் செய்து அவ்வாறே அரசாட்சிபுரிந்து வருகிறதினாலேயே பிரஜைகளுக்கும், ராஜாங்கத்தாருக்கும் யாதொரு பேதா பேதமின்றி அரசாட்சி செய்யப்பட்டு வருகிறதல்லவா?

இதைப்போலவே நமது ஆதிதந்தை, தாயாகிய ஆதமும், ஹவ்வாவும் இவ்வுலகத்தில் வந்து இருவரும் ஒன்று கூடினபோது, அவர்கள் உலக நடத்தைக்காகவும், பரலோக மோட்சத்திற்காகவும், சில விதிவிலக்குகளை ஏற்படுத்தி, அதை அவர்களுக்கு மார்க்கமாகக்கொடுத்து, நடந்துவரும்படியாக ஆண்டவன் ஏவினான். அக்கட்டளைக்கு இஸ்லாம் என்றும் அப்பிரகாரம் நடந்தவனுக்கு முஸ்லிம் என்றும்பேர். அதேபிரகாரம் அவர்களும் அவர்கள் மகனாகிய ஷீதுநபியவர்களும், அவர்களுக்குப் பிறகு இதிரீஸ் நபியவர்களும், அப்பால் நூஹு நபியவர்களும் நடந்துவந்தார்கள். அப்பால் இபுருஹீம் நபியவர்களுக்கு அக்கட்டளையை அருளி அவர்களுக்கும், அவர்கள் சந்ததிகளுக்கும் உலக முடிவு பரியந்தம் அதை நித்திய கட்டளையாக ஸ்தாபித்தான். இம்முறையே ஒவ்வொரு நபிமார்களும் நடந்து வந்து, கடைசியாக முஹம்மது றசூலுல்லா அவர்களால் மேற்படி கட்டளைகளை உலக முடிவு பரியந்தம் ஸ்தாபிக்கப்பட்டு எல்லா நபிகளுடைய ஆதீனத்தையும் அதிகாரத்தையும் கைப்பற்றி, முழு உலகமும் அக்கட்டளைகளாலேயே நடத்தப்பட்டு வருகின்றனவென்பதும் அக்கட்டளைகளை மீறி நடந்தவர்கள் சாபத்துக்குட்பட்டுச் சுதந்தரத்தை இழந்துவிட்டார்கள் என்பதும் உலகப் பிரசித்தமாயிருக்கிறதல்லவா?

ஆனால் உங்களில் சிலர் மேற்சொன்னபடி ஆதாம் ஏவாளுடையவும், ஆபிரகாமுடையவும் கொள்கை கிரியைகளில் சிலது

எங்கள் பைபிளில் காணவில்லையே என்று கேட்கக்கூடும். அதற்கு மறுமொழி யென்னவென்றால்:—உங்கள் பைபிளோ பழைய ஏற்பாட்டு புஸ்தகங்கள் 73-ம், புதிய ஏற்பாட்டு புஸ்தகங்களோ 60-ம் ஆக 133 புஸ்தகங்கள் இருக்கவேண்டும். அதற்கு இப்போது உங்கள் கையிலிருக்கிற புஸ்தகமோ பழைய ஏற்பாட்டில் 38-ம் புதிய ஏற்பாட்டில் 11-ம் ஆக 49 புஸ்தகம் இருக்கின்றது. போக பாக்கி 84 புஸ்தகங்கள் இருக்கவேண்டும். அவைகள் உங்களிடத்திலில்லாமலும், அவைகள் யாவையும் நீங்கள் பார்வையிடாமலும் இருந்துகொண்டு எங்கள் வேதத்தில் அது வரவில்லையே என்று சொல்வது நியாயமாகுமா?

அன்றியும், உங்கள் வேதாகமத்தில் ஒருவர் எழுதியிருக்கிற செய்தி இன்னொருவர் எழுதாமலிருக்கிறதினால் அதைப் பொய்யென்று சொல்வீர்களா? அது பொய்யென்று சொல்லாமல் மெய்யென்று சொல்லும்போது உங்கள் கையிலிருக்கிற புஸ்தகத்திலில்லாமல் அது மற்றவர்களுடைய புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்தால் அதை எப்படி மறுக்கக்கூடும்? மேலும் அவர்கள் எழுதப்பட்ட பிரகாரம் அந்த ஸ்தலங்களும், அந்த நடப்புகளும், பாரம்பரையாய் வழக்கத்தில் அனுஷ்டித்து வருகிறதுமான நன்கண்ட மெய்யாகிய விஷயங்களை நிச்சயமாய் நம்பி அந்தப்படி நடந்துவரலாமென்று வெகு தாட்டியமாகச் சொல்லலாமல்லவா?

யாராவது அப்பாக்கியிருக்கின்ற 84 புஸ்தகங்களின் பேர்களையும், அது யார்களால் எந்தெந்தக் காலங்களில், என்னென்ன விதமாய் இயற்றப்பட்டிருக்கிறதென்கிற விபரங்களையும் அறிய வேண்டுமானால் மதராஸில் ஹிஜ்ரி 1277-ம் வருஷம் அச்சு பதிக்கப்பட்ட "ஏஜாஸே முஹம்மதி" என்னும் இந்துஸ்தானி கித்தாபில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

அன்றியும் அப்புஸ்தகத்தில் பாக்கியிருக்கிற 84 புஸ்தகத்தையும் இப்போது உங்கள் கையிலிருக்கிற 49 புஸ்தகங்களின் வசனத்தைத்தக்கொண்டே ஏற்பட்ட புஸ்தகமென்றும், இந்த வசனங்களைக்கொண்டு ஏற்படாமல் இன்னும் எவ்வளவோ புஸ்தகங்கள் இருக்கின்றனவென்றும், பைபிள் வியாக்கியானங்களைக் கொண்டும் வகைவகையாக எடுத்து வரையப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

ஆனபடியால் இஸ்மாயீல் நபியவர்களை ஆசீர்வதித்தபடி நிறைந்து முஹம்மது நபியவர்களால் நிறைவேறப்ப



ட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாமல்லவா? ஆனால் உங்களில் சிலர் அவர் சந்ததியார்கள் வானத்தின் நட்சத்திரங்களைப்போல் பெருகிப் பிரகாசித்து முழு உலகத்தார்களால் என்ன விதமாய் ஆசீர்வதிக்கப்பட்டார்களென்று கேட்கக்கூடும்.

அதற்கு விபரம் எப்படியென்றால்:—இப்றாஹீம் நபியவர்களின் 2-வது ஸ்திரீயாகிய ஹாஜிரா அம்மாளும் மேற்படி மகன் இஸ்மாயீல் நபியவர்களும் மக்கா என்கிற வனவாசத்திலிருந்து வசித்துக் கொண்டிருக்கும்போது அவர்களை நோக்கி ஆண்டவன் "நீங்கள் விசனிக்க வேண்டாம், சந்தோஷமாயிருங்கள் கடைசி காலத்தில் உங்கள் சந்ததியிலிருந்து ஒருவர் ஒளிக்கைத்து நபியாய்த் தோன்றுவார். அவர் உலகத்திற்கு நித்திய பொழுதைப்போல், இலங்கிக் கொண்டிருப்பார். அப்பிரகாசத்தினால் சாராளுடைய சந்ததியின் பிரகாசங்களும், கீர்த்திகளும், சுதந்திரங்களும் மங்கி அவை யாவையும் அவர் அடைவதோடு, அவரின் பிள்ளைகளை நட்சத்திரங்களைப்போல் பெருகப்பண்ணி முழு உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்படு" மென்றும் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி ஆசீர்வதித்தான்.

இதற்கிணங்கவே மேற்படி மக்காபூமியை நோக்கி பிள்ளை பெறாத மலடியே கெம்பீரித்துப் பாடு கர்ப்பவேதனைப்படாதவளே கெம்பீரமாய் முழங்கிச் சந்தோஷ சத்தமிடு ஏனெனில், வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அனாதையானவளுடைய பிள்ளைகள் அதிகமென்று கர்த்தர் சொல்லுகிறார். என்று ஏசாயா தீர்க்கதரிசியால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறதை அவரது புஸ்தகமாகிய ஏசாயா 54ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் வருவதைப்பார்த்துக் கொள்ளலாம்.

இதைப்போலவே மேற்படி தீர்க்கதரிசியவர்களால் எருசலேம் பட்டணத்தை நோக்கி உன்னை அவமதித்துள்ளவர்களும் அசுத்தமுள்ளவர்களுமானவர்கள் வசம் ஒப்பிக்கப்படுமென்று ஆகையால் நீ சந்தோஷமாயிரு, கெம்பீரித்துப் பாடு, அலங்கார வஸ்திரத்தை உடுத்துக்கொள் என்று ஆசீர்வதித்திருக்கிறதை ஏசாயா 52-ம் அதிகாரம் 1-ம் வசனத்தால் தெரிந்துக் கொள்ளலாம்.

இப்றாஹீம் நபியவர்களின் 1-வது ஸ்திரீயாகிய மேற்படி சாராள் அம்மாள் சந்ததியில் கடைசியாக சகரியாவும், அவர் மகன் யஹ்யாவும், முடிவில் ஈஸா நபியவர்கள் தோன்றி, விருத்தத்தில் யஹ்யா நபியவர்களுக்கும் ஈஸா நபியவர்களுக்கும் பின்சந்ததி

யில்லாமற் போனபடியினால், நபிமார்களுடைய பிள்ளைகள் நபிமார்களாய்த் தோன்றுவார்களென்கிற விஷயம் அவ்வழியில் அற்றுப்போய் விட்டது.

ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு இபுறாஹீம், அபுல்காசிம், தய்யிபு அல்லது தாஹிர் முதலிய சில ஆண்குழந்தைகள் இருந்தனர். பிராயமான ஆண் பிள்ளைகள் ஒருவருக்கும் முஹம்மது நபி பிதாவாயிருக்கமாட்டார்களென்று குர்ஆன் 22-ம் ஜூஸ்வு 2-ம் றுக்கூவு கடைசி ஆயத்தில் கட்டளை வந்தபோது "நபியுடையபிள்ளைக்கு நபிப்பட்டம் கொடுக்க நேரிடுமாதலாலும், எனக்குப்பின் வேறு நபியில்லையென்றிருப்பதாலும் பிராயமாவதற்கு முன் என் ஆண் பிள்ளைகள் காலமாய் விடுமென்று மேற்படி ஆயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும், ஆயினும் எனது ஏகபுத்திரியாகிய பாத்திமாவின் சந்ததியிலிருந்து உலகம் முடிவு பரியந்தம் ஒவ்வொரு காலங்களிலும் அனேக குத்துபுமார்களையும் அவுலியாக்களையும் ஆண்டவன் வெளிப்படுத்துவானென்றும் அவர்கள் வானத்தின் நக்ஷத்திரங்களைப்போல் பெருகிப்பிரகாசித்து முழு உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்" என்றும் நபியவர்கள் திருவுளமாயினார்கள்.

இதற்கிணங்கவே சங்கீதம் 45ம் அதிகாரம் 16ம் வசனத்தில் உமது பிதாக்களுக்குப் பதிலாய் உமது குமாரர்கள் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாய் வைப்பீர் (17) உமது நாமத்தை எல்லாத் தலைமுறையிலும் பிரஸ்தாபப்படுத்துவேன்; ஆதலால் ஜனங்கள் உம்மை என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் துதிப்பார்கள், என்றும், இன்னும் மேற்படி சங்கீதம் 2-ம் அதிகாரம் 8-ம் வசனத்தில் ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளையும் உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன் என்றும், இன்னும் மேற்படி சங்கீதம் 45ம் அதிகாரம் 2ம் வசனத்தில் எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சௌந்தரியமுள்ளவர்; உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது. ஆனதினால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார் என்றும், இன்னும் ஏசாயா 60-ம் அதிகாரம் 15ம் வசனத்தில் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்று சொல்லப்பட்டிருப்பதன்றி, குர்ஆன் 22ம் ஜூஸ்வு 1-ம் றுக்கூவு, 3-ம் ஆயத்தில் உம்முடைய சந்ததிகள் பரிசுத்தவான்களாயிருப்பார்கள் என்றும் 19ம் ஜூஸ்வு 15-ம் றுக்கூவு 28-ம் ஆயத்தில்



உம்மை ஆண்டவனுக்கு அடிபணிந்த திருத்தொண்டர்களாக அவர்களின் தலைமுறைகளில் திருப்பிக் கொண்டு வந்தானென்றும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

மேற்கண்டபடியே ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களின் புத்திரியாகிய பாத்திமா நாயகி அவர்களுக்கு இமாம் ஹஸன், இமாம் ஹுசைன் என்கிற இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தனர்.

இவர்கள் வழியில் இமாம் ஜெயினுல் ஆபிதீன், இமாம் மூஸா காஸிம், இமாம் முஹம்மது பாக்கிர், இமாம் ஜஃபர் ஸாதிக்கு, இமாம் ஹசனுல் முதன்னா, முதலிய இமாம்கள் தோன்றி அவர்கள் மக்களிலிருந்து ஆயிரக் கணக்கான அவுலியாக்களும், குத்துபுமார்களும், ஒவ்வொரு காலங்களிலும், உலகத்தின் பல பாகங்களிலும் தோன்றி, நக்ஷத்திரங்களைப் போல் பெருகிப் பிரகாசித்து முழு உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்களென்பது உலக பிரசித்தமே.

அது எப்படியென்று கேட்டால் இராக் தேசத்தின் தலைநகரமாகிய பகதாதில் நூற்றுக்கணக்கான அவுலியாக்கள் வெளிப்பட்டிருப்பதில் ஹஜரத் குத்புறப்பானி கௌது ஸமதானி மஹ்பூபு ஸுப்ஹானி முஹியித்தீன் அப்துல் காதர் ஜீலானி, ஆண்டவர்கள் ஹிஜ்ரி 471-ம் வருஷத்தில் ஜெயிலானி என்னும் நகரத்தில் தோன்றி அவர்களால் கூன், குருடு, சப்பாணி, செவிடு, ஊமை, பெருவியாதி முதலிய ஆயிரக்கணக்கான வியாதிகாரர்களை குணமாக்கி, பிள்ளை பெறாத எத்தனையோ மலடிகளுக்குப் பிள்ளை வரம் கொடுத்து, மரித்துப்போனவர்களை ஆயிரக் கணக்காக எழுப்பியும், லக்ஷக்கணக்கான காரணங்களையும், அதிசயங்களையும், அடையாளங்களையும் காண்பித்திருக்கிறதுமன்றி இன்றும் அவர்களுடைய காரணங்கள் வெளியாய்க் கொண்டு வருகிறதைக் காணலாம்.

முழு உலகத்திலுள்ள முஸ்லீம்களின் மொத்தத் தொகையில் ஆறில் ஒரு பாகத்துக்குக் குறைவில்லாமல் அவர்களுடைய ஞானவரம் பெற்ற தொண்டர்களாய் இருக்கிறதோடு அவர்கள் எல்லா சாதிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டு இவ்வும்மத்து முஹம்மதியாவில் சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய சரித்திரங்களை அறியவேண்டுமானால் "பஹ்ஜத்துல் அஸ்ரார் வமஃதினுல் அன்வார்," "ஜவாயிறுல்லா?" "அன்யிறு" "குலாஸத்துல் மபாக்கிர்" "தப்ரீஹுல் ஜாகிர்"

யில்லாமற் போனபடியினால், நபிமார்களுடைய பிள்ளைகள் நபிமார்களாய்த் தோன்றுவார்களென்கிற விஷயம் அவ்வழியில் அற்றுப்போய் விட்டது.

ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு இபுறாஹீம், அபுல்காசிம், தய்யிபு அல்லது தாஹிர் முதலிய சில ஆண்குழந்தைகள் இருந்தனர். பிராயமான ஆண் பிள்ளைகள் ஒருவருக்கும் முஹம்மது நபி பிதாவாயிருக்கமாட்டார்களென்று குர்ஆன் 22-ம் ஜுஸ்வு 2-ம் றுக்கூவு கடைசி ஆயத்தில் கட்டளை வந்தபோது "நபியுடையபிள்ளைக்கு நபிப்பட்டம் கொடுக்க நேரிடுமாதலாலும், எனக்குப்பின் வேறு நபியில்லையென்றிருப்பதாலும் பிராயமாவதற்கு முன் என் ஆண் பிள்ளைகள் காலமாய் விடுமென்று மேற்படி ஆயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும், ஆயினும் எனது ஏகபுத்திரியாகிய பாத்திமாவின் சந்ததியிலிருந்து உலகம் முடிவு பரியந்தம் ஒவ்வொரு காலங்களிலும் அநேக குத்துபுமார்களையும் அவுலியாக்களையும் ஆண்டவன் வெளிப்படுத்துவானென்றும் அவர்கள் வானத்தின் நக்ஷத்திரங்களைப் போல் பெருகிப்பிரகாசித்து முழு உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்" என்றும் நபியவர்கள் திருவுளமாயினார்கள்.

இதற்கிணங்கவே சங்கீதம் 45ம் அதிகாரம் 16ம் வசனத்தில் உமது பிதாக்களுக்குப் பதிலாய் உமது குமாரர்கள் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாய் வைப்பீர் (17) உமது நாமத்தை எல்லாத் தலைமுறையிலும் பிரஸ்தாபப்படுத்துவேன்; ஆதலினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் துதிப்பார்கள், என்றும், இன்னும் மேற்படி சங்கீதம் 2-ம் அதிகாரம் 8ம் வசனத்தில் ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன் என்றும், இன்னும் மேற்படி சங்கீதம் 45ம் அதிகாரம் 2ம் வசனத்தில் எல்லா மனுப்புத்திரரிலும் நீர் மகாசௌந்தரியமுள்ளவர்; உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது ஆனதினால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார் என்றும், இன்னும் ஏசாயா 60-ம் அதிகாரம் 15ம் வசனத்தில் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்று சொல்லப்பட்டிருப்பதுமன்றி, குர்ஆன் 22ம் ஜுஸ்வு 1-ம் றுக்கூவு 3 ம் ஆயத்தில் உம்முடைய சந்ததிகள் பரிசுத்தவான்களாயிருப்பார்கள் என்றும் 19ம் ஜுஸ்வு 15 ம் றுக்கூவு 28 ம் ஆயத்தில்



உம்மை ஆண்டவனுக்கு அடிபணிந்த திருத்தொண்டர்களானவர்களின் தலைமுறைகளில் திருப்பிக் கொண்டு வந்தானென்றும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

மேற்கண்டபடியே ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களின் புத்திரியாகிய பாத்திமா நாயகி அவர்களுக்கு இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் என்கிற இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தனர்.

இவர்கள் வழியில் இமாம் ஜெயினுல் ஆபிதீன், இமாம் மூஸா காலிம், இமாம் முஹம்மது பாக்கிர், இமாம் ஜாபர் சாதிக்கு, இமாம் ஹஸனுல் முதன்னா, முதலிய இமாம்கள் தோன்றி அவர்கள் மக்களிலிருந்து ஆயிரக் கணக்கான அவுலியாக்களும், குத்துபுமார்களும், ஒவ்வொரு காலங்களிலும் உலகத்தின் பல பாகங்களிலும் தோன்றி, நக்ஷத்திரங்களைப் போல் பெருகிப் பிரகாசித்து முழு உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்களென்பது உலகப் பிரசித்தமே.

அது எப்படியென்று கேட்டால் இராக் தேசத்தின் தலைநகரமாகிய பகுதாதில் நாற்றுக்கணக்கான அவுலியாக்கள் அடங்கப்பட்டிருப்பதில் ஹஜரத் குத்புறப்பானி மஹ்பூபு சுபுஹானி முஹியித்தீன் அப்துல் காதர் ஜீலானி என்பவர்கள் ஹிஜ்ரி 471-ம் வருஷத்தில் ஜெயிலானி என்னும் நகரத்தில் தோன்றி அவர்களால் கூன், குருடு, சப்பாணி, செவிடு, ஊமை, பெருவியாதி முதலிய ஆயிரக்கணக்கான வியாதிகாரர்களை குணமாக்கி, பிள்ளை பெறாத எத்தனையோ மலடிகளுக்குப் பிள்ளை வரம் கொடுத்து, மரித்துப்போனவர்களை ஆயிரக் கணக்காக எழுப்பியும், லக்ஷக்கணக்கான காராமத்துக்களையும், அதிசயங்களையும், அடையாளங்களையும் காண்பித்திருக்கிறதுமன்றி இன்னும் அவர்களுடைய காரணங்கள் வெளியாய்க் கொண்டு வருகிறதைக் காணலாம்.

முழு உலகத்திலுள்ள முஸ்லிம்களின் மொத்தத் தொகையில் ஆறில் ஒரு பாகத்துக்குக் குறைவில்லாமல் அவர்களுடைய ஞானவரம் பெற்ற தொண்டர்களாய் இருக்கிறதோடு அவர்கள் எல்லா சாதிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டு இவ்வுலக முஹம்மதியாவில் சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய சரித்திரங்களை அறியவேண்டுமானால் "பஹ்ஜத்துல் அஸ்றார்" "குலாயித்துல் ஜவாஹிர்" அவ்வாறு "ஜவாயிறுல் அவ்லியா" "தப்ரீஹுல் காதிர்" அவ

ஹாறூல் மபாக்கிர், முதலிய சிறந்த கிரந்தங்களைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம்,

இதன்றியும் அவர்களுடைய பதிமூன்றுவது தலைமுறையில் ஹிஜிரி 900வருஷத்தில் இந்தியாவிலுள்ள மாணிக்கப்பூரில் ஹஜ்ரத்து ஷாஹுஸைன் ஹமீத் ஆண்டவர்கள் தோன்றி உலகத்தின் பல பாகங்களிலும் சுற்றி ஆயிரக்கணக்கான காரணங்களையும், அதிசயங்களையும் காண்பித்து, லக்ஷக்கணக்கான பேர்களுக்கு நோவதீட்சைகொடுத்து கடைசியாய் இத்தென்னிந்தியா முழுவதையும் சுற்றி தஞ்சாவூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த நாகூரில் வந்து அடக்கமாயிருக்கின்றனர்.

மேற்படி தஞ்சாவூர் மகாராஜாவுக்கு இருந்த தீராப்பிணியானது இவர்களது ஆசீர்வாதத்தால் நீக்கப்பட்டதினிமித்தம் மேற்படி அரசாலேயே ஆயிரக்கணக்கான திரவியங்கள் செலவிடப்பட்டு அவர்களுடைய சமாதிமுதலியவைகளைக் கட்டி அதற்கு ஆயிரக்கணக்கான காணி நிலங்களையும் ஜாகீர் மானியம் விட்டு அன்று முதல் இன்று வரையிலும் முழு புலகத்தாரால் ஆசீர்வதிக்கப்பட்டு வருவதோடு, அவர்களுடைய காரணங்கள் இன்னும் நடந்துகொண்டு வருவதைக் காணலாம். இவர்களுடைய சரித்திரத்தை அறிய விரும்புவோர் தமிழிலுள்ள காரண புராணத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

இப்படியே அஜ்மீரில் ஹஜரத்து காஜாமுயீனுத்தீன் ஜிஷ்தி, அவர்களுடையவும் இன்னும் இவ்விந்தியாவில் இவை போன்ற அநேக குத்துபுமார்கள், அவுலியாக்களுடைய ஸமாதியையும், அவர்களுடைய சரித்திரங்களையும் பார்த்துத் தெரிந்து கொள்வதுமன்றி ஆப்பிரிக்காவில் "ஹஜரத் குத்துபுல் அக்பர், வகௌதுல் அஃலம், 'அபுல்ஹஸன் ஷாதிலி, அவர்களுடையவும், சுல்தானுல் ஆரிபீன், செய்யிது அஹமத் கபீர் ரிபாயி, முதலிய முழு உலகத்திலுள்ள எல்லா குத்துபுமார்களின் செய்திகளை அவரவர்களின் மக்பராக்களையும், சரித்திரங்களையும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுடைய சந்ததிகளை அவுலாது றசூலென்றும், ஸாதாத்துகளென்றும் அழைக்கப்படும். இவ்விந்தியாவில் அந்த அவுலாது றசூல்கள் ஆதிகாலத்திலேயே வந்து முழுமையும் பரவி எவ்வளவோ பேர்கள் வசித்துக்கொண்டு வருகிறார்கள். அன்றுதொட்டு இன்று வரையிலும் அவர்களில் ஒருவராவது துன்மார்க்கத்தில் பிரவேசிக்கவாவது, ஒருவரின் கீழ் தொண்டு வேலை செய்யவாவது, போ-



லீஸ் கோர்ட்டுகளில் பிரவேசிக்கவாவது, களவு கொலை முதலிய குற்றங்கள் சாட்டப்பட்டுத் தண்டனையடைந்தாவது இல்லாமல் பரிசுத்தமானவர்களாகவே விளங்கி வருகிறதை இன்றும் பிரத்தியட்சமாய்க் காணலாம்.

அது எப்படியென்று கேட்பீர்களானால் இம்மதராஸில் நபியவர்களுக்குப் பரம்பரை குருவின் சந்ததியில் தோன்றிய செய்யிது ஷா புர்ஹானுத்தீன் ஷா காதிரி பெயகத்துல்லாஹ், திருச்சிறைப்பள்ளியில் இவர்களுடைய சகோதரர் குடும்பத்தைச் சேர்ந்த "செய்யிது ஷா வலீயுல்லா ஷா காதிரி பெயக்கத்துல்லாஹ், வேலூரில் செய்யிது ஷா முஹ்யித்தீன் காதிரி, இப்போர்க்க குடும்பத்தை ஆதிதொட்டும் அந்தம்வரை கவனிக்கையில் தங்கத்திற்குப் பங்கமில்லையென்பதுபோல் ஒவ்வொரு பிள்ளைகளும் வானத்தின் நட்சத்திரங்களைப்போல் இலங்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்களென்றும் முழு உலகத்தாரால் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்களென்றும் அவர்களுடைய சரித்திரங்களையும், மக்பராக்களையும், குடும்பத்தின் நடவடிக்கைகளையும் பார்த்து நன்றாகத் தெரிந்துக் கொள்ளுவதோடு இவ்வாறே நர்கூர்: மலப்பார், பீசாப்பூர், முதலிய முழு இந்தியாவிலும் இதுபோலவே மற்றுமுள்ள முழு உலகத்திலும் இருக்கிற சாதாத்துகளின் நடத்தைகளினால் தெரிந்துக் கொள்ளலாம்.

ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களது குடும்பத்தினர் இத்தகையான காரணங்களும், அதிசயங்களும், அடையாளங்களும் சற்குணங்களும், நற்கிரியைகளும் உள்ள பரிசுத்தவான்களாய் விளங்கி இலங்கிக்கொண்டிருக்கும்போது அவர்களுக்கெல்லாம் சற்குருவாகவும், பரமபிதாவாகவும் இருக்கிற ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுடைய குணங்களும், நடப்புகளும், காரணங்களும், அதிசயங்களும், அடையாளங்களும், கீர்த்திகளும் எத்தன்மையாயிருக்குமென்று நீங்கள் உங்களுக்குள்ளாகவே நன்றாய் ஆலோசித்துப்பார்த்து அவர்கள் மகத்துவத்தைத் தெரிந்து கொள்வீர்களென்பதற்கு ஐயமுண்டோ?

உங்களில் சிலர் மேற்சொன்ன பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் யெகூதருக்குச் சம்பந்தப்பட்டதாயிருக்கும்போது அவைகளை முஹம்மது நபியவர்களுக்கு சம்பந்தப்பட்டதென்று எவ்விதம் சொல்லலாமென்று கேட்கக்கூடும். அதற்கு மறுமொழி சொல்லுகிறேன் சற்று ஆராய்ந்து கேளுங்கள்.

மத்தேயு 21-ம் அதிகாரம் 42, 43, 44-ம் வசனத்திலும் மாற்கு 12-ம் அதிகாரத்திலும், லூக்கா 20-ம் அதிகாரத்திலும்

விடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளிவைத்த கல்லே மூலைக்குத் தலையான கல்லாயிற்று, அதாவது பராபரனாலேயே ஆயிற்று, அது நம்முடைய கண்ணுக்கு ஆச்சரியமா யிருக்கிறதென்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா ஆனதினாலே பராபரனுடைய ராஜ்ஜியம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைத் தருகின்ற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் அன்றியும் அக்கல்லின்மேல் விழுகிறவன் நொறுக்கப்படுவான், அக்கல் எவன்மேல் விழுமோ அது அவனை நசுக்கிப்போடும் என்று யேசு அவர்கள் சொல்லியிருக்கிறதாக கண்டிருக்கின்றது. இவ்வாறே தாவீது அவர்களால் சங்கீதம் 118-ம் அதிகாரம் 22, 23-ம் வசனங்களில் சொல்லியிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதனால் தெரியவருகிற தென்னவென்றால், இஸ்ரவேலர்கள் தங்கள் ஜாதியை விட்டுப் நீக்கிவைத்திருந்த ஒருவர் தங்கள் ஜாதிக்கு முதன்மையாக ஆகியிருக்கிறாரென்றும், அது ஆண்டவனால் ஆக்கப்பட்டிருக்கிற தென்றும், யூதர்கள் வசித்து வருகிற ஜெருசலேம் முதலிய பராபரனுடைய பரிசுத்தப் பட்டணங்கள் அவர்கள் வசமிருந்தும் நீக்கப்பட்டு மேற்படியாருக்குக் கொடுக்கப்படு மென்றும், அவரை யார் எதிர்த்தார்களோ அவர்களும் அவர் யாரை எதிர்த்தாரோ அவர்களும் நொறுக்கப்படுவார்கள் என்றும், சொல்லவேண்டுமெனத் தோன்றுகிறதல்லவா?

யூதர்கள் யாரைத் தங்கள் ஜாதியை விட்டுப் புறம்பாக்கியிருக்கிறார்களென்பதைக் கவனிக்கும்போது, இஸ்ரவேலர்களின் மூதாதையாகிய இபுறாஹீம் நபியின் ஸ்திரீ சாரா அம்மாள் தனது பர்த்தாவின் இரண்டாவது ஸ்திரீயாகிய ஹாஜிரா அம்மாளையும், அவள் குமாரர் இஸ்மாயீல் நபியையும் தன் வீட்டுக்காகாதென்று தள்ளி, தன் ஜாதியை விட்டும் புறம்பாக்கி, வனவாசத்தில் கொண்டு தள்ளிவிட்டாள். அவ்வாறே மேற்படி இஸ்ரவேலர்களும் பரம்பரையாய் பொறாமைகொண்டு இஸ்மாயீல் நபி அவர்களின் குடும்பத்தை தங்கள் ஜாதியிலிருந்து புறம்பாக்கி வைத்திருக்கிறார்களென்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயமே.

பொதுவாக அதை ஆராய்ந்து பார்த்தால் இஸ்மாயீல் நபியின் ஆண்சந்ததியில் உதித்த முஹம்மது நபியவர்கள் தோன்றி, மேற்படி இஸ்ரவேலர் குடும்பத்தாரை நொறுக்கடித்து, அவர்களைத் தமக்குக் கீழாக்கி, அவர்கள் வசித்திருந்த பரிசு



லேம் முதலிய பராபரனின் பரிசுத்த பட்டணங்களைக் கைப்பற்றி, மேற்படி இபுறாஹீம் நபியுடைய ஆசாரத்தை நிலைநாட்டி, இவர்களே அவர்கள் குடும்பத்தில் சூரிய பிரகாசத்தைப் போல் முதன்மையாய்த்தவராய் விளங்கி இலங்கிக் கொண்டிருக்கிறாரென்பதை உலக சரித்திரத்தினாலேயே வெகு தெளிவாகத் தெரிந்துகொள்ளலா மல்லவா?

ஆனால் அப்போஸ்தலர் நடபடிக்கை 4-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் லூக்கா என்பவரால் தாவூத்நபியால் சொல்லப்பட்ட மேற்படி முன் அறிவிப்பு யேசு அவர்களுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று கண்டிருக்கின்றது.

இதை யொருவர் மறுத்து அம்முன் அறிவிப்பு யேசு அவர்களுக்குச் சம்பந்தப் பட்டிருப்பது நிஜமானால் யேசுநாதர், தனக்குச் சம்பந்தப்பட்டிருக்கிற தென்று சொல்லுவாரென்றும் அப்படி அவர் சொல்லாமல் தாவூத் நபியவர்கள் சொன்னதுபோல் தானும் சொன்னதினால் அவருக்கல்லவென்று தெரிகிறதென்றும், அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் யேசுவுக்கு அணுவளவும் சம்பந்தப் பட்டதாயில்லை. எப்படியென்றால் யேசுவின் குடும்பமும் இஸ்ரவேலர் குடும்பமும் ஒன்றே யல்லாது வேறில்லை. இவரால் இஸ்ரவேலர் குடும்பம் நொறுக்கப்படவுமில்லை. யூதர்கள் வசத்திலிருந்த பராபரனின் பரிசுத்த பட்டணங்களாகிய ஜெருசலேம் முதலிய ராஜ்ஜியங்கள் யேசுவால் கைப்பற்றப் பட்டிருப்பதுமில்லை யென்றும், இத்தன்மையான கண்கண்ட கைமெய்யான விஷயத்தை யேசுவுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிற தென்று சொல்லுகிற லூக்காவைப் போலொத்தவர்களா, முஹம்மது நபியவர்கள் விஷயத்தில் வந்திருக்கிற தீர்க்கதரிசனங்களை உள்ளதே யுள்ளபடி சொல்லுவார்கள்? ஒருப்போதும் அத்தீர்க்க தரிசனங்களை அவர்கள் உள்ளது உள்ளபடியே சொல்லமாட்டார்களென்றும் பலவாறாய் தமது "றத்தாத்தஹ்லீது" என்னும் கிரந்தத்தில் வரைந்திருக்கிறாரென்பதைக் காணலாம்.

அன்றியும் 5-ம் மோசே 18-ம் அதிகாரம் 18, 19-ம்வசனத்தில் "நாம் உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை அவர்களுக்கு

அவர்களின் சகோதரர் நபியிலிருந்து எழும்பப்பண்ணி நம்முடைய வார்த்தைகளை அவர் வாயிலேயே அருளுவோம். நாம் அவருக்குக் கற்பித்ததை யெல்லாம் அவர்களோடு அவர் சொல்லுவார். அவர் நமது நாமத்தினாலே சொல்லும் நமது வார்த்தைகளைக் கேளாதவர்களை நாம் விசாரிப்போம்" என்று கண்டிருக்கிறது.

முஹம்மது நபியவர்களோ சகல விஷயத்திலும் மூஸாநபியவர்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். ஆண்டவனுடைய வார்த்தையை அவர்கள் வாயிலருளி அவர்கள் பிஸ்மில்லா என்கிற அவனுடைய நாமத்தினாலே வெளிப்படுத்தியிருக்கிறார்களென்பதற்கு குர்ஆன் ஷரீபே பகிரங்க சாக்ஷி பகர்ந்துகொண்டிருக்கிறதுமன்றி அவர்கள் வார்த்தைக்குச் செவிகொடாதவர்கள் சபிக்கப்பட்டுப் போனார்களென்பது உலகறிந்த விஷயமே.

அன்றியும் மூஸாநபியவர்களோ அஞ்ஞானிகளோடு யுத்தஞ்செய்து தங்களுடைய மார்க்கத்தை ஸ்தாபகம் செய்தார்கள். முஹம்மது நபியவர்களும் அவ்வாறே தங்கள் மார்க்கத்தை ஸ்தாபகம் செய்தார்கள்.

மூஸாநபியவர்களுக்கோ விதிவிலக்குகள் அடங்கிய தௌறாத் வேதத்தை ஆண்டவனால் கொடுக்கப்பட்டது. முஹம்மது நபியவர்களுக்கும் அவ்வாறே புருக்கான் வேதத்தைக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மூஸா நபியவர்களோ தாய் தகப்பன் மூலமாய் பிறந்து, சமுசார சகிதமாய் வாழ்ந்து, குடிபதியாயிருந்து, மார்க்கத்தைப்போதித்து, அடக்கமாகினர். அவ்வாறே முஹம்மது நபியவர்களும் இருக்கின்றனர்.

மூஸா நபியவர்களோ தங்கள் பிறந்த ஊராகிய மிஸ்றை விட்டு மீதியான் வந்திருந்தார்கள். அவ்வாறே முஹம்மது நபியும் மக்காவை விட்டு மதீனா வந்திருந்தார்கள்.

மூஸா நபிக்கு சீனா பர்வதத்தில் தீர்க்கதரிசனம் கிடைக்கப்பட்டது. முஹம்மது நபியவர்களுக்கோ பாரான் பர்வதமென்கிற ஹிறா மலையில் 5-ம் மோசே 33-ல் 2-ஆம் ஆயத்



3 ல், 3ஆம் கண்டபடி தீர்க்கதரிசனம் கிடைத்திருக்கின்றது.

மூஸா நபியோ சுவாக்கு என்கிற இஸ்ரவேலர் குடும்பத்தில் நபியாய் வெளிப்பட்டு, முடிவில் அவர்கள் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டு, அக்குடும்பத்தில் நடுநாயகமாயிருந்து இலங்கிக்கொண்டிருந்தார்கள். முஹம்மது நபியோ இஸ்மவேலர் என்கிற அரபிக் குடும்பத்தில் நபியாய்த்தோன்றி, முடிவில் அவர்கள் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களெல்லோருக்கும் இவர்களே நடுநாயகமாய் இலங்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும், சிலர் மூஸா நபியவர்களும், முஹம்மது நபியவர்களும் ஊர், பேர், வேதம், பாஷை ஆகிய எல்லாவற்றிலும் ஒன்று போலிருக்கிறார்களென்று சொல்லுகிறார்கள். அதெப்படியென்றால்:—

மூஸா என்கிற பேர் 4 எழுத்து, அதின் தலையெழுத்து மீம். இதுபோல முஹம்மத் என்கிற பேர் 4 எழுத்து இதின் தலையெழுத்து மீம்.

மூஸா நபியோ பிறந்த ஊர் மிஸ்று, இது மூன்றெழுத்து இதின் தலையெழுத்து மீம். முஹம்மது நபியோ பிறந்த ஊர் மக்கா இது மூன்றெழுத்து இதின் தலையெழுத்து மீம்.

மூஸா நபியவர்களோ போய்ச் சேர்ந்த ஊர் மீதியான் இது ஐந்தெழுத்து இதின் தலையெழுத்து மீம். முஹம்மது நபியவர்களோ போய்ச்சேர்ந்த ஊர் மதீனா இது ஐந்தெழுத்து இதின் தலையெழுத்து மீம்.

மூஸா நபியவர்களின் தகப்பனார் இம்ரான் இதின் தலையெழுத்து-ஐன்-முஹம்மது நபியவர்களின் தகப்பனார் அப்துல்லா இதின் தலையெழுத்து ஐன்.

மூஸா நபியவர்களின் வேதம் அபரானிபாஷை இதின் தலையெழுத்து-ஐன்-முஹம்மது நபியவர்களின் வேதம் அரபானி பாஷை இதின் தலையெழுத்து ஐன்.

மூஸா நபியவர்களின் தலைப்பெயர்-ஐன்-மு-முஹம்மது நபியவர்களின் தலைப்பெயர். ஐன்-மு.

மூஸா என்பதில் மீம் 40, வாவு 6, சீன் 60, யே 10 ஆக
116 இதைப் பன்னிரண்டில் வகுத்தால் மீதி 8.

முஹம்மது என்பதில் மீம் 40, ஹே 8, மீம் 40, தால் 4,
ஆக 92 இதை பன்னிரண்டில் வகுத்தால் மீதி 8;

இன்னும் இம்மாதிரியாக ஒவ்வொருவரும் மூஸா நபியவர்
களும் முஹம்மது நபியவர்களும் ஒன்று போலவே இருக்கிறா
ரென்று பலவாறுய்ச் சொல்லியிருக்கிறார்களென்பதை "மிஷலி
யத்தேமூஸா" முதலியகித்தாபுகளில் பார்த்துக்கொள்ளலாம்.

ஆனால் அப்போஸ்தலர் நடபடிக்கை 3-ம் அதிகாரம் 22-ம்
வசனத்தில் லூக்கா என்பவரால் ஷை வசனம் யேசுநாதருக்குச்
சம்பந்தப்பட்டதாய் எழுதப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம்களில் ஒருவர் அதை மறுத்து ஷை வசனத்தில்
மோசேயைப்போல் ஒரு தீர்க்கதரிசியை அவர்களுக்காக
அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவேன் என்று
கண்டிருப்பதால் 1-ம் மோசே 16-ல் 12-லும் இன்னும் ஷை
1-ம் மோசே 25-ல் 18-லும், கண்டபடி இஸ்ரவேலரின் சகோ
தரரான இஸ்மவேலரிலிருந்து வரக்கூடியவரென்றும், இஸ்ர
வேலர் குடும்பத்திலிருந்து வரவேண்டுமானால் உங்கள் குடும்
பத்திலிருந்து வரவேண்டுமென்று சொல்லவேணு மென்றும்,
அவ்விதம்சொல்லாததினால்அக்குடும்பத்தினர்க்கில்லையென்றும்,
எவ்விதத்திலும் மோசேக்கு யேசு ஒப்பாயிருக்கவில்லை யென்
றும், யேசு அவர்களுக்கு அது எள்ளளவும் சம்பந்தப்பட்ட
தல்லவென்று நிட்சயமாகச் சொல்லலாமென்றும், இந்தத் தர்க்
கம் கிளம்பினதற்குப் பின் அவர்களின் சகோதரர் என்கிற வார்த்
தையை எடுத்துப்போட்டு அதற்குப் பதிலாய் உங்கள் வங்கி
ஷத்தில் என்கிற வார்த்தையை மதராஸ் 1847-ம் வருஷத்தில்
தமிழில் அச்சுப் பதிக்கப்பட்டிருக்கிற அப்போஸ்தலர் நடபடி
க்கை 7-ம் அதிகாரம் 37-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிற
தென்றும், இதற்கு முன்னேயாவது மேற்படி வருஷத்தில் அச்சுப்
பதிக்கப்பட்ட 5-ம் மோசே 18-ம் அதிகாரம், 18-ம் வசனத்தி
லும், அதற்கு முன் 1842-ம் வருஷம் கல்கத்தாவில் பார்வதி
லும், இந்துஸ்தானியிலும் அச்சிடப்பட்ட ஷை நடபடிக்கை



யில், அவர்கள் சகோதரரில் என்று எழுதப்பட்டிருக்கிறதைக்
காணலாமென்றும், பலவாறுய் தமது "றத்துத்தஹ்லீத்" என்
னும் கிரந்தத்தில் வரைந்து இருக்கின்றதைப் பார்க்கலாம்.

அன்றியும் இதற்கு முன் ஒருவர் சகோதரர் என்கிற வார்
த்தையைக் காட்டாமல் மொத்தமாய் ஷை வசனம் முஹம்மது
றசூலுல்லா அவர்களுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று
சொன்னாரென்றும், அதற்குப் பின் பாதிரிமார்கள் சகோதரர்
நடுவில் என்கிற வார்த்தையைச் சேர்த்தார்களென்றும், அதற்கு
ருஜூ எப்படியென்றால் ஆதியிலுள்ள கிரேக்கு பாஷை தர்
ஜுமாவாகிய சீனிவார்ஜென்ட் என்பதிலும், யூதர்கள் ஒன்று
கூடி சந்தரிம் என்பவருடைய உதவியினால் அலக்சாண்டிரியா
பட்டணத்தில் செய்த தர்ஜுமாவிலும் நடுவே என்கிற வார்த்
தை கண்டிருப்பதில்லை யென்றும் தமது கிரந்தமாகிய "மிஷா
ரத்தே மிஷலிலே மூஸா" என்னும் கிரந்தத்தில் சொல்லியிருக்
கின்றனர்.

பின்னுஞ் ஒருவர் ஷை வசனத்தில் என் வார்த்தைக்குச்
செவி கொடாதவர்களை நான் சங்கரிப்பேன் என்றெழுதியிருந்த
தென்றும், முஹம்மது றசூலுல்லா அவர்களுக்குச் செவி கொ
டாதவர்கள் சங்கரிக்கப்பட்டுப் போனபடியால் அவ்வார்த்தை
யை எடுத்துவிட்டு விசாரிப்பேன் என்கிற வார்த்தையைச் சேர்த்தி
ருக்கிறார்களென்றும், பலவாறுய் தமது "பவாயிதே பதரியா"
என்கிற சரித்திரத்தில் எழுதியிருக்கிறார்.

பின்னும் ஒருவர் இப்படியே ஒவ்வொரு காலங்களில் உண்
டாகிற ஆக்ஷேபனைகளுக்குத் தக்கவாறாக பைபிளில் சமய
சமயத்துக்குத் தகுந்தபடி கூட்டியும், குறைத்தும், திருத்தியும்
இருக்கிறார்களென்றும், அது யாரால் என்னவிதமாய்ச் சொல்
லப்பட்டது, அதற்கு யாரால் என்னவிதமாய்த் திருத்தப்பட்
டது, என்கிற முழுவிபரத்தை வருஷம், மாதம், தெய்தி, பக்கம்
முதலியவைகளை வகை வகையாய் எடுத்து தமது "இஜ்ஹாறு
ல்ஹக்" என்னும் அரபி கிரந்தத்தில் ஒரே தொடராய் 100
பக்கங்கள் வரை வரைந்திருக்கிறாரென்பதைக் காணலாம்.

இவ்வாறே முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் பற்பல விதங்களாய் சம்பாஷணைகள் புரிந்தும் மறுப்புகள் எழுதியும் பிரசுரித்தும் வருகிறார்கள். நான் சமாதானத்தை விரும்பினவனே யல்லாது மறுப்பையும், தகராரையும் விரும்பினவனல்ல. ஆகையினாலேயே அவைகளையெல்லாம் விவரித்து விளக்கி எடுத்துச்சொல்ல எனக்கு மனமில்லாமல் ஞாயத்தை வெளிப்படுத்தி ஐக்கியத்தையே போதிக்க முன் வந்திருக்கிறேனென்பதே.

அன்றியும் சகரியா 13-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் அந்நாளில் பாவத்தையும் அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும்; ஜெருசலேமின் குடிகளுக்கும் ஒரு ஊற்று உண்டாயிருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதைப் பொதுவாகக் கவனித்தால் 1-ம் மோசே 21-ம் அதிகாரம் 19-ம் வசனத்திலும், ஷை 1-ம் மோசே 21-ம் அதிகாரம் 30-ம் வசனத்திலும் கண்ட பிரகாரம் பெயர்ஷெபா என்றழைக்கப்படுகிற மக்காவில் ஆபிரகாமுக்கும், அவர் குமாரராகிய இஸ்மவேலுக்கும் ஆண்டவனால் ஸம் ஸம் என்கிற ஒரு ஊற்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அக்கிணறு வற்றாத ஊற்றாகவும், அத்தண்ணீரோ எவ்வளவுகாலமானாலும், சளிக்காமலும், புளிக்காமலும், புழுக்காமலும், குறையாமலும் இருக்கிறதுமன்றி, அதை ஒருவன் பசியாயிருந்து குடித்தால் பசி தீர்கிறது; பசிக்காமலிருந்து குடித்தால் பசி யுண்டாகுமேதவிர ஒருவன் குடித்தாலும், குளித்தாலும் அவனிலுள்ள பிணி நீங்கிவிடுகிறதினாலேயே அதைப் பாவத்தையும் அழுக்கையும் நீக்குகிற ஊற்று என்று அந்நாளிலேயே அழைக்கப்பட்டு வருகின்றது. யாராவது மரிக்கும் நேரத்தில் பாலையும், தேனையும் அவன் நாவில் தொட்டு வைப்பதற்குப் பதிலாக அத்தண்ணீரைத் தொட்டு வைத்துவருகிற வழக்கத்தை இன்றுங் காணலாம்.

இஸ்ரவேலரென்கிற யூதர்களுக்கும், இஸ்மவேலரென்கிற அரபியருக்கும் உண்டான சில விபாதங்களினால் தாவீதின் குடும்பத்தாரும், ஜெருசலேமின் குடிகளும் அத்தூரவின் தண்



ணீரையருந்தத் தடைபட்டிருந்ததற்காகவே சகரியா நபியவர்களால் மேற்படி தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டிருக்கின்றது.

அப்பிரகாரமே முஹம்மது நபியவர்கள் உத்தரவுக்கு ஜெருசலேமின் குடிகளும், தாவீதின் குடும்பங்களும் கீழ்ப்படிந்து தங்கள் ஆதீனத்தையும் அதிகாரத்தையும் அவர்களிடம் ஒப்படைத்த அந்நாளில் ஷை ஊற்று அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றதென்பது யாவருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே.

ஆனால் சில கிறிஸ்தவ அன்பர்கள் அத்தூரவென்பது யேசுநாதருடைய இரத்தமாயிருக்கிறதென்றும், அதுவே பாவத்தையும் அழுக்கையும் நீக்குகிற ஊற்றாயிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். இதற்கு மறுப்பாக முஸ்லிம்களும்பலவாறாய் எழுதத் துணிகிறார்களென்பதே.

அன்றியும் ஏசாயா 42-ம் அதிகாரம் 7-ம் வசனத்தில் கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடையகையைப்பிடித்து, உம்மை தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு பிரகாசமாகவும்வைக்கிறேன் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதிற் கண்ட பிரகாரம் மேஜராத்து முஹம்மது நபியவர்களை வானங்களின்மேல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆண்டவனிடம் சென்று, இவர்கள் கையைப்பிடித்து, அவன் ஆசீர்வதித்து, அவனுடைய ரகசியங்களையெல்லாம் இவர்களுக்கருளி, அவனோடு இவர்கள் வசனித்து வந்திருக்கிறார்களென்பது உலகப் பிரசித்தமே.

இதன் முழு விவரத்தை மிஃராஜ் என்னும் ஆகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுவதோடு ஷை வசனத்திலுள்ள கண்ட செய்திகளை குர்ஆன் 15-ம் ஜுஸ்வு, 1-ம் ருக்கூவு 1-ம் ஆயத்திலும், 26-ம் ஜுஸ்வு, 9-ம் ருக்கூவு 1-ம் ஆயத்திலும், இன்னும் இவைபோன்ற அநேக ஆயத்து, ஹதீதுகளினாலும், தெரிந்து கொள்ளலாம்.

அத்தருணத்திலுமியாக நபியவர்கள் ஆண்டவனை சந்தித்தபோது, இவர்கள் ஆண்டவனுக்குச் செய்த துதியும், ஆண்டவன் அந்நபிக்குப் பிரதியாக அருளிய ஆசீர்வாதமும், அவ்வாசீர்வாதத்தை

நபியவர்கள் வெகு ஆனந்தத்தோடு ஏற்றுக் கைக்கொண்டதும், இச்சம்பவத்திற்காக எல்லா வானோர்களும் ஆண்டவனையும் நபியவர்களையும் துதித்துச் சாட்சி பகர்ந்ததும் ஆகிய அவ்வார்த்தையெல்லாம் ஒன்றுதிரட்டி அவைகளுக்கு "அத்தஹிய்யாத்" என்றழைத்து அவ் "அத்தஹிய்யாத்" தையே அதற்கு ஞாபகக்குறியாக எல்லாத் தொழுகைகளிலும் ஓதப்பட்டு வருவதானதே அவர்கள் ஆண்டவனிடம் வசனித்து வந்ததற்கு பஹிரங்க சாக்ஷியாயிருக்கிறதென்று யாவரும் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால், சிலர் "அத்தஹிய்யாத்" என்பது என்னவென்று கேட்கக்கூடும், அது என்னவென்றால்:—சொல்லாலும், செயலாலும், பொருளாலும், உள்ள எல்லா வணக்கங்களும், துதிகளும், காணிக்கைகளும், ஆண்டவன் ஒருவனுக்கே உண்டானவதாக என்று மூன்று வார்த்தையால் ஆரம்பமாக நபியவர்கள் ஆண்டவனைத் துதித்தார்கள்.

அதற்குப் பிரதியுத்தரமாக ஆண்டவன் என்னுடைய ஸலாமென்னும் ஈடேற்றமும், றஹ்மத் என்கிற கருணையும், பறகத் என்கிற பெருக்கமும் நபியே உமக்குண்டாகக் கடவதென்று மூன்று வார்த்தையால் ஆண்டவன் ஆசீர்வதித்தான்.

அப்பொழுது நபியவர்கள் ஆண்டவன் நமக்குத்தானே சொன்னான், நமது உம்மத்துகளென்னும் தொண்டர்களையும், மற்றுமுள்ள நல்லடியார்களையும் இதிற் சேர்க்கவில்லையே என்றுகருதி, மேற்படி மூன்று வார்த்தையின் கருத்தும் ஒன்றாகத் திரளக் கூடிய ஒரே வார்த்தையாக இவைகள் யாவும் எங்களுக்கும் மற்றுமுண்டான நல்லடியார்களுக்கும் உண்டாவதாக என்றுரைத்து ஆண்டவனின் ஆசீர்வாதத்தைக் கைக்கொண்டார்கள்.

அப்போது ஜிபுறீல் முதலியயானோர்கள் மெய்யாக எல்லா வணக்கத்திற் குரியவன் ஆண்டவன் ஒருவனென்றும், முஹம்மது நபியவர்கள் அவனுடைய திருத்தொண்டராகவும் தூதராகவுமிருக்கிறார்களென்றும் நிச்சயமாய் அறிந்து சாட்சி பகர்ந்து துதி கூறினார்கள்.



இவ்வாறான அரபு வாக்கியத்தையே தொழுகையின் விஷயங்களெல்லாம் முடிந்த பின்னர் கடைசியாய் ஓதி நபியவர்கள் பேரிலும் அவர்கள் குடும்பத்தினர் பேரிலும் ஸலவாத்து என்கிற கருணையை ஓதினவுடன் தனக்கும், தன் தாய் தகப்பன், குரு மற்றுமுண்டான இறந்த, இருக்கிற எல்லா நல்லடியார்களான ஆண் பெண் அனைவருக்கும் பாவமன்னிப்பு தேடித் தொழுகையை விட்டு நீங்கிவிடுவதென்பதே.

இதற்கிணங்கவே ஆபகூக் 3-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் உம்முடைய ஜனத்தின் ரட்சிப்புக்காகவும், நீர் அபிஷேகம் பண்ணிவைத்தவனோடு ரட்சிப்புக்காகவும், ஏற்றப்பட்டீர் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இவ்வாறே "வித்திரியா" என்னும் கிதாபில் அலிபு என்கிற காபியாவில் 3-ம் கவியில் ஜனங்களுடைய ரட்சிப்புக்காகவும், கடினமான விதிகளை இலேசாக்கி வைப்பதற்காகவும் தம்முடைய மகத்துவம் அதிகப்படுவதற்காகவும் நபியவர்கள் வானத்தின்மேல் ஏற்றப்பட்டு ஆண்டவனிடம் வசனித்து வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறதென்பதே.

அன்றியும் 1-ம் மோசே 49-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதுமில்லை. நியாயப் பிரமாணிக்கன் அவர் பாதங்களை விட்டு ஒழிவதுமில்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்களென்று சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

யூதர்களும் கிறிஸ்தவர்களும், ஒன்றுக்கொன்று வேறுபட்டு இவர்களை அவர்கள் பாவியென்றும், அவர்களை இவர்கள் பாவியென்றும் சொல்லிப் பற்பல கலகங்கள் புரிந்துகொண்டு வந்ததை ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் வந்து இபுறாஹீம் நபியவர்களின் மார்க்கமாகிய இஸ்லாமார்க்கத்தைக் கடவே தனக்கு லாவாக வைத்துக்கொண்டு அம்மார்க்கத்தைக் கடந்து ஈசா, உசைர் முதலிய நபிமார்களை தாழ்த்தவாவது உயர்த்தவாவது கூடாதென்று இருகட்சிக்காரர்களுக்கும் சமாதானம் சொல்லி மேற்படி யூதாவின் ராஜ்யத்தை இவர்கள் கைப்பற்றி அவர்களின் வேதபிரமாணங்களெல்லாம் ஒழிந்துபோய், ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் நபியவர்களைப் பின்பற்றி வந்தமையால் மேற்படி வசனம் நபியவர்களைச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று நன்றாய் தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் கிறிஸ்துவ அன்பர்கள் யேசுநாதரைச் சமாதான கர்த்தரென்று சொல்லி அவர்களுக்கு இவ்வசனம் சம்பந்தப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அதை மறுத்து முஸ்லிம்கள் மத்தேயு 10-ம் அதிகாரம் 34-ம் வசனத்தில் யேசுநாதர் நான் பூமியில் சமாதானத்தைச் செய்ய வந்தேனென்று எண்ணாதீர்கள். சமாதானத்தையல்ல பட்டயத்தையே வரப்பண்ண வந்தேனென்று யேசுநாதர் சொல்லியிருப்பதால் யேசுநாதர் சமாதானத்துக்கு வந்தவரல்லவென்று தெரிகிறதோடு அவர்கள் காலத்தில் யூதாவின் செங்கோல் நீங்கவில்லையென்றும் அவர்களின் வேதப்பிரமாணங்கள் ஒழியவில்லையென்றும் ஜனங்கள் அவரிடத்தில் சேரவில்லையென்றும் தெரிகிறதினால் இவ்வசனம் அவர்களுக்குச் சம்பந்தப்பட்டதல்லவென்று சொல்லுகிறார்கள்.

அன்றியும் ஏசாயா 9-ம் அதிகாரம் 7-ம் வசனத்தில் தாவீதின் சிங்காசனத்தையும், அவருடைய ராஜ்ஜியத்தையும் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும் படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்திற்கும் முடிவில்லை என்று சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

இப்பிரகாரமே ஹஜரத் முஹம்மது றசூலுல்லா அவர்களாலே தாவீதின் சிங்காசனத்தையும், ராஜ்ஜியத்தையும் திடப்படுத்தி அதை என்றென்றைக்கும் தன்னுடைய நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தி அதன் சமாதானத்துக்கு முடிவில்லாமலிருப்பதோடு அவர்களின் பிடரியின்மீது கர்த்தத்துவம் என்னும் "முஹர் நுபுவத்" என்கிற நபிமார்களின் கடைசி நபியென்பதின் முத்திரையும் பதிக்கப்பட்டிருந்ததால் இவ்வசனம் நபியவர்களுக்கே சம்பந்தப்பட்டிருக்கிறதென்று யாரும் சொல்லாமலே நன்றாய்த் தெரிந்துகொள்ளலாமல்லவா?

மேற்படி முஹர் நுபுவத் நபியவர்களின் பிடரியின்மீது எவ்விதமாய் பதிக்கப்பட்டிருந்ததென்றும், அது எவ்வடிவாயிருந்ததென்றும், அதில் என்ன வரையப்பட்டிருந்ததென்றும் அது உலகத்தில் என்ன விதமாய் பிரஸ்தாபத்திற்கு வந்ததென்றும், அறிய விரும்புவோர்கள் இப்புஸ்தகம் 3-ம் அதிகாரம் 48, 49, 50, பக்கங்களில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் சில கிறிஸ்துவ அன்பர்கள் மேற்படி வசனம் யேசுநாதருக்குச் சம்பந்தப்பட்டதெனச் சொல்லுகிறார்கள். அதை மறுத்து முஸ்லிம்கள் யேசுநாதரால் தாவீதின் ராஜ்ஜியத்தைக்



கைப்பற்றப் படவுமில்லை, இவருடைய நீதியினாலும், நியாயத்தினாலும் அவர் ராஜ்ஜியம் நிலைப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை இவர் சமாதானத்துக்காக வந்தவருமில்லை, இவர் பிடரியின்மீது கர்த்தத்துவம் என்கிற "முஹர் நுபுவத்" பதிக்கப்பட்டிருந்ததுமில்லையென்று சொல்லுகிறார்கள்.

அன்றியும் ஏசாயா 28-ம் அதிகாரம் 1, 2, 3, 7, வசனங்களில் மதுபான பிரியரான குடியர்களைக் கண்டித்து, அக்குடியையும் அவர்களுடைய துர்க்கிரியைகளையும் நிவாரணம் செய்யத்தக்கதாய் ஒரு நபிவருவாரென்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இவ்வசனத்திற் கண்டபடி மதுபான கிரியைகளை அடியோடு தொலைத்துவிட்டது ஹஜரத் முஹம்மது றசூலுல்லாவென்பது எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த உலக பிரசித்தமாயிருக்கின்றமையால் மேற்படி வசனத்தில் கண்டுள்ள தீர்க்கதரிசி நபியவர்களாய் இருக்கிறார்களென்று வெகு தாட்டிகமாகச் சொல்லலாமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

ஆனால் சில கிறிஸ்துவ அன்பர்கள் அது யேசுநாதருக்குச் சம்பந்தப் பட்டதென்றும், அக்குடி யேசுநாதரால் விலக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதை மறுத்து முஸ்லிம்கள் யோவான் 2-ம் அதிகாரத்தில் கானான் ஊரில் ஒருவன் வீட்டில் கலியாணம் நடந்ததாயும், யேசு அவர்களும் அவருடைய சீஷர்களும், அங்கே போயிருந்தார்களென்றும், திராட்சரசம் குறைந்திருந்ததைக் குறித்து யேசுநாதரிடம் அறிவித்தார்களென்றும், அவர் 6 கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பும்படியாகச் செய்து அத்தண்ணீரைத் திராட்சரசமாகும்படி செய்தாரென்றும், கண்டிருக்கிறதினால் யேசுநாதர் குடியை விலக்கவந்தவரல்லவென்றும் தெரிகிறதோடு 1-ம் தீமோத்தேயு 5-ம் அதிகாரம் 23-ம் வசனத்தில் திராட்சப்பழரசத்தைச் சௌக்கியத்துக்காகப் பானம் செய்யும்படி கண்டிருக்கிறதுமன்றி, இதற்கனுசரணையாகவே மேற்படி தீமோத்தேயு 4-ம் அதிகாரம் 3, 4, வசனங்களினும், தீத்து 1-ம் அதிகாரம் 15-ம் வசனத்திலும் கண்டிருக்கிறதினால் கிறிஸ்து மதத்தினால் குடியைப்பற்றிக் கண்டனம் செய்யப்பட்டிருக்கவில்லையென்றும் சொல்லுகிறார்களென்பதே.

ஆனால் சில கிறிஸ்துவ அன்பர்கள், 29-ம் ஜூஸ்வு 19-ம் * றுக்கூவு 21-ம் ஆயத்தினால் பரலோகத்தில் பரிசுத்தமான குடி

ப்பைக் கொடுக்கப்படுமென்று குர்ஆனில் வருவதால், குடிப்பைப்பற்றிச் சற்று இடங்கொடுக்கப் பட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். அநேகர சுத்தப் பிசகு. அவ்வாயத்தின் பொருளென்னவென்றால், பரலோகத்திலுள்ளவர்களுக்கு தேவாமிர்த குடிப்பை அவர்களுக்கு ஆண்டவனே புகட்டுகிறான் என்றிருப்பதால் மதுபான குடிப்பென்று அது அறுவவரும் சொல்லப் பொருந்தாது. இவ்வாயத்திலேயே அநேக ஞானிகள் அதைப் பேரின்ப தேவாமிர்த குடிப்பென்றுசொல்லி அக்குடிப்பை இவ்வுலகத்தில் அருந்தாதவனுக்கு அவ்வுலகத்தில் ஒன்றுமில்லையென்று கருதி அதற்காகவே தாங்கள் பாடுபட்டு வருகிறார்களென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

இதன் விவரங்களைச் "செழுக்கேனுக்கும் தீன் உயிர்விளக்கம்" முதலிய புஸ்தகங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

அன்றியும், ஏசாயா 60-ம் அதிகாரம் 17-ம் வசனத்தில் உம்முடைய கண்காணிகளைச் சமாதான முள்ளவர்களாகவும் உம் தண்டக்காரரை நீதியுள்ளவர்களாகவு மாக்குவேன். (18) இனிக் கொடுமை உம்முடைய தேசத்திலும், அழிவும் நாசமும், உம்முடைய எல்லைகளிலும், கேட்கப்பட மாட்டாது. உம்முடைய மதில்களை இரக்ஷிப்பென்றும், உம்முடைய வாசல்களைத் துதியென்றும், சொல்லுவீர். (19) இனிச் சூரியன் உமக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும் சந்திரன் தன் வெளிச்சத்தால உமக்குப் பிரகாசியாமலும் கர்த்தரே உமக்கு நித்திய வெளிச்சமும் தேவனே உமக்கு மகிமையுமாயிருப்பார். (20) உம்முடைய சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை, உம்முடைய சந்திரன் மறைவதுமில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதனால், ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுடைய றவுலா என்னும் திருமேனியைப் பொதிந்திருக்கிற ஆலயத்தின் மதில்களையும், அதின் வாசல்களையும் அது பொதிந்திருக்கிற மதீனமா நகரத்தையும் அதிலிருக்கிற ஜனங்களையும் ஆசீர்வதித்திருக்கப் பட்டிருப்பதோடு அவர்களுடைய பொழுதும், பிறையும் அடையாமல் உலகம் முடிவுவரையும் நிலையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென்றும், தெரிந்துக்கொள்ளலாமல்லவா?

இதன் வியாக்கியானத்தை எடுத்துச் சொல்லவேண்டுமானால் அதிக விரிவாகுமென்று நிறுத்துகிறேன்.



இன்னும் சங்கீதம் 45-ம் அதிகாரம் 1-முதல் 17-வரையிலும் ஷை சங்கீதம் 2ம் அதிகாரம் 6 முதல் 12 வரையிலும் ஏசாயா 60ம் அதிகாரம் 1 முதல் 22 வரையிலும், ஷை ஏசாயா 42ம் அதிகாரம் 1 முதல் 25 வரையிலும், ஷை ஏசாயா 54-ம் அதிகாரம் 1 முதல் 17 வரையும் தானியேல் 2-ம் அதிகாரம் 1-முதல் 44-வரையும் சகரியா 11-ம் அதிகாரம் 15 முதல் 17 வரையிலும், 12, 13, 14-ம் அதிகாரத்திலும், 5-ம் மோசே 33-1-2-8-ம் வசனத்திலும் இன்னும் பழைய ஏற்பாட்டு அநேக வசனங்களிலும், ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிற முன் அறிவிப்புகளை எடுத்துச்சொல்ல விரியுமென்று நிறுத்துகிறேன்.

அன்றியும் யோவான் வெளி 2-ம் அதிகாரம் 26-ம் வசனத்தில் ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் காத்துக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு என் பிதாவிடத்தில் நான் பெற்றதுபோல் ஜனக்கூட்டங்களின் மேல் அதிகாரத்தைக் கொடுப்பேன். (27) அவன் இருப்புக்கோலால் அவர்களை நடத்திக்கொள்வான்... அவர்கள் மண் கலயங்களைப் போல் நொறுக்கப்படுவார்கள் (28) அல்லாமலும் விடிவெள்ளி நக்ஷத்திரத்தை அவனுக்குக் கொடுப்பேன் என்று யேசுநாதர் சொல்லியிருக்கிறதைக் காணலாம்.

இதிற் கண்டபடி யேசு அவர்களின் கிரியை என்கிற இபுறுஹீம் நபியவர்களின் ஆசாரத்தை முஹம்மது றசூலுல்லா அவர்களே ஜெயங்கொண்டு, உலக முடிவுபரியந்தம் ஸ்தாபித்து அவர்களே ஜனக்கூட்டத்தின் மேல் அதிகாரம் பெற்று எதிரிகளை மண் கலயங்களைப் போல் நொறுக்கி, இருப்புக் கோலின் ஆஞ்ஞையுடையவராய், உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாயிருக்கிறார்கள்.

இரவின் முடிவிற்கு அறிகுறியாக விடிவெள்ளி நக்ஷத்திரம் தோன்றுகிறதென்பதும், உலகம் முடிவிற்கு அறிகுறியாக சந்திரன் பிளக்கப்படுமென்பதும், எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களே உலகத்திற்கு முடிவுகால தீர்க்கதரிசியாக இருப்பதற்கு அறிகுறியாகவே அவர்களால் சந்திரனை அழைத்து பிளக்கப்பட்டு இருப்பதுமன்றி, உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் இருக்கிறார்கள். ஆனதினாலேயே முஸ்லிம்களுடைய கொடியில் இருக்கிறபிறையும், என்றும் குறையாத நக்ஷத்திரமுமன்று அமை

க்கப்படுகிற பிறையும் வெள்ளியும் போடப்பட்டு வருகிறதென்பது உலகப் பிரசித்தமே.

ஆனால் சிலர் ஏசுநாதரின் கிரியைகளை இபுறுஹீம் நபியின் கிரியைகளென்று எப்படி சொல்ல பொருந்தும் என கேட்கக்கூடும். அதற்கு பிரதி யுத்தரமாவது:—

1-ம் மோசே 17-ம் அதிகாரம் 7-ம் வசனத்தால் ஆண்டவன் ஆபிரகாமுக்கு இட்ட கட்டளைகள் அவருக்கும் அவருக்குப் பின்வரும் சந்ததிகளுக்கும் உலக முடிவு பரியந்தம் நித்திய கட்டளையாய் ஸ்தாபித்திருக்கிறான் என்று தெரிந்துகொள்வதுமன்றி அவர் மகன் ஈசாக்குக்கு பின்னும் அதை உறுதிப்படுத்தி நித்திய கட்டளையாய் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறதென்பதை மேற்படி அதிகாரம் 19-ம் வசனத்தாலும், மேற்படி 1-ம் மோசே 26-ம் அதிகாரம் 4-ம் வசனத்தாலும் தெரிந்துகொள்ளலாம்.

எவன் அக்கட்டளைக்கு மீறுவானோ அவன் தன் ஜாதியிலிராதபடி அறுப்புண்டு போவான் என்கிறதை மேற்படி 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறதுமன்றி, 1-ம் மோசே 12-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் ஆபிரகாமை யார் ஆசீர்வதிக்கிறாரோ அவரை ஆண்டவன் ஆசீர்வதிப்பானென்றும், அவரை சபிக்கிறவனை ஆண்டவன் சபிப்பானென்றும் தெரிந்துகொள்வதோடு 5-ம் மோசே 27-ம் அதிகாரம் 26-ம் வசனத்தில் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை செய்யத்தக்க விதமாய் செய்யாவிட்டால் சபிக்கப்பட்டு போவான் என்று சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஏசுநாதரோ (கலாத்தியர் 3-16.) ஆபிரகாமுடைய வம்சத்தில் உள்ளவராயிருப்பதாலும்; ஆபிரகாமுக்கு ஆண்டவன் இட்ட கட்டளைகளை உலகம் முடிவுவரையும் அவர் வம்சத்தார் நடக்கவேண்டிய நித்திய கட்டளையாயிருப்பதாலும், ஏசுநாதர் அக்கட்டளைகளுக்கு உள்பட்டு நடக்க கடமைபட்டவராயிருக்கிறார். ஆனதினலேயே மத்தேயு 5-ம் அதிகாரம் 17-ம் வசனத்தில் வேதப் பிரமாணங்களையாவது தீர்க்க தரிசனங்களையாவது தள்ளும்படி செய்ய அல்ல அதை நிறைவேற்ற வந்தேன் என்று ஏசுநாதரால், அதை உறுதிப்படுத்தி சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

இக்கட்டளைகளை மறுக்க யாரவது ஏதாகிலும் சொல்லுவார்களேயானால் ஏசுநாதர் மேற்படி வசனப்படி ஆபிரகாம் சந்ததி



யில் இராதபடி அறுப்புண்டு படுகிறவராகவும் சபிக்கப்படுகிறவராகவும் இருப்பதோடு அவர் சொன்னதை மறுக்கிற புரட்டராகவும் இருக்கிறார் என வெகு தாட்டியாக சொல்லலாம் என்பதை யாருஞ் சொல்லியா தெரியவேண்டும்.

இதற்கு சில கிறிஸ்தவ நண்பர்கள் மேற்படி கட்டளைகளை நாங்களே எடுத்து நடந்துவருகிறோம் என்று சொல்லுவார்களேயானால் அதற்கு மறுமொழி என்னவென்றால்; அக்கட்டளைகளுக்கு முற்றும் நீங்கள் மாறுபட்டிருக்கிறீர்கள் என்கிற விபரத்தை இப்பிரசங்கத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆயினும் பின்னும் ஒரு விஷயத்தை குறிப்பிடுகிறேன் அதாவது:—

1-ம் மோசே 17-ம் அதிகாரம் 7, 8 வசனங்களாலும், மேற்படி 12-ம் அதிகாரம் 1, 2, 3 வசனங்களாலும், மேற்படி 22-ம் அதிகாரம் 18-ம் வசனத்தினாலும், ஆண்டவன் ஆபிரகாமுக்கு கட்டளையிட்டு, நீர் என் கட்டளைப்படி நடந்து வருவீரானால் இந்த கானான் தேசத்தை உம்முடைய சந்ததிகளுக்கு நித்திய சுதந்தரமாக தந்து, உம்மை பெரிய ஜாதியாக்கி, உம்முடைய சந்ததிக்குள் பூமியில் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று மூன்று சுதந்தரத்தை அவர்களுக்கு கொடுத்திருக்கிறான் என்று தெரிந்துகொள்ளலாம்.

இதைப்போலவே மேற்படி கட்டளைகளை தலைமுறை தலைமுறையாக நித்திய உடன்படிக்கையாய் ஸ்தாபித்து மேற்படி மூன்று சுதந்தரத்தையும் கொடுக்கப்படுமென்று இபுறுஹீம் நபியின் குமாரராகிய இஸ்ஹாக்கு நபிக்கு ஆண்டவன் கட்டளையிட்டிருக்கிறான் என்பதை 1-ம் மோசே 26-ம் அதிகாரம் 3,4,5-ம் வசனங்களாலும், மேற்படி 17-ம் அதிகாரம் 19-ம் வசனத்தாலும் தெரிந்துகொள்ளலாம்.

மேற்படி சந்ததியார் | அக்கட்டளைகளை மீறி நடந்தபடியினால் சங்கரிக்
மேற்சொன்ன வசனப் பிரகாரம் சாபத்திற்குள்ளாகி, விட்டார்கள்.
கப்பட்டு மேற்படி மூன்று சுதந்தரங்களையும் இழந்து

ஆனால் ஹஜரத்து முஹம்மதுரசூலுல்லா அவர்களோ மேற்படி
கட்டளைகளை கைப்பற்றி நடந்ததுமன்றி, மாற்கு 12ம்அதிகாரம்
9-ம் வசனத்தில் ஏசுநாதர் சொல்லியபடி அவர்களோடு போ
ராடி அவர்களை சங்கரித்து அவர்களிடமிருந்த இராஜ்ஜியத்தை 26-ம் வசன
பிடுங்கி, மேற்படி யோவான் வெளி 2-ம் அதிகாரம் பரியந்தம்
த்தில் கண்டவாறு ஜெயங்கொண்டு, உலகம் முடிவு கானான் தேச சுதந்த
ரக்கிரியைகளை ஸ்தாபித்தபடியினலேயே

ரத்தையும் அடைந்து, அவர்கள் சந்ததிகளாகிய சாதாத்துமார்கள் நக்ஷத்திரங்களைப்போல் பெருகி பிரகாசித்து, பூமியிலுள்ள சகல ஜாதிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறதாகிய ஷை மூன்று சுதந்தரங்களையும் அடைந்திருக்கிறார்களென்பது எல்லோருக்கு நன்றாய் தெரிந்த உலகமறிந்த விஷயமே.

பின்னும் சிலர் முஹம்மது நபி அவர்களுக்கு ஜனக்கூட்டங்களின் பேரில் அதிகாரமும், இருப்புக்கோலின் ஆளுகையும், எதிரிகள் மண்கலயம்போல் நொறுக்கப்பட்டதும் ஆகிய தன்மைகள் உண்டாகியிருந்ததா எனக் கேட்கக்கூடும். அதற்கு பிரதியுத்தரமாவது:—

ஹஜரத்து முஹம்மது நபி அவர்களோ அறபு முதலிய ஜனக்கூட்டத்தின் பேரில் அதிகாரம் பெற்றிருந்தார்கள். அக்கூட்டங்களோ நபி அவர்கள் சொல்லுக்கு உள்பட்டு தங்கள் உயிர்களையும் பொருள்களையும், பெண்டீர் பிள்ளைகளையும் பெரிதாய் எண்ணாமல் அவர்கள் சொல்லையே பெரிதாய் எண்ணி தங்கள் இரத்தத்தைசிந்தி ஷை மார்க்க கட்டளைகளை ஸ்தாபித்ததுமன்றி, மத்தேயு 21ம் அதிகாரம் 43, 44ம் வசனங்களில் யேசுநாதர் சொல்லியபடி பராபரனின் பரிசுத்த இராஜ்ஜியங்களை பிடுங்கி தங்கள் வசமாக்கி கொண்டதோடு அவர்களை எதிர்த்தவர்களும் இவர்களால் எதிர்க்கப்பட்டோர்களும் நொறுக்கப்பட்டு போனதுமன்றி, யோவான் வெளி 2-ம் அதிகாரம் 27-ம் வசனத்தில் கண்டவாறு, இருப்புக் கோலால் நடத்தப்பட்டு எதிரிகள் மண் கலயங்களைப்போல நொறுங்குண்டு போன ஊர்களில் அதற்கறிகுறியாக கொத்துபா உபதேசம் பண்ணுகிறவர் இருப்புக்கோலை தன் கையில் பிடித்துகொண்டு உபதேசித்து வருகிற வழமை அக்காலமுதல் இக்காலம் வரை நடந்துகொண்டு வருகிறதென்பது எல்லோருக்கும் பகிரங்கமாக தெரிந்த விஷயமே.

மேலும் அவர்கள் விடிவெள்ளி நக்ஷத்திரமாய் சுப்பட்டிருக்கிறாரென்று கேட்டாலோ அவர்கள் திங்கட்கிழமை பொழுது உதயமாகிறதற்கு 1-மணி நேரத்திற்குமுன் விடிவெள்ளி நக்ஷத்திரமும் சுக்கிர நக்ஷத்திரமும் ஆக 2 நக்ஷத்திரங்களும் ஒன்றுகூடுகின்ற நேரத்தில் பிறந்தார்களென்றும், அதற்கறிகுறியாகவே அவருக்கு அந்த சுக்கிரவாரத்தைப் பண்டிகை நாளாக ஆக்கப்பட்டு, அவ்வாரத்து தொழுகையை அன்று பிற்பகல் 1-மணிக்குப் பின்னும் 2-மணிக்கு முன்னுமான சுக்கிர நக்ஷத்திரநேரத்தில் தொழப்பட்டு வருகிறதென்றும், அவர்களுடைய



சகல மங்களகிரிகைகளையும் அந்நக்ஷத்திர நாளாகிய சுக்கிரவாரத்தில் நடத்தப்பட்டு வருகிறதென்றும், அவர் திங்கட்கிழமை நடுப்பகல் 12-மணியான அந்நக்ஷத்திர நேரத்திலேயே ஆகிறம் சேர்ந்தார்களென்றும், இன்னும் இவ்வாறான பற்பல காரணங்களால் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களே உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாயிருக்கிறார்களென்று அந்நிய மதத்து வானசாஸ்திரிகளால் கணிக்கப்பட்டிருக்கின்றதைப் பார்த்து தெரிந்துக் கொள்ளலாம்.

ஆயினும், முஸ்லிம்களோ முஹம்மது நபியவர்களே சகல படைப்புகளுக்கும் வித்தாகவும், கருவாகவும், அசலாகவும், காரணமாகவும் இருப்பதினால், இவர்களுக்கெதிரில் எப்படைப்புகளும் ஒரு நருப்புக்குச் சமானமில்லையென்று சொல்லுகிறார்கள்.

சில கிறிஸ்துவ அன்பர்கள் யேசுநாதரே விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவு மிருக்கிறாரென்று விசுவாசிக்கிறார்கள். அதை மறுத்து முஸ்லிம்கள் அவ்வாறு யேசுநாதராயிருந்தால் அவர் நானே விடிவெள்ளி நக்ஷத்திரமாயிருக்கிறேன் என்று சொல்லியிருப்பாரல்லவா? என்றும், அப்படி அவர் சொல்லாமல் வேறொருவரைப்பற்றி சொல்லியிருப்பதினாலேயும், அந்நியமதத்து வானசாஸ்திரிகள் அந்நக்ஷத்திரத்தின் குணகுணங்களை யெடுத்துக் காண்பித்து இக்குணங்கள் யாவும் முஹம்மது நபியவர்களில் தான் அமைந்திருக்கிறதென்று சாக்ஷி பகர்ந்திருக்கிறதினாலேயும், இவர்களுக்குப்பின் வேறே நபி இல்லை என்பதினாலேயும், ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களே விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார்களென்றும் பலவாறாய் வரையத் துணிகிறார்களென்பதே.

அன்றியும், மத்தேயு 23-ம் அதிகாரம் 37-ம் வசனத்தில் எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி குஞ்சுகளை தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக, நான் எத்தனைதரமோ உன் பிள்ளைக

னைக் கட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று. (38) இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும் (39) கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று யேசுநாதர் சொல்லியிருக்கிறதைக் காணலாம்.

இதினாலே இயேசு அவர்கள் தீர்க்கதரிசியாய் வந்ததை ஜெருசலேம் முதலிய பட்டனத்தார் ஒப்புக் கொள்ளவில்லையென்றும், அதை இயேசு அவர்கள் நிந்தித்து கர்த்தருடைய நாமத்தினால் ஒருவர் வருவாரென்றும், அவரை நீங்கள் ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று சொல்லுகிறவரையிலும் என்னைக் காணாதிருப்பீர்களென்றும் சொல்லிவிட்டு தான் பரலோகம் போய்விட்டாரென்று தெரிந்துகொள்ளலாம்.

ஸ்தோத்தரிக்கப் பட்டவரென்கிற முஹம்மது றசூலுல்லா அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால்வந்து, சலா றூஹல்லா, சலா கலீமத்துல்லா என்று அந்நகரத்தாருக்கு சொல்லியதால் அவர்கள் யேசுநாதரின் மகிமையைக் கண்டுகொண்டார்களென்பது உலகறிந்த விஷயமே.

மேலும், அவ்வசனத்தில் ஸ்தோத்திரிக்கப்பட்டவரென்கிற பதத்திற்கு அரபி பாஷையில் "முஹம்மது" என்று சொல்லப்படும் முஹம்மது என்றால் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் அல்லது புகழப்பட்டவரென்பதே. கர்த்தருடைய நாமத்தினால் என்கிற பதத்திற்கு அரபிபாஷையில் "பிஸ்மில்லாஹி" என்று சொல்லப்படும் பிஸ்மில்லாஹி என்றால் கர்த்தருடைய நாமத்தினாலேயே அல்லது கர்த்தருடைய நாமத்தினுண்டானவராக என்பதே.

நபியவர்கள் ஸ்தோத்திரிக்கப்பட்டவராயிருக்கிறார்களென்பதற்கும், கர்த்தருடையநாமத்தினால் வந்திருக்கிறார்களென்பதற்கும் அறிகுறியாக முஹம்மது என்று அவர்கள் பிறந்தவுடனே அவர்களுக்குபேரிட்டு வழங்கி வருகிறதுமன்றி, அவர்களின் சகல கிரியைகளிலும் சொற்களிலும், சதாகாலமும் "பிஸ்மில்லாஹி" என்று சொல்லிக்கொண்டே ஒவ்வொரு வேலையையும் ஆரம்



பிப்பதோடு, இச்சொல்லை அவர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். அன்றியும் அவர்களுக்கிறங்கிய வேதத்திலும் "இக்ற வுபிஸ்மிறப்பிக்க" என்றே முதலாவதாக இறங்கியது அதாவது உமது நாயனுடைய நாமத்தை யோதும் என்பதே. இவ்வாறே "குர்ஆன்" ஷரீபிலுள்ள ஒவ்வொரு சூறத்தின் துவக்கத்திலும் பிஸ்மில்லாஹி யென்றே ஆரம்பிக்கப்பட் டிருக்கின்றதைப் பார்க்கலாம்.

இதுபோலவே, உதயகிரி முதல் அஸ்தகிரி வரையிலுள்ள அவர்களைப் பின்பற்றின கோடானகோடி ஜனங்கள் ஒவ்வொருவரும் நபி அவர்களின் அசல் திருநாமம் முஹம்மது என்று வழங்கி வருவதோடு இவர்களில் பெரியோரானாலுஞ்சரி, சிறியோரானாலுஞ்சரி, படித்தோரானாலுஞ்சரி, மூடரானாலுஞ்சரி, உண்ணும்போதும், உறங்கும்போதும், எழும்பும்போதும், இருக்கும்போதும், நடக்கும்போதும் யாதொரு வேலையை யாரம்பிக்கும்போதும் "பிஸ்மில்லாஹி" யென்று சொல்வதுமன்றி யாதொரு விஷயங்களை எழுதும்போது ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹி யென்று எழுதின பிறகுதான் மற்றதை எழுதுவார்களென்பதை எந்த கிதாபையாவது, எந்த புஸ்தகத்தையாவது எடுத்துப் பார்த்தாலும் அதில் ஆரம்பத்தில "பிஸ்மில்லாஹி" யென்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஆகவே அவ் வசனம் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்குச் சம்மந்தப்பட்டதென்பதற்கு முஹம்மது என்கிற நாமமும், பிஸ்மில்லா என்கிற வார்த்தையும் சூரியனைப்போல் பிரகாசித்து கொண்டிருக்கிறதென்று நன்றாய்த் தெரிந்து கொள்ளலாமல்லவா?

ஆனால் சில கிறிஸ்து அன்பர்கள் அவ் வசனம் யேசுநாதர் இனிஇவ்வுலகத்திற்கு மீண்டும்வருகிறதைப்பற்றியே சொல்லப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இதை மறுத்து முஸ்லிம்களில் சிலர் அவரை ஸ்தோத்தரிக்கப் பட்டவரென்று நீங்கள் சொல்லுமளவும் என்னை காணமாட்டீர்களென்று சொன்னதால் இது யேசுநாதருக் கல்லவென்றும், ஒரு கடுகுவிதை நீதமுள்ளவர்கள் அவ்வசனத்தைப் பார்த்தாலும் அது ஒரு தீர்க்

கதரிசி வருவதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறதென்று சொல் லுவார்களே யல்லாது யேசுநாதருக்கு எள்ளளவும் சம்பந்தப்பட்டதென்று சொல்லமாட்டார்களென்றும், பலவாறாய் வரையத் துணிகிறார்களென்பதே.

அன்றியும் மாற்கு 12-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் பின்பு யேசு உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினதாவது, ஒரு மனுஷன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதைச்சுற்றிலும் வேலியடைத்து, இரசத்தொட்டியை உண்டுபண்ணி, கோபுரத்தையும்கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறத்தேசத்துக்குப் போயிருந்தான். (2) தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்துக் கனிகளில் தன் பாகத்தை வாங்கிக்கொண்டு வரும்படி, பருவ காலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை யனுப்பினான். (3) அவர்கள் அவனைப்பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள். (4) பின்பு வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான், அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி, அனுப்பிவிட்டார்கள். (5) மறுபடியும் வேறொருவனையும் அனுப்பினான், அவனை அவர்கள் கொலைசெய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான் அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்றுபோட்டார்கள். (6) அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான்: என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான். (7) தோட்டக்காரரோ இவன் சுதந்தரவாளி, இவனைக் கொலை செய்வோம் வாருங்கள், அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகும் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு, (8) அவனைப் பிடித்துக் கொலைசெய்து, திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டுவிட்டார்கள். (9) அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் என்னசெய்வான்? அவன் வந்து அந்தத் தோட்டக்காரரைச் சங்கரித்து திராட்சத் தோட்டத்தை மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுப்பான் அல்லவா? என்றார். இவ்வாறே மத்தேயு 21 அதிகாரம்: 31 முதல் 44 வரையிலும், லூக்கா 20ம் அதிகாரம் 9 லிருந்து 18 வரையிலும் சொல்லப்பட்டிருக்கின்றதைக் காணலாம்.



இதனால், தெரிகிறதென்னவென்றால், பராபரன் மனிதரையுண்டாக்கி, தன்னுடைய கட்டளைப்படி நடக்கவேண்டுமென்று அவர்களோடு உறுதிப்பாடு செய்துக்கொண்டு, அவர்களை ஜெருசலேம் முதலிய பராபரனின் பரிசுத்த பட்டணங்களில் குடியிருக்கும்படி செய்து, தன்னுடைய தீர்க்கதரிசிகளை அனுப்பி, அத் தீர்க்க தரிசிகளோ வந்து, ஆண்டவனுடைய கட்டளையைக் கைக்கொண்டு நடக்கும்படி சொன்னதற்கு, அவர்களைப் பலவாறாய் துன்பப்படுத்தி, சிலரை விரட்டியும், சிலரைக் கொலைசெய்தும் போட்டார்களென்றும், முடிவில் பராபரனைப் போல் பராக்கிரமசாலியாய் ஒருவர் வந்து, அவர்களிடமிருந்த ஜெருசலேம் முதலிய பராபரனின் பரிசுத்த பட்டணங்களைப் பிடுங்கி, பராபரனுக்கன்பான பரிசுத்தர்களிடம் ஒப்புவித்தாரென்று விளங்குகிறதல்லவா?

இவ்வாறே யூதர்களுக்கு சகரியா, யஹ்யா, இயேசு முதலிய அநேக தீர்க்கதரிசிகள் வந்து, பராபரனுடைய கட்டளையைப் போதித்ததில், அவர்கள் அதை கைகொள்ளாமலிருந்ததன்றி அவர்களைப் பலவாறாய் துன்பப் படுத்தியும், கொலைசெய்தும், துரத்தியும் விட்டார்களென்றும், முடிவில் முஹம்மது நபி அல்லா அவர்கள் பராபரனைப்போல் பராக்கிரமசாலியாய்வந்து அவர்களைச் சங்கரித்து, தீர்க்கதரிசிகளை மகிமைப்படுத்தி, அவர்களிடமிருந்த பரிசுத்த பட்டணங்களைப் பிடுங்கி, தமது சிஷ்யர்கள்வசம் ஒப்புவித்தார்களென்றும் உலகசரித்திரத்தினாலே நன்றாகத் தெரிந்துக் கொள்ளலாமல்லவா?

இதற்காகவே ஏசாயா 42 அதிகாரம் 13-ம் வசனத்தில் கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்த சேவகனைப்போல் எரிச்சலை எழும்பப்பண்ணி, தொனித்து, கெர்ச்சித்துத் தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார் என்றும் 1ம் மோசே 49ம் அதிகாரம் 10ம் வசனத்தில் சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதில்லை, நியாயப் பிரமாணங்கள் அவன் பாதங்களைவிட்டு ஒழிவதுமில்லை,

ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் என்றும், ஏசாயா 9-ம் அதிகாரம் 7-ம் வசனத்தில் அவர் தாவீதின் சிங்காசனத்தையும் அவருடைய ராஜ்ஜியத்தையும் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும், நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இவ்வசனங்களில் கண்டபடி ஹஜரத் முஹம்மத் றசூலுல்லா அவர்களாலேயே யாவும் நடந்தப்பட்டிருக்கிறதென்றும், தாவீதின் இராச்சியம் அவர்களின் நியாயத்தினாலும், நீதியினாலும், நிலைபெற்று, நடந்து வருகிறதென்றும் யாருஞ் சொல்லித் தெரியவேண்டுமோ?

ஷை ஏசாயா 9-ம் அதிகாரம் 7-ம் வசனத்தில் கண்ட கர்த்தத்துவம் என்னவென்று, உங்களில் சிலர் கேட்கக்கூடும் கர்த்தத்துவத்திற்கு அரபியில் முஹர்நுபுவத்து என்று சொல்லப்படும். முஹர் நுபுவத்தென்றால் ஒடுக்கத்து நபி என்கிறதற்கு அடையாளமான முத்திரை. ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களை ஒடுக்கத்து நபியென்பதற்கு அடையாளமாக அவர்களின் பிடரியில் அம்முத்திரையை பதிக்கப்பட்டிருந்தது. அம்முத்திரை நபியவர்களின் பிடரியில் என்னவிதமாய் பதிக்கப்பட்டிருந்ததென்றும், அதில் என்ன எழுதப்பட்டிருந்ததென்றும், அது என்ன வடிவாயிருந்ததென்றும் அறிய விரும்பினால் இந்த "முஹம்மதியா மகத்துவம்" என்கிற புஸ்தகத்தின் 48, 49, 50ம் பக்கங்களில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

அன்றியும் யோவான் 14ம் அதிகாரம் 16ம் 26ம் வசனத்திலும் ஷை 15-ம் அதிகாரம் 26-ம் வசனத்திலும், ஷை 16 ம் அதிகாரம் 7-ம் 13-ம் வசனங்களிலும் யேசு அவர்கள் பாரேக்லீத்தென்று ஒருவர் வருவாரென்றும், அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவாரென்றும், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் அவருக்கு ஆண்டவனால் அருளப்பட்டதையே ஜனங்களுக்



குப் போதிப்பாரென்றும், அவர் என்னை மகிமைப்படுத்தி சாக்ஷி சொல்லுவாரென்றும், பலவாறாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதை காணலாம்.

இதில் சொல்லப்பட்ட விஷயங்கள் யாவும் பாரேகலீதான முஹம்மது றசூலுல்லா அவர்களாலேயே நடத்தப்பட்டிருக்கிறதென்பது உலகம் அறிந்த விஷயமே.

யேசுநாதரும் அவருடைய சீஷரான யோவானும் பேசினது எபிரேயு பாஷையென்றும், யோவான் எழுதின அஸலும் எபிரேயு பாஷையாயிருந்ததென்றும், அப்பாஷையில் பாரேகலீத் என்றெழுதப்பட்டிருந்ததென்றும், இதை கிரேக்கு பாஷையில் பீர் எக்லீ யூதாஸ், அல்லது பீர் எக்லிதாஸ் என்றும் பார்ஸி பாஷையில் ஹாமீ அல்லது வாயிஸ் அல்லது நபி என்றும், அரபியில் அஹமத் என்றும் ஷை பாஷைகளின் டிக்ஷனரிகளில் சொல்லப்பட்டிருக்கிறதென்று "மன்ஹூரே முஹம்மதி" "மதாரே ஜுன்நுபூவா" முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அஹமத் என்பது ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுக்குள்ள பல சிறந்த திருநாமங்களில் ஒன்றாயிருக்கிறதென்பதை குர்ஆன் 28-ம் ஜுஸ்வு 9-ம் றுக்கூவு 6-வது ஆயத்தினால் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் சில கிறிஸ்துவர்கள் ஷை வசனங்களில் கண்ட பாரேகலீத்தானவர், அப்போஸ்தலர் நடபடிக்கை 2-ம் அதிகாரம் 1. 2, 3, 4, வசனங்களில் கண்டபடி "பெந்தெகோஸ்து" என்னும் பண்டிகை நாளில் சீஷர்களுக்குத் தோற்றப்பட்ட ஆவியாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

இதை மறுத்து முஸ்லிம்களில் ஒருவர் யோவானில் கண்ட பாரேகலீத்தானவர் உங்களைக் கண்டித்துணர்த்துவாரென்று சொல்லப்பட்டிருந்தால் அது சீஷர்களுக்குச் சம்பந்தப்படும், அப்படிச் சொல்லாமல் உலகத்தைக் கண்டித்துணர்த்தி, அவர்களுக்கு மெய்யறிவைக் கொடுப்பாரென்று சொல்லப்பட்டிருப்பதால் அது சீஷர்களுக்குச் சம்பந்தப்பட்டதல்லவென்றும், சீஷ

ருக்குப்பண்டிகைநாளில் வெளியான ஆவிக்கு பாரேகலீத் தென்பவர்க்குள்ள குணங்களெல்லாம் இருந்ததில்லை யென்றும், அதையெழுதிய லூக்காவும் பாரேகலீத் தென்பவரே எங்களுக்குத் தோற்றப்பட்ட ஆவியென்று எழுதவில்லை யென்றும், அந்தப் பண்டிகையில் ஒன்று கூடியிருந்த மத்தேயு, பேதுரு முதலிய சீஷர்களால் ஷை பாரேகலீத்தானவரே எங்களுக்குத் தோன்றின ஆவியென்று எழுதியிருப்பதில்லை யென்றும், ஷை பாரேகலீத் வருவாரென்று எழுதின யோவானும் எங்களுக்குப் பண்டிகையில் தோன்றின ஆவியே அந்தப் பாரேகலீத்தானவரென்று எழுதவில்லையென்றும், ஷை பாரேகலீத்துக்கு அரபி பாஷையில் அஹ்மத் கிரேக்கில் பீரிக்லீதாஸ் இதன் பொருள் பிரசங்கி, உதவிக்காரர் இதை மத்தியஸ்தனென்று சொல்ல வேண்டுமே தவிர ஆவியென்று சொல்லப்படாதென்று பிஷப் மார்ஸல் சொல்லுகிறாரென்றும், அதை பிஷப்காட்பிரிஹேமகன்ஸ் உறுதிப்படுத்துகிறாரென்றும், "தமது "தத்ஹீக்குல் ஹக்" என்னும் கிரந்தத்தில் வரைந்திருக்கிறதைக் காணலாம்.

பின்னுமவர் ஷை கிரந்தத்தில் ஆதியில் அநேகர் பாரேகலீதென்று ஒருவர் நபியாய் வருவாரென்று எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்களென்றும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த தர்த்தூலியன் காலத்திற்கு முன்னால் வெளியாயிருந்த மான்டனிஸ் என்பவனை இவன் தான் பீரிக்லீதாஸ் என்று அநேக கிறிஸ்துவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்களென்று வேதசாஸ்திரஸாரம் 821-வது பக்கத்திலும் 1856-ம் வருஷம் மீர்ஸாப்பூரில் அச்சிடப்பட்ட ரோமான் திருச்சபை சரித்திரம் 32-வது பக்கத்திலும் கண்டிருக்கிறதென்றும், வானத்திலிருந்து இனி யேசுநாதர் திரும்பி வருவதற்கு பாரேகலீத் என்று சொல்லப்படுமென்ற 1 மவுன்டான்ஸ் சங்கத்தாரின் கொள்கையாயிருக்கிறதென்றும், இதை 1870-ம் வருஷத்தில் அச்சுப் பதிக்கப்பட்ட திருச்சபை இந்துஸ்தானி சரித்திரத்தின் 205-வது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறதைக் காணலாமென்று "மன்ரூரே முஹம்மதி" முதலிய கிதாபுகளில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், வரைந்திருக்கின்றனர்.



மேலும் ஒருவர் ஷை வசனங்கள் முஹம்மது நபியுல்லா அவர்களுக்குச் சம்பந்தப்பட்டதென்று வகைவகையாய் எடுத்து ரூபித்து தமது "இஜ்ஹாருல்ஹக்" என்னும் அரபிக்கிரந்தத்தின் இரண்டாவது வால்யூம் 6-வது படலம் 91 முதல் 160 பக்கம்வரை ஒரே தொடராய் 69 பக்கங்களாக வரைந்திருக்கிறார்.

அன்றியும் ஒருவர் அதைப்பற்றி முடிவாகச் சொல்லுகிறதென்னவென்றால்:—அப்போஸ்தலர் காலத்திலே கள்ளதீர்க்கதரிசிகள் வெளிப்பட்டிருந்ததாக 2-ம் கொரிந்தியர் 11-ம் அதிகாரம் 12, 13-ம் வசனங்களிலும், பேதுருவின் இரண்டாம் நிருபம் 2-ம் அதிகாரம் 1-ம்வசனத்திலும் கண்டிருக்கிறதென்றும், ஷை பாரேகலீத் வருவாரென்று யேசு அவர்கள் சொல்லியிருக்கிறதானது அக்கள்ளர்களுக்கும் அவர்களுக்குப்பின் தோன்றக் கூடியவர்களுக்கும், ஒரு பெரிய அத்தாக்ஷியாயிருக்கிறதென்றும், அதையும் தற்கால பிற்கால நிலைமையும் அறிந்திருந்த ஷை அப்போஸ்தலர்கள் தங்களுக்குப் பண்டிகைநாளில் தோன்றிய ஆவியே இந்தப் பாரேகலீத்தாயிருந்தால் அதை எடுத்து எழுதி அவர்களின் வாயை அடைத்தும், தலையை நசுக்கியும் இருப்பார்களல்லவா?

மேலும், பாரேகலீத் என்னும் ஒரு நபி வரவேண்டியதாயிருப்பதினாலேயே அவ்விதம் அவர்கள் எழுதாமல் விட்டுவிட்டார்களென்று நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளலாமென்றும், அந்தப் பாரேகலீத் வருவாரென்று எழுதிய யோவானே பின்னும் அதையுறுதிப்படுத்தி தன்னுடைய வெளி 2-ம் அதிகாரம் 26, 27, 28-ம் வசனத்தில் யேசுவின் கிரியைக் காத்துக் கொள்ள ஒருவர் வருவாரென்றும், அவரே ஜெயங்கொண்டு உலகமுடிவுவரை அக்கிரியைகளை ஸ்தாபிப்பாரென்றும், ஜனக்கூட்டங்களின்பேரில் அதிகாரத்தையும், இருப்புக்கோலின் ஆளுகையையும் உடையவராயிருப்பாரென்றும், அவரால் எதிரிகள் மண்கலயங்களைப்போல நொறுக்கப் படுவார்களென்றும், அல்லாமலும் அவர் உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாயிருப்பாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறதைப் பொதுவாகக் கவனிக்

தால் பாரேகலீத் என்பவர் பண்டிகை நாளில் சீஷர்களுக்குத் தோன்றிய ஆவியல்ல வென்றும் பின்னால் வருகிற ஒரு தீர்க்க தரிசியைப் பற்றியதென்றும், இதையாராய்கிற ஒவ்வொரு கன வான்களும் நிச்சயமாய் அறிந்துகொள்ளுவார்க ளென்பதற்கு யாதொரு சந்தேகமில்லையென்றும் சொல்லி யிருக்கிறார்.

அன்றியும் யேசுநாதரின் அப்போஸ்தலர்களில் பர்னபா என்று ஒருவரிருந்தாரென்றும், அவரை எல்லாச் சீஷர்களும் பிதாவென்று அழைத்து வந்தார்க ளென்றும், அவர் வெகு ஊக்கத்தோடு அம்மார்க்கத்தைப் பரவச் செய்து வெகு கீர்த்தி பெற்றிருந்தாரென்றும், அவரால் பர்னபா சுவிசேஷம் எழுதப் பட்டிருந்ததென்றும், அஹ்மத், என்று ஒரு நபி வருவாரென் றும், அந்த நபியின் அடையாளங்களையும், குணங்களையும் விவ ரிக்கப்பட்டிருக்கிற தென்றும் ஆகையினாலேயே அச்சுவிசே ஷத்தை பிரஸ்தாபப்படுத்தாமல் தள்ளிவிட்டார்க ளென்றும் பலவாறாய்ச்சொல்லி, முடிவில் சேல் என்பவரால் செய்யப்ப ட்டிருக்கிற இங்கிலீஷ் குர்ஆன் தர்ஜமாவில் அஹம்மதென்று ஒரு தீர்க்கதரிசி வருவாரென்றும், அவருடைய சங்கதிகளிலும், கீர்த்திகளிலும் சிலதை மேற்படி பர்னபா சுவிசேஷத்தில் கண்டி ருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறதென்றும் இன்னும் இவ் வாறே அபஹாம் அரையால் இயற்றப்பட்ட 'இஸ்டோரி ஆப் உதுமான் எம்பையர்" என்னுங்கிரந்தத்தில் கண்டிருக்கிறதென் றும் "றத்துத்தஹுலீத்" என்னும் கிரந்தத்தில் எழுதப்பட்டி ருக்கிறதைக் காணலாம்.

மேலும் ஆபகூக் 3-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் அஹம் மத் என்று ஒருவர் வருவாரென்று எழுதப்பட்டிருந்த தென் றும், அஹம்மத் என்கிற வார்த்தையை எடுத்துவிடப்பட்டதெ ன்றும் ஹிஜ்ரி 1274-ம் வருஷம் அச்சுப்பதிக்கப்பட்ட "மதாரேஜ் ன்னுபுவா" 1-ம்வால்யூம் 100 வது பக்கத்தில் கண்டிருக்கின்றது.

ஷை வசனத்தில் வருவார் என்கிற வார்த்தையையும் அதற்கு பின்னுள்ள வசனங்களின் விஷயங்களையும் கவனிக் கும் பக்ஷத்தில் ஒரு நபி வருவாரென்று விளங்குகிறதல்லவா? என்று ஒருவர் சொன்னதின் பின்னர் வருவார் என்கிற வார்த் தையை எடுத்து விட்டு வந்தார் என்று திருத்தப்பட்டிருக்கி றது. அது எப்படியென்றால் 1847-ம் வருஷத்திலும் 1855-ம் வருஷத்திலும் மதராஸில் தமிழில் அச்சிடப்பட்ட பிர



திரியில் வருவாரென்றும், அப்பால் 1874-ம் வருஷம் தமிழில் அச் சிடப்பட்ட பிரதியில் வந்தாரென்றும், கண்டிருக்கிற தென்று "றத்துத் தஹுலீத்" என்னும் கிரந்தத்தில் எழுதியிருக்கிறதைக் காணலாம்.

இன்னும் இவை போன்ற விஷயம் புதிய, பழைய, ஏற்பாட்டில் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களைக் குறித்து முன் அறிவிப்பாய் அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கி ன்றன, அவைகளை இங்கெடுத்துச் சொன்னால் விரிவிற் பெரு கும். சுருக்கிற் குறிப்பிடுமென்று நிறுத்துகிறோம்.

இதன் முழு விபரங்களை "இஜ்ஹாறுல்ஹக்" முதலிய கிரந்தங்களில் பார்த்துத் தெரிந்துக் கொள்ளலாம்.

மேற்சொன்னவிஷயங்களுக்கிணங்கவே ஹஜரத்து முஹம் மது றசூலுல்லா அவர்கள் தங்கள் சீஷர்களுக்கு நீங்கள் யஹூ தி, நஸாராக்களான பாதிரிமார்களை துன்பப்படுத்த வேண்டா மென்றும், உலகத்திற்குச் சூரியப் பிரகாசத்தைப் போலவே அவர்கள் வேதத்திலும், அவர்கள் மனதுகளிலும், என்னு டைய செய்தி இலங்கி பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென் றும், அவர்களில் ஆயிரக் கணக்கான பேர்கள் தான் தானுகவே என்னிடத்தில் வந்து, சாக்ஷியளித்து முஸ்லிமாகிறார்க ளென் றும், சிலர் மனதில் விசுவாசித்தும் வாய்மூலம் அதை மறைத்துக் கொண்டிருக்கிறார்க ளென்றும், நபியவர்கள் திருவுளமயிரு க்கிறதுமன்றி, இதற்கு அநுசாரணையாகக் குர்ஆனில் அநேக ஆயத்துக்களும் முண்டாயிருக்கிற தென்றும், அவ்வாறே சஹா பாக்களும் நடந்திருக்கிறார்க ளென்றும், மேற்படி சஹா பாக்களிடத்திலும் அநேக பாதிரிமார்கள் தான் தானுகவே வந்து முஸ்லிமாகியும் ஆகிக்கொண்டும் வருகிறார்களென்றும், பலவாறாய் "தப்ஸீர் ஜாமிஉல் பயான, தப்ஸீர் கபீர்" முதலிய குர்ஆன் வியாக்கியான கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கி றதைக் காணலாம்.

உதாரணமாக ஒரு கிறிஸ்தவ பாதிரியார் அவர் சபையார்க ளையும், அவர்களுடைய இஞ்சீல் வேதத்தையும் முஸ்லீம்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். ஆகையினாலேயே முஸ்லிம்களும், கிறிஸ்துவர்களுமாகிய இரு கக்ஷிக்காரர்களும் ஒத்துக்கொள் ளுகிற கிறிஸ்து மார்க்கத்தைப் பின்பற்றி நடந்தால் நியாய மென்று பலவாறாய்ப் போதித்தார்.

இதற்கு முஸ்லிம்களில் ஒருவர் ஷை- பாதிரியாரிடத்தில் தௌரா இஞ்சில் வேதத்திலும், தௌராதி யாகமங்களிலும் முஹம்மது றசூலல்லா அவர்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறதா? வென்றுகேட்டார். அதற்கு பாதிரியார் அப்படி யாதொன்றும்சொல்லியிருக்கவில்லை யென்றார்.

அதற்கு முஸ்லிம் குர்ஆன் 28-ம் ஜுஸ்வு, 9-ம் றுக்கூவு, 6-ம் ஆயத்திலும், 26-ம் ஜுஸ்வு, 12-ம் றுக்கூவு, 3-ம் ஆயத்திலும் முஹம்மது றசூலல்லா அவர்களுடைய செய்தியைச் சொல்லப்பட்டிருக்கிறது ஏதெனில் அவர் இஞ்சிலென்றும் அப்படிச் சொல்லியிருக்கவர்களையே தௌராவென்றும் சொல்லப்பட்டிருப்பதால் நீர் சொல்லுகிற இஞ்சிலையும், நீர் சொல்லுகிற தௌராவையும் முஸ்லிம்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனதினாலே நீர் அதை முஸ்லிம்கள் ஒத்துக்கொள்ளுகிறார்களென்பது ஞாயமில்லை.

மேலும், உமது சொற்படி யூதர் வேதாகமத்தைக் கிறிஸ்துவர்களாகிய நீங்களும், யறாதிகளாகிய யூதர்களும் ஆக, இருகக்ஷிக்காரரும் ஒத்துக்கொள்ளுகிறதினால் நீர் யூதராயிருக்க வேண்டுமே யல்லாது, கிறிஸ்தவராயிருக்க நியாயமில்லை யென்றார்.

அதற்குப் பாதிரியார் யூதராகமத்தில் கிறிஸ்துவினுடைய செய்தி சொல்லப்பட்டிருப்பதினால் நான் கிறிஸ்தவராயிருக்க ஞாயமல்லாது யூதராயிருக்க ஞாயமில்லை யென்றார்.

அதற்கு ஷை- முஸ்லிம், அப்படியானால் உமது வேதாகமத்திலும், யூத வேதாகமத்திலும் முஹம்மது றசூலல்லா விச்செய்தி சொல்லப்பட்டிருக்கிறதினால் நீர் முஸ்லிமாயிருக்க வேண்டியது நியாயமே யல்லாது கிறிஸ்தவராயிருக்க நியாயமில்லை என்றார்.

அதற்குப் பாதிரியார், யூதர் ஆகமத்திலாவது, எங்கள் வேதாகமத்திலாவது முஹம்மது றசூலல்லா அவர்களைப் பற்றி யாதொன்றும் சொல்லியிராததினால் நான் முஸ்லிமாயிருக்க ஞாயமில்லை யென்றார்.

அதற்கு முஸ்லிம், யூத கிறிஸ்தவ ஆயிரக்கணக்கான பாதிரிகள் முஹம்மது றசூலல்லா அவர்கள் முன்னறிவிப்பில் வந்து நீங்கள் தான் எங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற நபியென்று சாக்ஷி பகர்ந்து அவர்களைப் பின்பற்றியிருக்கிறார்கள். அன்றி யூத வேதாகமத்தை அறிந்த ஒரு யூத பாதிரியானவரே வேதபாரகர் முன்னறிவிப்பில் வந்து சாக்ஷி பகர்ந்து அவரைப் பின்



பற்றவில்லை. ஆயினும் அவ்வேதியர்களை அவரைப் பலவாறாய்த் துன்பப்படுத்தினார்களல்லவா? ஆனதினாலே நீர் முஸ்லிமாயிருக்கவேண்டுமே யல்லாது கிறிஸ்தவராயிருக்க ஞாயமில்லை.

மேலும் நீர் பழைய ஏற்பாட்டில் யேசுநாதரைப்பற்றி வருகிறதென்று சொல்லுகிறீர் அதை யூதர்களோ மறுக்கிறார்கள். உங்கள் வேதாகமமாகிய மத்தேயு 23-ம் அதிகாரம் 39-ம் வசனத்தில் முஹம்மத் என்றும், யோவான் 14-ல் 16-உம் 26-உம் ஷை யோவான் 15-ல் 16-உம் ஷை யோவான் 16-ல் 7-உம் அகமது என்றும் ஆக ஷை பெயருடைய ஒரு நபி வருவாரென்றும், யோவான் வெளி 2-ம் அதிகாரம் 26, 27, 28-வசனங்களில் அவரே ஒலிக்கத்து நபியாகவும், விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் இருப்பாரென்று சொல்லியிருக்கிறதை நான் எங்கள் நபியவர்களுக்கென்று சொல்லுகிறேன் அதை நீர் மறுக்கிறீர். ஆக முந்தினவர்கள் வேதத்திலிருந்து பிந்தினவர்கள் எடுத்துச் சொல்லுகிறதும், முந்தினவர்கள் அது அவ்விதமல்லவென்று மறுப்பதும், வழமை.

ஆனதற்காகவே எவன்தீர்க்க தரிசன வார்த்தையை மாறுபாடு செய்தாலோ அவன் பேர் ஜீவ புஸ்தகத்திலிருந்து எடுபடுவதோடு பரிசுத்த பட்டணங்களின் பங்கை அவனிடத்திலிருந்து பராபரன் நீக்கி விடுவான் என்பதை யோவான் வெளி 22-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறதுமன்றி ஞாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளைச் செய்யத்தக்க விதமாய் செய்யாவிட்டால் சபிக்கப்பட்டுப் போவானென்று கலாத்தியர் 3-ம் அதிகாரம் 10-ம் வசனத்திலும் கண்டிருக்கிறதோடு இன்னும் இப்படியே 5-ம் மோசே 27-ம் அதிகாரம் 28-ம் வசனத்திலும், சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

அவ்வாறே தீர்க்க தரிசன வார்த்தைகளை மறுதலித்தவர்கள் சங்கரிக்கப்பட்டும், சபிக்கப்பட்டும் பரிசுத்த பட்டணங்களை இழக்கப்பட்டும் போனார்களென்பது உலகமறிந்த விஷயமல்லவா? இத்தன்மையான உலகறிந்த கண்கண்ட தைமெய்யான நியாயப்படி நீ முஸ்லிமா யிருக்கவேண்டுமே யல்லாது கிறிஸ்துவரா யிருக்க ஞாயமில்லை யென்றார்.

அதற்கு ஷை பாதிரியார் ஞாயம் வெளியானபின் அதை மறுப்பது மூடத்தனமென்று கருதி, மனசாக்ஷிக்கு விரோத

மாய் செய்கிறது பெரும் பாவமென்று நினைத்து முஸ்லிமாகிவிட்டார்.

இதைப்போலவே மிஸ்று என்னும் ஈஜிப்டில் காமிஷியாவென்கிற இடத்தில் இஸ்ஸத்தீனிபுனி, அப்துஸ்ஸலாமிபுனி, மகீஸ் அவர்களுக்கும் ஒரு பாதிரியாருக்கும் சம்பாஷனை நடந்து முடிவில் ஷெ. பாதிரியார் முஸ்லிமானாரென்று "முக்தசர் றவ்னதுல் மஜாலிஸ்" முதலிய கிதாபுகளில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அன்றியும் காலித் அவர்கள் ஷீரியாவிலிருந்து மதீனாவுக்கு வரும் வழியின் நடுவிலுள்ள ஒருமலையின் உச்சத்தில் 70,000 (எழுபதினாயிரம்) கிறிஸ்துவர்களுக்கு ஒரு பாதிரியார் பிரசங்கஞ் செய்யும் சமயத்தில் மேற்படி சபைக்கு இவர்கள் சென்று அப்பிரசங்கத்தைத் தாங்களும் கேட்க ஆசித்துக் கொண்டிருக்கையில், தான் பிரசங்கஞ்செய்யாமல் நிறுத்திக்கொண்டு மேற்படி பாதிரியார் இவர்களிடத்தில் சம்பாஷனை புரிந்து சொர்க்கத்தின் செய்திகளைப்பற்றி நாலு கேள்வி கேட்டார்.

அதற்கு ஷெ. காலித் அவர்கள் கேட்டவர்கள் ஆனந்தித்து பிரமிக்கத்தக்க விதமாய் விடையருளி முடிவில் இவர்கள் மேற்படி பாதிரியாரிடம் நீர் சொர்க்கத்தைப்பற்றி கேள்விகள் கேட்டீரல்லவா? அச்சொர்க்கத்தின் திறவுகோல் எதாயிருக்கும் மரியாள் யேசுநாதர்பேரில் சத்தியமாக உமது உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே சொல்லுமென்றார்.

அதற்குப் பாதிரியார் சத்தியத்தை மறைப்பது பாவமென்று எண்ணி தன்மனதில் உள்ளதை உள்ளபடியே சொர்க்கத்தின் திறவுகோல் "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மது றசூலுல்லாஹி" என்கிற கலிமாவாயிருக்கிறதென்றார்.

உடனே ஷெ. சபையிலுள்ள எல்லோரும் அதை விஸ்வாசித்து அச்சொர்க்கத்தின் திறவுகோலாகிய கலிமாவைமொழிந்து முஸ்லிம் ஆகிவிட்டார்கள். இதன் முழு விவரத்தை "றவ்னதுல் மஜாலிஸ்" என்னும் கிரந்தத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

இதைப்போலவே அபாயஸீதில் புஸ்தாமி அவர்களிடமும் ஒரு சம்பாஷனை நடந்திருக்கிறதென்று "றவ்ளுல் பாயிக்" என்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.



இன்னும் இதற்கிணங்கவே ஒரு முஸ்லிமுக்கும் ராக்கிப் என்னும் பாதிரியாருக்கும் சம்பாஷனை நடந்து முடிவில் ஷெ. பாதிரியாரும் அவருடைய ஜனங்களும் முஸ்லிமாயிருக்கிறார்களென்று 'நுஸ்ஹத்துல் மஜாலிஸ்' என்னும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

அன்றியும் 'மினஹாஜுல் மக்கிய்யா' என்னும் கிதாபில் ஹஜரத் ஸல்மான் பாரிஸ் அவர்கள் மௌஸில், நஸீபீன், உமூரியா என்னும் பேருள்ள பெரிய பாதிரிமார்களின் சிஷராயிருந்து அவர்களுடைய அந்தியகால உபதேசத்தைக் கேட்டுக்கொண்டே வந்து முடிவாக உமூரியா என்கிற பாதிரியார் நம்மள் வேதத்திற் கண்ட அடையாளமுள்ள நபி பிறந்திருக்கிறார். அவருக்கு இன்னின்ன அடையாளங்களெல்லா முண்டு அவரிடத்தில் நீர் சென்று தீட்சைபெறுவதோடு எனக்கும் எனக்குத் தலைமுறை தலைமுறையாக உபதேசித்துவந்த குருமார்களுக்கும் அவர் ஆசீர்வதிக்கும்படி சொல்லுமென்றும் உபதேசித்து மரணமானார்.

அப்பிரகாரமே ஷெ. ஸல்மான் பாரிஸவர்கள் அரபியாவுக்கு வந்து ஷெ. குரு சொன்ன அடையாளப்படி நபியவர்களைக் கண்டு இவர் மனது திருப்தியடையும் வரை அங்குக் காத்திருந்து நபியவர்களின் அற்புதத்தையும் அடையாளங்களையும் பார்த்து முடிவில் முஸ்லிமானார்கள் மேலும் அவர்களின் வயது 250 ஆகவிருந்தது என்று "ஹாஷியத்துல்கிபுனி" என்னும் கிதாபில் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறே கஃபுல் அக்பார் முதலியவர்களெல்லாம் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களிடத்தில் வந்து முஸ்லிமாயிருக்கிறார்களென்கிற விவரங்களை "சீறத்துன் நபவிய்யா" முதலிய கிதாபுகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

இவைபோன்ற ஆதாரங்கள் லக்ஷக்கணக்காய் இருக்கின்றன. அவைகளைப் பார்க்கவேண்டுமானால், தப்ஸீர்பகவி, தப்ஸீர்காஸின், தப்ஸீர்ஜமல், தப்ஸீர் றூஹுல் பயான், தப்ஸீர்கபீர்,

முதலிய குர்ஆன் வியாக்யான கிரந்தங்களிலும், தப்ஸீறுல் காபிரீன், அஸ்ஹத்துல் மஜாலிஸ், றவ்லுல் உலமா, றவ்லுல் அப்கார், றவ்லுல் பாயிக்கி, றவ்னகுல் மஜாலிஸ், முதலிய கிரந்தங்களிலும், பார்த்துக் கொள்ளலாம்....

ஓ! அன்பர்களே மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் புத்திபிரகாரம் நோன்பி லென்னவுண்டு, ஹஜ்ஜியி லென்ன வுண்டு, தொழுகையி லென்னவுண்டு, விருத்தசேதனத்தி லென்னவுண்டு, அதைச் செய்வானேன்? இதைச் செய்வானேன்? அப்படிச் செய்தாலென்ன? இப்படிச் செய்தாலென்ன? என்று பலவாறுகப்பிதற்றி ஒன்றைக்கொன்று வேறுபட்டு மார்க்கத்தைக்கெடுத்து, நாசமடையாத வண்ணம் ஆண்டவன் நமது ஆதித் தந்தை தாயாகிய ஆதம் ஹவ்வாவுக்கு இஸ்லாம் என்னும் மார்க்கக் கட்டளை யருளி, அவ்வண்ணமே தவறாமல் நடந்துவர வேண்டுமென்று வற்புறுத்தி விதித்தான். அவ்வாறே அவர்களும் ஷீது நபியவர்களும், இத்ரீஸ் நபியவர்களும், நூஹ் நபியவர்களும் நடந்து வந்து, ஜனங்களுக்கும் போதித்து வந்தார்கள்.

பின்னும் அதை உறுதிப்படுத்தி, ஆண்டவன் இபுறாஹீம் நபியவர்களுக்கும், அவர்கள் பின் சந்ததிகளுக்கும் உலகம் முடிவு வரை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபித்து, அக்கட்டளையை மீறினவன் சபிக்கப்பட்டு மோக்ஷத்தையும், சுதந்தரத்தையும் இழந்து அறுப்புண்டு போவானென்று வற்புறுத்திக் கட்டளையிட்டிருக்கின்றான்.

இவ்வாறே அவர்களும், அவர்களுக்குப் பின்வந்த எல்லா நபிமார்களும் அக்கட்டளையின் படியே நடந்துவந்து கடைசியில் முஹம்மது நபியவர்கள் அவ் இஸ்லாத்தின் கட்டளைகளை உறுதிப்படுத்தி எள்ளளவும், யாராலும் யாதொரு பேதப்படுத்த லாகாத வண்ணமாய் ஸ்தாபித்திருக்கின்றனர்.

இத்தன்மையான ஆசாரத்தையே பின்பற்றி நடக்கவுமல்லாதோடு, ஆதம் முதல் முஹம்மது றசூலுல்லா வரையுள்ள எல்லாத் தீர்க்கதரிசிகளையும் விசுவாசித்து வருபவனே மோக்ஷமடைவானென்று ஒருதரமல்ல, இருதரமல்ல, பன்முறையாகச்



சத்தியமாய்ச் சொல்லலா மென்பதற்கு யாதொரு சந்தேகமுண்டோ?

அவ்விதம் யார் நடக்கவில்லையோ அவர்கள் ஆண்டவனுடையவும், முன்னுள்ள எல்லாத் தீர்க்கதரிசிகளுடையவும், முஹம்மது றசூலுல்லா அவர்களுடையவும் கோபத்திற்கும், மத்தேயு 7ம் அதிகாரம் 21, 22, 23ம் வசனங்களிலும், யோவான் வெளி 22ம் அதிகாரம் 19-ம் வசனத்திலும், கலாத்தியர் 3ம் அதிகாரம் 10-ம் வசனத்திலும் இன்னும் இவைபோன்ற அநேக வசனங்களிலும் கண்டபிரகாரம் யேசுநாதருடைய சாபத்திற்கும், 1ம் மோசே 17ம் அதிகாரம் 7-ம் 19-ம் வசனத்திலும் ஷை மோசே 26-ம் அதிகாரம் 3, 4, 5, வசனங்களிலும் கண்டுள்ள ஞாயத்தை மறுக்கிறதால் நேரிடும் ஆபத்திற்கும், 1-ம் மோசே 22-ம் அதிகாரம் 18-ம் வசனத்திலும் ஷை 1-ம் மோசே 12-ம் அதிகாரம் 3-ம் வசனத்திலும் ஆண்டவன் இபுறாஹீம் நபிக்குச் சத்தியம்செய்த பிரகாரமும், 1-ம் மோசே 26-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் ஆண்டவன் இஸ்ஹாக்கு நபியவர்களுக் கருளிய பிரகாரமும் உலகத்திலுள்ள எல்லா ஜாதிகளும் ஆசீர்வாதம் பெற்று ஒன்றாய் ஐக்கியப்பட்டு நடக்காமல் தவறுகிற பாவத்திற்கும் உட்படுவார்களென்று நிச்சயமாய்ச் சொல்லலாமென இதை ஆராய்கிற ஒவ்வொருவரும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்து கொள்வார்களல்லவா?

ஆகையால் அன்பர்களே, நீங்கள் ஆதமுதல் முஹம்மது நபி வரையுமுள்ள எல்லா நபிமார்களையும் விசுவாசித்து, இபுறாஹீம் நபியவர்களின் கொள்கை, கிரியை முதலிய சகல ஆசாரத்தையும் பின்பற்றி நடந்து வருவீர்களானால் மேற்சொன்ன கோபத்தையும், சாபத்தையும், ஆபத்தையும், பாவத்தையும் விட்டு நீங்குவதோடு அவர்களெல்லோருடைய ஆசீர்வாதத்தையும், சுதந்தரத்தையும், மோக்ஷத்தையும் நீங்கள் அடைந்துகொள்ளுவதுமன்றி முழு உலகமும் ஒற்றுமையாக நடந்துகொண்டு வருமல்லவா?

இவ்விதம் முழு உலக ஒற்றுமையிலேயே யேசுநாதரை அங்கீகரியாதவர்களும், பலவாறாய் நிந்திக்கிறவர்களுமான யூத

தர்கள், இந்துக்கள், பார்ஸிகள், சீனர்கள், ஜப்பானியர்கள் மற்றுமுள்ள மதஸ்தர்கள் எல்லோரும் அவரை ஒரு பெரிய தீர்க்கதரிசி யென்று விசுவாசித்து "ஸலா அலைஹி" "ஸலா தஸ்லீமத்துல்லா" என்று பலவாறும் மகிமைப்படுத்தி, சாட்சி பகர்ந்து அவர்களுடைய நாமத்தையும் அவர் தாயாரின் நாமத்தையும் வெகு ஆனந்தத்தோடு அவர்களுக்குப் பேர் நாமங்களாகச் சூட்டிக்கொண்டு, அவர்களை மகத்துவப்படுத்தி வருவார்களென்பதை உங்கள் ஆதாரக்கேட்டும், அவற்றைப் பார்த்தும் களிக்க்கும் வருகிறீர்களென்பதற்கு யாதொரு ஐயமுண்டோ?

இவ்வாறுள்ள பட்டிடையாத நன்மைகளை நீங்கள் அடையுமிடங்களிலும், கணக்கிலடங்காத மகத்துவம் பெருகாநிற்குக் குன்றாதிக்கொண்டு வருவதற்கும் "முஹம்மது றசூலுல்லா" என்கிற ஒரு திருவாக்கே பெருங் காரணமாயிருக்கின்றது.

இத்தன்மையான மகத்துவம் வாய்ந்த வேத திருவாக்காகிய திருவாக்கு ஆண்டவன் கிருபையால் உங்கள் நாவில் வந்து, நீங்களெல்லோரும் ஒன்றுகூடி ஒரே மதஸ்தராய் நடந்து, அதினாலுண்டாகும் எல்லா நன்மைகளை நீங்களெல்லோரும் பெற்றுக்கொள்வீர்களென்று நம்புகிறேன்.

இதில் யதாகிலும் சரியில்லையென்று உங்கள் மனதுக்குத் தோன்றுமானால் அதை நீங்கள் எடுத்துச் சொல்லும் விஷயத்தில் அது எனக்கு பிரியமென்று தோன்றினால் அங்கு ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். மொத்தத்தில் நாம் எல்லோரும் ஒன்றுகூடி, ஒரே மார்க்கத்தில் இலங்கி, சகோதர ஐக்கியமடைந்து, வாழ்ந்து வரலாம் என்பதே என்னுடைய பூரண கருத்தென்று மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆகையால் யார் நன்மையான விஷயத்தில் முயற்சிப்பாரோ அவன் முயற்சியைப் பெருகப்பண்ணி, அதைக் கைகூடும் பொருட்டு ஆண்டவன் கிருபை செய்கிறவனாயிருக்கிறான் என்று சொல்லிய திருவாக்கு பிரகாரமே இதை அவன் பெருக்கி, கைகூட்டிச் செய்தருள்வானாக, ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!!

# 3-வது அதிகாரம்.

## ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களைப்பற்றி அறிவையும் மார்க்க வரம்பையும் கடந்த ஐரோப்பிய நீதிமான்களும், மற்றுமுள்ள முழு உலகத்தாரும் புகழ்ந்திருக்கிற மகத்துவம்.

ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களைப்பற்றி உலகந்தோன்றிய நாள் முதலாய் இவ்வுலகத்தி லுள்ளவர்களும், வானலோகத்தி லுள்ளவர்களும், சொர்க்கலோகத்தி லுள்ளவர்களும் ஆக எவ்வுலகத்தி லுள்ளவர்களும் அவர்களைப் புகழ்ந்திருக்கிறதை எடுத்துச் சொல்லவேண்டுமானால், மனிதர்களுடைய புத்தியிலும், சித்தியிலும் அடங்காத வைகளாகவும், எட்டாத வைகளாகவும் இருக்கின்றன.

இவைகள் யாவும் ஒன்றாய்த் திரளத்தக்கதாகவே மூதுரையாக ஒரு கவி சொல்லப்பட்டு, எப்புராணங்களையும் வாசிக்குமுன் அக்கவியைப்படித்து அப்பால் அப்புராணக்கவியை வாசிப்பது வழமை. அதாவது:—

முஹம்மது நபியென் றுலோ
மூவுல கனைத்தும் போற்றும்
முஹம்மது நபியென் றுலோ
முன்னவன் கருணை யுண்டாம்
முஹம்மது நபியென் றுலோ
முவலிபத்தும் பலாயும் நீங்கும்
முஹம்மது நபியென் றுலோ
முடிவில்லாப் பத்வி யுண்டாம்

என்பதே. இவ்வாறே அரபி, பார்ஸி, இந்தி முதலிய எப்பாஷைகளிலுமுள்ள ஒவ்வொரு கவிஞர்களும் அவரவர்கள் கவிக்கு முகவுரையாக மேற்கூறிய கருத்து அமைந்த வண்ணமே பாடியிருக்கின்றனர்.

ஆனால் சில கிறிஸ்துவ நண்பர்கள் மூவுலகமும் அவர்களை எப்படி வாழ்த்துகிறதென்று சந்தேகித்துக் கேட்கும் பக்ஷத்தில் அதற்கு மறுமொழியாவது:—

ஆபகூக் 3-ம் அதிகாரம் 3-ம் வசனத்தைப் பார்க்க, பரிசுத்தன் தேமானிலும் பரிசுத்தருள்ளவர், பாரான் பர்வதத்திலிருந்து வருவார். அவர் மகிமை வானங்களை மூடிக் கொண்டது அவர் புகழ்ச்சியினால் பூமி நிறைந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இவ்வசனம், ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களுக்குச் சம்பந்தப்படிருக்கிறதென்கிற வியாக்கியானத்தை இப்புஸ்தகம் 2-ம் அதிகாரம் 40-ம் பக்கத்தில் பார்க்கத் தெரிய வரும்.

மேற்சொன்ன வசனங்களினால் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களை மூவுலகினத்தும் போற்றுவதினாலேயே அவர் மகிமை வானங்களை மூடிக்கொண்டதென்றும், அவர் புகழ்ச்சியினால் பூமி நிறைந்ததென்றும் சொல்லப்பட்டிருக்கிறதென்றே சந்தேகமறத் தெரிந்து கொள்ளலாம்.

"முஹம்மதுன் செய்யிதுல் கவ்னையினி வத்தகலைன்
வல்பரீகைனி மின் உருபின் வமின் உஜமி".

வானலோகம், பூலோகமாகிய இவ்வுலகங்களுக்கும், மலக்கு ஜின் என்கிற கூட்டங்களுக்கும், அரபி, அஜம் என்கிற எல்லா மனு ஜாதிகளுக்கும் முஹம்மது நபியவர்கள் நாயகமாயிருக்கிறார்களென்பதே.

இதன்றியும்,

"பமபுலகுல்எல்மிபீ ஹிஅன்னஹு பஷருன்
வ அன்னஹு கைருகல் கில்லாஹி குல்லிஹிமி"

மனிதர்களுடைய அறிவு அவர்களைப்புகழ்வதில் எவ்வளவு தூரம் போகுமென்றாலோ மெய்யாக அவர்கள் மனிதரென்றும் ஆண்டவனுடைய சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலும் இவர்களே மகா சிறந்தவரென்றும், சொல்லுவதற்கதிகம் ஒன்றுஞ் சொல்லவொலாதென்பதே.

பின்னும்,

"தஅமத்த அத்வஹுன் நஸா றாபீ நபியிஹிமி
வஹுக்கும் பிமாசிஃத மதுஹன்பிஹி வஃதக்கிமி."



என் சிநேகிதனே, நஸாராக்கள் தங்கள் நபியை தாவா செய்கிறார்களே அதை நீ கண்டிப்பாய் விட்டுவிட்டு, நீ நாடியதை யெல்லாம் கற்பித்து அவர்களைப் புகழ்வாயாக.

(ஈஸா நபியவர்களை நஸாராக்கள் ஆண்டவனென்றும் அவனுடைய பிள்ளையென்றும் சொல்லி தாவா செய்கிறதைத்தவிர மற்றதெல்லாம் சொல்லென்பதே) இவ்வபோன்ற 163கவிகளைப் பூசிறிஇமாம் அவர்கள் பாடி அதற்குப் "புருதா" என்று பேரிட்டிருக்கிறார்கள். புருதா என்றால், நிவிர்த்தி, என்ன நிவிர்த்தி என்று கேட்டால் பெரு வியாதி, முதலிய நீராவியாதி, நிவிர்த்தி என்று சொல்லப்படும், எப்படியெனில் மேற்படி கவி கூறியவர் நீரா வியாதியில் சிக்கி மரணாவஸ்தையிலிருக்கையில் இக்கவியைப்பாடியதினால் அப்பிணி நிவிர்த்தியானது கொண்டே இதற்கு மேற்படி பெயரை இடப்பட்டது.

இன்றைக்கும் அதை மன உருக்கத்தோடு நீரா வியாதிக்காரர் ஓதினால் அவர்கள் வியாதி நீங்கி விடுகிறதைக் காணலாம்.

ஆனால் அதைப் பொதுவாகக் கவனிக்கும் விஷயத்தில் பாவம், பிணி, கவலை முதலிய சகல துன்ப நிவிர்த்தி யென்றே சொல்லலாம்.

அன்றியும்,

"உலல்லி-ஸலாதன் தம்லவுல் அர்லவஸ்மா
அலாமன்லஹுடு அஅலல் உலாமுத்தபவ்வஃ."

உயர்த்திகளை யெல்லாம் கடந்து நிற்கிற மகா உயர்த்தியைத் தமது காலுக்குக்கீழ் மிதித்துக்கொண்டு நிற்கிறாரே அப்படிப்பட்டவர் மீது வானம் பூமி ஆகிய இவ்வுலகமும் நிறைந்து பூர்த்தியாகிற வரையும் நான் ஸலவாத் என்கிற கருணை மாரியைச் சொரிகிறேன். என்பதே.

இன்னும் இம்முகவுரை கவியைப்போலவே அலிபு-யே என்கிற அரபு அக்ஷரம் 29-க்கும், ஒவ்வொரு அக்ஷரத்திற்கு 21 ஆக 609 கவிகளை ஒவ்வொரு கவியிலும் ஒவ்வொரு ஆகம் அமையும்படியாக வெகு ஆனந்த சமர்த்தோடு வைதரு அபூபக்கர் பதுதாதி என்பவர்கள் பாடி அதற்கு "வித்திரியா" என்று பேரிட்டிருக்கிறார்கள்.

வித்திரியா என்றால் ஒத்தை, என்ன ஒத்தை யென்றாலோ, வானம், பூமி, மலக்கு, ஜின், மனுமுதலிய படைப்புகளொவ்வொன்றிலும் அமைந்துள்ள மகத்துவங்கள் யாவும்ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் தன்னிலேயே அமைந்து ஒன்றுதிரண்டு அவர்கள் மீதே ஒத்தையாய் நின்றிலங்குகிற தென்பதே.

இக்கருத்தினாலேயே அந்த "வித்திரியா" என்னும் ஒத்தை யென்று அழைக்கப்பட்டு வருகிறது. ஆனால் சிலர் அலிபு-பே என்கிற அரபு அக்ஷரம் 29-ஆய் இருப்பதால் ஒத்தை யென்றும், ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் 21 கவியாக இருப்பதால் ஒத்தை யென்றும், ஆக மொத்தக் கவி 609 ஆய் இருப்பதால் ஒத்தை யென்றும் பொருள்படுத்துவார்கள்.

அன்றியும், வெகு பேர் போன கவிராஜராகிய கஅபு புலவர் அவர்கள் மட்டிலடங்காத மகத்வங்களும், அற்புதங்களும், அதிசயங்களும், அமைந்ததாக 64 கவிகளைப்பாடி, ஒவ்வொரு கவிக்கு ஒவ்வொரு கிரந்தம் எழுதினாலும் அடங்காத வண்ணமாய் இயற்றி அதற்கு "பானத்ஸுஆத்" என்றுபேரிட்டு ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் திருச்சமுகம் வந்து அதை யவர்கள் முன்னிலையில் அரங்கேற்றிப் பரிசு பெற்றனர். இவ்வாறே இன்னும் அநேகிறந்த கவிவாணர்கள் மௌலூதுக ளாகவும், கவிதாக்களாகவும், மாலையாத்துகளாகவும், பாடியிருக்கிறார்கள்.

அவைகளை இங்கெடுத்தெழுத அடங்காதென்று கருதி நிறுத்தி அந்நியர்களால் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் மகத்துவத்தைப் பற்றி சொல்லியிருக்கிறவைகளில் சிலதைக் கூறப்புகுகிறேன்.

ஆனால் அவர்களில் அறிவையும் மார்க்க வைராக்கியத்தையும் கடந்த ஐரோப்பிய நீதிமான்கள் நபியவர்களைப்பற்றி சொல்லியிருக்கிற மகத்வங்களில் சிலதை முதலாவதாகச் சொல்லுகிறேன்.

மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித் என்பவர் தமது "லைப்ஆவ் முஹம்மத்" என்கிற கிரந்தத்தின் 834-வது பக்கத்தில் முழு உலகத்தில் வெளியாயிருக்கிற எல்லா மனிதர்களைப் பார்க்கி



லும் முஹம்மது நபி அவர்களே ஜாதி மார்க்கம் இராஜாங்கம் இம்மூன்றிலும், மகா அதிஷ்டசாலியாயிருக்கிறாரென்று சொல்லியிருக்கின்றனர்.

இம்மூன்றில் ஒன்றாகிய அவரது ஜாதி எப்படி யென்றாலோ, ஆண்டவன் ஆதியில் தான் தானாக இருந்தான். அப்பால் தன்னை அறியப்படுதலை உவந்தான். தான் நாடியிருந்தபடி நூர்முஹம்மதைப் படைத்தான். அதாவது முஹம்மது நபியின் ஒளி இந்த ஒளிக்குப் பல சிறந்த நாமங்களுண்டு. அவ்வொளியைக் கொண்டே வானம், பூமி, நக்ஷத்திரம், கடல், மலை, சொர்க்கம், நரகம் முதலிய எல்லாவற்றையும் படைத்தான் ஆகையினால், அவ்வொளியே எல்லாவற்றுக்கும் அசலாகவும், வித்தாகவும், கருவாகவும் காரணமாகவு மிருக்கின்றது. இவைகள் யாவும் ஒன்று படத்தக்கதாக ஆதநபியவர்களை யுண்டாக்கி அவ்வொளியை அவர்கள் நெற்றியில் அமைக்கப்பட்டது.

அவ்வொளி அவர்கள் மகன் ஷீது நபிக்குத் தோன்றிப் பின்பு அவர் மகன் கைனீன், அவர்மகன் மஹ்லீல் அவர் மகன் இரது, அவர் மகன் இதிரீஸ்நபி, அவர்மகன் மதூஷல்கு, அவர் மகன் லாமக், அவர் மகன் நூஹுநபி, அவர் மகன் சாம், அவர் மகன் அருபக்ஷத், அவர் மகன் சாலக், அவர் மகன் ஐபர், அவர் மகன் பாலக், அவர் மகன் ராவூன், அவர் மகன் ஸாறூஹு, அவர் மகன் தாறாஹ், அவர் மகன் ஆதர், அல்லது தாரக், அவர் மகன் இபுறாஹீம் நபி, அவர் மகன இஸ்மாயீல் நபி, அவர் மகன் காபித், அவர் மகன் எஷ்ஹபு, அவர் மகன் யஅரப், அவர் மகன் எத்துறஹு, அவர் மகன் நாகூர் அவர் மகன் மிக்தம், அவர் மகன் உதது, அவர்மகன் அத்னான், அவர் மகன் முஅத்து, அவர்மகன் நிஸாரு, அவர்மகன் முலர், அவர் மகன் இலியாஸ், அவர் மகன் முத்ரகத், அவர் மகன் குஸைமா. அவர்மகன் கினானா, அவர் மகன் நல்ரு, அவர் மகன் மாலிக்கு, அவர் மகன் பிஹ்ரு, அவர் மகன் காலிபு, அவர்மகன் லுஅய்யி, அவர் மகன் கஅபு, அவர் மகன் முர்ரது, அவர்மகன் கிலாப், அவர் மகன் குஸய்யி, அவர் மகன் அப்துமனாப், அவர்மகன் ஹாஷிம், அவர்மகன் அப்துல் முத்தலிபு, அவர்மகன்

அப்துல்லா அவர்களுக்கு கடைசியாக அவ்வொளி தோன்றிய பின்பு இவர்களிலிருந்து அவ்வொளி ஆமினு அவர்களில் அவதரித்து ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்கள் தோன்றினார்கள்.

இவ்வொளி சுற்றிக்கொண்டிருந்த முன்னோர் அப்படிப்பிரகாசித்து பரிசுத்தவான்களாயிருந்தார்களோ அப்படியே இவர்களுக்குப் பின்னுள்ள சந்ததியாரும் உலக முடிவு பரியந்தம் பரிசுத்தவான்களாய்ப் பிரகாசித்துக்கொண்டு வருகிறார்கள்.

இதைப்பற்றி குர்ஆன் ஷரீப் 19-ம் ஜுஸ்வு 15-ம் றுக்கூவு 28-ம் ஆயத்தில் "உம்மை ஆண்டவனுக்குத் தொண்டு செய்த திருத்தொண்டர்களின் தலைமுறைகளில் திருப்பிக்கொண்டு வந்தானென்றும்," 22-ம் ஜுஸ்வு 1-ம் றுக்கூவு 3-ம் ஆயத்தில் உம்முடைய பிள்ளைகள் பரிசுத்தமானவர்களாயிருப்பார்களென்றும், சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதற்கிணங்கவே சங்கீதம் 45ம் அதிகாரம் 16ம் 17ம் வசனத்தில் "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர்கள் இருப்பார்களென்றும், உமது நாமத்தை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப்படுத்துவேனென்றும், இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் துதிப்பார்களென்றும் இன்னும் ஏசாயா 60-ம் அதிகாரம் 15ம் வசனத்தில் உம்மை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன்," என்றும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

ஆனால் சில யஹூதி, நஸாராக்களான யூத கிறிஸ்துவர்கள் இஸ்மாயீல் நபியைப்பற்றி தங்கள் வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று கேட்கக்கூடும் அதற்கு மறுமொழியாவது:—

1-ம் மோசே 17-ம் அதிகாரம் 20-ம் வசனங்களில் ஆண்டவன் இபுறாஹீம் நபியை நோக்கி: ஓ! இபுறாஹீமே இஸ்மவேலுக்காக நீர்செய்த விண்ணப்பத்தைக்கேட்டேன் நான் அவனை ஆசீர்வதித்து அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும்



பண்ணுவேன்; அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான் அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்" என்று சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது மன்றி, இன்னும் ஷை 1-ம் மோசே 21-ம் அதிகாரம் 17, 18, 19-ம் வசனங்களைப் பார்க்க தேவதூதன் இஸ்மாயீலின் தாயாராகிய ஆகார் என்கிற ஹாஜிரா அம்மாளை நோக்கி: "தேவன் உன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்; நீ எழுந்து பிள்ளையை எடுத்து உன் கையில் பிடித்துக்கொண்டு போ, தேவன் அப்பிள்ளையின் கூடவே இருக்கிறார். அவனை அவர் பெரியஜாதியாக்குவார். என்று சொல்லப்பட்டிருக்கிறதால் இபுறாஹீம் நபியின் மக்களில் ஷை இஸ்மாயீல் நபி விசேஷித்தவராயிருக்கிறாரென்று தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் மேற்படியார்களில் சிலர் முஹம்மது றசூலுல்லா அவர்கள் மேற்படி இஸ்மாயீல் நபியின் வங்கிஷத்தில் எவ்விதம் முதன்மைபட்டிருக்கிறாரென்று அறிய விரும்புவார்களானால் அதற்கு விபரமாக அவர்களுடைய வேத புத்தகத்தைக் கொண்டே சொல்லுகிறேன். அதாவது 1-ம் மோசே 21-ம் அதிகாரம் 14-முதல் 21-ம் வசனம் வரை பார்க்க, இபுறாஹீம் நபியவர்கள் தன் மனைவியாகிய ஹாஜிராவையும், அவன் மகனாகிய இஸ்மாயீல் நபியையும் ஒரு அப்பத்தையும், ஒரு துருத்தி தண்ணீரையும் கொடுத்து அனுப்பி வைத்ததாகவும் அவர்கள் பெயர் ஸபா வனாந்தரத்திற்குச் சென்று அங்கே இருந்ததாகவும் அப்போது அக்குழந்தைக்குத் தண்ணீரில்லாமல் அழுததாகவும் அந்தப் பரிதாபத்தைச் சகிக்கமாட்டாமல் ஒரு அம்பு பாயுந்தூரம் அந்தம்மாள் ஓடினதாகவும், அந்நேரத்தில் தேவதூதர் அந்தம்மாளிடம் வந்து அவளையும், அக்குழந்தையையும் ஆசீர்வதித்து நீ பயப்படாதே, அக்குழந்தையை ஆண்டவன் பெரிய ஜாதி ஆக்கிவைப்பான், எப்போதும் பராபரன் அப்பிள்ளையின் கூடவே இருக்கிறான். என்று பலவாறாய் ஆறுதல் சொன்னதாகவும் பின்னர் அங்கு அந்தம்மாளுக்கு ஒரு துரவு தென்பட்டதாகவும் அதின் தண்ணீரைக் கொண்டு இருவரும் குடித்து ஜீவித்ததாகவும், அதற்கருகில் இருக்கிற பாரான் பர்வதமென்கிற (ஹிரா) மலையில் அந்த இஸ்மாயீல் நபிக்கு.

ஒரு மிஸ்று ஸ்திரீயை விவாகம் புரிவித்து அங்கே குடியிருந்ததாகவும் கண்டிருக்கிறது.

பின்னும் 1-ம் மோசே 21-ம் அதிகாரம் 27 முதல் 34 வரை பார்க்க, இபுறுஹீம் நபி மேற்படி பெயர் ஸபாவுக்குப் போய் அங்கிருக்கிற கிணற்றைத் தோண்டி, அக்காலத்தில் அரசனாயிருந்த அபிமெலேக்கையும், அவருடைய சேனாதிபதியாகிய பிக்கோலும் ஆக இவ்விருவரையும் மேற்படி இடத்திற் கழைத்து அக்கிணற்றைத் தோண்டினதற்குச் சாக்ஷியாக ஏழு பெண்ணாட்டுக் குட்டியை மேற்படி அரசனுக்குக் கொடுத்து ஷை அரசரும், இபுறுஹீம் நபியும், உடன்படிக்கை செய்து ஆணையிட்டுக் கொண்டபடியால் அதற்குப் பெயர் ஸபா என்று சொல்லப்பட்டதென்றும், பின்பு இபுறுஹீம் நபியவர்கள் அவ்விடத்திலேயே ஒரு தோப்பையுண்டாக்கி அதில் சதாகாலமும் ஆண்டவனைத் தொழுது வந்தார்களென்றும் கண்டிருக்கிறதுமன்றி ஷை 1-ம் மோசே 22-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் இபுறுஹீம் நபியவர்கள் பெயர் ஸபாவுக்குப்போய் அங்கேயே குடியிருந்தார்களென்றும் கண்டிருக்கிறதைக் காணலாம். பின்னும் அவ்வதிகாரம் 12-ம் வசனத்தில் தம்முடைய அருமை மகனை மோரியாமலையென்கிற (மீறு)வில் அறுக்கத் துணிந்ததாகவும் கண்டிருக்கிறது.

ஆகவே, ஷை பெயர் ஸபா என்றழைக்கப்படுகிற மக்காவிலிருக்கும் ஷை ஸம் ஸம் கிணற்றையும், அங்கிருக்கிற தோப்பையும், அதில் இபுறுஹீம் நபியவர்கள் தொழுதுகொண்டு வந்த இடமாகிய கஃபத்துல்லாவையும், அவர்கள் குடியிருந்த மக்காவையும் அவர் மகனை அறுக்கத் துணிந்த இடமாகிய மீறாவையும், ஆதம் நபியும், ஹவ்வா அம்மாளும் ஒன்றுசேர்ந்த அறபாத் மலையையும் மற்றும் அங்குள்ள பரிசுத்த ஸ்தலங்களையும் ஷை இஸ்மாயீல் நபியவர்கள் தங்கள் பிதாவின் சுதந்தரமாகக் கைப்பற்றி அவ்வாசாரத்தைப் பின்பற்றி நடந்து வந்ததுபோல் அவருடைய சந்ததியார்கள் வாரிசு கிரமப்படியே கைக்கொண்டு நடந்துவந்து கடைசியாக முஹம்மது றசூலுல்லா அவர்கள்



பிதாமகரான அப்துல் முத்தலிப்பு அவர் அடைந்து வந்ததை ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களும் அடைந்ததுமன்றி இபுறுஹீம் நபியுடைய சகல ஆசாரத்தையும் எள்ளளவும் தவறாமல் நடந்து வந்திருக்கிறார்கள்.

ஆகையினாலேயே 1-ம் மோசே 26-ம் அதிகாரம் 4, 5, வசனங்களில் ஆண்டவன் இஸ்ஹாக்கு நபியை நோக்கி, உன் பிதாவாகிய ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும், கைக்கொண்டபடியினால் நான் உன் சந்ததியை நக்ஷத்திரங்களைப்போல் பெருகப்பண்ணி, உன் சந்ததிகளுக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன் உன் சந்ததிக்குள் பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று சொன்னதாகக் கண்டிருக்கிறதுமன்றி 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில், ஆண்டவன் இபுறுஹீம் நபிக்கு, நான் உமக்கிட்ட உடன்படிக்கையை எவன் மீறுவானோ அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்றும், இன்னும் ஷை மோசே 12-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் ஆண்டவன் இபுறுஹீமை நோக்கி, நீ என் கட்டளைப் பிரகாரம் நடக்கிறபடியால் உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை நான் ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களை நான் சபிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றும் கண்டிருக்கிறது.

ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் ஆண்டவன் ஆபிரகாமுக்கு இட்ட கட்டளைப் பிரகாரமே நடந்திருக்கின்றமையால் ஷை இஸ்ஹாக்கு நபிக்குச் சொன்னபடியுள்ள கானான் தேசம் முதலிய சகல ராஜ்ஜியங்களையும் கொடுத்து முழு உலக ஜனங்கள் அவரை ஆசீர்வதித்துத் துதிக்கும்படியாகவும், அவர் சந்ததிகள் உலகத்தில் நக்ஷத்திரங்களைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் படியாகவும் செய்வித்ததோடு இபுறுஹீம் நபிக்கு ஆண்டவன் அருளிய பிரகாரம் இவர்களை ஆசீர்வதித்தவனை ஆண்டவன் ஆசீர்வதித்தும், அவர்களைச் சபி

த்தவனை ஆண்டவன் சபித்தும் போட்டதுமன்றி இபுறாஹீம் நபியவர்களின் கட்டளையை மீறினவன் சங்காரிக்கப்பட்டும் சபிக்கப்பட்டும் போனானென்பது உலகம் அறிந்த விஷயமே.

ஆகவே, முஹம்மது றசூலுல்லா அவர்களே, இபுறாஹீம் நபியுடைய வங்கிஷத்தில் முதன்மை பெற்றவராய் விளங்கி அவருடைய பரிசுத்த ஸ்தலங்களையும், அதிகாரத்தையும் அடைந்து அவர்களுடைய ஆசாரத்தை எள்ளளவும் தவிரவிடாமல் கைப்பற்றி நடந்து வருகின்றமையால் இவர்களே முழு உலகத்தில் வெளியாகிய எல்லா ஜாதிகளிலும் ஆசீர்வதிக்கப்பட்ட பெரிய ஜாதியான மகத்துவமுடையவராயிருக்கிறாரென்று சூரிய பிரகாசத்தைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால் சில யூத கிறிஸ்தவ அன்பர்கள் இபுறாஹீம் நபியிலிருந்த ஒளி இஸ்மாயீல் நபிக்குத்தானா இறங்கிவிட்டதென்று கேட்கக்கூடும். அதற்கு விபரம் எப்படியென்றாலோ:—

1-ம் மோசே 17-ம் அதிகாரம் 1-ம் வசனம்; ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி நான் சர்வ வல்லமையுள்ள தேவன், நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாய் இரு. (2) நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார். (3) அப்பொழுது ஆபிராம் முகங்குப்புறவிழுந்து வணங்கினார். தேவன் அவரோடேபேசி (4) நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால் நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய் (5) இனி உன்பேர் ஆபிராம் என்னப்படாமல் நான், உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால் உன் பேர் ஆபிரகாம் என்னப்படும். (6) உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன். உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதனால் இபுறாஹீம் நபிக்கு ஆண்டவன் உமது வங்கிஷத்தை அதிகத் திரளாகப் பலுகவும் பெருகவும் பண்ணி அதிகத்



திரளான பெரிய ஜாதியாக்குவேன் என்று ஆசீர்வதித்ததினால் அவர் அவனுக்கு (ஸஜதா) என்றும் சாஷ்டாங்கம் பண்ணினாரென்றும், அதினாலேயே அவர் பெயரை மாற்றித் திரளான ஜனங்களுக்கு அவர் தகப்பனாயிருக்கிறாரென்பதற் கறிகுறியாக அவர் பெயர் ஆபிரகாம் என்று அழைக்கப்பட்டு வருகிறதென்று தெரிகிறதுமன்றி அவர் வங்கிஷத்தில் ராஜாக்கள் தோன்றுவார்களென்றும் தெரிகின்றது.

மேற்படி வசனத்தில் கண்ட அதிகத்திரளான பெரிய ஜாதிக்குத் தகப்பனாவார் என்கிற வாக்கியம் (1) அவர் வங்கிஷத்தில் ராஜாக்கள் தோன்றுவார்கள் என்கிற வாக்கியம் (2)

மேற்படி முதலாவது வாக்கியம் அவருடைய முதன் மகனாகிய இஸ்மாயீல் நபியவர்களுக்கும், இரண்டாவது வாக்கியம் அவருடைய இரண்டாம் மகனாகிய இஸ்ஹாக்கு நபியவர்களுக்கும் பாகிக்கப் பட்டிருக்கின்றது.

அதெப்படியென்றால்:—1-ம் மோசே 17-ம் அதிகாரம், 18, 19, 20-ம் வசனங்களில் இபுறாயீம் நபியைநோக்கி ஆண்டவன், நான் இஸ்மாயீலை ஆசீர்வதித்து அவனை மிகவும் அதிகமாய் பலுகவும் பெருகவும் பண்ணுவேன், அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான், அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என்று சொல்லப்பட்டிருக்கிறதுமன்றி, மேற்படி 1-ம் மோசே 21-ம் அதிகாரம் 16 முதல் 21-ம் வசனம் வரை அவருடைய தாயாராகிய ஆகாருக்கு ஆண்டவன் இவ்வாறே ஆசீர்வதித்திருக்கிறதாகத் தெரிந்து கொள்ளலாம்.

இதனால் ஆண்டவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த முதலாவது ஆசீர்வாதத்தை இஸ்மாயீல் நபிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்துக்கொள்ளலாமல்லவா?

ஷை 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 16, 19-ம் வசனத்தில் ஆண்டவன் ஆபிரகாமை நோக்கி, உன் மனைவியாகிய சாராள் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு இஸ்ஹாக்கு என்று பெயரிடுவாயாக. அவளிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இதனால் இபுறாஹீம் நபிக்குக் கொடுக்கப்பட்ட இரண்டாவது ஆசீர்வாதத்தை இஸ்ஹாக்கு நபிக்குக் கொடுக்கப்பட்டதென்று தெரிந்துகொள்ளலாம்.

மேற்சொன்ன வைகளைத் தவிர ஆண்டவனுக்கும், இபுறாஹீம் நபிக்கும் மேற்படி இரண்டுபிள்ளைகளின் விஷயத்தில் இதைப் பற்றி வேறொன்றும் சொல்லப்பட்டிருக்கிறதாகப் பைபிளில் காணப்படவில்லை.

ஆகையினாலேயே இபுறாஹீம்நபி ஆண்டவனுக்கு நன்றியறிதலாக (ஸஜ்தா) சாஷ்டாங்கம் செய்ததும், அவர்பேர் மாற்றப்பட்டதுமான முதலாவது விஷயத்தை இஸ்மாயீல் நபிக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் அவருடைய பரம்பரையான ஒளி முதல் பிள்ளையாகிய இஸ்மாயீல் நபிக்கு இறங்கியிருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

மேலும் 1-ம் மோசே 12-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் ஆண்டவன் ஆபிரகாமை நோக்கி, உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை நான் ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களை நான் சபிப்பேன்; பூமியிலுள்ள வங்கிஷங்களெல்லாம் உமக்குள் ஆசீர்வதிக்கப்படும், என்று சொல்லியிருக்கிற பிரகாரம் மேற்படி இஸ்மாயீல் நபியவர்களின் சந்ததியிலுள்ள ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் தங்கள் தொழுகையிலுள்ள அத்தஹிய்யாத்து முதலானவைகளில் ஸலவாத்து என்னும்ஆசீர்வாதத்தை இபுறாஹீம் நபியவர்கள்பேரிலும் அவர்களின் குடும்பத்தினர்பேரிலும் மொழிந்துவருகிறதினால் அந்த இபுறாஹீம்நபிக்குக் கொடுக்கப்பட்ட மேற்சொன்ன இரண்டு சுதந்தரத்தையும் நபியவர்களுக்கு ஆண்டவன் அருள் புரிந்திருக்கிறானென்பது உலகப் பிரசித்தமே. இதைமுழுதுங் கவனிக்கப் போனால் அதைவிட எவ்வளவோ மகத்துவத்தைக் கொடுத்திருக்கிறானென்று நாட்டமாகச் சொல்லலாம்.

இதை மறுத்து மேற்படியார்கள் இஸ்மவேலைப் பற்றியும், அவருடைய தாயாரைப் பற்றியும் குறைகள் சொல்லுகிறதினாலேயே சங்கீதம் 118-ம் அதிகாரம் 22, 23-ம் வசனங்களில் "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளிவைத்த கல்லே மூலைக்குத் தலையான கல்லாயிற்று, அது பராபரனாலே ஆயிற்று,



அதுவோ நம்முடைய கண்ணுக்கு ஆச்சரியமாயிருக்கிறதென்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா ஆனதினாலே பராபரனுடைய ராஜ்ஜியம் உங்களிலிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அன்றியும் அக்கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கப்படுவான், அக்கல் எவன்மேல் விழுமோ அது அவனை நொறுங்கடிக்கும் என்று தாவீது அவர்களால் சொல்லப்பட்டிருக்கிறதுமன்றிப் பின்னும் அதை உறுதிப்படுத்தி யவ்வாறே, யேசு அவர்களால் சொல்லப்பட்டிருக்கிறதாக மத்தேயு 21-ம் அதிகாரம் 42, 43, 44, வசனங்களிலும், மாற்கு 9-ம் அதிகாரம் 10, 11, 12, வசனங்களிலும் லூக்கா 20-ம் அதிகாரம் 18, 19, 20, வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

இவ்வசனத்தில் கண்டபடி இஸ்ரவேலர்கள் தள்ளிவைத்திருந்த இஸ்மவேலின் குடும்பத்தினர் இவர்கள் குடும்பத்தைவிட மேலாகி இவர்கள் வசமிருந்த ஜெருசலேம் முதலிய பராபரனின் பரிசுத்தப் பட்டணங்களைப் பிடுங்கி அவர்கள் வசம் கொடுக்கப்பட்டு, அவர்களை எதிர்த்தவனும், அவர்களால் எதிர்க்கப்பட்டவனும் நொறுக்கப்பட்டுப் போனார்களென்பதே அதற்குப் பகிரங்க சாட்சியாய் பகர்ந்து கொண்டிருக்கிறது இத்தவிபரத்தை இப்புஸ்தகம் 2-ம் அதிகாரம் 37-ம் பக்க முதல் 52-ம் பக்கம் வரை பார்க்க வெகு தெளிவாய்த் தெரிந்துக் கொள்ளலாம்.

மேற்படி ஆரியவர்களால் சொல்லிய 2-வது விஷயம் மார்க்கம்.

அது எப்படியென்றால்:—முற்காலத்தில் மார்க்க கர்த்தாவாயிருந்தவர்களின் கீர்த்திகளும், மார்க்கங்களும், மாறுபட்டு மறைந்தும் போயின. ஆனால் ஹஜரத்து மூஸா நபியவர்களோ, அவர்கள் காலத்தில் அவர் குடும்பத்தினர் அனைவரையும் கூட அவர் மார்க்கத்தைக் கைப்பற்றும்படி செய்ய ஏலாமல் போய்விட்டதுமன்றி அவர் மார்க்க ஸ்தாபகம் நிலைத்து முத்திபெறுமலிருந்தும் அவர் காலம் முதல் இதுவரையும் ஆயிரக்கணக்கான வருஷங்களாயிருந்தும் அவரைப் பின்பற்றியிருக்கிற ஜனங்கள் சொற்பமாயிருக்கிறார்கள். மேலும் தாவூத் நபியவர்கள்

வெளியாகி மூஸா நபியவர்களின் ஆதீனத்தையும் அதிகாரத்தையும் கைப்பற்றியதுமன்றி இவர்களின் வேதத்தைக் கொண்டு அவர்களின் வேதம் ரத்தாகிவிட்டது.

இவ்வாறே தாவூத் நபியவர்களும், அவர்கள் உம்மத்தாரும் இருக்கிறதுமன்றி, ஈஸா நபியவர்கள் வெளியாகித் தங்கள் மார்க்கத்தை ஸ்தாபகம்செய்ததினால் அவர்கள் மார்க்கமும் சுதந்தரமும் ரத்தாகிவிட்டது.

ஹஜரத் ஈஸா நபியவர்களோ தங்கள் ஜீவதசையில் அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேரையும், மற்றும் புறஜாதிகள் சுமார் எழுபது பேரையும் தங்கள் சிஷர்களா யாக்கினதே யல்லாது அவர் குடும்பத்தினரையாவது மற்றும் உலகத்தாரையாவது சிஷராக்கக் கூடாமலிருந்ததுமன்றி யூதர்களுடைய துன்பத்தைத் தன்னால் நிவர்த்திக்கக் கூடாமல் பலவாறாய்த் துன்பப்பட்டு பரலோகம் போய்விட்டதுமன்றி அவருடைய வேதமும் அவர் மார்க்க ஸ்தாபகமும் முத்திபெறாமல் போய்விட்டது. மேற்படி மார்க்க ஸ்தாபகர்களின் அஸல் வேதங்களும் அவர்களுக்கு ஆண்டவனால் அருளிய வேத வாக்கியங்களும் அவர்களால் ஜனங்களுக்கருளிய நீதிவாக்கியங்களும் இல்லாமல் அற்றும் போய்விட்டதுமன்றி, ஹஜரத் முஹம்மது றசூலுல்லா வெளியாகித் தங்கள் மார்க்க ஸ்தாபகம் செய்ததினால் அவர்களின் மார்க்கமும் ஆதீனமும் அற்று யூதருக்குள்ள சுதந்தரமும் அதிகாரமும் அடியோடு நீங்கிவிட்டது.

ஆனால் ஈஸா நபியின் சிஷர்களாலும், சிஷரின் சிஷர்களாலும் இயற்றப்பட்டதற்கு சேர்ப்பான தர்ஜமாக்களென்று சொல்லிக்கொள்கிற தர்ஜமா உலகத்தில் வழங்கி வருகிறதேயல்லாது அவர்களுடைய அசல் உலகத்தில் விளங்கவில்லையென்பது உலகம் அறிந்த விஷயமே.

ஹஜரத் முஹம்மது றசூலுல்லா அவர்களோ அவருடைய ஜீவதசையில் மூடத்தனமான முரக்கத்தனம் மிகுந்த கொண்ட அஞ்ஞானிகளான அறபு கூட்டத்தாரெல்லாரையும் சுகக்கிப் பிரிந்து நயத்தாலும் பயத்தாலும் மெய்ஞ்ஞானத்தைப்புகட்டி



அஞ்ஞானத்தையும் விக்கிரக ஆராதனையையும் அடியோடு தொலைத்து இந்த உலகம் முடிவுபரியந்தம் அவர்களும் அவருடைய சந்ததியார்களும் அணுவளவும் அஞ்ஞானத்தைத் தேடாமல் மெஞ்ஞானத்திலேயே நிற்கும்படி நிலைநாட்டினார்கள். அப்பிரகாரம் அணுவளவும் தவறாமல் அக்காலம் முதல் இக்காலம் வரையில் அவ்வறபியாவில் பிரகாசித்து நிற்கிறதை இன்னும் கண்ணால் காணலாம்.

பின்னும் அவர் ஜீவதசையிலேயே ஆயிரக்கணக்கான யூத கிறிஸ்தவ பாதிரிமார்களும், மஜூஸி, பார்ஸி, குருமார்களும், சிரியாவின் பெரும்பாகத்திற்கும் பாபிலோனியா, பர்ஷியா முதலிய உலகத்தின் பல பாகஸ்தர்களும் அவரிடம்சென்று தீட்சை பெற்றிருக்கிறார்கள். அவர் ஜீவதசையிலேயே அவருடைய வேதமும் மார்க்க ஸ்தாபகமும் நிலைத்து முத்திபெற்று அதனால் முன்னுள்ள வேதங்களெல்லாம் ரத்துசெய்யப்பட்டு இவர் மார்க்கமே உலக முடிவு பரியந்தம் ஸ்திரமாய் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.

அன்றியும் அவர்களுடைய வேதமோ முப்பது ஜுஸ்வுள்ளதில் காண்டங்களும், நூற்று பதினாலு சூறத்தென்கிற அத்தியாயங்களும் ஐந்நூற்று அறுபத்தேழு றுக்கூவென்கிற அதிகாரங்களும் ஆறாயிரத்து அறுநூற்றறுபத்தாறு ஆயத்தென்கிற வசனங்களும் அடங்கிய ஒரு பெரிய கிரந்தத்தை அவர் காலத்தில் இருந்ததிலிருந்து இதுவரையிலும் ஒரு அக்ஷரத்தைக் கூட்டவாவது, குறைக்கவாவது, திருத்தவாவது ஏலாததாயும் அதற்கு நிகரான ஒரு வசனத்தை முழு உலக ஜனங்களின் முயற்சியினால் கொண்டுவர ஏலாத வண்ணமாகவும் முற்கால, தற்கால, பிற்கால ஆக எக்காலத்திலுள்ள சகல அறிவுகளும், ஞானங்களும் நிறைந்துள்ளதாகவும், மனிதர்களுடைய கருத்துக்கு அடங்காததாகவும் இருக்கின்றது.

மேலும், ஐந்துலட்ச ஹதீதென்கிற வாக்கியங்களுக்கு அதிகமாகவே அவரால் இகபர சுகபாக்ய நீதி மொழிகள் வெளிப்பட்டிருக்கின்றன. அந்நீதிமொழிகளை அவர் சிஷர்கள் கருத்தோட்டிருக்கின்றனர.

டும் ஜெயத்தோடும் மனப்பாடமிட்டதை அவரது சிஷ்யருடைய சிஷ்யர்களால் அளவிறந்த கிரந்தங்கள் இயற்றப்பட்டு, யாராலும் அதைக் கூட்டிக் குறைக்க ஏலாத விண்ணமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது, இதுவுமன்றி எவ்வளவு முயற்சியுடன் மார்க்கத்தைத் ஸ்தாபித்தாரோ அதைவிட பதின்மடங்கு அதிகமாய் அவர் சந்ததியாரும் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் தொடர்ச்சியாகவே உலகத்தின் பல பாகங்களிலும் ஏராளமாய் பரவித் தங்கள் மார்க்கத்தை விருத்தியாக்கிக்கொண்டு வருகிறார்கள்.

அன்றியும், உலகத்திற்குச் சூரிய பிரகாசத்தைப் போல் அவருடைய மார்க்க மெய்ஞ்ஞானம் உதயகிரியைத் தொடுத்து அஸ்தகிரி வரையிலும் உலகத்தின் பல பாகங்களிலும் பரவி பிரகாசித்துக்கொண்டிருக்கிறதுமன்றி முழுஜனத்தொகையில் நாலிலொரு பாகத்தினர்க் கதிகமாய் அம்மார்க்கத்தில் நிலைத்து வசித்து வருகிறார்கள். முழு உலகத்துப் பொது ஜனங்களுள் அநேகர் அவருடைய வேத ஞானத்தைக் கைப்பற்றிக்கொண்டுவருகிறார்களே யல்லாது அவரைப் பின்பற்றினவர்கள் மற்ற எந்த மார்க்கத்தையும் பின்பற்றவாவது எந்த ஞானத்தையும் கைக்கொண்டு நடக்கவாவது இல்லை.

ஆகவே, இவ்வாறான மார்க்கஸ்தாபன மகத்துவம் முஹம்மது நபிக்கு உண்டாயிருக்கிறதே யல்லாது வேறொருவருக்கும் உண்டாயிருக்கவில்லை யென்று சத்தியமாகச் சொல்லலாம். ஆகையினால், முழு உலகத்தில் வெளியாயிருக்கிற மார்க்க கர்த்தாக்களைப் பார்க்கிலும், முஹம்மது நபியவர்களே அதிக மகத்துவம் வாய்ந்த அதிர்ஷ்டசாலியா யிருக்கிறார்களென்று ஷை துரை உள்ளது உள்ளபடியே சொல்லியிருக்கிறாரென்பதே.

ஷை துரையவர்கள் சொல்லிய 3-வது விஷயம் ராஜாங்கம். அது எப்படியென்றால்:—உலகத்தில் வெளியான எல்லா அரசர்களிலும் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களே ஆண்டவனுடைய அன்பைப்பெற்ற பெரிய அரசராய் இருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவதசையில் முழு அறபியாவையும், சிரியாவின் பெரும் பாகத்தையும், மற்றும் பாபிலோனியா



பர்ஷியா முதலிய அநேக இராஜ்ஜியங்களையும் ஜெயித்து, அரசராய் விளங்கினர். அவருக்குட்பட்ட உம்மத்தென்கிற தொண்டர்களான றையத்துகளோ தங்கள் உயிர், பொருள், பெண்டிர், பிள்ளை, மாதா, பிதா முதலியவர்களைவிட ஹஜரத்து நபியவர்களையே மேலாகப் பாவித்து அவர்கள் சொல்லுக்காகத் தங்கள் உயிர்களையும், பொருள்களையும், பெண்டிர் பிள்ளைகளின் உயிர்களையும், ரத்தங்களையும் முழு விசுவாசத்துடன் சிந்தினார்கள். இத்தன்மையாய், உலகத்தில் வெளியாகி யிருக்கிற எந்த அரசர்களின் றையத்துக்களும் இவ்வாறு செய்திருப்பது கிடையாது.

அன்றியும், உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் நாலிலொரு பாகத்தினர் அவருடைய உம்மத்துகளென்கிற தொண்டர்களான றையத்துகளாயிருந்து அன்றுமுதல் இன்று வரையிலும் அவ்வாறே செய்துகொண்டு வருகிறதை நாம் கண்ணுங்கண்டும் சரித்திரத்தினால் அறிந்துகொண்டும் வருகிறோமல்லவா? இத்தன்மையாக ராஜாங்க மஹத்துவம் பெற்ற அரசர் அவரைத்தவிர வேறொருவரும் இம்முழு உலகத்தில் இல்லையென்று சந்தேகமறச் சொல்லலாம்.

ஆகையினால், ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களே உலகத்தில் வெளியாயிருக்கிற எல்லா அரசர்களைவிட மகா அதிர்ஷ்டம் பெற்ற அரசரென்று பூரணமாய் விளங்குகின்றதென்று ஷை துரையவர்கள் உள்ளதை உள்ளபடியே சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே மேற்சொன்னதின்படி மூன்று தன்மைகளும் ஓரே மனிதருக்கு அமைந்தது முஹம்மது நபி யவர்களுக்கே யல்லாது மற்ற முழு உலகத்தில் வெளியாயிருக்கிற ஒருவருக்கும் அமைந்திருக்கவில்லை. ஆகையினால், முஹம்மது றசூலுல்லா அவர்களே முழு உலகத்தில் வெளியாயிருக்கிற எல்லா மனிதரைப் பார்க்கிலும் மகா அதிர்ஷ்டசாலி யென்று ஒருதரமல்ல, இரண்டுதரமல்ல, பன்முறையாகவே சத்தியமாகச் சொல்லலாம்.

பின்னும் சில ஐரோப்பிய நீதிமான்கள் நாம் உலகத்தை நடத்துவதற்காகப் பார்லிமென்ட் ஏற்படுத்தி எவ்வளவோ கல்விமான்களை

அதின் மெம்பர்களாக்கி அவர்களுடைய தற்கால முற்கால பிற்கால ஆராய்ச்சியைக் கொண்டு சட்டமேற்படுத்தி இராஜ்ஜியத்தை ஆண்டு வருகிறோம். அப்படியிருந்தும் அடிக்கடி அந்தச் சட்டங்கள் நிலையாக ஊர்ஜிதப்படாமல் மாறுதல் அடைந்து கொண்டே வருகின்றன.

ஞாயம் இப்படியிருக்க முஹம்மது நபியாகிய ஒருவர் புத்தியினாலேயே இருபத்து மூன்று வருஷத்திற்குள்ளாகவே உலக நடத்தைக்காக ஸிவில், கிரிமினல், ரெவினியு, முதலிய லாக்களையும், பரலோக மோக்ஷத்துக்காக வேண்டிய அநேக விதிவிலக்கான ஹுக்கும்களையும் ஏற்படுத்தப்பட்டிருப்பதில் எள்ளளவும் யாராலும் கூட்டக் குறைக்க ஏலாத வண்ணமாய் இருப்பதையும், எத்தேசங்களிலும் எக்காலங்களிலும், எவ்வகுப்புகளிலும் அது பொருந்தியிருக்கிறதையும் கவனித்தால் அது மனிதனால் உண்டாக்கப்பட்டதில்லையென்றும், அது தேவ கட்டளையென்றும் வெகு தாட்டிகமாகச் சொல்லலாமென்றும் பலவாறாய்ப் புகழ்ந்திருக்கிறார்களென்பதே.

அன்றியும் சில ஐரோப்பிய நீதிமான்களோ மோசே சீனாய் மலையேறி இறங்கும் 40 நாளைக்குள் அவர்களுடைய கவுமுகள் காளை மாட்டை ஆண்டவனென்று வணங்கி அஞ்ஞானிகளாய் விட்டார்கள். இப்படியே ஒவ்வொரு நபிமார்களின் கவுமுகளும் பலவிதமாய் வேறுபட்டிருக்கிறார்கள். ஆனால் முஹம்மது நபியவர்களின் ஆதியில் கவுமுகளோ பெருமூடரான விக்ரகத்தைப் பூஜிக்கிற அஞ்ஞானிகளாயிருந்தாலும், அவர் காலஞ்சென்ற நாளது வரையிலும் விக்கிரகாராதனை செய்யாமலும், அஞ்ஞானத்தைக் கைகொள்ளாமலும், அந்நிய மதத்தில் திரும்பாமலும் இருக்கிறதைக் கவனித்தால் முஹம்மது நபி ஆண்டவனால் அனுப்பப்பட்ட திருத்தூதர் என்பதற்குள்ள அத்தாக்ஷிகளில் அது பெரிய அத்தாக்ஷியாயிருக்கிறதென உறுதியாகச் சொல்லலாமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அன்றியும் அவர்களில் சில நீதிமான்கள் அரபிகளோ பெரிய வம்பர்களென்றும், அவர்கள் எந்த விதத்திலும் ஒருவருக்கு அடங்காதவர்களென்றும், யாதொரு விஷயத்திலும் அ



வர்கள் மனம் திரும்பாதென்றும் அபிப்பிராயப்பட்டு அவர்கள் எல்லோரும் ஒன்று போலவே முஹம்மது நபியவர்களின் விஷயத்தில் மனம் திரும்பினதையும், மகா அறிவு சிறந்த வல்லமையுள்ளவர்களில் அநேகர் அவரைச் சதாகாலங்களிலும் அடுத்திருந்து ஒருவராவது அவருக்கு மாற்றஞ்செய்யாமல் இருந்ததையும், அவரை பின்பற்றினவர்களெல்லாம் தங்கள் உயிர்களையும் பொருள்களையும் பெண்டிர் பிள்ளையும் பெரிதாய் எண்ணாமல் நபியுடைய சொல்லையே பெரிதாய் எண்ணித் தங்கள் உயிரைக் கொடுக்கத் துணிந்ததையும் பொதுவாகக் கவனித்தால் அவர்கள் ஆண்டவனால் அனுப்பப்பட்ட மெய்யான திருத்தூதராயிருந்ததினாலே அவர்களெல்லோரும் அவ்விதம் நடந்துவந்தார்களென்று நிட்சயமாய்ச் சொல்லலாமென அபிப்பிராயப்பட்டிருக்கிறார்களென்பதே.

அன்றியும், மேற்படி நீதிமான்களில் சிலர் எத்தனையோ ராஜாக்கள் அந்த அரபியாவை ஜெயித்து அரபியர்களைத் தங்கள் ரையத்துக்களாக்கி ஆளலாமென்று நூற்றுக்கணக்கான வருஷங்களாகச் சண்டைசெய்து எவ்வளவோ பொருள்களைச் செலவு செய்தும், எத்தனையோ உயிர்களைப் பறிகொடுத்தும், எவ்வளவோ கஷ்டப்பட்டும் அவர்கள் நாட்டம் நிறைவேறாமற் போயிற்று

அப்படியிருக்க முஹம்மது நபி ஒருவரால் 15-வருஷத்துக்குள்ளாக அம் முழு அரபியாவும் ஜெயிக்கப்பட்டு, அவர்களுடைய துர்க்கிரியைகளெல்லாம் அடியோடு தொலைக்கப்பட்டு, அவர்களெல்லோரும் இவருக்குத் தொண்டராகவும் ரையத்தாகவும் ஆக்கப்பட்டு, அவர்களில் ஒருவருக்கொருவர் வேறுபடாமல் இவரே தங்களுக்கு அரசராகவும், நபியாகவும் எண்ணி விசுவாசித்து, அதின்படியே அவர்கள் நடந்து வந்ததைக் கவனித்தால் முஹம்மது நபி ஆண்டவனால் அருளப்பட்ட தூதரென்பதற்கு இது ஒரு பெரிய அத்தாக்ஷியாயிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

அன்றியும் அவர்களில் சிலர் முஹம்மது நபியவர்களால் எவ்வளவோ முன்னறிவிப்பான தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்ப

ட்டிருக்கின்றன, அவைகள் யாதொரு தவறுதலில்லாமல் பெரும்பாலும் நிறைவேறியும், பாக்கி நிறைவேறிக்கொண்டும் வருகின்றது. முன்னுள்ள சகலதீர்க்கதரிசிகளுடைய எல்லா ஆதீனமும் அதிகாரமும் அவர்களுடைய நீதியினால் ஆளப்பட்டும் அவருடைய சகல ஆதீனமும் அவரிடத்திலேயே நிலைத்து, அவர் நீதியினால் நடத்தப்பட்டு வருகிறதைப் பொதுவாகக் கவனித்தால் அது அவர் ஒரு பெரிய தீர்க்கதரிசியா யிருக்கிறாரென்பதற்குப் பெரும் சாட்சியா யிருக்கின்றதென்று சொல்லியிருக்கிறார்கள்.

அன்றியும் அவர்களில் சிலர் முன்னுள்ள எல்லா வேதக்காரர்களும் அவர்களுடைய வேதங்களும் பலவாறாய் வேறுபட்டு வேதபுரட்டல்செய்து அந்நியர்களால் அவர்களின் அஸல்வேதத்தை நாசப்படுத்தப்பட்டுப் போய் விடி வேதக்காரர்களும் பலவாறாய்த்தங்கள் சுதந்தரத்தை யிழந்து சிதறுண்டு போனார்கள்.

அப்படியிருக்க, இந்த முஹம்மது நபியவர்கள் வாயிலிருந்து வார்த்தை என்ன விதமாய்ப் புறப்பட்டதோ அவ்விதமாகவே எழுதப்பட்டு அதில் யாதொரு பேதகமில்லாமலும், அந்நியரால் அது நாசப்படுத்தப்படாமலும், அவர்கள் ஒன்றாய்க்கொன்று வேறுபட்டு நாசமடையாமலும்; இருக்கிற குர்ஆனைக் கவனித்தால் அது ஆண்டவனால் அருளப்பட்ட தேவவாக்கென்றும், முஹம்மது நபி ஆண்டவனால் அனுப்பப்பட்ட திருத்தூதரென்றும் சந்தேகமறச் சொல்லலாமென்பதாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

பின்னும் மிஸ்டர் ஜான்டெவன் போர்ட்துரை என்பவர் சொல்லுகிறதாவது:—

முகம்மது நபி அந்தரங்கசுத்தமா யிருந்தாரென்பதற்கு அவரின் நடவடிக்கைகளை நன்றாயறிந்திருந்த அவரின் பந்துக்களும் தோழர்களும் எல்லாலரையிட முந்தி அவரை விசுவாசித்தமே போதுமான திருஷ்டாந்தமா யிருக்கின்றது. அவர் வஞ்சகரா யிருக்கும்பக்ஷத்தில் அவரின் தந்திர உபாயமான வஞ்சகம் இந்த ஜனங்களுக்கு வெளியாகி விடுமாகையால் இவர்கள் அவரை உண்மையுள்ள நபியென்று ஒருபோதும் விசுவாசிக்க



மாட்டார்கள்: உண்மையில் முகம்மது நபி தமது மார்க்கத்தை ஊர்ஜிதப் படுத்துவதற்காகவும், தமது நபிபட்டத்தை ஸ்தாபிப்பதற்காகவும் ஒருபோதாவது தந்திரஉபாயம் செய்தாரென்றும், பொய்யான அற்புதங்களைக் காட்டினாரென்றும் ஏற்படவில்லை. இஸ்லாம் மார்க்கம் அவரின் ஜீவகாலத்திலேயே அறபு தேசம் முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டுப் போயிற்று. விக்கிரக ஆராதனை வேர் களையப்பட்டது. அவருக்கு இப்படிப்பட்ட காரியசித்தியுண்டானது வீரியத்தினாலும் யுத்த பலத்தினாலும் அல்ல. அவர் மார்க்கங்களைச் சீர்திருத்தினார் இராச்சியங்களை மேற்கொண்டு ஜெயித்தார். அக்காலத்தில் அறபு தேசத்தில் வழங்கிவந்த மார்க்கங்களைப் பார்க்கிலும் இவர்மார்க்கம் வெகு சுத்தமானதாயிருந்தது. மக்காவை ஜெயித்த பின்னர் அவர் ஹஜ்ஜென்ற வணக்கத்தைச்செய்து ஹஜ்ரே அஸ்வதென்ற கல்லுக்குச் சமீபத்தில் நின்றுகொண்டு உயர்ந்த சத்தமாகக் கடவுளுடைய நாமத்தைக் கூறினார். விக்கிரகங்களை வேரோடுபிடுங்கி யெறிந்தார்.

இஸ்லாம் மார்க்கம் அவரின் ஜீவகாலத்திலேயே அறபு தேசம் முழுவதிலும் ஸ்தாபிக்கப் பட்டுப் போயிற்று. விக்ரக வணக்கம் அடியோடு ஒழிந்தது. அவருக்குப் பிறகு அவரின் கலீபாமார்களும் அந்த வாளை யிடுப்பில் கட்டினார்கள். ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டம் சேர்ந்திருக்கிற ஒரு பெரிய இராச்சியத்தில் அதை ஸ்தாபிக்காத வரையில் அந்த வாளை அவிழ்த்தார்களில்லை. இஸ்லாமானவர்கள் உமருடையவும், காலிதுடையவும், மற்றும் கலீபாக்களுடையவுமான கொடிகளின்கீழிருந்து வெற்றியின் பேரில் வெற்றியடைந்தார்கள். பாரிசு, பலஸ்தீன், ஷாம் மிசர் இவைகளுக்குப் பின்னால் வேறே யுத்தவீரர்களும் இஸ்லாம் மார்க்கத்துக்கு வழிப்பட்டார்கள். இவர் 30000 (முப்பதினாயிரம்) பட்டணங்களையும் கஸ்பாக்களையும் கோட்டைகளையும் பன்னிரண்டு வருஷ காலத்துக்குள் வசமாக்கிக் கொண்டார்கள், 1000 (ஆயிரம்) தேவாலயங்களையும் கிறிஸ்தவர் கோயில்களையும் பறக்கடித்தார்கள். 1400 (ஆயிரத்து நூ)ங்கள் மார்க்கத்தை யுடையவர்களுக்கான

நாறு) பள்ளிவாசல்களைக் கட்டினார்கள். இன்னும் இந்தத் தேசங்களே போதுமென்று இருந்தார்களில்லை. ஹபஷ்தேசத்தினை மேற்கொள்ளாதவரையில், இன்னும் ஆப்ரிக்கா இஸ்கந்திரியா தேசங்கள் முதல் ஹிஸ்பேனியா தேச முள்பட பஹ்ஹறன்வரை தங்கள் அரசாக்ஷியில் சேர்த்துக் கொள்ளுமட்டும் இவர்கள் இளைப்பாரவில்லையென்பதே.

அன்றியும் மிஸ்டர் டாமஸ் கர்னைல் றாரை சொல்லுகிறதாவது:—

கண்கள் கறுப்பும் ஒளியுமாயிருந்தவரும், மனதில் விஸ்தாரமுள்ளவரும், நற்குண முள்ளவருமான வனாந்திர வாசியாகிய முஹம்மது நபியென்னும் அந்த மகா புத்திமானுக்கு ஆசையும் வீணாசையு மிருந்ததில்லை. அவர் உறுதியும் வைராக்கியமும் உள்ளவராயிருந்தார். எந்த ஜனங்கள் விடாமுயற்சியிலிருந்தார்களோ, இன்னும் எந்த ஜனங்களை ஆண்டவன் உண்மைக்காகப் படைத்தானோ அந்த ஜனங்களில் அவர் ஒருவராயிருந்தார். மற்ற ஜனங்கள் பஞ்சபுலன்றியப் பொருள்களின்பேரிலும் கேள்விப்பட்டவைகளின் பேரிலும் நடவடிக்கை நடத்துகிறார்கள். அவைகளைக்கொண்டே திருப்தியடைகிறார்கள். அவர் எப்பொழுதும் ஞான சொரூபியாய் இருந்தார். அந்தப் பெரிய இரகசியப் பொருளும் அவரில் தான் வெளியாயிருந்தது. அவரே அந்தப் புதைப் பொருளின் மகத்துவ ஸ்தானமாயிருந்தார். இப்படிப் பட்டவருடைய வார்த்தை கடவுளுடைய புரத்திலிருந்து புறப்படுகிற ஒரு ஓசையாயிருக்கின்றது. மற்றவைகளெல்லாம் அந்த ஓசைக்கு முன்னால் துரும்புக்குச் சமானமாயிருக்கின்றன.

ஹிருமலையும், ஸீனா பர்வதத்தின் கருங்கல்லுகளும், சந்தடியற்ற பயங்கரமான வனாந்தரங்களும் அவருடைய கேள்விகளுக்கு விடைகொடுக்கவில்லை. நீல வர்ணமும் ஜோதி மயமுந்திரங்களுடன் சுற்றிக்கொண்டிருக்கிற வானங்களும், அவருக்கு உத்தரம் சொல்லவில்லை. எந்த வஸ்துவும் அவருக்கு மறுமொழி பகரவில்லை. மேலும் அவருடைய மனமும் வஹீ என்ற தேவ எழுதுதுந்தான் அவருக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தது.



வீட்டில் உட்கார்ந்திருந்த முகம்மதென்னும் ஒருவர் அவருடைய குடும்பஜனங்களை அவரை நபியென்று ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார். ஒரு ஏழை அறபியாகிய முகம்மதுநபி தன் தேசத்தின் வனாந்திரவாசிகளும், ஏழைகளும், உண்கச் சோறும் உடுக்கத் துணியுமற்றவர்களுமான சாதிகளை புத்தியும் உறுதியும் உள்ள ஒரு பெரியகூட்டமாக ஆக்கிவிட்டார். எல்லா தேசத்தைப்பார்க்கிலும் அவர்களுக்கு வேறேவிதமானநடவடிக்கைகளையும் ஒழுக்குகளையும் போதித்தார். 30 வருஷ காலத்துக்குள்ளாக இந்த ஜனங்கள் றாம் இராயனை முறியடித்து பார்சுடைய அரசர்களையும்,மேற்கொண்டார்கள். ஷாம், இராக், மிசர் இவைகளை ஜெயித்தார்கள். கருங்கடல்முதல் அத்லஸ் கடல் ஜீஹூன் கடல் வரையிலுள்ள தேசங்களை உக்கிரகத்துடன் மேற்கொண்டார்கள். 1200 வருஷகாலத்தில் அவர்களின் அரசாட்சி ஹிஸ்பேனியா தேசந்தவிர மேற்கண்ட தேசங்களில் ஒன்றையும் விட்டுப்போகவில்லை. அவர்களின் மார்க்கம் ஆசியாவின் வடபாகத்திலும் ஆப்ரிக்காவின் மத்தியிலும் அத்லஸ் கடலோரங்களிலும் பரவுகின்றது. நாளதுவரையில் பரவிக்கொண்டு வருகின்றது. உலுல் அஜ்மென்ற முகம்மது நபி இப்பேர்ப்பட்டவரா யிருந்திருக்கிறார் அவரின் புத்தியும் விடா முயற்சியும் இப்பேர்ப்பட்ட மார்க்கத்தை உண்டுபண்ணினது, இந்த மார்க்கம் ஸர்தஷ்த்து மார்க்கத்தாரை உக்கிரகத்துடன் மேற்கொண்டு ஜெயித்தது. அதில் சிதறியோடின சில ஜனங்கள் மாத்திரம் தப்பினார்கள். பின்பு இந்துஸ்தானத்தின் பேரில் படையெடுத்தார்கள். அதன் பூர்வீக மார்க்கமாகிய பிராமண மார்க்கத்தையும், அதிலும் வெகுதூரம் வரையில் பரவியிருந்த புத்த மார்க்கத்தையும் ஒடுக்கிக் கங்கையாற்றுக் கப்புறப் படுத்தினார்கள்.

ஐரோப்பின் மேற்றிசையான தேசங்களின்பேரில் படையெடுத்தார்கள். ஹிஸ்பேனியா தேசத்தின் அனேக பட்டணங்களைப் பிடித்துக் கொண்டார்கள். லிவாடென்கிற கடலோரம் வரையில் ஏறினார்கள். அந்தத்தேசங்களை ஜெயித்ததினால் றாம் அரசாட்சியின் சிம்மாசனத்தில் நடுக்கத்தைப் போட்டார்கள்

கண்டேரியாய்க் கிஸ்தந்தனியா வென்னும் புதிய ரோமாபுரியில் வெற்றியுடன் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்து ஊர்ஜிதப் படுத்தினார்கள். தீர்க்கதரிசிகளாகிய மூசாவும் ஈசாவும் தங்கள் தீர்க்கதரிசன ஞானத்தினால் பிற்காலத்தில் எங்களிலும் சிரேஷ்டமான ஒரு தீர்க்கதரிசியெழும்புவார், என்று முன்னறிவிக்கையாய்ச் சொல்லியிருந்ததும், மஸீஹ் என்ற ஈசாவின் அப்போஸ்தலர்கள் பாரேகலீத் என்னும் அஹ்மது என்று ஒருவர் வருவாரென்று அறிவித்ததுமான இந்த இரண்டு முன்னறிவிக்கைகளும் முஹம்மது நபிக்குச் சம்பந்தமானவைகளாயிருக்கின்றன வென்பதற்கும் அவரில் நிறைவேறின வென்பதற்கும் யாதொரு சந்தேகமில்லை. அவர் ஒரே கடவுளைத் தியானிக்கிறவரா யிருந்தாரென்றும் விக்கிரகங்களையும் மனிதர்களையும் கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் வணங்கக்கூடாதென்று கண்டிப்பாய்த் தடுக்கிறவரா யிருந்தாரென்றும் குர்ஆனால் நன்றாய் வெளியாகின்றது.

இஸ்லாமென்பது ஒரு சிறந்த மார்க்கமா யிருக்கின்றது. அதன் உசூல் என்ற மூல அம்சங்களான பிரதான சங்கதிகளில் எல்லாருக்கும் ஒற்றுமையுண்டு. புத்தியில் அமையாததும் பலவந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டியதுமான சங்கதி அதில் ஒன்றுமில்லை. அவர் மெக்கத்திரையில் பிறந்து தமது மார்க்கத்தை ஸ்தாபித்து ஆசியா, ஆப்பிரிக்கா, மிஸறு தேசங்களின் பெரும் பாகத்திலிருந்து முற்றிலும் விக்கிரக வணக்கத்தைத் தலை காட்டாமல் அழித்தார். நாளது வரையில் அந்தத் தேசங்களில் ஒரே கடவுளின் வணக்கம் நடந்து வருகின்றது. அந்த அறபி நபியின் வெளியரங்கமும் அந்தரங்கமுமான மகத்துவங்கள் லக்ஷக்கணக்கான ஜனங்களின் இருதயத்தில் குடிகொண்டன, நம்முடைய இருதயத்தின் சத்தம் கூறுகின்றது. உண்மையில் அவரை விசுவாசித்தவர்கள் தங்கள் முழு இருதயத்தோடு விசுவாசித்தார்கள். அவர் பேரில் வஹீ என்ற தேவ ஏவுதல் இறங்குகின்றதென்றும், அவர் மெய்யான நபியென்றும் உண்மை கொண்டிருந்தார்கள். முஷ்ரிக்கென்ற விக்ரக ஆராதனைக்காரருக்கு அவருடைய மார்க்கத்தின் சட்ட திட்டங்கள்



வெகு நேர்த்தியாயிருந்ததின் நிமித்தம் அது கடவுளால் அருளப்படுகிறதென்று கட்டாயமாய்த் தெரிந்திருக்கலாம், அவரின் மார்க்கம் ஸர்தஷ்த்துடைய மார்க்கத்தைக் காட்டிலும் அதிக தெளிவானதாகவும் மூசாவுடைய மார்க்கத்தைப் பார்க்கிலும் அதிக சுத்தமானதாகவும் தெரியவந்தது.

அவர் மார்க்க முண்டாகி வெகு காலமாகியும் இதில் மற்ற மார்க்கங்களைப் போலப் படைப்புகளின் வணக்க முதலானது உண்டாகவில்லை. இஸ்லாமானவர்கள் தங்கள் புத்திக்கும் அபிப்பிராயத்துக்கும் நிலைத்திருக்கிறார்கள். கடவுளை வணங்குவதற்குப் பதிலாக விக்கிரகங்களை வணங்கத் தலைப்பட்டார்களில்லை. அவர்களின் கொள்கைக்கு ஆதாரமான மூல வாக்கியத்தின் அர்த்த மென்ன வென்றால், அல்லா ஒருவனென்றும் அவனுடைய நபியான முஹம்மது நபி உண்மையானவரென்றும் நான் உறுதியாய் நம்பினேன் என்பதே. அவருடைய ஜீவகால முழுவதின் ஒவ்வொரு காரியத்தினாலும் அவருக்குப் பெருமையடைய நோக்க மிருந்ததில்லை யென்று நன்றாய் விளங்குகிறது. இஸ்லாம் மார்க்கம் அவருடைய ஜீவகாலத்திலேயே நன்றாய் ஊர்ஜிதமாகி அவருக்குத் தீர்மானமில்லாத அதிகாரம் கிடைத்துவிட்டிருந்தும் அதனால் அவர் ஒருபோதும் தமது சொந்தப் பிரயோசனத்தை யடையவில்லை. முதலில் எப்படியிருந்தாரோ அப்படியே சாதாரணமா யிருந்திருக்கிறார். இந்த காரியமும் அவர் பெருமையடைய வேண்டுமென்ற நோக்கமில்லாதவராயிருந்தாரென்று நாம் சொன்ன சொல்லைப் பலப்படுத்துகின்றது. விக்கிரக வணக்கத்தை இல்லாமற் செய்கிறதும் விக்கிரக வணக்கத்திலேயே மூழ்கிச் சுத்தமாய்க் கடவுளை மறந்துவிட்டிருந்த ஒரு கூட்டத்தில் ஒரே கடவுளின் வணக்கத்தை நாட்டுகிறதுமான இந்தக் காரியம் உண்மையில் தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு காரியமா யிருக்கலாமென்று நம்பத்தக்கதா யிருக்கிறது.

இன்னுமவர் அறபு தேசத்தில் ஒரே தேவனுடைய வணக்கத்தை நாட்டினா ரென்பதும் அந்தத் தேசத்தில் விக்கிரக வணக்கத்தை ஆயிரவருஷ காலத்திலிருந்து நாளது வரையில் ஒரு

போதாவது எவ்விதத்திலாவது மீண்டும் தலை காட்டாதபடி நசிக்கச் செய்தா ரென்பதும், உண்மையா யிருக்கின்றது. அவர் பிள்ளைகளின் கொலையை நிறுத்தினார். முஸ்லிம்களுக்கு அதிகக் குறைவை யுண்டாக்குகிற வட்டி வழங்குதலையும் சூது விளையாடலையும் விலக்கினார். அக்காலத்தில் அதிக தாரம் படைக்கிற வழக்கமாயிருந்ததைத் தொப்பிலே குறைத்து மட்டுப் படுத்தினார். இப்பேர்ப்பட்ட பெரிய விடாமுயற்சியுள்ள இருக்குகிறவரை ஜாலக்காரரென்று நாம் சொல்லக்கூடுமா? இப்பேர்ப்பட்டவருடைய காரியங்கள் தந்திர உபாயத்தின் பேரிலாயிருந்தனவென்று நாம் மொழியக்கூடுமா? இல்லை, இப்படிச் சொல்ல மாட்டோம். சந்தேகமில்லாமல் முஹம்மது நபி நல்லெண்ணமுள்ள இருதயத்தினாலும் விசுவாசத்தினாலுமே பெரிய மற்றப்படி வேறே காரணத்தினால் இவ்வளவு உறுதியுடன் தம்முடைய காரியத்தை நடத்துகிறதின் பேரில்; வஹீ யென்ற தேவ வேதம் இறங்கிற்றென்று ஆரம்பத்தில் கதீஜாவினிடம் சொன்னது முதல் கடைசியாய் வியாதியின் கஷ்டத்தோடு ஆயிஷாவின் மடியில் மரணமாகிய வரையில் விடாமுயற்சியா யிருக்கமுடியாது.

எந்த ஜனங்கள் எப்போதும் அவரிடத்தி லிருந்திருக்கிறார்களோ, இன்னும் எந்த ஜனங்கள் அவருடன் அதிக சகவாசமா யிருந்தார்களோ அவர்களுக்குக் கூட ஒருபோதாவது அவர் தன் புகழை விரும்பும் குணமுள்ளவரா யிருப்பாரென்று சந்தேக முண்டாகவில்லை. ஒருபோதும் அவர் தம்கள் நல்ல நடத்தைகளை விட்டு நீங்கவில்லை. தாமது அவர்களின் பேரில் ஆதரவு உள்ளவரும் விசுவாசத்திலும் வினை வழக்கங்களிலும் அதிக திருத்துதல் செய்தவருமான ஒரு நல்ல உபாயமுள்ளவர் உண்மையில் கடவுளின் சுத்தமான ஒரு கருவியாயிருக்கிறார். அவரை நாம் கடவுளுடைய நபியாயிருக்கிறாரென்று சொல்லக்கூடும். அவரின் காலத்திலும் அவருடைய தேசத்திலுமுள்ளவின் கூட்டத்தாருக்கு ஆண்டவனுடைய ஒர்மையையும் விளக்கத்தையும் கற்பிக்கிறதற்காகவும், அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தப்பு அவர்களுக்கு தேவ விஷயமும் சற்குண சம்பந்தமுமான



காரியங்களில் உபதேசம் செய்கிறதற்காகவும் ஆண்டவன் அவரை அனுப்பியிருந்தானென்றும் அவர் மெய்யான பிரசங்கியாயிருந்தாரென்றும் என் நம்பக்கூடாதென்பதே.

அன்றியும், பாப்புலர் இன்ஸைக்லோ போடியா என்னும் மகா சிறந்த கிரந்தத்தின் 7-வது டிவிஷன் 326-வது பக்கத்தில் சொல்லப்படுகிறதாவது:—

குர்ஆனின் பதசாந்தரம் யாதொரு கலப்புமற்ற பரிசுத்தமான அரபிபாஷையா யிருக்கின்றது. அதன் வாசக நடையானது மனதைக் கவரத்தக்கதா யிருக்கின்றது. அதின் செய்யுள் அலங்காரங்களோ இந்நாள் வரையில் ஒப்பற்ற வைகளாகவே இருக்கின்றன. அதிற் சொல்லப்பட்டிருக்கிற நீதி கற்பனைகளோ பரிசுத்தமானவைகளா யிருக்கின்றன. யாராகிலும் ஒருவன் அக்கட்டளைகளைக் கைக்கொண்டு நடந்து வருவானேயானால் நிட்சயமாய் அவன் பரிசுத்தவானாவானென்று சந்தேகமறச் சொல்லலாம் என்பதே.

அன்றியும் மிஸ்டர் காலைவ் என்பவர் சொல்லுகிறதாவது:—

நீ ஒருமுறை குர்ஆன்ஷரீபை நன்றாய் வாசித்தால் அதின பிரதான அம்சங்கள் எல்லாம் உனக்குத் துலக்கமாகின்றன. அதில் பாஷா விசேஷத்தோடு வேறு விசேஷங்களும் உண்டு. ஓர் புஸ்தகம் உள்ளத்திலிருந்து உதித்ததேயானால் அது மற்றெருவருள்ளத்திலும் எளிதாய்ப் புகுதமுயலும். குர்ஆன் ஷரீபுக்கெதிரில் மற்ற எல்லாக் கிரந்தங்களும், கிரந்த கர்த்தாக்களுமும் மிக அற்பமானதா யிருக்கின்றது. குர்ஆன் ஷரீபுடைய பிரதானமான தன்மை, சத்தியமும் நல்லெண்ணமுமானதா யிருக்கின்றது. எல்லாவிதத்திலும் உண்மையே அதின் பெருமையாயிருக்கின்றது. இதுவே அதற்கு ஆதியந்தமான பெருமையாகவும் எவ்வித பெருமைக்கும் ஆதாரமாகவும் இருக்கின்றது. இவ்வுண்மையை அப்பெருமைக்கு ஆதாரமென்று நிட்சயமாய்ச் சொல்லலா மென்பதே, என்று வெகு தெளிவாய் உள்ளதை உள்ளபடியே சொல்லியிருக்கிறார்.

அன்றியும் ஸர் வில்லியம் மூர் என்பவர் "லைப் ஆப் முஹமமத்" என்னும் கிரந்தத்தில் வரைகிறதாவது:—

பிரபஞ்சத்தில் இயற்கையாயுள்ள திருஷ்டாந்தங்களைக் கொண்டு குர்ஆன்ஷரீபு நிறப்பப்பட்டதாயிருக்கின்றது இதன் கருத்து என்னவென்றால் அல்லாஹுத் தஆலா ஒருவன் உண்டென்கிற, உண்மையையும், மனிதர்கள் அவனுக்கு வழிப்பட்டு நடந்து அவனுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்பதையும், ஆக்கிரத்தில் நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு பிரதிபலன், அடைவதையும், நீதியைக் கைப்பற்றி அநீதியை நீக்கிவிடும் கடமையையும் அடியார்கள் ஆண்டவனுக்குத் தொண்டுசெய்ய வேண்டியவர்களென்பதைப்பற்றியு மாகிய விஷயங்களை உன்னத பாஷையில் வெகு ஊக்கத்தோடு அடிக்கடி மிகவும் சுத்தமானவைகளாய் வரையப்பட்டிருக்கின்றனவென்றும் மற்ற எல்லா மதங்களிலும் அடையக்கூடாத பாவ நிவாரணத்தின் மேன்மைகளை இஸ்லா மார்க்கத்தினால் அடையக்கூடுமென்பதைப்பற்றி நிட்சயமாய்ச் சொல்லலாமென்பதே.

அன்றியும் ஹானரபில் வில்லியம் என்பவர் "லைப் ஆவ் முஹம்மத்" என்கிற வாலியத்தின் 27-வது பக்கத்தில் சொல்லுகிறதாவது:—

குர்ஆனின் ஒவ்வொரு வாக்கிலும் உண்மையானதாகவும், முஹம்மது நபியவர்களால் மாற்றிச் சொல்லப்படாததாகவும் இருக்கிறதென்று நான் அதிக பலமான எண்ணத்தின் பேரில் ஒப்புக் கொள்ளுகிறேன். அதன் பிரயோஜனத்தை மிஸ்டர், வான் மீர் என்பவரைப்போல் நானும் உறுதியாகச் சொல்லுகிறேன் என்பதே.

அன்றியும் டேவிட் அர்க்குவாட்டிற் "ஸ்பிரிட் ஆவ்தி ஈஸ்ட்" என்னும் பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறதாவது:—

வருஷத்திற் கொருமுறையாக அல்லது அவசியமான காலங்களில் பாதிரிமார் சேர்ந்து வேத விஷயங்களைப்பற்றி மாறுதலாகவும் நூதன ஏற்பாடு முதலியன செய்வதுபோல் இஸ்லாம் மார்க்கத்துக்கு இவ்விதமான மாறுதலும், நூதன ஏற்பாடும் அவசியமில்லை, அது எப்போதும் வர்ஜிதமான ஏற்பாடுக



ளையும், ஒழுங்குகளையும் உடையதாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது என்பதே.

மிஸ்டர் எக்கன்ஸ் புஸ்தகம் 46-வது பக்கத்தில் பகிரங்கமான எல்லா மார்க்கங்களின் விவரங்களையும் நான் படித்திருக்கிறேன். அதில் இஸ்லாம் மார்க்கம் மிக எளிதாகவும் நீதி கற்பனைகளை உடையதாகவும் இருக்கின்றது. அது மேலானபரிசுத்தமானதினால் ஆண்டவனுடைய கற்பனைகளை அதிக கஷ்டமில்லாமல் பாவிக்கொண்டு வருகின்றது. லாயிலாஹ-இல்-லல்லாஹு, முஹம்மது றசூலுல்லாஹி"என்கிற வணக்கத்திற்குரியவன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர, யாருமில்லை. முஹம்மதும் நபியவர்கள் உண்மையான தீர்க்கதரிசியாகவும், நேரான வழிகாட்டியாகவும் இருக்கிறார்களென்பது அதிக மேலான, நேர்மையானதென்று சந்தேகமறச் சொல்லலாம் என்று சொல்லியிருக்கிறார்.

மிஸ்டர் எட்வர்ட் குயின் இஸ்லாம் என்பது சந்தேகங்களை நிவாரணம் செய்கிற பரிசுத்த மார்க்கமாயிருக்கின்றது. குர்ஆனது ஆண்டவனின் ஏகத்துவத்தின் பேரில் மேலான சாட்சியாயிருக்கின்றது. என்று சொல்லியிருக்கிறார்.

ஜான் டேவன்பார்க் என்பவர் "முஹம்மதும் குர் ஆனும்" என்கிற புஸ்தகத்தில் நீதியில்லாதவைகளையும், அனாசாரமுள்ளவைகளையும், கட்டுக் கதை முதலானவைகளையும், தோஷமுதலானவைகளையும், குர்ஆனில் ஒன்றேனும் காணக்கிடையாதென்கிறார்.

வாஷிங்டன இரவிங் என்பவர் குர்ஆன் ஷெரிபில் பரிசுத்தமும் உயர்நீதியும் நிறைந்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்.

எர்பாட் என்பவர் இஸ்லாத்தின் சட்டங்கள் மிகவும் உன்னதமான நீதி கற்பனைகள் அடங்கி யிருக்கின்றன. அக்கட்டளைகளை வழக்கத்துக்குக் கொண்டுவந்து சித்திபெறச் செய்திருப்பதும் எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிக ஆச்சரியப்படத்தக்கது என்று சொல்லியிருக்கிறார். இன்னமும் மதசம்மதயில்லாமலும், சரித்திர ஆராய்ச்சியுடைய ஐரோப்பிய நீதிமான்கள் இந்தக் குர்ஆன் ஷரீபும், முஹம்மது றசூலுல்லா அவ

ர்களைப் பற்றியும் புகழ்ச்சியும், மகிழ்ச்சியும் சாட்சியும் செய்திருப்பதைப்பற்றி எடுத்துச்சொல்ல இடம்போதாதென்று இம்மட்டில் நிறுத்துகிறேன்.

அன்றியும் கூட்ப்ரைடே என்கிற பெரிய வெள்ளிக்கிழமையைக் கிறிஸ்துவர்கள் யேசுநாதர் மரித்த பாவரட்சிப்புநாளாக இருக்கிறதென்று வழங்கிவருகிறார்கள்.

இதைப் பொதுவாகக் கவனித்தால் அத்தினம் யேசுநாதருடைய முடிவு நாளாகவும், அவருக்குப் பின் வருகிற நபிக்கு அது ஆரம்ப நாளாகவும் இருக்கின்றது.

அதெப்படி யென்றாலோ, ஒரு அரசர் இறந்தவுடன் அவ்வரசருடைய ஸ்திரீக்கு அந்நாள் பிளாக்டே யாகவும் அவருக்குப்பின் அப்பட்டத்திற்கு வரக்கூடிய அரசரின் ஸ்திரீக்கு கூட்டே ஆகவும் இருக்கிறதற்கு அறிகுறியாகவே காலஞ் சென்ற அரசரின் ஸ்திரீயை அப்போதே அவ்வரண்மனையை விட்டுப் புறம்பாக்கி பட்டத்திற்கு வரவேண்டியவரின் ஸ்திரீயை அவ்வரண்மனையில் சேர்க்கப்படுகின்ற வழமையா யிருக்கிறதுமன்றி, பட்டத்திற்குரிய அரசர் பிறந்தநாளையும், பட்டம்பெற்ற நாளையுமே கூட்டே யென்று கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதற்கிணங்கவே வியாழக்கிழமை பொழுது அஸ்தமித்த யிரவில் யேசுநாதரை யூதவகையராக்கள் பிடிக்கச்சொன்னார்கள் யேசுநாதரோ அவ்விரவில் வானத்துக்கு உயர்த்திக்கொள்ளப்பட்டபடியினாலே அவ்விரவு அவருக்கு முடிவுநாள் என்றும் அவருக்குப் பின் வருகிற நபிக்கு அது ஆரம்ப இரவு என்றும் கருதப்படுகின்றது. முஸ்லிங்களோ டிை இரவை வெள்ளிக்கிழமை யிரவென்று கொண்டாடி தங்களது நற்கிரியைகளையெல்லாம் அவ்விரவிலேயே விசேஷமாய் நடத்திவருகிறார்கள். சந்திரமாசத்து கணக்குபடி பொழுது அஸ்தத்திலிருந்து மறுநாள் பொழுது அஸ்தமிக்கிறவரை ஒருநாள் என்று சொல்லப்படும்.

முஸ்லிங்களுடைய மாச ஆசாரம் எல்லாம் சந்திரமாசத்தைக் கொண்டே குறிக்கப்பட்டு அம்மாசத்தையே அவர்கள்



கையாடி மார்க்க விசேஷங்களை அம்மாச முறைப்படியே புரிந்துவருகிறார்கள். ஆனதினாலேயே முஸ்லிங்கள் டிை வியாழக்கிழமை பொழுது அஸ்தமித்தவுடன் அது வெள்ளிக்கிழமை யிரவென்று அழைத்து அவ்விரவின் ஆசாரங்களை புரிந்து வருகின்றார்கள்.

ஆனால் சிலர் சந்திரனைக்கொண்டு, ஏன் மாதத்தை குறிப்பிடவேண்டும், சூரிய மாசத்தைக் கொண்டு ஏன் குறிப்பிடவில்லை யென்று சந்தேகிக்கக் கூடும். அதற்கு பிரதியுத்தரமாவது ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்கிற ஏழு பெரிய கிரகங்களைக் கொண்டு வாரம் கட்டுபட்டதுபோல ஒரு பிறை தோன்றி, மறு பிறை தோன்றுகிறவரை ஒருமாத கட்டுபடுவதாலேயே சந்திரமாசத்தைக்கொண்டு அந்த மாசத்து மார்க்க கிரியைகளை குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஒரு சந்திரனுக்கும் மறு சந்திரனுக்கும் இடை இடையே ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு நட்சத்திரங்களாக 28 நட்சத்திரங்கள் தோன்றி முடிவில் பாட்டிமியானபின் மறுபிறை தோன்றுகின்றது. இதினாலேயே சில மாசம் 29 நாளும் சில மாசம் 30 நாளுமாக இருக்கின்றது.

அன்றியும் முஹர்றம் மாசம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை முதல் 6-ந்தேதி வெள்ளிக்கிழமை வரை முழு உலகத்தையும் 6 நாட்களில் உண்டாக்கப்பட்டதென்றும், ஆரம்பநாளுக்கு யவுமுல் அஹத் என்ற முதல் நாள் என்றும், மறுநாளுக்கு யவுமுல் இதுனைனி என்னும் இரண்டாம்நாள் என்றும் பின்பு யவுமுல் தலாதா என்னும் மூன்றும் நாள் என்றும் பின்பு யவுமுல் அறுபஆ என்னும் நாலாம் நாள் என்றும் பின்பு யவுமுல் கமீஸ என்னும் ஐந்தாம்நாள் என்றும் பின்பு யவுமுல் ஜூம்ஆ என்னும் உலகம் யாவும் ஒன்றாய்திரண்டு சமைந்தநாள் என்றும் பின்பு யவுமுல் சப்தி என்னும் ஏழாம்நாள் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.

ஆனதினாலேயே இந்த முஹர்றம் மாசமே முதல் மாசமாகவும், அதன் முதல் தேதியே ஆரம்ப தேதியாகவும் வழங்கப்ப

ட்டு வருவதுமன்றி அம்முஹர்றம் முடிவில் பிறை தோன்றினால் அதற்கு 2-வது மாசமாகிய ஸபர் என்றும் பின்பு தோன்றுகிற பிறைக்கு ரபியுல் அவ்வல் என்றும், அதற்கு பின் தோன்றுகிற பிறைக்கு ரபியுல் ஆகிர் என்றும், அதற்கு பின் தோன்றுகிற பிறைக்கு ஜமாதுல் அவ்வல் என்றும், அதற்கு பின் தோன்றுகிற பிறைக்கு ஜமாதுல் ஆகிர் என்றும், அதற்கு பின் தோன்றும் பிறைக்கு ரஜபு என்றும், அதற்குபின் தோன்றும் பிறைக்கு ஷாஅபான் என்றும், அதற்கு பின் தோன்றும் பிறைக்கு றமலான் என்றும், அதற்குபின் தோன்றும் பிறைக்கு ஷவ்வால் என்றும், அதற்கு பின் தோன்றும் பிறைக்கு துல்கஅதா என்றும், அதற்கு பின் தோன்றும் பிறைக்கு துல்ஹஜ்ஜு என்றும், ஆக 12 மாசங்களாய் அழைத்து வழங்கிவரப்படுகின்றது.

ஆனால் சிலர் ஷெ வெள்ளிக் கிழமையானது முஹம்மது நபியின் வருகைக்கு முதல் நாளென்று வைத்தபோதிலும் அது உலகத்திற்குப் பெரிய வெள்ளிக்கிழமை என எப்படி அழைக்கப் பொருந்துமென்று கேட்கக் கூடும் அதற்கு மறுமொழியாவது:—

யோவான் 16ம் அதிகாரம் 7ம்வசனத்தில் "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால் பாரேக்லீதானவர் உங்களிடத்திற்கு வரமாட்டார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். (8) அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித் துணர்த்துவார்." என்று யேசுநாதரால் சொல்லப்பட்டிருக்கிறதுமன்றி, குறஆன் 17-ம் ஜூஸ்வு 7-ம் றுக்கூஉ 14-ம் ஆயத்தில் ஆண்டவன் முஹம்மது நபியைநோக்கி "நாம் உம்மை முழு உலகத்தாருக்கும் கிருபா கடாட்சமாகவேயொழிய அனுப்பவில்லை" என்று அருளியிருக்கிறதைக் காணலாம்.

இதனால் ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்கள் முழு உலகத்தாருக்கும் பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்



தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித் துணர்த்துகிறவராகவும், அவர்களுக்குக் கிருபாகடாட்ச முள்ளவராகவும் இருக்கிறாரென்று நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம்.

ஆனதினாலேயே யவ்முல் ஜும்அத்தி என்கிற உலகம் யாவும் ஒன்றாய்த்திரண்டு சமைந்த நாளாகிய வெள்ளிக்கிழமையே ஷெ மகத்துவம் வாய்ந்தவர் இவ்வுலகத்திற்கு வரவிருந்த ஆரம்பநாளாயிருப்பதினால் முழுஉலகத்தாராலும் அதைப் பெரியவெள்ளிக்கிழமையென்று அழைக்கப்படுவதற்கு யாதொரு சந்தேகமில்லையென்று வெகுநுட்பமாகவே சொல்லலாமல்லவா?

ஆனால் சிலர் முஹம்மதுநபியோ எப்படி பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்தாரென்றும், எவ்விதம் அவர் கிருபாகடாட்சமாயிருக்கிறாரென்றும் கேட்கக்கூடும், அதற்கு மறுமொழியென்னவென்றால்:—

முதலாவது பாவத்தைக்குறித்து என்பது:—மார்க்கத்தினுடைய விதிவிலக்கை வகைவகையாகப் பிரித்து இன்னது செய்தால் நன்மை, இன்னது செய்தால் தின்மை என்று சொல்லியிருக்கிறார். இவைகளெல்லாம் ஒன்றுதிரட்டி "இபாதாது" அல்லது "சலாத்து" என்கிற பிரிவில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது நீதியைக்குறித்து என்பது:—மனுநீதி, உலகநீதி, சொற்கநீதி முதலிய சகல நீதிகளையும் வகைவகையாகப் பிரித்து மனுநீதி இன்னது, உலகநீதி இன்னது, சொற்கநீதி இன்னது என்று சொல்லியிருக்கிறார். இதை "முஆமிலாத்" அல்லது "ஆதாத்" அல்லது "முன்ஜியாத், "முஹலிகாத்" என்கிற பிரிவில் சொல்லப்பட்டிருக்கின்றது.

மூன்றாவது நியாயத்தீர்ப்பு என்பது:—ஸிவில், கிரிமினல், ரெவின்யு முதலியவைகளை வகை வகையாகப் பிரித்து ஸிவில் இன்னபடி, கிரிமினல் இன்னபடி, ரெவின்யு இன்னபடி என்று சொல்லியிருக்கிறார். இதை "ஜினாயாத்" முதலிய பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கின்றது.

மேற்கூறிய வழியில், கிரிமினல், செவிலியுமுதலிய லாக்களிலிருந்தே அரசாங்கத்தார் தங்கள் ராஜாங்கத்திற்குத் தங்களுக்குச் சட்டங்களை யேற்படுத்தி உலகத்தை நிலைக்கொண்டும், நியாயத்தீர்ப்பைச் செய்தும், கண்டித்து நடத்திவருகிறார்கள். நபியவர்கள் நியாயத்தீர்ப்பைக் குறித்து உலகத்தைக் கண்டித் துணர்த்தினார்களென்பதற்கு, உலக அரசாங்கத்தாரின் சட்டதிட்டங்களே பகிரங்க சாட்சி பகர்ந்துகொண்டிருக்கிறதுமன்றி, அந்த லாக்களை எடுத்து பைசல் பண்ணுகிறவருக்கு நியாயாதிபதி யென்று சொல்லும்போது அதை ஸ்தாபித்த நபியவர்களை முழு உலகத்திற் வந்த நியாயாதிபதி என்று சொல்லுவதற்கு யாதொரு ஐயமுண்டோ?

இத்தன்மையான மகத்துவம் வாய்ந்தவராக நபியவர்கள் இவ்வுலகத்திற்கு வந்திருக்கிறதினாலேயே மேற்சொன்னவைகள் யாவும் ஒன்றுபடத் தக்கதாய் உம்மை முழு உலகத்தாருக்குக் கிருபாகடாட்ச முள்ளவராக அனுப்பிவைத்தோ மென்று ஆண்டவன் நபியவர்களை ஆசீர்வதித்திருக்கிறான்.

மேற்சொன்ன லாக்களை முன் இந்திய சக்கிரவர்த்தியாயிருந்த ஔரங்கஸீப் காலத்தில் அரபுபாஷையில் ஒன்றுதிரட்டி அதற்கு “பத்தாவி ஆலம்கீரி” எனப் பேரிட்டு வழங்கிவந்தார்கள். இதைப்போலவே “பத்தாவி காலிகான், பத்தாவி றத்துல்முஹ்தார், பத்தாவிமஹ்திரிய, பத்தாவி ஷரஹ்வகாயா” முதலிய ஆயிரக் கணக்கான கிரந்தங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

அச்சு ஆரம்பித்த காலத்தில் பத்தாவி ஆலம்கிரி, றத்துல்முஹ்தார், மஹ்திரியா முதலிய கிரந்தங்கள் நூறு ரூபாய்க்கு அதிகமாகவே விலையுள்ளதாயிருந்தது. தற்காலம் அவைகள் ஏராளமாகச் செலவாகிறபடியினால் 25 ரூபாய் விலையில் விற்கப்பட்டு வருகின்றன.

ஆனால் சில கிறிஸ்துவ அன்பர்கள் மேற்சொன்னவைகளுக்கு மறுமொழியாக உலகத்தாரின் பாவரட்சிப்புக்காகவே யேசுநாதர் மரித்தார் ஆனதினாலேயே அவர் மரித்தநாளை உலக ரட்சிப்பின் நாளென்கிற பெரிய வெள்ளிக்கிழமை யென்று



அழைத்து வருகிறோமென்று சொல்லுகிறார்கள் அதற்கு மறுமொழியாவது:—

ஷை யோவான் 16ம் அதிகாரம் 7, 8-ம் வசனத்தினால் யேசுநாதர் பாவத்திற்காகவும், நீதிக்காகவும், நியாயத்தீர்ப்புக்காகவும் உலகத்தைக் கண்டித்து உணர்த்த வந்தவரல்லவென்றும், தனக்குப்பின் வருகிறவரே அத்தன்மையுள்ளவராயிருக்கிறாரென்றும், யேசுநாதர் வந்ததிலும் இருந்ததிலும் யாதொரு பிரயோசனமில்லையென்றும் அவர் போகிறதே உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கிறதென்றும் தெரிந்துக்கொள்வதோடு, நீங்கள் யேசுநாதர் விஷயத்தில் கொண்டிருக்கிற கொள்கைகள் யாவும் ஷை வசனங்களால் ரத்தாய் விட்டதென்று இதை யாராய்கிற ஒவ்வொரு கனவான்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துகொள்வார்களென்பதற்கு யாதொரு ஐயமில்லையென்றே உறுதியாய்ச் சொல்லலாம்.

மேலும் யேசுநாதரே தனக்குப்பின் வருகிறவருக்கு ஷை வெள்ளிக்கிழமை விசேஷ நாளென்று சொல்லியிருக்கிறார். அதெப்படி யென்று கேட்டால்:—

யோவான் வெளி 2-ம் அதிகாரம் 26-ம் வசனத்தில் ஜெயங்கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளைக் காத்துக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு என் பிதாவிடத்தில் நான் பெற்றதுபோல் ஜனக்கூட்டங்களின் பேரில் அதிகாரத்தைக் கொடுப்பேன் (27) அவன் இருப்புக்கோலால் அவர்களை நடத்திக் கொள்வான். அவர்களோ மண் கலயங்களைப்போல் நொறுக்கப்படுவார்கள் (28) அல்லாமலும் விடிவெள்ளி நக்ஷத்திரத்தை அவனுக்குக் கொடுப்பேன் என்று யேசுநாதர் சொல்லியிருக்கிறதைக் காணலாம்.

இதிற் கண்டபடி யேசு அவர்களின் கிரியை என்கிற இபுறாஹீம் நபியவர்களின் ஆசாரத்தையே முஹம்மது றசூலுல்லா அவர்கள் ஜெயங்கொண்டு உலகமுடிவு பரியந்தம் ஸ்தாபித்து, அவர்களே ஜனக்கூட்டத்தின்மேல் அதிகாரம் பெற்று எதிரிகளை மண்கலயங்களைப்போல் நொறுக்கி இருப்புக் கோலின,

ஆளுகையுடையவராகவும், உலகத்திற்கு விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும் இருக்கிறார்களென்பது நன்றாய் உலகறிந்தவிஷயமே.

நபியவர்கள் விடிவெள்ளி நக்ஷத்திரமாய் எப்படி யிருக்கிறாரென்றாலோ அவர் திங்கட்கிழமை பொழுது உதயமாகிறதற்கு ஒருமணி நேரத்திற்குமுன் விடிவெள்ளி நக்ஷத்திரமும் சுக்கிர நக்ஷத்திரமும் ஆக இரண்டு நக்ஷத்திரங்களும் ஒன்றுகூடுகின்ற நேரத்தில் பிறந்தார். அதற் கறிகுறியாகவே அவருக்கு அந்த சுக்கிரவாரத்தைப் பண்டிகை நாளாக ஆக்கப்பட்டு அவ்வாரத்து தொழுகையை அன்று பிற்பகல் 1 மணிக்குப் பின்னும் 2மணிக்கு முன்னுமான அந்த சுக்கிர நக்ஷத்திரநேரத்தில் தொழப்பட்டு வருகிறதோடு, அவர்களுடைய சகல மங்கள கிரியைகளையும் அந்நக்ஷத்திர நாளாகிய சுக்கிரவாரத்தில் நடத்தப்பட்டு வருகிறதுமன்றி, அவர் திங்கட்கிழமை நடுப்பகல் 12-மணியான அந்நக்ஷத்திர நேரத்திலேயே ஆகிறம் சேர்ந்தார். ஆகவே அவர் பிறந்ததும், இருந்ததும், நடந்ததும், சென்றதுமாகிய சுக்கிரனென்கிற விடிவெள்ளி நக்ஷத்திரமும் அந்நக்ஷத்திர நாளாகிய வெள்ளிக்கிழமையும் அவர்களுக்கு விசேஷமா யிருக்கின்றது

ஆனால் சில கிறிஸ்தவ அன்பர்கள் யேசுநாதரே விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவு மிருக்கிறாரென்று விசுவாசிக்கிறார்கள். அதற்கு மறுமொழியாவது:—

அவ்வாறே யேசுநாதராயிருந்தால் அவர் நானே விடிவெள்ளி நக்ஷத்திரமாயிருக்கிறேன் என்று சொல்லியிருப்பார்; அப்படி அவர் சொல்லாமல் வேறொருவரைப்பற்றி சொல்லியிருப்பதினாலேயும், அந்நியமதத்து வானசாஸ்திரிகள் அந்நக்ஷத்திரத்தின் குணகுணங்களை யெடுத்துக் காண்பித்து இக்குணங்களையாவும் முஹம்மது நபியவர்களில் தான் அமைந்திருக்கிறதென்று சாக்ஷி பகர்ந்து, அவர்களே அந்நக்ஷத்திரமா யிருக்கிறார்களென்று சொல்லி யிருக்கிறதினாலேயும், இவர்களுக்குப் பின் வேறே நபி இல்லை என்பதினாலேயும், ஹஜரத்து முஹம்மது றசூலுல்லா அவர்களே விடிவெள்ளி நக்ஷத்திரமாகவும், முடிவுகாலத் தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார்களென்று பகிரங்கமாய் எல்லார்க்கும் தெரிந்த விஷயமே.



ஆனால் சிலர் யேசுவின் கிரியைகளை இப்றாஹீம் நபியின் கிரியை யென்று எப்படி சொல்ல பொருந்தும் என கேட்கக் கூடும்.

அதற்கு பிரதியுத்தரமாவது:—மோசே 17-ம் அதிகாரம் 7-ம் வசனத்தால் ஆண்டவன் ஆபிரகாமுக்கு இட்ட கட்டளைகள் அவருக்கும் அவருக்குப் பின்வரும் சந்ததிகளுக்கும் உலக முடிவு பரியந்தம் நித்திய கட்டளையாய் ஸ்தாபித்திருக்கிறேன் என்று தெரிந்துகொள்ளுவது மன்றி, அவர் மகன் ஈசாக்குக்கு ஆண்டவன் பின்னும் அதை யுறுதிப்படுத்தி யிருக்கிறானென்பதை 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 19-ம் வசனத்திலும் ஷை 1-ம் மோசே 26-ம் அதிகாரம் 4-ம் வசனத்திலும் சொல்லப்பட்டிருப்பதோடு ஷை மோசே 17-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் அவன் நான் உமக்கிட்ட உடன்படிக்கையை மீறினனே அவன் தன் ஜாதியில் இராதபடி அறுப்புண்டு போவான் என்றும் ஷை 1-ம் மோசே 12-ம் அதிகாரம் மூன்றும் வசனத்தில் ஆபிரகாமை யார் ஆசிர்வதிக்கிறானே அவனை ஆண்டவன் ஆசிர்வதிப்பானென்றும் அவரைச் சபித்தவனை ஆண்டவன் சபிப்பானென்றும் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

யேசுநாதரோ ஆபிரகாமுடைய வங்கிஷத்தில் உள்ளவராய் இருப்பதினால் இவரும் அக்கட்டளைக்கு உடன்பட்டு நடக்கக் கடமைப்பட்டவர் ஆகையால் இவருடைய கிரியைகளும் இப்றாஹீம் நபியுடைய கிரியையென்றே சொல்வதற்கு யாதொருதடை உண்டோ?

இக்கட்டளையை மறுக்க யாராவது எதாகிலுஞ் சொல்லுவார்களேயானால் அவர் யேசுநாதர் ஆபிரகாமுடைய சந்ததியில் இராதபடி அறுப்புண்டு போகப்படுகிறவராகவும் ஆபிரகாமின் கிரியைகளுக்கு மாறுசெய்கிறவன் அவரை சபிக்கிறவனா யிருப்பதினால் ஆண்டவனுடைய சாபத்துக்குட் படுகிறவராகவும் இருப்பார் என்கிற குற்றத்திற்குள்ளாக்கி துரோகிகளென்று யாரும் சொல்லியா தெரியவேண்டும்.

உதாரணமாக ஒரு மௌலவி சாஹிபு ஒரு யூத பாதிரியாரைச் சந்தித்து உங்கள் வேதத்தில் சொல்லியபடி முஹம்மது றசூலுல்லா அவர்கள் முடிவுகால தீர்க்கதரிசியாகவந்து உங்களு

டைய சகல ஆதினத்தையும் அதிகாரத்தையும் கைபற்றி உங்கள் பரிசுத்த நகரமாகிய ஜெருசலேம் முதலிய தாவீதின் ராஜ்ஜியத்தை அவர்களுடைய நீதியினுலும் நியாயத்தினுலும் நடத்தப்பட்டு வருகிறபடியால் யூதர்களாகிய நீங்கள் முஹம்மதுநபியை ஏன் நபியாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கேட்டார்.

அதற்கு ஷை. பாதிரியார் அவரை நாங்கள் பின்பற்றுவதற்கு யாதொரு தடையுமில்லை. ஆபிரகாமின் கொள்கை கிரியைகளான ஆசாரத்திற்கு அவர் மார்க்கத்தில் யாதொரு பேதகமுமில்லை. ஆனல் மார்க்க துரோகியாகிய பாவியைப் பரிசுத்தவான் என்றும் அப்பாதகனைப் பாவியென்று சொன்னவர்களைப் பாவியென்றும் சொல்லுகிற காரணத்தினலேயே அவரை பின்பற்ற தடைபட்டிருக்கிறதென்றார்.

அதற்கு ஷை. மௌலவி சாஹிபு அது எப்படி விவரமாய் விளக்கி சொல்லுமென்றார்.

அதற்கு ஷை. பாதிரியார் யேசு இபுறாஹீம் நபியவர்களின் மார்க்க வரம்பை கடந்து நடந்த பாவியாயிருப்பதால் மார்க்க வரம்பைமீறி நடந்த பாவியைக் கொலை செய்யவேண்டும் என்று ஆண்டவன் ஆபிரகாமுக்கு கட்டளையிட்ட பிரகாரம் பாவியாகிய யேசுவை கொல்லப்பட்டது. நியாயம் இங்ஙனமிருக்க யேசு மோசேயைப்போல் பரிசுத்தமான ஒரு பெரிய தீர்க்கதரிசியென்றும், அவர் இபுறாஹீம் நபியின் மார்க்கத்தை போதித்தவர் என்றும், அவர் அம்மார்க்க வரம்பைவிட்டு மீறினவர் அல்லவென்றும் பலவாறுய் மகிமைப்படுத்தி சாட்சி பகர்ந்தும் அவர் தாயாரை மகிமை படுத்தியும் யூதர்களாகிய நாங்கள் அவரையும் அவர் தாயாரையும் நிந்திக்கிறதினுல் நாங்களே இபுறாஹீம் நபியின் மார்க்கத்தைவிட்டு மீறினவர்களென்றும் பாவியானவர்களென்றும் பலவாறுய் ஏற்றத்துக்கு மாற்றமாய் நிந்திக்கிறதினுலேயே நாங்கள் முஹம்மது நபியை பின்பற்ற தடைப்பட்டிருக்கிறதென்றும், அவைகளை நீங்கள் நீக்கி யேசுவை பாவியென்று விசுவாசித்தால் யூதர்களாகிய நாங்கள் உடனே முஹம்மது நபியைப் பின்பற்ற யாதொரு தடையுமில்லை என்றார்.



ஓ! அன்பர்களே இவ்விடத்தில் கொஞ்சம் கவனியுங்கள் முஸ்லிம்களுடைய நாவில் யேசுநாதரும் அவர் தாயாரும் பாவி என்கிற வார்த்தை வருமேயாகில் அப்பொழுது முஸ்லிம்களும் யூதர்களும் ஒன்றாய் விடுவார்கள் என்றும் அவ்வார்த்தை வராததினலேயே முஸ்லிம்களும் யூதர்களும் ஒன்றுபடவில்லையென்றும் இதினலேயே முஹம்மது நபியவர்களை யூதர்கள் பலவாறுய் நிந்திக்கத் துணிகிறார்களென்றும் அறிந்து கொள்ளலாமல்லவா?

முஸ்லிம்கள் உலக முடிந்தாலுஞ்சரி அல்லது உயிர்போனலுஞ்சரி அல்லது எப்பிரமாண்டமான ஆபத்து வந்தாலுஞ்சரி அவர்கள் ஒருபோதும் இவ்வார்த்தையை சொல்லுவது மில்லை அப்படி சொல்லுகிறவர்களை எளிதில் விடுவது மில்லை என்பது உலகப்பிரசித்தமான விஷயமே.

இத்தன்மையாய் விசுவாசத்தை உலகம் பூராவும் இந்த விசுவாசம் பூராத வண்ணமாய் உலகத்தில் நிலையாக ஸ்தாபித்த முஹம்மதுநபி அவர்களுக்குக் கிறிஸ்த நண்பர்கள் செய்யும் நன்றி என்னவென்றலோ முகம்மதுநபி பாவியாயிருக்கிறார் என்றும் அவரும் அவரை பின்பற்றினவர்களும் நரகவேதனைக் குட்படுகிறார்கள் என்றும் பலவாருக அவர்களுக்கு வந்தன உபசார பத்திரிகை வாசித்து வருகிறார்கள்.

ஆனல் சிலர், முஸ்லிம்கள் யேசுநாதரைப்பற்றி என்னவிதமாய் விசுவாசிக்கிறார்களென்று கேட்டக்கூடும். அதற்குப் பிரதியுத்தரம் என்னவென்றால்:—

குர்ஆன் ஷரீபு 3-ம் ஜுஸ்வு 1-ம் றுக்கூவு 1-ம் ஆயத்திலும் 7ம் ஜுஸ்வு, 5ம் றுக்கூவு 2ம் ஆயத்திலும், 1ம் ஜுஸ்வு 11ம் றுக்கூவு 1ம் ஆயத்திலும், ஆண்டவன் றூஹுல் குதுஸ் என்னும் ஜிபுரீல் மூலமாய் ஈஸா நபியவர்களை அவதாரமாக்கினுரென்றும், 3ம் ஜுஸ்வு 14ம் றுக்கூவு 5ம் ஆயத்தினுல் அவர்கள் ஆண்டவனிடத்தில் ஆதமைப்போல் படைக்கப்பட்டவர்களென்றும், ஜனங்களுக்கு அவர்களின் தாயார்மேல் சந்தேகந்தோன்றினதற்கு 7-ம் ஜுஸ்வு 5-ம் றுக்கூவு 2-ம் ஆயத்திலும், 3-ம் ஜுஸ்வு 13ம் றுக்கூவு 5ம் ஆயத்திலும், அவர்கள் குழந்தை

யாயிருந்தபோது தன்னுடைய நபித்தனத்தைக் குறித்துப் பேசினதே அதற்குப் போதுமானதா யிருக்கிறதென்றும், 6-ம் ஜுஸ்வு 2-ம் றுக்கூவு 4, 5, ஆயத்தினால் அவரும், அவருடைய தாயாரும் யஹூதி யூதர்கள் சொல்லுகிற வடுவை விட்டும் பரிசுத்தமானவர்களா யிருக்கிறார்களென்றும், 6-ம் ஜுஸ்வு 11-ம் றுக்கூவு 3, 4, ஆயத்தினாலும், 27-ம் ஜுஸ்வு 20-ம் றுக்கூவு 3-ம் ஆயத்தினாலும், அவருக்கு ஆண்டவனால் பரிசுத்தமான இஞ்சீல் வேதம் அருளப்பட்டதென்றும், 6-ம் ஜுஸ்வு 14-ம் றுக்கூவு 6-ம் ஆயத்தினாலும், 25-ம் ஜுஸ்வு 12-ம் றுக்கூவு 7, 8, 9, ஆயத்துகளினாலும், ஆண்டவன் ஒருவனென்றும், மற்றும் கொள்கை கிரியை முதலியவைகளிலும் அவர்கள் முன்னுள்ள தீர்க்கதரிசிகளைப்போல் போதித்து வந்தார்களென்றும், 3ம் ஜுஸ்வு 13ம் றுக்கூவு 8ம் ஆயத்தினாலும், 7-ம் ஜுஸ்வு 5ம் றுக்கூவு, 2ம் ஆயத்தினாலும், அவர் அநேக அற்புதங்களைச் செய்தாரென்றும், 28-ம் ஜுஸ்வு 9-ம் றுக்கூவு 6ம் ஆயத்தினால் அவர் தனக்கு முன்னுள்ள மார்க்கங்களையும், தீர்க்கதரிசிகளையும் மெய்யாக்கி வைத்ததோடு தனக்குப்பின் அஹமதென்கிற நபி வருவாரென்று முன் அறிவிப்பு செய்திருக்கிறாரென்றும், 3-ம் ஜுஸ்வு 13-ம் றுக்கூவு 11ம் ஆயத்தினாலும், 7ம் ஜுஸ்வு 5ம் றுக்கூவு 3, 4, ஆயத்தினாலும், 28ம் ஜுஸ்வு 10ம் றுக்கூவு 5-ம் ஆயத்தினாலும், அவருக்கு ஹவாரிய்யூன்கள் கொடுக்கப்பட்டிருப்பதோடு அவர்களும் பரிசுத்தவான்களா யிருந்தார்களென்றும், 3-ம் ஜுஸ்வு 13-ம் றுக்கூவு 1-ம் ஆயத்தினாலும், 28-ம் ஜுஸ்வு 20-ம் றுக்கூவு 5-ம் ஆயத்தினாலும், அவருடைய தாயாராகிய மரியம் என்பவர்கள் பரிசுத்த முள்ளவர்களென்றும் உலகத்திலுள்ள எல்லாப் பெண்களைவிட மகா சிறந்த பெண்களிலுள்ளவர்களென்றும், 3-ம் ஜுஸ்வு 14-ம் றுக்கூவு 1-ம் ஆயத்தினால், யஹூதி யூதர் முதலிய காபிர்களின் துன்பத்தை விட்டும், அவரை வானலோகத்துக்கு உயர்த்தப்பட்டிருப்பதுமன்றி முடிவுகாலத்தில் உலகத்திற்கு மீண்டு வருவார்களென்றும் தெரிந்து கொள்ளுவதோடு, "அகாயிதா" கிதாபுகளில் அவர்கள் ஆதம், நூஹ், இபுராஹீம், மூசா, தாவூது முதலிய



பெரிய நபிமார்களில் ஈசா நபியவர்களும் ஒருவரென்றும்; அவர் இனி உலகத்திற்கு மீண்டு வந்து முன் போலவே இஸ்லா மார்க்கத்தைப் போதிப்பார்களென்றும், முடிவில் மதீனத்தில் வந்து மரணமாகி நபியவர்களின் சமாதியின் பக்கத்தில் அவர்களுக்கென்று குறிக்கப்பட்டிருக்கிற இடத்தில் அடக்கப்படுவார்களென்றும் சொல்லியிருப்பதைக் காணலாம்.

மேற்சொன்ன ஆயத்துகளிலும், மற்றும் அநேக ஆயத்து, ஹதீதுகளிலும் ஈஸா நபியவர்கள் செய்தியையும், அவர்களுடைய தாயாரின் செய்தியையும் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை இங்கெடுத்தெழுத இடம் போதாதென்று சில ஆயத்துகளின் கருத்தை மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனதினாலேயே முஸ்லிம்கள் அவர்களை ஈஸா றூஹுல்லா, ஈஸா கலிமத்துல்லா என்று பலவாறாய் துதித்து மகிமைப்படுத்தி சாட்சி பகர்ந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய தாயாராகிய மரியம்பீவியினுடைய நாமத்தையும் வெகு ஆனந்தத்துடன் பேர் நாமங்களாகச் சூட்டிக்கொண்டு அவர்களை மகத்துவப்படுத்தி வருவதோடு அவர்களை யாராவது நிந்திக்கும் விஷயத்தில் தங்கள் உயிரைப் பெரிதாய் எண்ணாமல் அவர்களுடைய புகழையே பெரிதாக எண்ணிக்கொண்டு வருகிறார்களென்பது எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே.

அறியாத சிலர் றூஹுல்லா என்பதை ஆண்டவனுடைய ஆவியென்று அர்த்தம் பண்ணுவார்கள். ஆனால் அது ஆண்டவனுடைய றஹ்மத்தென்கிற கிருபை யென்று குர்ஆன், தப்ஸீர்களில் எழுதியிருக்கிறதுமன்றி, இதன் உண்மையை குர்ஆன், 15-ம் ஜுஸ்வு, 10-ம் றுக்கூவு, 1-ம் ஆயத்தின் மூலமாயும் தெரிந்துக் கொள்ளலாம்.

இதைப் போலவே கலிமத்துல்லா என்பதற்கு ஆண்டவனுடைய வார்த்தை என்பது. அதாவது ஆண்டவன் யாதொன்றை உண்டாக்க வேண்டுமானால் "குன்" என்கிற வார்த்

தையைச் சொல்வான் அப்போது அது உண்டாகிவிடும் "குன்" என்றால் நீ ஆகு என்பதே. மரியம்பீவி அவர்களிடம் ஜனங்கள் நீ கர்ப்பவதி யானதற்குக் காரண மென்னவென்று கேட்டபோது, ஆண்டவன் யாதொன்றை உண்டாக்கவேண்டினாலும் 'குன்' என்று சொல்வான் அது உண்டாய்விடும் அப்பிரகாரமே அவ்வார்த்தையினால் நான் கர்ப்பவதி யானேன் என்று சொல்லியிருக்கிறார்களென்கிற விபரத்தைக் குர்ஆன் 3-ம் ஜுஸ்வு 13-ம் றுக்கூவு 4-ம் ஆயத்திலும், 6-ம் ஜுஸ்வு 3-ம் றுக்கூவு 9-ம் ஆயத்திலும், தெரிந்துகொள்ளலாம்.

ஓ கிறிஸ்தவ அன்பர்களே, இஸ்ரவேலர் என்கிற அரபியர்களும், ஈசாக் என்கிற யஹூதி யூதர்களும் இபுறாஹீம் நபியின் மார்க்கத்தைப்பின்பற்றி நடந்துவருகிறோம் என்று சொல்லிக்கொண்டு வந்ததோடு யேசுநாதர் அம்மார்க்கத்தைவிட்டு மீறின பாவியென்று பலவாறாய் நிந்தித்துக்கொண்டு வந்தார்கள் என்பதும், பின்பு வந்த முஹம்மது நபியவர்களோ அந்த இபுறாஹீம் நபியவர்கள் மார்க்கத்தை உலகம் புரண்டாலும் அம்மார்க்கம் புரளாத வண்ணமாய் நிலைநாட்டி யிருக்கிறார்கள் என்பதும் உலகமறிந்த விஷயமே.

இவ்விரண்டையும் சீர்தூக்கி பார்த்தால் முஹம்மது நபியவர்கள் யஹூதி யூதர்களையும் தன் இனத்தாராகிய அரபியர்களையும் நல்லவர்களென்று சொல்லி அவர்கள் நிந்திக்கிற யேசுநாதரை யல்லவா நபியவர்கள் நிந்திக்கவேண்டும். அப்படிச்செய்லாமல் யேசுநாதரைப் புகழ்ந்து மகத்துவப் படுத்துவதோடு அவரை நிந்தித்த யஹூதி யூதர் அரபி முதலியவர்களை பாவியென்று பலவாறாய் நபியவர்கள் நிந்தித்திருப்பதற்கு காரணமென்ன வென்பதை நீங்கள் உங்களுக்குள்ளேயே நன்றாய் ஆலோசித்து பாருங்கள்.

மேலும் யஹூதி யூதர்களும், அரபியர்களும் யேசுநாதரைப் பாவியென்று பலவாறாய் நிந்தித்துக்கொண்டு வந்ததற்கு நபியவர்களும் சற்று இடம் கொடுப்பார்களேயானால் அவ்விரு கூட்டத்தார்களும் ஒன்றுகூடி அத்தேசத்திலுள்ள கிறிஸ்தவ



பூண்டுகளையெல்லாம் அடியோடு தொலைத்துவிடுவதுமன்றி அத்தேச முதலிய எத்தேசங்களிலும் யாதொரு கஷ்ட மில்லாமல், நபியவர்களின் மார்க்கம் வெகு எளிதில் ஏராளமாய் பரவியிருக்குமல்லவா?

அவ்விதம் நபியவர்கள் இடங்கொடுக்காமல் அவ்விருபெரிய கூட்டத்தாரின் வாயை அடைத்து அவர்களின் தலையை நசுக்கி போட்டது மன்றி அக்கூட்டத்தாரால் நிந்திக்கப்பட்ட யேசுநாதரின் தலையை உயர்த்தி மகிமைபடுத்தி யிருக்கிறதை உங்கள் நீதமான புத்தியைக்கொண்டு நன்றாய் ஆராய்ந்து பாருங்கள் என்று இரண்டாந்தரமும் உங்களுக்கு வற்புறுத்தி சொல்லுகிறேன்.

நீங்களோ முஹம்மது நபி ஆண்டவருடைய தூதருமல்ல ஆண்டவனால் அவருக்கு குர்ஆன் வாக்கியம் அருளப்பட்டிருப்பதுமல்ல அவர் தானாகவே மனம்போன போக்காய் குர்ஆன் வாக்கியத்தை சொல்லிக்கொண்டார் என்று சொல்லி விசுவாசிக்கிறீர்கள். உங்கள் விசுவாசப்படி அவர் தமது சுயநலத்தைக் கருதி அவ்விரு கூட்டத்தாரைப்போலவே நபியவர்களும் சொல்லி தன்னுடைய காரியத்தை சாதித்து உங்கள் தலையை நசுக்கி தமது நோக்கத்தையும் வெகு எளிதில் பரவச் செய்திருக்கலாமல்லவா? அப்படி அவர்கள் செய்தால் அவர்களைக் கேட்கிறது யார். அவ்விதம் நபியவர்கள் செய்யாமல் மேற்படி இருகூட்டத்தாருடனும் அது காறுதென்று உங்கள் கூட்டத்தாருடனும் ஆக மூன்று கூட்டத்தாருடனும் அவர்கள் உண்மையைச்சொல்லி அதை யவர்கள் கைகொள்ளும் பொருட்டு அவர்களுடன் போராடி உண்மையை பரவச் செய்வதற்கு அவர்கள் எடுத்த கஷ்டத்தையும் பட்ட துன்பத்தையும் நன்றாய் கவனித்தால் நபியவர்கள் சத்தியத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டவே பிரயாசைப்பட்டார்கள் என்று இதை வாசிக்கிறவர்களே ஒவ்வொருவரும் நன்றாய் அறிந்து கொள்வார்கள் என்பதற்கு யாதொரு ஐயமில்லையென்றே உறுதியாய்ச் சொல்லலாம்.

ஆனதினாலேயே 1-ம் மோசே 49-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் அவர் சமாதான கர்த்தாராகவும், ஏசாயா 9-ம் அதிகா

ரம் 6-ம் வசனத்தில் சமாதான பிரபாகவும் ஷை எசாயா 42-ம்
அதிகாரம் 1-ம் வசனத்தில் அவர் ஜாதிகளுக்கு நியாயத்தை
வெளிப்படுத்துகிறவராகவும் மேற்படி 4-ம் வசனத்தில் அவர்
சமாதானத்தை பூமியில் நிலைப்படுத்துகிறமட்டும் இளைக்கிறவ
ருமல்ல, பதறுகிறவருமல்லவென்றும் கண்டிருக்கிறதுமன்றி,
யோவான் 16-ம் அதிகாரம் 8-ம் வசனத்தில் அவர் வந்து நீதி
யைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்
டித்து உணர்த்துவாரென்றும் இன்னும் மேற்படி யோவான்
16-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் அவர் வந்து சகல சத்
தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்றும் ஷை யோவா
ன் 15-ம் அதிகாரம் 26-ம் வசனத்தில் அவர் வந்து என்னைக்கு
றித்து சாட்சி கொடுப்பார் என்றும் யேசுநாதரால் சொல்லப்ப
ட்டிருக்கிறதையும் கவனித்தால் முஹம்மது நபியவர்கள் சமா
தானத்தையும் சத்தியத்தையும், நீதியையும் இவ்வுலகத்தில்
நிலைநாட்டவந்த நபியாயிருக்கிறார்கள் என்பதை உங்களில் ஒரு
அணுவளவு நீதமான புத்தியுள்ளவர்களும் கூட நன்றாய் அறிந்
துகொள்வார்கள் என்று தோன்றுவதாகவும் அதை உங்களுக்கு
உறுதிப்படுத்தி சொல்லுகிறேன்.

உங்களில் சிலர் எவ்வளவோ கஷ்டமெடுத்து நபியவர்கள்
விக்கிரகஆராதனையைத் தொலைத்திருக்கிறார்களென்று சொல்லு
கிறார்கள். இச்சொல்லை பொதுவாய் கவனித்தால் அவ்விக்கிரக
ஆராதனைக்காக எடுத்த கஷ்டம் அற்பமாகவும் யேசுநாதரை
யும் அவர் தாயாரையும் பாவிகளென்று, பலவாறாய் நிந்திக்கிற
வர்களுக்கு சமாதானஞ்சொல்லி அதனை அங்கீகரிக்கும்படி எடு
த்த கஷ்டம் அதிகமாகவும் இருக்கிறதென்றே சொல்லவே
ண்டும்.

அது எப்படியென்றாலோ, இபுறாஹீம் நபியினுடைய மா
ர்க்கத்தைக் கொண்டும், அதைக் கைப்பற்றி நடந்துவந்த இஸ்
மாயீல், இஸ்ஹாக், யாக்கூபு, மூசா, தாவூது முதலிய நபிமார்க
ளின் ஆசாரத்தைக் கொண்டும், விக்கிரக ஆராதனைக்காரர்களி
ன் தொல்லை வெகு எளிதில் நசுக்கிவிட்டார்கள்; ஈஸா நபியவர்க



ளை அங்கீகரியாத கூட்டத்தாருக்கு அவர்களை அங்கீகரிக்கும்
படி சொன்னதை அவர்கள் அங்கீகரிப்பது வெகு கஷ்டமாகவி
ருந்ததினாலேயே கத்தியை உபயோகிக்க நேரிட்டது.

இதைப்போலவே இஸ்ரவேலர்கள் பற்பல வகுப்பினராய்
பிரிந்து வேறுபட்டு யஹ்யா, சகரியா, உசேர் முதலிய நபிமார்
விஷயத்திலும், மற்றுமுன்னுள்ள நபிமார்கள் கொள்கை, கிரியை
முதலிய ஆசாரத்திலும் அவர்கள் பேதகப்பட்டு இருந்ததை
ஒன்றுபடுத்துவதற்காகவும், நஸாராக்களாகிய கிறிஸ்தவர்கள்
ஈஸா நபியவர்கள் விஷயத்திலும் முன்னுள்ள நபிமார்களை விசு
வாசிப்பதிலும், அவர்கள் கொள்கை கிரியை முதலிய நடத்தை
களிலும், பலவாறாய் வேறுபட்டு ஒன்றுக்கொன்று தூஷித்து
கலகங்கள் புரிந்துகொண்டு வந்ததை நிவாரணம் செய்வதற்கா
கவும், யூதர்கள் கிறிஸ்தவர்களை பாவியென்றும், கிறிஸ்தவர்கள்
யூதர்களை பாவியென்றும் சொல்லி பற்பல கலகங்கள் புரிவதை
சமாதானம் படுத்துவதற்காகவும், நபியவர்கள் எடுத்த கஷ்ட
மும், துன்பமும், முயற்சியும் அதிகமாயிருப்பதுமன்றி அதை
அவர்கள் எளிதில் அங்கீகரியாததினாலேயே பின்னும் அதிகவே
கத்தோடு அவர்களோடு கத்தியை உபயோகித்து போராட நேர்
ந்ததென்பது எல்லாருக்கும் நன்றாய் தெரிந்த உலகப் பிரசித்
தமே.

ஆனால் உங்களில் சிலர் யுத்தம் செய்து மார்க்கத்தைப்பெ
ருக்கியது பிசகு என்று நபியவர்கள்பேரில் குற்றம் சாட்டுகிறா
ர்கள். இதற்கு மறுமொழி யென்னவென்றால்:—

எசாயா 42-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் கர்த்தர் பரா
க்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்த வீரனைப்போல்,
வைராக்கியம் மூண்டு, முழங்கி, கெர்ச்சித்து, தம்முடைய சத்
துருக்களை மேற்கொள்ளுவா ரென்றும், ஷை எசாயா 10-ம்
அதிகாரம், 6-ம் வசனத்தில் அவபக்தியான ஜனங்களுக்கு
விரோதமாய் நான் அவனை அனுப்பி எனக்கு கோபமூட்டின
ஜனத்தை கொள்ளையிடவும் சூறையாடவும், அதை, வீதிகளில்
சேற்றைப்போல் மிதித்துப்போடவும் அவனுக்கு கட்டளை கொ

டுப்பேன் என்றும், சங்கீதம் 2-ம் அதிகாரம் 9-ம் வசனத்தில் இருப்புக் கோலால் அவர்களை நொறுக்கி குயக்கலத்தைப் போல் அவர்களை உடைத்துப் போடுவீரென்றும் சகரியா 14-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே, போராடுவதுபோல் அந்த ஜனங்களோடு போராடுவாரென்றும், கண்டிருக்கிறதோடு யோவான் வெளி 2-ம் அதிகாரம் 27ம் வசனத்தில் அவர் இருப்புக்கோலால் நடத்துவார் அவர்களோ மண்கலயங்களைப்போல் நொறுக்கப் படுவார்களென்றும் மாற்கு 12-ம் அதிகாரம் 1 முதல் 9-ம் வசனம்வரையிலும், லூக்கா 20-ம் அதிகாரத்திலும், மத்தேயு 21-ம் அதிகாரத்திலும், யூதர்களுக்கு யேசுநாதர் உவமையாய் சொல்லி கடைசி முடிவில் தன்னையும் குறித்து சொல்லிப் பின்னர் எனக்குப் பின் ஒருவர் பாராபரத் தன்மையாய் வந்து உங்களை சங்கரித்து உங்கள்வசமிருக்கிற தோட்டமாகிய இவ்விராஜ்யத்தை உங்களிடமிருந்து பிடுங்கி மற்றவர்களுக்கு ஒப்புவிப்பாரென்றும், மத்தேயு 21-ம் அதிகாரம் 44-ம் வசனத்திலும் அவரை எதிர்த்தவனும் அவரால் எதிர்க்கப் பட்டவனும் நொறுக்கப்படுவானென்கிற உண்மையையும் இன்னும் பலவாறாகவும், யேசுநாதரால் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

மேற்கண்டபடி சொல்லிய யேசுநாதர், ஏசாயா, தாவூது, சகரியா முதலியவர்களையும் அவர்களுக்கு கட்டளையிட்ட ஆண்டவனையும் நிந்தித்து பேசவேண்டுமே தவிர, முஹம்மது நபியவர்களை நிந்திக்கிறது நியாயமில்லை,

உதாரணமாக ஒரு அரசன் ஒருவனுக்கு நியாயந்தீர்க்க ஆரம்பத்தில், கோட்டுசேவகனோ அல்லது சம்மனோ அனுப்பி அதற்கு ஆஜராகாவிட்டால் வாரண்டு அனுப்பி அதற்கும் அவன் அகப்படாவிட்டால் அவன் சொத்தை ஜப்திபண்ணி ஏலவிடுத்திலும் நியாயத்தை தீர்க்கிறதுபோலவே, நபிமார்களும் ஆரம்பத்தில் நயத்தினாலும், பின்பு பயத்தினாலும், நியாயத்தை போதிப்பதற்கு செவிகொடாத அஞ்ஞானிகளோடு முடிவில் போராடி சத்தியத்தை ஸ்தாபிக்க வேண்டியதே நியாயமானதினாலே மோசே, தாவூது, ஊசா முதலிய அநேக தீர்க்கதரிசிக



ளும் அஞ்ஞானிகளோடு போராடி யிருக்கிறார்களென்பதை அவரவர்கள் புஸ்தகங்களில் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

யேசுநாதரையும் அவர் தாயாரையும் குறித்து சாட்சி பகர்ந்து, மகிமைப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிற நபியவர்களின் வேதத்தை அசுத்தம் என்று தள்ளிவிட்டு யேசுநாதரையும் அவர் தாயாரையும் பலவாறாய் நிந்தித்து உங்கள் விசுவாசப்படி அவர்களின் தலையை நசுக்கிப்போட்ட யூதர்களுடைய புஸ்தகத்திற்கு பரிசுத்த வேதமென்று பெயரிட்டு நீங்கள் சேர்த்துக்கொண்டிருக்கிறதை கவனிக்கிற ஒவ்வொரு சுனவான்களும் அதிக ஆச்சரியப் படுவார்கள் என்று யாவரும் சொல்லியா தெரியவேண்டும்.

ஆனால் யேசுநாதருடைய பாராபரத்தன்மையிலும் அவரின் உயிர்த்தெழுந்தலிலும் சில மாறுதல்களை முஹம்மது நபியவர்கள் சொல்லியிருக்கிறதினால் அவரை நிந்திக்கிறதற்கு ஏதுவாயிருக்கிறதென்று சில கிறிஸ்தவ அன்பர்கள் சொல்லக்கூடும். அதற்கு பிரதியுத்தரம் என்னவென்றால்:—

நபியவர்கள் இப்றாஹீம் நபியினுடைய மார்க்கத்தையே தனக்கு ஆதாரமானதாக வைத்துக்கொண்டு ஈசாநபி முதலிய நபிமார்களை, யூதர்களும், கிறிஸ்துவர்களும் எவ்வளவு தூரம் விசுவாசிக்கலாமோ அவ்வளவு தூரம் விசுவாசிக்கவேண்டுமென்றும் அம்மார்க்கத்தை நடந்து யாரையும் தாழ்த்தியாவது, உயர்த்தியாவது பேசக்கூடாதென்றும் சமாதானம் சொன்னார்கள். ஏனென்றால் குர்ஆன் ஷரீபு, 14ம் ஜூசுவு 22ம் றுக்கூவு 4ம் ஆயத்தில் ஆண்டவன் நபியவர்களை நோக்கி நீர் சகலத்திலும் இப்றாஹீம்நபி மார்க்கத்தை கைக்கொண்டு நடக்கவேண்டுமென்றும் 4ம் ஜூசுவு 10ம் றுக்கூவு 4ம் ஆயத்திலும், 8ம் ஜூசுவு 7ம் றுக்கூவு 7ம் ஆயத்திலும் 5ம் ஜூசுவு 15ம் றுக்கூவு 10ம் ஆயத்திலும் இன்னும் அநேக ஆயத்துக்களிலும் யாராயிருந்தாலுஞ்சரி இப்றாஹீம் நபியவர்களின் மார்க்கத்தையே பின்பற்றி நடக்கவேண்டுமென்றும் அதைமீறி நடந்தவன் பாவியென்றும் பலவாறாய் வற்புறுத்தி ஆண்டவனால் ஏவப்பட்டு இருப்பதைக் காணலாம்.

மேலும் நபியவர்கள் சுயமாகவே யாதொன்றும் சொல்லவில்லை என்றும் அவர் சொன்னதெல்லாம் ஆண்டவனின் அறிக்கைப்பிரகாரம் சொன்னார்கள் என்றும் 27-ம் ஜூஸ்வு 5-ம் றுக்கு 3-ம் 4-ம் ஆயத்தில் சொல்லப் பட்டிருப்பது மன்றி 5-ம் மோசே 18-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் நம்முடைய வார்த்தையை அவர் வாயில் அருளுவோம் நாம் அவருக்கு கற்பித்ததையெல்லாம் அவர் அவர்களுக்கு சொல்லுவார் அவர் நம்முடைய நாமத்தினால் சொல்லும் நமது வார்த்தைகளை கேளாதவர்களை நாம் விசாரிப்போம் என்று மோசேக்கு ஆண்டவன் அருளியிருக்கிறதாக கண்டிருக்கிறது மன்றி யோவான் 16-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் அவர் தம்முடைய சுயமாய்ப்பேசாமல் தாம் கேள்விப்பட்ட யாவையும்சொல்லி இனிவரப் போகிற காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார் என்று யேசுநாதரால் சொல்லப்பட்டிருக்கிறதைக் காண்பீர்.

நீங்கள் யேசுநாதர் விஷயத்தில் கொண்டிருக்கிற கொள்கை யாவற்றையும் ஆண்டவன் இபுறாஹீம் நபியவர்களுக்கு இட்ட கட்டளைகளை மறுத்து கண்டனஞ் செய்கிறபடியால் அவ்விதம் கட்டளையிட்ட ஆண்டவனையும், அக்கட்டளையை கைக்கொண்ட இபுறாஹீம் நபியையும், அதைப் பின்பற்றி நடந்து வந்த [illegible] முதலிய [illegible]களையும், அதன் [illegible] ஜனங்களுக்கு அறிவித்த [illegible]யையும், அதற்கு பரிசுத்த வேதமென்று பேரிட்டு உங்கள் வேதமாகிய புதிய ஏற்பாட்டோடு ஒன்று சேர்த்த உங்கள் முன்னோர்களையும், யோவான் 16-ம் அதிகாரம் 7-ம் வசனத்தில் நான் உங்களுக்கு உண்மையை சொல்லுகிறேன் நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால் பாராக்லீத்தானவர் உங்களிடத்தில் வரமாட்டார், நான் போவேனேயாகில் நான் அவரை உங்களுக்கு அனுப்புவேன், (8) அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் என்று சொல்லி, தமக்கு [illegible] தையும், தமக்கு பின் வருகிறவருக்கு [illegible]



யோவான் 14-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் வேறொரு பாராக்லீத்தானவரை அவர் உங்களுக்கு தந்தருள்வாரென்றும் இன்னும் ஷை யோவான் 15-ம் அதிகாரம் 26-ம் வசனத்தில் அவர் வந்து என்னைக்குறித்து சாக்ஷி கொடுப்பாரென்றும், மத்தேயு 23-ம் அதிகாரம் 39-ம் வசனத்தில் கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவரை ஸ்தோத்திரிக்கப்பட்டவரென்று நீங்கள் சொல்லுமளவும் இது முதல் என்னைக் காணமாட்டீர்கள் என்றும், பலவாறுந் தனக்குப்பின் வருகிறவரை குறித்து புகழ்ந்து முன்னறிவிப்புச் செய்த யேசுநாதரையும் நீங்கள் நிந்திக்க வேண்டுமே தவிர முஹம்மது நபியவர்களை நிந்திப்பது நியாயமில்லை.

ஆனதினாலே உங்களில் எபியோனியர், சேகித்தியர், கொருந்தீசியர், அரியூஷியர், சாவலினியர், திக்கிலாத்தியூனியர், வாலந்தினியர், தியூதேசியர், அர்த்தமன், யூனிடீரியன் முதலிய கூட்டத்தார்கள் திருத்தத்துவத்தை அங்கீகரியாமலும், பார்சிலீதி, தோசித்தியார், சிறந்தி, போயி முதலிய அநேக கூட்டத்தார் யேசு மரிக்கவில்லையென்றும், விசுவாசிக்கிறார்கள். இதின் விபரத்தை "இளுமே ஆம்" "றத்துத்தஹ்லீத்" "இஜுஹா றுல் ஹக்" முதலிய கிரந்தங்களைப் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

அன்றியும்யேசுநாதர் தன்னுடைய சார்ஜை ஷை வசனப்படி தனக்கு பின் வருகிறவருக்கு ஒப்புவித்துவிட்டு பரலோகம் சென்றிருக்கும்போது கிறிஸ்தவ நண்பர்களாகிய நீங்கள் அச்சார்ஜை யேசுநாதருக்கே உரியதென்று பாராட்டுகிறதினாலேயே மத்தேயு 7-ம் அதிகாரம் 21, 22, 23-ம் வசனங்களில் அவ்வுலகத்தில் கிறிஸ்தவர்கள் யேசுநாதரிடத்தில் அடைக்கலந்தேடி செல்லும்பொழுது ஓ அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு நீங்கள் அகன்று போங்கள் உங்களை ஒருக்காலும் நான் அறிந்ததில்லை. பராபரனுக்கு சித்தமானவைகளை செய்யாமல் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொன்னவன் எவனும் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று யேசுநாதர் வெகு கோபாக்கினையோடு வற்புறுத்தி சொல்லி

யிருக்கிறு ரென்பதை யாரும் சொல்லியா தெரியவேண்டும். கைபுண்ணைப் பார்க்க கண்ணுடி வேண்டுமோ.

மேலும் எல்லாப் பாவங்களையும் பொறுக்கப்படும். நபியவர்களுக்கு விரோதம் செய்து நிந்தித்த பாவத்தைமாத்திரம் இம்மையிலும் மறுமையிலும் பொறுக்கப்படாது என்கிற உண்மையை மத்தேயு 12-ம் அதிகாரம் 31, 32-ம் வசனங்களில் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

இத்தன்மையான ஞாயத்தை மறந்து நீங்கள் முஹம்மது நபியை நிந்தித்து அவர்கள் தீர்க்க தரிசனங்களை மறுதலிக்கிறதினுலே யோவான் வெளி 22ம் அதிகாரம் 19ம் வசனத்தில் கண்டபடி எவன் தீர்க்கதரிசன வார்த்தைகளை மாறுபாடு செய்தானே அவன்பேர் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுபடுவதோடு பரிசுத்தபட்டணங்களில் உள்ளபங்கை பராபரன் அவனை விட்டு நீக்கிவிடுவான் என்றும் கலாத்தியர் 3 ம் அதிகாரம் 10 ம் வசனத்தில் நியாயப் பிரமாண புஸ்தகத்தில் சொல்லப் பட்டவைகளை செய்யத்தக்க பிரகாரம் செய்யாதவன் சபிக்கப்பட்டு போவான் என்றும் கண்டிருப்பதோடு மத்தேயு 21ம் அதிகாரம் 42ம் வசனத்தில் வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளிவைத்த கல்லே மூலைக்கு தலையானகல்லாயிற்று அது பராபரனுல் ஆயிற்று அது நம்முடைய கண்ணுக்கு ஆச்சரியமாயிருக்கிறதென்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா (43) ஆனதினுல் பராபரனுடைய இராச்சியம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக்கொடுக்கப்படும் (44) அன்றியும் அக்கல்லின் மேல் விழுகிறவன் நொறுக்கப்படுவான் அக் கல் எவன்மேல் விழுமோ அது அவனை நசுக்கிப்போடும் என்று யேசுநாதரால் சொல்லும்படியாகவும் நேரிட்டதென்று தெரிந்துகொள்ளலாம்.

ஷை-| வசனங்களில் கண்டவாறே தௌராத்து-முஹம்மது றசூலுல்லா அவர்களின் தீர்க்கதரிசனத்தை மறுதலித்தவர்கள் தங்கள் சுதந்தரத்தை இழந்து சாபத்திற்குள்ளாகி போ



றுக்கப்பட்டு போனார்களென்பதும் எல்லோருக்கும் பஹிரங்கமாய் நன்றாய்த் தெரிந்த விஷயமே.

ஆனல் சிலர் குர்ஆன் ஷரீப் நபியவர்களுக்கு ஆண்டவனுல் அருளிய தேவவாக்கென்று எப்படிச் சொல்லப் பொருந்தும், அதுதேவவாக்கு என்பதற்கு அதில் என்ன அத்தாக்ஷி இருக்கிறதென்று கேட்கக்கூடும் அதற்கு மறுமொழி என்னவென்றுல்:

ஆண்டவன் தௌறாத் வேதத்தைக் கொடுத்து அதிலுள்ளதை நீங்கள் பேணி நடந்துவாருங்களென்று குர்ஆன் 6-ம் ஜுஸ்வு 11-ம் றுக்கூவு 1-ம் ஆயத்தில் அருளப்பட்டிருக்கிறதைக் காணலாம், அவ்வேதத்தை பேணி நடவுங்கள் என்று ஜனங்கள் பேரில் பொருப்பு சாட்டி ஏவப்பட்டிருந்த படியினுல் அது பலவிதமான மாறுபாட்டுக்குள் பட்டிருக்கிறதென்றும், அத்தன்மையான மாறுபாட்டிற்குள் குர்ஆன் ஆகாமலிருக்கும் பொருட்டு 14-ம் ஜுஸ்வு 1-ம் றுக்கூவு 8, 9-ம் ஆயத்தில் ஆண்டவன் "மெய்யாக நாம் இந்தக் குர்ஆனை இறக்கிவைத்தோம், இன்னும் மெய்யாகவே நாமதை காத்துக் கொண்டிருக்கிறோம்" என்றும் அருளியிருக்கிறதைக் காணலாம்.

இதனுல் குர்ஆன்ஷரீபு அக்கால்முதல் இக்காலம்வரை யாதொரு சீர்கேடில்லாமலும், ஒரு அக்ஷரத்தைக் கூட்டாமலும், குறைக்காமலும், திருத்தாமலும், அப்படியே பரிசுத்தமாயிருப்பதையும், அதில் சொல்லிய முன்னறிவிப்புகள் யாவும் நிறைவேறியும் நிறைவேறிக்கொண்டு வருவதையும் கவனித்தால் அது ஆண்டவனுல் அருளப்பட்ட வாக்கென்றும், அவைகளை ஆண்டவனே பாதுகாத்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறுனென்றும் யாரும் சொல்லியா தெரியவேண்டும்.

பின்னும் மக்கா ஷரீப் ஜெயிக்கப்பட்டு அங்குள்ள எல்லோரும் முஸ்லிமானவுடன் ஹஜரத் நபியவர்களிடம் சஹாபாக்கள் வந்து இப்பட்டணத்திலுள்ள நாங்கள் எல்லோரும் ஒன்றுபோல முஸ்லிமாகி விட்டோமே இனி இப்பட்டணத்தில் விக்கிரக ஆராதனைக்காரர்கள் வந்து குடியேறலாமா, என்று கேட்டதற்கு மறுமொழியாக 10-ம் ஜுஸ்வு 10-ம் றுக்கூவு 4ம் ஆய

த்தில் விக்கிரக ஆராதனைக் காரர்கள் அசுத்தர்களாயிருக்கும். அவர்கள் இவ்வருஷத்திற்கு பின் அங்குள்ள சங்கையான ஆலயத்தில் அவர்கள் வந்து அண்டாதிருக்கும்படி செய்யுங்கள் என்று அருளப் பட்டிருப்பதைக் காணலாம்.

அக்கால முதற்கொண்டு நாளது வரையிலும் அப்பட்டணத்திற்கு அந்நியருடைய குடியேற்றம் இல்லாமலும் அவ்வாலயத்தில் அவர்கள் வந்து அண்டாமலும் இருக்கிறதைக் கவனித்தால் அது தேவவாக்கின் சத்தியத்தினாலேயே அவ்விதம் கட்டுப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளுவதற்கு யாதொரு ஐயமில்லை.

பின்னும் நபியவர்கள் ஆரம்பக் காலத்தில் அதாவது அவர்கள் நாலு ஐந்து பேர்களாயிருக்கும்போது அஞ்ஞானிகள் நபியவர்களை கொலை செய்து அவர்கள் முயற்சிகளை அடியோடே அழித்துவிடப் பார்த்தார்கள். அதற்கு ஆறுதலாக குர்ஆன் 10-ம் ஜுஸ்வு 11-ம் ருக்கூவு 3-ம் ஆயத்தில் அக்காபிரீன்கள் ஆண்டவனுடைய ஒளியை வாயாலூதி அணைத்துவிடப்பார்க்கிறார்கள். அவர்கள் எவ்விதம் செய்தபோதிலும் ஆண்டவன் அவ்வொளியை பூர்த்திசெய்தாலொழிய விலகமாட்டானென்று அருளியிருக்கிறதைக் காணலாம்.

இஸ்லாம் என்கிற ஒளி அவர்கள் கெடுதியினால் மங்கிப்போகாமல், நாளுக்குநாள் அதிக விருத்தியாகி உதயகிரி முதல் அஸ்தகிரிவரையும் ஏராளமாய் பரவியும், பரவிக்கொண்டும் வருகிறதை யாராய்கிற ஒவ்வொரு கனவான்களும் இது தேவவாக்கின் சத்தியத்தினாலேயே அவ்விதம் பரவியது என்று நன்றாய்த் தெரிந்துக்கொள்ளுவார்கள்.

இன்னும் இவைபோன்ற அநேக ஆயத்துகளின் அத்தாட்சிகளை வகைவகையாக வெடித்து ரூபித்து இருப்பதை இந்த புஸ்தகம் முதலாம் அதிகாரம் முழுவதிலும் வரையப்பட்டிருக்கிறதைப் பார்த்துக்கொள்ளலாம்.

அன்றியும் கல்விமான்களோ அரபியில் 14 இல்முகளிருக்கின்றன வென்றும், ஒவ்வொரு இல்மையும் சுமார் 10 வருஷம்



வரை படித்தால் அவ்வறிவைப் பூரணமாய்க் கற்றுக்கொள்ளக் கூடுமென்றும் ஆக மேற்படி 14 இல்மையும் பூரணமாய் படிக்கவேண்டுமானால் 140 வருஷமாகுமென்றும், அப்படியே 140 வருஷமிருந்து படித்தாலுங்கூட 14 இல்முகளின் பூர்த்தியான அறிவு ஒருவன் புத்தியிலும் மூளையிலும் அடங்காதென்றும் அப்படி அடங்குமென்று வைத்துக்கொண்ட போதிலும் அவனுடைய சொல்லைக் கொண்டு அந்தந்த இல்முகளின் விதிவிலக்கு சட்டங்களுக்கு அது ஆதாரமாகாதென்றும் சொல்லுகிறார்கள்.

இத்தகையான 14 இல்முடைய பூரண அறிவும் குர்ஆன் ஷரீப் ஒன்றில் அமைந்திருக்கின்றது. இந்தக் குர்ஆன் ஷரீபோ ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களுடைய 40 வயதுக்கு மேல் 63 வயதுக்குக் கீழுள்ள 23 வருஷத்தில் அருளப்பட்டதாயிருக்கின்றது.

மேற்படி 14 இல்முடைய விதிவிலக்கு சட்டங்களுக்கு இதையே ஆதாரமாக்கிக் கொண்டு வருவதால் அது ஆண்டவனால் அனுப்பப்பட்ட தேவ வாக்கென்றும், நபியவர்கள் மெய்யான திருத்தூதர் என்பதற்கு அது பெரும் அத்தாக்ஷியாயிருக்கிறதென்றும் பலவாறாய்ப் புகழ்ந்திருக்கிறார்களென்பதே.

அன்றியும் சில கல்விமான்கள் ஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு எழுதப்படிக்கக் கூடிய செயற்கை கல்வி கிடையாதென்றும், ஆயினும் ஆண்டவனாலருளிய இயற்கை கல்வியினாலேயே சுமார் 5 லக்ஷம் வாக்கியங்களுக்கு மேலாகவே (அதீது) அவர்கள் வாயிலிருந்து புறப்பட்டதென்றும், அது தற்போது நூற்றுக்கணக்கான வியாக்கியான கிரந்தங்களாய் இயற்றப்பட்டிருக்கின்றதென்றும், அவைகளிலுள்ள நீதி வாக்குகளைக் கவனித்தால் முழு உலகம் ஒன்றுபட்டாலும் அதிலுள்ள ஒரு நீதிவாக்குக்குச் சமமாகக் கொண்டு வர முடியாத வண்ணமாய் இருக்கின்றதென்றும், பொதுவாக ஆராய்ந்து பார்த்தால் முழு உலகத்தில் வெளியான எந்த மனிதர்களிலாவது இவ்வளவு அதிகத்திரளான வாக்கியம் வெளி

யாகி இருப்பதில்லை யென்றும், அவர்கள் இருபத்தி மூன்று வருஷத்திற்குள்ளாக இத்தகையான வாக்கியங்களை வெளியாக்கி யிருப்பதால் உலகத்திலுள்ள கல்விமான்களில் ஒருவரும் இவர்களுக்கு நிகரானவர்களாயில்லை யென்றும் அவர்களிடத்தி லிருந்து வெளியானதெல்லாம் ஆண்டவனுடைய அருளைக்கொண்டே வெளியாயிருக்கிறதென்று பலவாறாய் புகழ்ந்திருக்கிறார்களென்பதே.

அன்றியும், கவிராஜர்களோ ஹஜரத்து நபிகள் நாயகம் அவர்களின் திருநாமங்கள் எத்தனையோ இருக்கின்றன வென்றும் அவைகளில் அவருடைய அசல் திருநாமம் முஹம்மத் என்றும் முஹம்மத் என்றால் புகழப்பட்டவரென்றும், முழு உலகம் ஒன்று கூடி அக்காலந் தொடுத்து உலகம் முடிவு வரை புகழ்ந்தாலேயே இருக்கிறதென்றும் அந்தப்புகழைக் கிரகிக்கிறவருக்குப் புகழப்பட்டவரென்று சொல்லப்படுமென்றும், ஆகையினாலேயே புகழப்பட்டவரென்கிற பேர் நாமத்தை யுடையவர் பேரில் எவ்விதமாய்ப் புகழ்ந்தாலும் அது சூரியபிரகாசத்திற்கு முன் விளக்கைக் கொளுத்திக் காட்டுவதுபோல் இருக்குமென்றும், ஆகையினால் கவிராஜர்களின் நாவுகள் எவ்வளவு புகழ்ந்தாலும், எவ்வளவு துதித்தாலும், அந்தப் புகழப்பட்டவரது முன்னிலையில் ஒரு துரும்புக்குஞ் சமானமாகாதென்றும் சொல்லிவிட்டு கடைசியாக முஹம்மத் என்கிற பேர் நாமத்தைப் பற்றி பின் வருமாறு விவரிக்கிறார்கள்:—

யார் பேரிலாவது கவி பாடவேண்டுமென்றால் அக்கவி நாயகருடைய அஸல் பேர் நாமம் முறியாமலும், சீரை விட்டுப் புறம்பாகாமலும், பின்முன் வார்த்தையை இணைக்கக் கூடியதாகவும், எல்லா வார்த்தைகளோடே பேர்நாமவார்த்தை அலங்காரமாகவும், அந்தப்பாட்டை மொழியும்போது பேர் நாம வார்த்தை அதிக தொனியாகவும், நாவுக்கு மதுரமாகவும், கேட்போரின் காதுகளுக்கு இன்பமாகவும் இருப்பதோடு, எந்த அடியிலாவது துவக்கத்தில், அல்லது நடுவில் அந்தத்தில் அப்பேர் நாமம் வருமேயானால் அவ்வடிக்கு அந்தப் பெயர் தலை



நாயகமாக, அல்லது நடுநாயகமாக, அல்லது கடைநாயகமாக விருந்து இலங்கிக்கொண்டிருக்க வேண்டும். இவைபோலொத்தவைகளெல்லாம் இரண்டுள்ள அஸல் பேர் நாமம் அகப்படுகிறது மகா அரிதிலும் அரிது.

எல்லாக் கவிகளில் அடங்கக்கூடிய ஒருசீர் என்கிற வார்த்தையானது ஓரெழுத்து முதல் ஆறெழுத்து வரையுமாயிருக்கின்றது.

அக்கவியின் கவிகளெல்லாம்மிகவும் அருமையானது மிகச் சுருக்கமானதும், கவிராஜர்களின் நாவிலிருந்து எளிதில் வரக்கூடாததுமான கவி ஓரெழுத்து சீர்கொண்ட கவியே.

எப்படிக்கொத்த பெயராயிருந்தாலும் இந்த ஓரெழுத்து கவியில் அமையாது அதற்காகவே கவிராயர்கள் அதைப் பாடாமல் விட்டு விடுகிறார்கள். ஆகையால் அக்கவி சுருக்கத்திலும் சுருக்கமாகி அகப்படுகிறதே அரிதிலும் அரிதாயிருக்கின்றது.

இக்கவியில் இந்த முஹம்மத் என்கிற திருநாமத்தை ஆதியிலாவது நடுவிலாவது முடிவிலாவது அல்லது எங்காவது இணைத்தாலும் அந்தச் சீரில் இசைவதோடு மேற்சொன்னபடி எவ்வித அம்சமும், அதற்குப் பொருந்தியிருக்கிறது, அது எப்படியென்றால்:—

மு—ஹ—ம—து—என்றும் இந்நாலெழுத்தைத் தனித் தனியாகப் பிரித்து எந்த பாகமாயிருந்தாலும்சரி அதற்கிசையவே இம்முழு நாமத்தைப் பொருத்திவிடலா மென்று பற்பல கவிராஜர்கள் பற்பல கவிகளை பாடியிருக்கின்றனர். அவைகளை இவ்விடத்தில் எடுத்துச் சொல்ல இடம் போதாதென்று நிறுத்தப் படுகின்றது.

சில கவிகளின் சீர் இரு அக்ஷரத்தினால் ஆக்கப்பட்டிருக்கின்றது அதற்கும் இப்பெயர் முஹம்—மது—என்று இணைக்கப் பொருந்துகின்றது.

சில கவிகள் முந்தின சீர் மூன்றெழுத்தும், பிந்தின சீர் இரண்டெழுத்துமாக வருகின்றது. அதற்கும் இப்பெயர் முஹம்—மது—என்று இணைக்கப் பொருந்துகின்றது.

சில கவிகள் முந்தின சீர் நான்கெழுத்தும், பிந்தின சீர் இரண்டெழுத்துமாக வரும் அதற்கும் இப்பெயர் முஹம்ம—துன்—என்று இணைக்கப் பொருந்துகின்றது.


இதல்லாமல் சில கவிகள் ஒற்றைச் சீரே நாலெழுத்தாகவும், ஐந்தெழுத்தாகவும், ஆறெழுத்தாகவும் வந்துவிடும் நாலெழுத்துக்கு—முஹம்மது—என்றும், ஐந்தெழுத்துக்கு முஹம்மது—என்றும், ஆறெழுத்துக்கு முஹம்மதுன் அல்லது முஹம்மதன் அல்லது முஹம்மதின் என்றும் இணைக்கப் பொருந்துகின்றது.

மேற்சொன்ன கவிகளெல்லாம் ஒன்றுதிரண்டு அஸலாகிய ஒரு பெயர் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தால் இந்த முஹம்மது என்கிற ஒரு பெயரைத் தவிர மற்ற எப்பேரும் இவ்விதம் அமைகிறது அரிதிலும் அரிதே.

புகழப்பட்டவரென்கிற பேருக்கு தக்கவாறுனபேர் அமைந்திருப்பதும் அரிது.

ஆகையினாலேயே புகழப்பட்டவரென்கிற பேர் நாமத்திலேயே எல்லா மகத்துவங்களும் அடங்கி யிருக்கிறதென்றும், அந்நாமத்தில் யாதொரு குற்றங்குறையில்லாததற் கடையாளமாக அப்பெயரில் (குத்தெழுத்து) இல்லாமலிருக்கிற தென்றும் பலவாறுய்ச் சொல்லி, அதின் புகழ்ச்சி ஒருவராலேயும் எடுத்துச் சொல்ல அடங்காதென்றும் முடிவாய்ச் சொல்லியிருக்கிறார்களென்பதே.

மேற்சொன்ன ஒழுங்குப்படி அரபி, ஹிந்தி, பார்சி முதலிய பாஷைகளில் கோடிக் கணக்கான கவிகள் இருக்கின்றன அவைகளை இங்கு எடுத்து வரைய இடம் போதாதென்று நிறுத்துகிறேன்.



ஓ அருமை வாய்ந்த கனவான்களே! மேலே வரைந்துள்ள அல்லா, றசூல் நாமத்தின் அற்புதத்தைப் பாருங்கள் அறபு பாஷை அட்சரத்தின் மகிமையைக் கேளுங்கள்.

எறும்பு கடை யானை முதல் எண்பத்து நான்கு நூறுயிர் ஜீவ ஜெந்துக்களான ஆத்துமாக்கள் யாவற்றிலும் சிறந்தவன் மனிதனென்பதும் இம்மனிதனின் அவயவங்களிற் சிறந்தது இருதய கமலமென்பதும் அக்கமலமே தேவரகசியக் களஞ்சியமென்பதும் யாவருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே.

இத்தன்மையான இருதயக் கமலத்தைப்பற்றி ஏராளமான ஆயத்து, ஹதீது வகையறுக்கள் வந்திருப்பதுமன்றி ஞானவான்களான நாதாக்களெல்லாம் பலவாறுகக் கவிகளாகவும் வசனங்களாகவும் அறபி, பார்ஸி, ஹிந்தி, தமிழ் முதலிய பாஷைகளில் வரைந்திருக்கிறதை இங்கெடுத்து எழுத இடங்காணுது. ஆயினும் சில தமிழ் கவியை மாத்திரம் எழுதுகிறேன்.

ஈமான் தனக்கும் இஸ்லாம்நெறிக்கு மிதனடுவே
தேமாங்கனியொன்று செப்பரிது செப்பில் ஐந்திலொன்றை
ஆமாவெனுங் கலிமாவாலெழுப்பி யறிந்துணர்ந்தால்
ஈமான் தனம்பெற்று வாழ்வீரென்று நபிசெப்பினரே.

அஞ்சுமாறு மோதடா ஓராறு நோன்பு வையடா
வஞ்சகமில்லாப் பறல்ஜூந்தையும் வணங்கடா
நெஞ்சில்வாழு மைந்திலொன்றை நினைத்துப்பாரடா
பஞ்சபாதகங்களான பாவமும் நில்லாதடா.

திறந்தனன் கமலத்துள்ளே திருவடி. வொளிவைக்கண்டு
மறந்தனன் பூமிவானம் மனைகட லனைத்துஞ்சேர
விறந்தவன் விறைவனன்றி யிருந்தொன் றில்லாதாலே
யறந்தனை யுணராமாந்த ரவர்களும் காபிராவார்.

கூடினேன் கமலக்குள்ளே நடந்தேனிக் குலயத்திற்
தேடினே னவலமொன்றே தெரிந்தேனின் திருவுளத்தை
நாடினேன் கமலத்துள்ளே கலிமாப்பொருள் நாட்டியபின்
பாடினேன் கமலத்துள்ளே பரமானந்தம் பார்த்திருந்தேன்.



மூக்குக் கண்ணை முறுக்கித் திருத்தியே
யகத்துக் கண்ணை யறத்துப் பிளந்தபின்
வருத்த சோதி மணிவிளக் கென்னுள்ளே
தொருத்துப் பார்க்கச் சுகம்பெற்றாய் நெஞ்சமே.

என்று பலவாறாய் மெய்ஞ்ஞானசொரூபராகிய தற்கரை பீருமுஹம்மதுசாகிபு ஒலியுல்லா அவர்கள் ஞானமணிமாலையில் பாடியிருக்கிறார்கள்.

ஓ கனவான்களே! இவ்விதமாக ஷை இருதயக் கமலம் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்ணோக்கிப் பார்த்து அது விஷயத்தைப்பற்றி ஆற அமர தீர்க்காலோசனை செய்து பாருங்கள்.

அல்லாஹுத் தஆலாவுக்கு அநேக திருநாமங்கள் அவனுக்குத் தகுதியான அர்த்தங்களைச் சுட்டிக் காட்டக்கூடியதாயிருக்கின்றன. அவைகளுக்கு இசுமுசிபத்துக்களென்றும் அல்லாஹு வென்கிற திருநாமத்துக்கு யாதொரு அர்த்தமில்லாமல் அவனைச்சுட்டிக்காட்டுகிறபடியால் அதற்கு இஸ்முதாத்து என்றுஞ் சொல்லப்படும். இந்த இஸ்முதாத்து என்கிற அல்லாஹு என்னும் அட்சரத்தை அறபி பாஷையில் அதனுடைய சரியான எழுத்து உருவத்தின்படி அமைந்தும் அதுபோலவே நபிகள் நாயகம் முஹம்மது றசூலுல்லா அவர்களுக்கு எத்தனையோ நாமங்களிருக்கிறதில் அவர்கள் தாதா தாயாராலிடப்பட்ட அசல் பெயராகிய முஹம்மது என்கிற திருநாமத்தை அறபிப் பாஷையில் சரியான சட்டப்படி எழுதப்பட்ட உருவமைத்தும் ஷை இருதயக் கமலம் அமைந்திருக்கிறது.

ஷை அல்லாஹு முஹம்மது என்கிற திருநாமத்தை அறபிபாஷை அட்சரத்தை தவிரமற்ற எந்தப்பாஷையின் அட்சரங்களாலெழுதினாலும் ஷை இருதயக் கமல வடிவு வரமாட்டாது.

இஸ்லா மார்க்கத்திலுள்ள பிரதானமான ஷை இரண்டு திருநாமத்தைத் தவிர மற்ற எந்தத் திருநாமத்தை ஷைபாஷையிலெழுதினாலும் ஷை உருவம் அமையாது.

இதுபோலவே மற்றெந்த பேர் நாமத்தையாவது அறபி முதலிய எந்தப் பாஷைகளாவது எழுதினாலும் அவ்வசூரத்தி

றுளும் ஷேடி இருதயக் கமல வடிவமையாதென்று தோன்றுகின்றது.

ஆகையினால் அறபிப்பாஷையே தாய்பாஷையாகவும் இஸ்லாம் மார்க்கமே ஆதியான சத்திய மார்க்கமாகவும் முஹம்மது றசூலுல்லா அவர்களே மெய்யான தீர்க்கதரிசியாகவும் இருப்பதற்கு அறிகுறியாகவே இவ்விதம் உண்டாக்கப் பட்டிருக்கிறதென்று அதை ஆராய்கிற ஒவ்வொருவர்களும் நன்றாகத் தெரிந்துக்கொள்வதோடு அது அல்லா றசூலுடைய அற்புதத்தில் உலகறிந்த கண்கண்ட மெய்யான காரணமாகவும் அதிசயமாகவும் அடையாளமாகவும் இருக்கிறதென்று அறிந்துக்கொள்ளுவார்கள்.

மேலும் முஹம்மது என்கிற அட்சரத்தினால் இருதய கமலத்தையும், மனிதனின் உடல் முதலியவைகளையும் உண்டாக்கப் பட்டிருக்கிறதையும், மேற்கூறியபடி கவிராஜர்கள் முஹம்மது என்னும் திருநாமத்தைப்பற்றி புகழ்ந்திருக்கிற மகத்துவத்தையும், பொதுவாய் ஆராய்கிற ஒவ்வொரு கனவான்களும், ஏசாயா 9 ம் அதிகாரம் 6 ம் வசனத்தில், அவர் நாமம் அதிசயமானவர் என்று சொல்லப்பட்ட முன்னறிவிப்பு நிறைவேறியிருக்கிறதென்று அறிந்துகொள்வார்களென்பதே உறுதியாய்ச் சொல்லலாம்.

அல்லாஹுதஆலா முஹம்மது என்கிற நாமத்து அட்சரத்தால் கல்பை படைத்து அதற்குள் தனது இஸ்முதாத்து என்கிற பேர்நாமத்தை அமைத்திருக்கிறான் என்று ஆரிபீன்கள் சொல்லியிருக்கிறது உண்மை என்று மேற்படி படத்தைப் பார்வையிடுகிற ஒவ்வொரு கனவான்களும் நன்றாய் அறிந்துக்கொள்ளுவார்கள்.

---*---

## இக்கிரந்தகர்த்தாவின் வேண்டுதல்.

இப்புஸ்தகத்தைப் பார்வையிடும் கனவான்கள் இதில் எதாகிலும் தவறுதலைக் கண்டால் சரியான முன்றால்களைகொண்டு திருத்திக்கொள்ள வேணுமென்றும் இந்த தொண்டனுடைய ஹக்கில் துஆச் செய்யவேணுமென்றும் அவர்களின் அபிமானத்தை மிக பெரிதாக விரும்புகிறேன்.

நாயன் கிருபையால் "முஹம்மதியா மகத்துவம்" முதல்வால்யம் முற்றிபெற்றது. இனி இரண்டாம் வால்யம் இதை தொடர்ந்து வரும். இன்ஷாஅல்லாஹு.

119690